நற்றிணைக் காட்சிகள்

டாக்டர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன்

நற்றிணைக் காட்சிகள்

டாக்டர் நாவலர்
இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., டி.லிட்.

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600001

நற்றிணைக் காட்சிகள்

டாக்டர் நாவலர்
இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., டி.லிட்.

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-600001

முதல் பதிப்பு : அக்டோபர், 1982
உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூ. 15-00

தொகுப்பாசிரியர் :
கே. ஜி. இராதாமணாளன்

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

பதிப்புரை

தமிழினத்தின் எழுச்சி வரலாற்றிலே, தம்முடைய நாவலத்தாலும், அனைவரோடும் அன்புகனியப் பழகும் பண்பு நலத்தாலும், அயராத பேருழைப்பாலும், நாடனைத்தும் 'நாவலர், நாவலர்' என்று பெருமிதத்தோடு போற்றிப் புகழும் உயரிய இடத்தினைப் பெற்றுத் திகழ்பவர், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆவர்.

முறையாகத் தமிழைப் பயின்று, முதுகலைப் பட்டமும் பெற்றவர் அவர். தமிழ்ப்பெரும் புலமையாளர்கள் ஒருங்கே தமிழ்ப்பயிரைப் பேணிக்காத்த வளமான காலத்திலே, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில், தமிழுணர்வுப் பயிராகவே செழித்து வளர்ந்து, நாடெங்கும் தமிழ்வளத்தையும், தமிழர் சால்பையும் பரப்பும் பெரும் பணியிலேயே, கடந்த முப்பதாண்டுகட்கும் மேலாகத் தம்மை முழுக்கவும் ஈடுபடுத்தி வெற்றிஉலா வந்தவரும், நம் நாவலர் ஆவார்கள்.

அழியாத தமிழ்ச் செல்வங்களான சங்க இலக்கியங்களுள், நாவலர்க்கு இருந்த பற்றும் பாசமும், அவற்றைக் கற்றுச் சிந்தித்துத் தெளிந்து சுவைத்து மகிழ்வதிலேயும், தாமறிந்து மகிழ்ந்த அந்தத் தமிழ்ப்பேரின்பத்தை நாட்டவர்க்கெல்லாம் வழங்கி வழங்கிக் களிப்பதிலேயும் ஈடுபடுத்தியது.

எட்டுத்தொகை நூற்களுள், அகப்பொருள் தழுவி அமைந்த நற்றிணைச் செய்யுட்களிலே பெரிதும் ஈடுபாடு கொண்ட நாவலர் அவர்கள், அவற்றைத் தமிழ் அன்பர்களும் அறிந்து சுவைத்து இன்புறவேண்டும் என்று கருதிச் சுவையான முறையிலே தாம் நடத்திவந்த 'மன்றம்' வார இதழிலே எழுதிவந்தார்கள்.

நற்றிணைச் செய்யுட்களின் நயங்களைக் காட்சிப் படுத்தி இன்புறுத்துவதுடன், தமிழின் ஏற்றமிகு பெற்றியையும் எடுத்துக்காட்டும் இணையற்ற கருத்துக் கருவூலங்களாகவும் அமைந்திருந்த அவற்றின் நயத்தினை, அனைவரும், இன்றுள்ள இளைஞர்களும், கற்றுக் களிப்பெய்தித்

தமிழ் மாண்பைப் போற்றவேண்டும் என்னும் ஆர்வத்தால், அவற்றைத் தொகுத்து 'நற்றிணைக் காட்சிகள்' என நூல் வடிவில் வெளியிடவும், இப்போது இசைவளித்துள்ளார்கள்.

நற்றிணைச் செய்யுட்களின் நனிமிகு நயங்கள் எல்லாம், நாவலர் அவர்களின் நல்லிதயத்திலே தோய்ந்து தோய்ந்து மேலும் இனிமையும் செறிவும் துணைசேரப்பெற்று, ஒப்பற்ற நல்ல தமிழ்விருந்தாக அமைந்துள்ளன. இவற்றைப் புத்தக வடிவிலே வெளியிடுவதற்கு எங்களுக்கு இசைவளித்த நாவலர் அவர்களின் அன்புடைமைக்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகும்.

மனித உணர்வுகள், ஒவ்வொரு சூழலிலும் எத்துணை ஆற்றலுடன் எழுகின்றன என்பதனையும், அவற்றை முறைப் படுத்திப் பண்படுத்திச் செம்மையாக வாழ்வதிலே நம் முன்னோர்கள் எத்துணைச் சிறப்போடு திகழ்ந்தார்கள் என்பதனையும், இக் கட்டுரைகளின் ஒவ்வொரு வரியும் சொல்லும். நமக்கு ஒவியப்படுத்திக் காட்டி நம்மை மகிழ்விப் பதுடன், அந்தப் பெருமிதநிலைக்கு நாமும் உயரவேண்டும் என்னும் ஆர்வத்தையும் அவை நம்மிடம் எழச் செய்கின்றன.

இவற்றைத் தேடித்தொகுத்து ஒழுங்குபடுத்தித் தந்த எமது இனிய நண்பர் திரு. கே. ஜி. இராதாமணாளன் அவர் களுக்கு எங்கள் உளமார் நன்றி உரியதாகும்.

பாரி நிலைய வெளியீடுகள் பலவற்றையும் அறிஞர் புலியூர்க் கேசிகன் அவர்கள் பார்வை இட்டுச் சிறப்பாக வெளியிட்டு வருகிறார்கள், தற்போது நாங்கள் வெளியிட்டு வரும் டாக்டர் நாவலர் அவர்களின் நூல்கள் சிறப்பாக அமையப் பலவகையிலும் உதவியுள்ளார்கள். அவர்களுக்கும், நூலை அழகுற அச்சிட்டு உதவிய மாருதி அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியது.

சங்கத் தமிழ்ச் செழுமையினை ஆர்வத்துடன் கற்பதி லும், தமிழ் உயர்வினைப் போற்றிப் பேணுவதிலும், தமிழ் அன்பர்களை இக் கட்டுரைகள் தூண்டிச் செலுத்தும் ஆற்றலுடையன.

நற்றிணைக் காட்சிகளான இந்த நல்ல நயமிகு தமிழ் விருந்தினை, நாட்டவர் எல்லாருமே நயந்து கற்று இன்புறு வார்கள் என்று நம்புகின்றோம்.

—பாரி நிலையத்தார்

முகவுரை

மனிதனின் புறத்தோற்றப் பொலிவின் செம்மையை 'நாகரிகம்' என்றும், அகத்தோற்றப் பொலிவின் செம்மையைப் 'பண்பாடு' என்றும் அறுதியிட்டுக் கூறுவர் ஆராய்ச்சி யறிவுடையோர்.

நாகரிகத்தில் வளர்ந்து, பண்பாட்டில் சிறந்து, பெயரும், பெருமையும், புகழும் கொண்ட ஒருசில மக்களினங்களுள், வரலாற்றுக் காலத்திற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன் தொட்டே தலைசிறந்து விளங்கிவந்த இனம், தமிழ் இனம் ஆகும்.

தமிழ் மக்கள் தலைசிறந்த மக்களாக விளங்குவதற்கு உரியவகையில், அவர்களுக்கு அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும், பண்பாட்டுத்திறனையும், வினைமுடிக்கும் திறனையும் அளித்து வந்தது, அளித்து வருவது தமிழ் மொழியே யாகும்.

தமிழ்ப் பெருங்குடி மக்கள் தமிழைப் படிப்படியாக இலக்கண இலக்கியச் செறிவுடைய மொழியாக வளர்த்து வந்தார்கள், அதற்கு ஏற்பத் தமிழ்மொழியும் தமிழ்ப் பெருங் குடி மக்களை, அறிவாற்றல் திறனுடையவர்களாக வளர்த்து வந்தது.

ஒரு நாட்டின் நாகரிக மேம்பாட்டையும், பண்பாட்டுச் சிறப்பையும் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டும் சீரிய கருவி, அந்த நாட்டுக்குரிய மொழி நல்கும் இலக்கியச்

செல்வமே யாகும். இலக்கியங்களின் செழுமையையும், செம்மையையும், செறிவையும், சிறப்பையும் வைத்து, ஒரு நாட்டு மக்களின் தரத்தை எடைபோடுகிறார்கள் அறிவார்ந்த சான்றோர்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், தமிழ்ப் பெருங்குடிமக்கள் எத்துணை அளவு நாகரிகத்திலும், பண்பாட்டிலும் மேம்பாடுற்றுத் திகழ்ந்திருந்தனர் என்பதைச் சங்க இலக்கிய நூல்கள் பலவகைகளிலும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

சங்க இலக்கியங்களைத் தமிழ்ச்சான்றோர் 'அகப் பொருள் இலக்கியம்' என்றும், 'புறப்பொருள் இலக்கியம்' என்றும் இருவகையாகப் பிரித்தனர். மனிதனின் அகத்தால் மட்டுமே உணரப்படும் நிகழ்வுகள் 'அகப்பொருள்' என்றும், மனிதனின் புறத்தே மனிதனின் ஐம்பொறிகளால் அறியப் படும் நிலையில் உள்ள பொருள்கள் 'புறப்பொருள்' என்றும் கருதப்படும். அன்பு, அருள், ஈவு, இரக்கம், காதல், கவலை, மகிழ்ச்சி, மருட்சி, வாட்டம், வருத்தம் போன்றவைகள் மனிதனின் அகத்தே நிகழும் நிகழ்வுகளாகும். நாடு, வீடு, காடு, கழனி, அரசியல், அறிவியல், போர், பூசல், கல்வி, காவல், மலர், மணம், தேன், தென்றல், உணவு, உடை, குளம், குட்டை, ஒலி, ஒளி, உழவு, உழைப்பு போன்றவை களைப்பற்றிய செய்திகளும், நிகழ்ச்சிகளும், ஐம்பொறி களால் அறியப்படும்போது 'புறப்பொருள்' என்று கருதப் படுகின்றன. 'அகப்பொருள்' மனிதப் பண்பாட்டிற்கு வித்தூன்றுகிறது; 'புறப்பொருள்' மனித நாகரிகத்திற்கு வித்தூன்றுகிறது.

எண்ணிறந்த சங்ககாலப் புலவர்களின் எண்ணங்களி லிருந்து ஏராளமான அகப்பொருள்பற்றிய செய்யுட்களும், புறப்பொருள் பற்றிய செய்யுட்களும் பிறந்திருக்கின்றன. அவற்றில், பலப்பல காலத்தின் பழமையாலும், கனல்—காற்று—புனல் போன்ற இயற்கையின் கொடுமையாலும்,

கரையான் அரிப்பாலும், கவனக்குறைவாலும் அழிந்தவை போக, எஞ்சியவை மிகமிகச் சிலவாக அமைந்திருக்கின்றன. இடைக்காலப் புலவர் பெருமக்கள் சிலர், சிதைந்தும், சிதறுண்டும் கிடந்த சிற்சில செய்யுட்களைத் திரட்டித், தொகைநூல்களாகத் தந்ததன் காரணமாகத்தான், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, குறுந்தொகை, கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, தொல்காப்பியம், திருக்குறள் போன்ற சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைக்கப்பெற்றன.

சங்க இலக்கியங்கள் அனைத்தும் சொற்சுவை, பொருட்சுவை, அணி அழகு, ஓசை நயம், உண்மை விளக்கம், கற்பனைத்திறன், பண்பட்ட வாழ்வியல்திறன், அன்புநெறி, அறநெறி, சால்பு போன்றவைகளால் நிரம்பப்பெற்ற கருவூலங்களாகும்.

இக்கால இலக்கியங்களை எடுத்துக்கொண்டால், அவை படிப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் எளிமையாகவே காணப்படும். இடைக்கால இலக்கியங்கள் சொற்களைப் பொறுத்தும், அவைதரும் பொருள்களைப் பொறுத்தும் சற்றுக் கடினமானவையாகவே தோன்றும். சங்ககால இலக்கியங்கள் சொற்கள் அமைப்பைப் பொறுத்தும், அவை தரும் பொருட்செறிவைப் பொறுத்தும் மிகக்கடுமையாகவே இருக்கும்.

இந்த மூவகை இலக்கியங்களையும் வாழை—மா—பலா ஆகிய முக்கனிகளுக்கும் ஒப்பிடலாம். இற்றைக்கால இலக்கியம் வாழைப்பழம் என்றால், இடைக்கால இலக்கியம் மாம்பழம் என்றால், சங்ககால இலக்கியம் பலாப்பழம் ஆகும். வாழைப்பழத்தின் தோலை எளிதாக உரித்து, இயல்பாகவே உண்ணலாம். இது ஒரு அளவான சுவையைத் தரும். அதுபோலத்தான் இன்றைக்கால இலக்கியத்தை எவரும் எளிதாகப் படித்து, எளிதாகப் பயன் நுகரலாம். மாம்பழத்தின் தோலை நீக்குவதற்குச் சற்றுக் கடினமான

முயற்சி தேவை. இது சற்றுக் கூடுதலான சுவையைப் பயக்கும். அதுபோலத்தான் இடைக்கால இலக்கியத்தைச் சற்றுக் கடினமாகப் படித்து, சற்றுக் கூடுதலாக முயற்சி எடுத்துப் புரிந்துகொண்டு, பயன் துய்க்க வேண்டும். பலாப்பழத்தின் தோலை உரிக்க, அதனுள் உள்ள சடையைப் பிரிக்கப், பிசினை நீக்க, மிகக் கடுமையான உழைப்பு வேண்டப்படும். இதன் கனிந்த சுளை மிகக் கூடுதலான சுவையை நல்கும். அதுபோலத்தான் சங்க இலக்கியத்தைப் படிப்பதும் மிகக்கடுமையானதாக இருக்கும். பொருள் புரிந்து, நயம்புரிந்து இன்பம் பெறுவதும் மிக்க கூடுதலாகவே அமைந்திருக்கும்.

சங்ககால அகப்பொருள் இலக்கியங்களுள் 'நற்றிணை' ஒன்றாகும். நற்றிணை இலக்கியத்தின் சொல் அழகு, பொருள் அழகு, அணி அழகு, கற்பனை வளம், காதற் காட்சிகளின் மாட்சி ஆகியவற்றை இற்றைக்காலத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் புரிந்துகொண்டு, உவகை இன்பம் பெற வேண்டும் என்பது எனது வேணவாகாக இருந்துவந்தது. நற்றிணைச் செய்யுட்களிலே கூறப்பட்டுள்ள கருத்துக் களைக் கதைப்போக்கிலே சுட்டிக் காட்டி, காதற்காட்சி களைத் தெளிவுபடுத்தினால், புலமையறிவு பெறாத பெருங் குடிமக்கள் எளிதாக உணர்ந்து கொள்ளமுடியும் என்று எண்ணி, நற்றிணையின் சில செய்யுட்களை மட்டும் தேர்ந் தெடுத்து, அவற்றைப்பற்றி, நான் வெளியிட்டுவந்த 'மன்றம்' என்ற இதழ் வாயிலாகத் தொடர்ச்சியாகச் சொல்லோவியமாக எழுதிவந்தேன். அந்தவகையில் வெளி வந்த கட்டுரைகள்தாம், 'நற்றிணைக் காட்சிகள்' என்று பெயர்பெற்று, உங்கள் திருக்கரங்களில் தவழ்கின்றன.

சங்ககாலத் தமிழ்ப் பெருங்குடிமக்களின் மாண்பையும், மேன்மையையும், சிறப்பையும், செம்மையையும் இற்றைக் கால மக்கள் உணர்ந்து, உவகைப் பெருக்குப்பெற்று, உயர் நிலை எய்த வேண்டும் என்பதே என் நோக்கமாகும். அந்த நோக்கம் எந்த அளவுக்கு ஈடேறுகிறதோ, அந்த அளவுக்கு

இந்த நூல் வெற்றி கொண்டுள்ளது என்பது கொள்ளப் படும். இந்த நூல் என் ஆவலின் விளைவைக் காட்டிடுமே அல்லாமல், என் அறிவுத்திறனின் விளைவைக் காட்டாது.

ஒய்வு ஒழிவில்லாமல் பல்வேறு பணிகளில் நான் சிக்கிக் கிடக்கிற நிலையில், நான் எழுதிய கட்டுரைகளையெல்லாம் திரட்டி ஒழுங்குபடுத்தி, நூல்வடிவாக்கி வெளிக்கொண்டு வர, எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு, அவற்றில் வெற்றிபெற்றுள்ள நண்பர் கே. ஜி. இராதாமணாளன் அவர்களுக்கு என் பாராட்டுக்களை நன்றியுணர்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் தலைசிறந்த நூற்பதிப்பகங்களிலே ஒன்றாய்த் திகழ்ந்து, பெயரோடும் புகழோடும் இயங்கி வரும் பாரி நிலையத்தார், இந்த நூலை அழகாக அச்சியற்றி, அருமையாக அமைத்து, சிறப்பாக வெளியிட்டுள்ளனர். பாரி நிலையம் திரு. க. அ. செல்லப்பன் அவர்களை நான் பெரிதும் பாராட்டிப் போற்றுகிறேன்.

இந்நூலைப் பாங்குறப் படித்துப் பயன் பெறுவோர்க்கு என் வணக்கம் உரித்தாகுக!

சென்னை
12-8-82

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

எண்		பக்க எண்
1.	எழிற்காட்சி! இன்பமாட்சி!	9
2.	பொய் தந்த பலன்!	16
3.	காதல் சிறந்ததா? பொருள் சிறந்ததா?	25
4.	கண்ணுறக்கமும் வருமோ?	33
5.	இரவில் தங்க - என்ன குறை?	40
6.	அறனும் அல்ல! ஆக்கமும் அல்ல!	48
7.	கூறுவாயோ? அல்லது மறப்பாயோ?	56
8.	நோயும் மருந்தும் அவளே!	62
9.	நனவு ஆகாத கனவு!	70
10.	மன்றல் பெறவந்த மணமகன்!	74
11.	ஓடிப்போன காதலர்!	84
12.	இல்லம் புகமுடியாத இழிநிலை!	92
13.	பிரிந்து செல்லும் வல்லமை உண்டோ?	102
14.	நின் நோய் நான் அறிவேன்!	109
15.	கிளியே! தூது போவாய்!	118
16.	நங்கையிடம் சிக்குண்ட நெஞ்சம்!	125
17.	கைவளை கழற்றிய காதலன்!	135
18.	ஆடு மயிலே ஆடு!	154
19.	பழிக்குப் பழி!	154
20.	பிரிவைத் தடுத்த பரிவு!	157
21.	காவல் பயந்த காதல்!	168

22. காதலனுக்குப் பரிந்து பேசிய காதலி! 177

23. சொல்லத் தொடங்கினாள் - சொல்ல
வில்லை! 184

24. குத்தாத கூர்முள்ளால் குத்து! 192

25. வெட்கத்தால் வெளியிடவில்லை! 199

26. நன்று என்றது நன்று! 208

27. அன்னை கருதியது என்னை? 217

28. பரத்தையர் கையில் பட்ட பாடு 224

29. கட்டித் தழுவினாள் - எட்டித் தள்ளினாள் ... 231

30. தனையனைக் காண வந்த தந்தை ... 240

31. பெண்ணாக நடித்த பொய்யன்! 247

32. மகிழ்ந்து அணைத்த மங்கை! 256

33. கலப்புமணக் காதலர் 264

34. ஊடலைத் தீர்க்கும் மருந்து 273

1. எழிற் காட்சி! இன்ப மாட்சி!

தன் கணவன் ஒரு படைத்தலைவன் என்பதிலே அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! அதனால் ஏற்படும் பெருமித உணர்வு அவளுக்குப் புதியதொரு பொலிவைத் தருகிறது!

களம்பல சென்ற செய்திகளையும், வெற்றிபல கொணர்ந்த செய்திகளையும், அவன் வாயால் அடிக்கடி கேட்டுப் பூரிப்பும் பெருமையும் அடைவது அவளது வழக்கம். இறந்தகால வெற்றிகளை எண்ணி எண்ணி அவள் மகிழ்ந் தாளேயொழிய, எதிர்காலத்தில் அவன் போர்க்களம் புகவேண்டி நேரிடுமே என்பதை எண்ணிப்பார்க்க முயன்ற தில்லை. இருவரும் இல்லறநெறியில் இணைந்து நின்று, நல்லறங்கள் பலவற்றைப் பேணிக் களிப்போடு காதல் வாழ்வை இனிது நடத்தி வருகின்றனர்.

ஒரு நாள், அரசனின் ஏவலாள் ஒருவன் வந்து, "வேந்தர் தங்களை விரைவாக அழைத்துவரச் சொன்னார்!" என்ற செய்தியைக் கூறுகிறான். படைத்தலைவன் அரசமாளிகையை நோக்கித் தேரில் விரைந்து செல்கிறான். அரசன் வீற்றிருக் கும் நாளோலக்க மண்டபத்திற்குச் சென்று, அரசன்முன் வணங்கி நிற்கிறான். அரசன் படைத் தலைவனைப் பார்த்து, "படைத்தலைவ! நமது பக்கத்து நாட்டை ஆளும் அரசன்— அல்ல அல்ல 'அரசன்' என்று அவனைச் சொல்லுவது அந்தச் சொல்லுக்குப் பேரிழுக்குப் பயப்பதாகும்—அந்த அறிவிலி நமது நாட்டின்மீது படையெடுப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறானாம்! மற்ற நாட்டவர்களையும்

தன்னோடு கூட்டுச் சேரும்படி அழைப்புகள் விட்டுக்கொண்டிருக்கிறானாம்! அவன் நமது நாட்டின்மீது பாய்வதற்கான நல்ல சூழ்நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறானாம்! இந்த உளவுகளை நமது ஒற்றர்கள் திறமையுடன் அறிந்துகொண்டு வந்து தெரியப்படுத்தியுள்ளார்கள்! அந்த அற்பனின் படைகள் நமது நாட்டின்மீது காலடி எடுத்துவைப்பதற்கு முன்னால், நமது படைவரிசைகள் அவனது நாட்டில் வெள்ளம்போல் புகுந்து, அந்த நாட்டைப் புயல்போல் சூறையாடி, நெருப்புப் போல் அதனைச் சுட்டுச் சாம்பலாக்கித் தீரவேண்டும்! அவனது நாடு தவிடுபொடியாக்கப்பட்டு, மண்ணோடு மண்ணாய் மாறவேண்டும்! அந்த அழகிய காட்சியை நான் காணவேண்டும்! எனவே, நமது படைவரிசைகள் கிளம்பட்டும். பகைப்புலம் நோக்கிப் பரவட்டும்! ஆவனவெல்லாம் செய்க!'' என்று கட்டளையிடுகிறான்.

அரசனின் போர்ச் செய்தி, படைத்தலைவனுக்கு மகிழ்ச்சி தரவில்லை; மாறாக 'மருட்சியை'த் தந்தது. அவன் மருட்சியுற்றதற்குக் காரணம், போர்க்களம் புகவேண்டியிருக்கிறதே என்பதல்ல; தன் அருமைக் காதலியை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டி மீண்டும் ஏற்படுகிறதே என்பதே யாகும்.

படைத்தலைவன் மயங்கித் தயங்கி நிற்கும் நிலையைக் கண்ட மன்னவன், "ஏன் தயக்கம்? என்ன காரணம்?'' என்று வினவுகிறான்.

''தூதனுப்பி நேரிடையாக அறிந்துகொண்டு, பிறகு போருக்கான ஆயத்தம் செயயலாமே என்று கருதுகிறேன்'' என்று படைத்தலைவன் கூறுகிறான்.

''அந்த அற்பனை மதித்து நான் தூது வேறு அனுப்ப வேண்டுமோ! எதுவும் தேவையில்லை! எனவே, படைகள் புறப்படட்டும்!'' என்று அரசன் ஆணை பிறப்பிக்கிறான்.

படைத்தலைவன், வேறு வழியின்றி, வேந்தனது கட்டளையை ஏற்றுக்கொண்டு, துணைவியிடம் விடை பெற்றுக்கொள்ள இல்லம் நோக்கி வருகிறான். தன்னுடைய

கணவன் மன்னனிடம் வெற்றிப்பரிசு ஏதேனும் வாங்கிக் கொண்டு வரக்கூடும் என்று மனைவி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். தலைவன், தான் உடனடியாக வேற்றுநாட்டில் போர்க்களம் புகவேண்டியிருக்கும் செய்தியினையும், அது பொருட்டுக் கடமைகளைச் செய்யவேண்டியிருக்கும் தன்னுடைய நிலைமையையும், தலைவியிடத்தில் அறிவிக்கிறான். கடமையைச் செய்ய முனைந்து நிற்கும் தலைவனைத் தடுத்து நிறுத்துதல் தகாது என்ற காரணத்தால், முகம்வாட, கண்கலங்க, நா தழதழக்க விடைகொடுத்தனுப்புகிறாள்.

மாற்றான் நாட்டில் போர் மிகக்கடுமையாக நடைபெறுகிறது. மாற்றானின் போர்ப்படைகள் சிதறடிக்கப்பட்டுத் தேர்கள் மடமடவென்று சாய, யானைகள் தடதடவென்று வீழக், குதிரைகள் படபடவென மடிய, காலாட்கள் விடுவிடு வென்று ஓடக், களமெங்கும் செங்குருதி வெள்ளம் பாய்ந்து செந்தூள் பறக்கின்றது. எதிர்த்து நிற்கமாட்டாத மாற்றரசன், படையெடுத்து வந்த மன்னர்மன்னவன் காலில் வீழ்ந்து அடைக்கலம் புகுகிறான். 'மாற்றரசன் தானே உணர்ந்து அடிபணிந்து விட்டதால், 'மேற்கொண்டு போர் நடத்தவேண்டாம், போரை நிறுத்திவிடலாம்' என்று வெற்றி மன்னன் கட்டளையிடுகிறான். போர் முடிவுக்கு வருகிறது. வெற்றி வேந்தன் தன் படைத்தலைவனையும், தன் போர் மறவர்களையும் பலபடப் பாராட்டிக் கூறிவிட்டு, மாற்றரச னிடத்திலிருந்தும், மாற்றரசன் நாட்டிலிருந்தும் கைப்பற்றப் பட்ட பொருள்களை அவர்களுக்குப் பரிசுகளாக நல்குகிறான். அரசன் படைத்தலைவனுக்கு வெற்றியின் பரிசாகத் தன்னால் நன்கு மதிக்கப்பட்ட, அழகிய—நல்ல—சிறந்த—திறமையான— விரைந்து செல்லக்கூடிய குதிரையைப் பரிசாகத் தருகிறான். படைத்தலைவன் குதிரையைப் பெருமகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டு, தன் வேலை முடிந்துவிட்டதால், விரைவாகத் தன் ஊருக்குக் கிளம்ப ஆயத்தமாகிறான்.

போர் முடிந்துவிட்டதால், தான் விரைவில் வந்து சேர்ந்து விடக்கூடும் என்ற செய்தியை, முன்கூட்டியே சென்று, தன்

காதலியிடம் கூறும்படியாக, ஏறுகுதிரை வீரன் ஒருவனைப் படைத்தலைவன் அனுப்பிவைக்கிறான்.

அரசன் புறப்படும் வரையில் காத்திருந்துவிட்டு, அரசன் புறப்பட்டதும், படைவீரர்களுக்கு அடுத்து அவர்கள் செய்ய வேண்டிய கடமைகள்பற்றிக் கட்டளைகள் இட்டுவிட்டுத் தானும் புறப்படும் முயற்சியில் படைத்தலைவன் விரைவாக ஈடுபடுகிறான்.

படைத்தலைவன் தன் தேர்ப்பாகனை விளித்துப், "பாக! அரசன் கொடுத்த அழகிய குதிரையை நம் தேரிலே பூட்டு! அதனை விரைவுபடுத்தி ஊர்நோக்கி ஓட்டு!" என்று பணிக்கிறான்.

படைத்தலைவன், தன் அருமைக் காதலியைப் பார்க்கப் போகிறோம் என்ற மட்டற்ற மகிழ்ச்சியோடு தேரில் அமர்கிறான். தேர்ப்பாகன் பாய்ந்தேறித் தேரில் உட்கார்ந்து குதிரையைச் சாட்டையால் ஒரு தட்டுத் தட்டுகிறான். குதிரை அகன்ற நிலம் குழியும்படியாகத் தன் கால்களைப் பதித்து நாலுகாற் பாய்ச்சலில் நேராகத் தலைவனின் ஊர்நோக்கி ஓடத் துவங்குகிறது. குதிரையின் கொய்துவிடப்பட்ட பிடரி மயிர் அழகாக அசைய, அதன் கழுத்தில் கட்டிவிடப்பட்ட மணிகள் இனிமையாக ஒலிக்க, வலிய கால்களால் அது பொலிவு நடைபோட்டுக் களைப்பில்லாமல் விரைந்து செல்லும் காட்சியைக் கண்டு, தலைவன் உவகை கொள்கிறான்.

குதிரை இன்னும் விரைவாகச் சென்றால், தான் இன்னும் விரைவாகத் தன் தலைவியைக் காணமுடியுமே என்ற ஆவலால், தேர்ப்பாகனை விளித்துப் "பாக! குதிரையை இன்னும் சிறிது விரைவாக ஓட்டு!" என்கிறான்.

அதைக்கேட்ட தேர்ப்பாகன், "இதைவிட இன்னும் விரைவாக எப்படி ஓட்டமுடியும்? குதிரை தன் வலிவையெல்லாம் திறமையையெல்லாம் பயன்படுத்தி எவ்வளவு விரைவாக ஓடமுடியுமோ அவ்வளவு விரைவாகத்தான் ஓடிப்பார்க்கிறது!' என்று விடையிறுத்தான்.

"இன்னும் சிறிது விரைவுபடுத்த முயன்று பாரேன்?"

"ஏன் அவ்வளவு விரைவுபடுகிறீர்கள்?"

"நான் அழகிய காட்சி ஒன்றை விரைவில் சென்று பார்க்க வேண்டுமே!"

"அப்படிப்பட்ட அழகிய காட்சிதான் என்ன?"

"நீயே சற்றுச் சிந்தித்துப்பார்! உனக்கே புரியும்!"

"எனக்கு ஏன் சிந்திக்கிற தொல்லையைத் தருகிறீர்கள்? தாங்களே சொல்லி விடுங்கள், கேட்டுக் கொள்கிறேன்!"

"என் அருமைக் காதலியை நான் காணவேண்டும்?"

"முன்பு நான் அவர்களை நன்றாகப் பார்த்திருக்கிறீர்களே! அதிலே புதுமை என்ன இருக்கிறது?"

"புதுமை இருக்கிறது, பாக! இருக்கிறது?"

"அப்படி என்ன புதுமை?"

"என் அருமைக் காதலி, நான் பிரிந்த வருத்தத்தால் ஓயாமல் அழுதுகொண்டிருப்பாள். அவளது அழுத கண்ணீர்த் துளிகள், அணிகலன்கள் அசையும் அவளது அழகிய மார்பின்கண் தெறித்து விழுந்துகொண்டிருக்கும். அழகிய மாமைநிறம் அவள் உடலில் படிந்திருக்கும். அந்த நிலையில் நான் வரப்போகும் செய்தியை ஏறுகுதிரைவீரன் சென்று தெரிவிப்பான். அவள் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவளாகி, எனக்கு விருந்து செய்யும் பெருவிருப்போடு, அப்படியே அட்டிற்சாலை புகுந்து விருந்துணவை வருந்திச் சமைப்பாள். அதனால் மிகவும் களைப்படைவாள். நான் போய் இறங்கும் செய்தி கேட்டு மகிழ்வாள். என்னை நேரிற் கண்டு புன்சிரிப்புக் கொள்வாள். அவளது அழுது ஓய்ந்த......கண்ணீர்த்துளிகள் நிறைந்த......விருப்பங்கொண்ட......வருந்தியுழைத்த...... களைப்பு எய்திய......மகிழ்ச்சி அமைந்த...புன்சிரிப்புப் பூண்ட தோற்றத்தை நான் கண்டு மகிழவேண்டும்! அதிலேதான் புதுமை இருக்கிறது! எனவேதான், தேரை விரைவாக ஓட்டச் சொல்லுகிறேன்!"

தலைவனின் உள்ளத்தை அறிந்துகொண்ட தேர்ப்பாகன், தலைவனது பெருவிருப்பை நிறைவேற்றி வைக்கவேண்டிக் குதிரையை மேலும் சற்றுக் கடுமையாகத் தட்டுகிறான். குதிரையும் பறந்து செல்லத் தொடங்குகிறது.

இது நற்றிணை 81ஆம் செய்யுளின் உட்கருத்தைத் தழுவித் தீட்டப்பட்ட சொல்லோவியக் காதற் காட்சியாகும். இது முல்லைத்திணையைச் சார்ந்து, "வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகற்கு உரைத்தது" என்னும் தன்மையை விளக்குவதாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் அகம்பன் மாலாதனார் என்ற புலவராவார். இவர் பெயர் அகம்பல்மால் ஆதனார் என்று பிரித்துரைக்கப்படும். இவரது இயற்பெயர் ஆதன் என்று தெரியவருகிறது. சிறப்புக் குறித்து 'ஆர்' விகுதி சேர்க்கப்பட்டு, ஆதனார் என்று அழைக்கப்படுகிறார். அகம்பல் என்பது மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டத்தில் 'அகமலை' என்று இப்பொழுது அழைக்கப்படும் ஊர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அகம்பல் மால் என்று உரைக்கப் பெறுதலால், இவர் அவ்வூருக்குத் தலைவராக இருந்து வந்திருக்கிறார் என்று தெரியவருகிறது. இவர் பாடிய பாட்டுக்களில் இந்தப் பாட்டு ஒன்றுதான் அகப்பட்டுள்ளது.

இருநிலங் குறையக் கொட்டிப் பரிந்தின்று
ஆறு போகிய அசைவில் நோன்தாள்
மன்னர் மதிக்கும் மாண்வினைப் புரவி
கொய்ம்மயிர் எருத்தில் பெய்ம்மலி ஆர்ப்பப்
பூண்கதில் பாகநின் தேரே பூண்தாழ்
ஆக வனமுலைக் கரைவலம் தெறிப்ப
அழுதனள் உறையும் அம்மா அரிவை
விருந்தயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய
முறுவல் இன்னகை காண்கம்
உறுபகை தணித்தனன் உரவுவாழ் வேந்தே.

(நற்றிணை—81)

(பொழிப்புரை : பாகனே! வலிமைபொருந்திய நமது அரசன் மிகுதியாக இருந்த பகையுணர்ச்சியைத் தணித்துவிட்டனன்

இங்கு இனிக் காரியம் எதுவும் இல்லையாதலின், அகன்ற நிலம் குழியும்படி தன் காலாலே கொட்டி நடந்து, விரைந்து நேராக ஓடுகின்ற, களைப்பில்லாத வலிய கால்களையுடைய, அரசரால் நன்கு மதிக்கப்படுகின்ற, மாட்சிமைப்பட்ட நடைத் தொழிலையுடைய குதிரையைக், கொய்யும் மயிரையுடைய பிடரியில் கட்டிய மணிகள் ஒலிப்ப, நின் தேரிலே பூட்டி ஓட்டுவாயாக; அணிகலன்கள் தாழ்ந்த மார்பிலுள்ள அழகிய கொங்கை முகட்டிலே கண்ணீர் தெறித்து விழும்படியாக அழுதனளாகி உறையும், அழகிய மாமை நிறத்தையுடைய காதலி, எமக்கு விருந்து செய்யும் விருப்பமுடையவளாய், அட்டிற்சாலை புகுந்து, விருந்துணவை வருந்திச் சமைத்துக் களைப்படைந்த, மகிழ்ச்சியோடமைந்த இனிய நகையைக் கண்டு மகிழ்வோமாக!

பரிந்தியின்று - விரைவாக நடந்து; ஆதி - நேராக ஓடுதல் நோன்தாள் - வலிய கால்; எருத்து - கழுத்து; பூண் - அணிகலன்; முலைக்கரைவலம் - கொங்கைமுகடு; உரவுவாழ் - வலிமை பொருந்திய.

பிரிந்து சென்ற தலைவன் தன் காதலியை மீண்டும் வந்து காணவேண்டும் என்பதிலே எவ்வளவு மகிழ்ச்சியுடையவனாகவும், துடிதுடிப்புள்ளவனாகவும் இருக்கிறான் என்பதையும், அவனை வரவேற்று அவனுக்கு விருந்துவைக்கத் தலைவி எவ்வளவு பெருவிருப்புடையவளாகவும், பேருழைப்புக் கொண்டவளாகவும் இருக்கிறாள் என்பதையும், புலவர் இச் செய்யுளின்மூலம் மிக அழகுபட விளக்கிக் காட்டுகிறார்.

படைத்தலைவனுக்கு அரசன் குதிரையைப் பரிசாக நல்குவதும், குதிரைக்குப் பிடரிமயிர் கொய்துவிடப்படுவதும், குதிரையின் கழுத்தில் மணிகள் கட்டுவதும், தலைவனைத் தலைவி விருந்தோடு வரவேற்பதும் ஆகிய பழக்கங்கள் இச் செய்யுளில் நவிலப்படுகின்றன.

குதிரை வட்டமாக ஓடுகிற ஓட்டத்திற்கு 'மாதி' என்றும், நேராக ஓடுகிற ஓட்டத்திற்கு 'ஆதி' என்றும் பெயர்,

2. பொய் தந்த பலன்!

ஓங்கி வளர்ந்து நீண்டு பரந்த பெருமலை! அதனை அடுத்து, மரங்களும், குன்றுகளும் அடர்ந்த பெருங்காடு! குன்றுகளிலெல்லாம் நெருங்கி வளர்ந்த மூங்கிற் புதர்க்கள்! அவற்றினூடே கற்பாறைகளிடையே ஏறி இறங்கி வளைந்து செல்லும் சிறிய வழி! அந்த வழியில் இரைதேடி ஓயாமல் நடமாடும் வேங்கை, வேழம், கரடி, காட்டெருமை போன்ற கொடிய விலங்குகள்! இத்தகைய கொடுமைகள் நிறைந்த காட்டைத்தான், இரவு நேரத்தில், தலைவியைத் தனியே காணுவதற்கான இடமாகத் தலைவன் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

தலைவன்மீது கொண்டிருக்கும் மட்டற்ற காதலன்பின் காரணமாகக் காட்டின் கொடுமையையும், இரவுநேரத்தின் கடுமையையும் பற்றிக் கவலைப்படாமல், தலைவி, தலைவனின் களவொழுக்கத்திற்கு இடமளித்து வருகிறாள். தலைவியின் விருப்பதை நிறைவேற்றிவைப்பதைத் தன் கடமையாகக் கொண்டுள்ள தோழி, தலைவியை நாள்தோறும் இரவுக்குறி இடத்திற்கு அழைத்துச் செல்லவேண்டியவளாக இருக்கிறாள். ஊரார்க்கும் உற்றார்க்கும் தெரியாமல், வேங்கை முதலிய காட்டு விலங்குகளுக்கு அஞ்சி அஞ்சி, நள்ளிரவில், கற்பாறையாகிய சிறிய வழியிலே, நாள்தோறும் செல்லல் தலைவிக்கும் தோழிக்கும் மிக்க வருத்தத்தைத் தருகிறது.

களவொழுக்கத்தில் பெறும் இன்பம் கழிபேரின்பமாக இருப்பதால், களவொழுக்கத்தை நீடிக்க வைப்பதிலே

கண்ணுங்கருத்துமாக இருக்கிறான் தலைவன். விரைவில் திருமணம் நடந்தேறினால் இரவுக்குறிக் கொடுமைகள் அனைத்தும் களையப்படும் என்றும், தம் வருத்தம் எவ்வளவோ நீங்கிவிடும் என்றும் தோழி தலைவனிடம் அடிக்கடி சொல்லிப் பார்க்கிறாள். தலைவன் ஏதேதா சாக்குப்போக்குச் சொல்லித் திருமணத்தை ஒற்றிப்போட்டுக் கொண்டே இருக்கிறான்.

தலைவன் தலைவியைக் காணும்போதெல்லாம் அவளை ஆரத்தழுவி, உச்சி மோந்து, முத்தமிட்டு, ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பது வழக்கம். ஒரு நாள் இரவு, அந்தப் பூங்கொடியாள், அந்தக் கட்டிளங்காளையோடு நீண்ட நேரம் ஆடிப்பாடிக் கூடிக்குலாவி யிருந்துவிட்டுப் பொழுது விடிவதற்குள் தாய் தந்தையர் அறியாவண்ணம் மனையகம் புகுந்து, தன் படுக்கையில் படுத்துக் கொள்கிறாள். தோழியும் வழக்கம்போல் அவள் பக்கத்தில் படுத்துக் கொள்கிறாள்.

பொழுது புலர்கிறது. தாய் எழுந்து சுற்றுமுற்றும் பார்க்கிறாள். மகளும் தோழியும் அயர்ந்து உறங்குவதைக் காண்கிறாள். பின்னர் முறைப்படி வீட்டு வேலைகளைப் பார்க்கத் தொடங்குகிறாள். வழக்கத்திற்கு மாறாகத் தலைவியும் தோழியும் சற்று நேரங்கழித்துப் படுக்கையை விட்டு எழுந்து வருகிறார்கள். மகள் மிகவும் சோர்வுற்றுத் தள்ளாடித் தள்ளாடி நடந்து வருவதைத் தாய் கவனிக்கிறாள். மகளின் உடல் நலத்திற்கு என்னமோ, ஏதோ என்று அச்சப்பட்டுக் கொண்டு, தாய் அவளை உற்றுநோக்குகிறாள். மகளின் தோள், முகம், மார்பு ஆகியவற்றைச் சுற்றி ஏராளமான வண்டுகள் மொய்ப்பதைப் பார்க்கிறாள். வண்டுகள் மொய்க்கும் அளவுக்கு என்றுமில்லாத புதுமணம் ஏதோ அவள் உடலில் சேர்ந்திருக்கவேண்டும் என்று எண்ணுகிறாள். மகளின் உடல் சோர்வையும், அவளை வண்டுகள் மொய்க்கும் தன்மையையும் கண்டு, அவள் யாரேனும் ஆடவருடன் களவொழுக்கம் கொண்டிருப்பாளோ என்று தாய் ஐயுறுகிறாள். தாய்க்குச் சினம் பொங்குகிறது; ஆனால்,

விளக்கத்தை மகளிடம் எப்படி வெளிப்படையாகக் கேட்பது என்று தோன்றாமல், சிறிது நேரம் திகைத்து நிற்கிறாள்.

"என்னடீ உடம்புக்கு? ஏனடி தள்ளாடி நடக்கிறாய்?" என்று தாய் கடுமையான குரலில் மகளைப் பார்த்துக் கேட்கிறாள்.

அரைத் தூக்கத்தில் நடந்துகொண்டு வந்த தலைவி, தாயின் கடுங்குரல் கேட்டுத் திடுக்கிட்டு, விழித்து நோக்கி நிற்கிறாள்.

"ஏனடி, வண்டுகள் உன்னை மொய்க்கின்றன?" என்று தாய் அதட்டிக் கேட்கிறாள்.

அப்பொழுதுதான், தன்னைச் சுற்றி வண்டுகள் மொய்க்கின்றன என்பதை, ஒருமுறை தன் தோளையும், மார்பையும் பார்த்துத் தெரிந்து கொள்கிறாள். முன்னாள் இரவில் தலைவனோடு முயங்கிக்கிடந்ததால், அவனது மாலையிலிருந்த மணமும், அவன் உடலில் பூசியிருந்த சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களும் தன் தோளிலும், மார்பிலும், முகத்திலும் பட்டுவிட்டன. அதனால்தான் வண்டுகள் தன்னை மொய்க்கின்றன என்பதை உணர்ந்து கொள்கிறாள். தாயின் கேள்விக்கு என்ன விடை கூறுவது என்று தெரியாமல், அச்சத்துடனும், நடுக்கத்துடனும், திருதிரு என்று விழித்துக் கொண்டிருக்கிறாள் தலைவி.

மகளிடமிருந்து என்ன விடை வருகிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள இடமளிக்காமல், "இதற்கு முன்பும் உன்னுடைய தோள்களை வண்டுகள் இப்படி மொய்த்துக் கிடந்தனவா?" என்று தாய் மேலும் வினவத் தொடங்கு கிறாள்.

தாயின் வினாவிற்கு என்ன விடை கூறுவது என்று தெரியாமல் திகைத்துத் தன் தோழியை வருத்தத்தோடு பார்க்கிறாள். தலைவியின் முகத்தைப் பார்த்த தோழி, தலைவி யின் நிலைமையை நன்றாகப் புரிந்துகொள்கிறாள். தலைவி அன்னையிடமிருந்து தப்பித்துக்கொள்ளும் வழி காணாது

தவிக்கிறாள்; எனவேதான் வருத்தத்துடன் தன்னை நோக்கு கிறாள் என்பதைத் தோழி அறிந்து கொள்கிறாள்.

தாய்க்கு என்ன மறுமொழி கூறலாம் என்பதுபற்றிச் சிந்திக்கிறாள். திடீரென்று ஒரு நினைவு அவளுக்கு ஏற்படு கிறது. உடனே தோழி அடுப்பில் எரிந்துகொண்டிருந்த சந்தன விறகின் கொள்ளியை எடுத்து, அதனைத் தாயிடம் காட்டி, "இந்தச் சந்தன விறகு அடுப்பில் வைக்கப்பட்டு விட்டதால், இதில் மொய்த்துக்கிடந்த வண்டுகள், மொய்ப் பதற்கு வேறு பொருள் கிடைக்கப் பெறாமல், இயற்கை மணம் கமழும் இவளது தோள்களை என்றுமில்லாத வகையில் இன்று மொய்க்கத் தொடங்கின! வண்டுகள் மொய்ப்பதற்கு வேறு எதுவும் காரணமில்லை" என்று கூறுகிறாள். தோழியின் கூற்று உண்மையாக இருக்கக்கூடும் என்று கருதிக்கொண்டு தாய் அப்பால் செல்லுகிறாள். எப்படியோ பொய்சொல்லித் தப்பித்தோம் பிழைத்தோம் என்று தோழியும் தலைவியும் அகமகிழ்ச்சி கொள்கிறார்கள்.

தாயிடம் எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படியே பொய் சொல்லித் தப்பிப்பது என்பதுபற்றித் தலைவி மிக்க கவலையுறுகிறாள். களவொழுக்கத்தை நீடிக்காது விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி தலைவனை வற்புறுத்த, இரவுக்குறிக்குத் தலைவி செல்லாமல் இருப்பதுதான் ஏற்றது என்ற முடிவுக்குத் தோழி வருகிறாள். தலைவியும் தோழியின் கருத்துக்கு உடன்பட்டு, அன்று இரவுக் குறியிடத்துக்குப் போகாமல் நின்று விடுகிறாள்.

தலைவன் தலைவியைக் காணும் ஆவலோடு இரவுக் குறியிடமாகிய அக் காடுநோக்கி வருகிறான். எப்பொழுதும் முன்கூட்டியே வந்து காத்திருக்கும் தலைவியையும், தோழி யையும் அன்று காணாமல் திகைக்கிறான். அங்குமிங்கும் ஓடியாடித் தேடிப் பார்க்கிறான். அவர்கள் அவன் கண்ணில் தட்டுப் படவில்லை. ஏதேனும் காட்டு விலங்கு அவர்களைக் கொன்றிருக்குமோ அல்லது அவர்கள் வழிதவறி வேறு எங்கேனும் போய் இருப்பார்களோ என்று அச்சத்துடன்

அலைந்து திரிந்து பார்க்கிறான். பிறகு நெடுநேரமாகியும் காதலியைக் காணமுடியவில்லையே என்று வருத்தத்துடன் தன் இருப்பிடம் நோக்கித் திரும்புகிறான்.

மறுநாள் பகற்பொழுதில், தலைவியின் வீட்டார் தலைவியை வெளியேற வொட்டாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்களோ என்ற ஐயப்பாட்டுடன், அந்த உண்மையையும் தெரிந்துகொள்ளலாம் என்ற எண்ணத்தோடு, தலைவியின் வீடுநோக்கிச் செல்கிறான். தலைவியின் வீட்டருகில் மறைவான ஓர் இடத்தில் தோழி எதிர்ப்படுகிறாள். தலைவன், முதல் நாள் இரவு, காட்டிடத்தே தான் நெடுநேரம் வரையில் காத்திருந்து, அலைந்து திரிந்து, அடைந்த துன்பத்தைத் தெரிவிக்கிறான். தோழி, தானும் தலைவியும் நாள்தோறும் அடையும் துன்பத்தை எடுத்துக்கூறி, முதல்நாள் தலைவியின் தோள்களை வண்டுகள் மொய்த்ததையும், அதனை அன்னை பார்த்துவிட்டதையும், என்ன காரணம் பற்றி வண்டுகள் மொய்க்கின்றன, இதற்குமுன்பும் வண்டுகள் அப்படி மொய்த்துக் கிடந்தனவா என்று அன்னை வினவியதையும், அது கேட்டுத் தலைவி திகைத்துத் திக்குமுக்காடி, என்ன விடையிறுப்பது என்று தெரியாமல் தன்னை நோக்கியதையும், தான் சந்தனக் கொள்ளிக்கட்டையைக் காட்டி அதிலிருந்த வண்டுகள்தாம் தலைவியின் தோள்களில் பாய்ந்தன என்று சொல்லியதையும், அதனை உண்மை என்று நம்பித் தாய் அகன்றதையும் சொல்லி, தங்களுடைய நிலைமையை விளக்குகிறாள்.

தோழி சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருந்த தலைவன், "நீங்கள் எப்படியும் இரவுக்குறியிடத்து வந்திருக்கலாமே?" என்று கூறுகிறான்.

"எப்படி வரமுடியும்?" என்று தோழி கேட்கிறாள்.

"ஏன் வரமுடியாது?"

"வந்துவிட்டு மறுநாள் காலையில் அன்னைக்கு யார் விடையிறுப்பது?"

''நேற்றுச் சொல்லியதுமாதிரி ஏதேனும் ஒரு பொய் சொல்லித் தப்பித்துக் கொள்வது?''

''எவ்வளவு நாட்களுக்குத்தான் நாங்கள் பொய் சொல்ல முடியும்? நாங்கள்தான் நாள்தோறும் ஒவ்வொரு பொய் சொல்லிக்கொண்டு வருகிறோமே?''

''அப்படியே இன்னும் சில நாட்களுக்குச் சொல்லிப் பார்ப்பதுதானே?''

''சொல்லிப் பார்க்கலாம்! ஆனால் அன்னை அதற்குள் உண்மையை அறிந்துகொண்டு தலைவியைக் காவலில் வைத்து விடுவார்கள். பிறகு அவளைப் பார்க்கவும் முடியாது; அவளை அடையவும் முடியாது. தாய் உனது களவொழுக்கத்தை அறிந்து கொண்டுவிட்டால், பிறகு உனக்கு அவளை மணம் முடித்துவைக்க ஒருப்படவே மாட்டார்கள்.

''நானே திருமணம் செய்துகொள்ள முன்வந்தால்...?''

''பிறகு வேறு யாருக்கேனும் மணம் முடித்துவைக்க முனைவார்களே ஒழிய, உனக்கு முடித்துவைக்க முன்வர மாட்டார்கள்.''

''அவளை நான் திருமணம் செய்துகொள்ளாமல், வேறு எவரும் திமணம் செய்துகொள்ள நான் விடப்போவதில்லை.''

''அந்த உணர்வு உனக்கு உண்டு என்றால், களவொழுக்கத்தைப் பற்றி எண்ணாமல், திருமணத்திற்கான ஏற்பாடுகளை உடனே செய்.''

''அப்படியானால், இப்பொழுதே புறப்படுகிறேன். திருமணத்திற்கான ஏற்பாடுகளுடன் திரும்புகிறேன். அஞ்ச வேண்டாம் என்று தலைவியிடத்தில் சொல்!'' என்று சொல்லி விட்டுத் தலைவன் அவ்விடம் விட்டு நீங்குகிறான்.

தலைவன் திருமணத்திற்கான ஏற்பாடுகளுடன் திரும்பி வருவான் என்ற உவகையோடு தோழி தலைவியிடத்தில்

சென்று செய்தியை அறிவிக்கிறாள். தலைவியும் செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகிறாள்.

*   *   *

இது நற்றிணை 55 ஆம் செய்யுளின் உட்கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சொல்லோவியமாகும். திருமணம் செய்துகொள்வதை நீடிக்காது, விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி தோழி தலைவனுக்குக் கூறுவதாக அமைந்துள்ள குறிஞ்சித் திணையின் பாற்பட்ட செய்யுளாகும் இது. இதனை இயற்றியவர் பெருவழுதி என்பவராவார். இவர் பெரும்புலவராக மட்டுமல்லாமல், பாண்டிநாட்டை ஆண்ட பெருமன்னராகவும் திகழ்ந்திருக்கிறார். இவர் கடலுண்மாய்ந்த இளம் பெருவழுதி எனவும், இளம் பெருவழுதி எனவும் கூறப் படுவார். இவர் கடலிடத்துச் சென்றபோது அதில் இறந்து பட்டமையால் கடலுண்மாய்ந்த வழுதி என அழைக்கப் பட்டார். இவர் பாடிய பாட்டுக்கள் நற்றிணை, பரிபாடல், புறநானூறு ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன. இவர் குறிஞ்சித் திணையைப் பற்றியும், பாலைத் திணையைப் பற்றியும் நயமாகப் பாடியுள்ளார்.

ஓங்குமலை நாட ஒழிகநின் வாய்மை
காம்புதலை மணந்த கல்லதர்ச் சிறுநெறி
உறுபகை பேணாது இரவில் வந்திவள்
பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்பு
அறுகாற் பறவை அளவில மொய்த்தலிற்
கண்கோ ளாக நோக்கிப் பண்டும்
இனையை யோவென வினவினள் யாயே
அதனெதிர் சொல்லா ளாகி அல்லாந்து
என்முக நோக்கி யாளே அன்னாய்
யாங்குணர்ந் துய்குவள் கொல்லென மடுத்த
சாந்தம் ஞெகிழி காட்டி
ஈங்கா கினவால் என்றிசின் யானே.

(பொழிப்புரை) : ஓங்கிய மலைநாடனே! நீ கூறும் உண்மைகளெல்லாம் இப்படியே பொய்த்தொழிவனவாக. மூங்கில்கள் நெருங்கிய கற்பாறை நெறியாகிய சிறிய வழியில், இரைதேடி உழலுகின்ற வேங்கை முதலாய மிக்க பகைமைப் பொருட்படுத்தாது, இரவிலே வந்து, இவளது அழகுவிளங்கிய மார்பை ஆரத்தழுவி மகிழ, அதனாலுண்டாகிய புது மணத்தைக் கருதி, இவளது தோள்களைச் சார்ந்து வண்டுகள் அளவில்லாவனவாய் மொய்த்தலினாலே, எம் அன்னை, தன் கண்களாலே கொல்லுபவள்போல நோக்கி, 'நீ இதற்கு முன்னும் இப்படி வண்டுகளால் மொய்க்கப்பெற்ற தோளினை யுடையையோ?' என்று வினவினாள்; அங்ஙனம் வினவலும், இவள் அதற்கு எதிர்மொழி அறியாளாய் வருத்தமுற்று என் முகத்தை நோக்கி நின்றாள்; அதனையறிந்த நான், 'இவள் எப்படி ஆராய்ந்து மறைத்துங் கூறிப் பிழைப்பாள்' என்று எண்ணி, அன்னையை நோக்கி, அடுப்பிலிட்ட சந்தனவிறகின் கொள்ளியை எடுத்துக் காட்டி, 'அன்னாய்! இவ்விறகினை அடுப்பிலிடுதலும் இதிலுள்ள வண்டுகள் இவளுடைய தோளில் மொய்க்கின்றன காண் என மறைத்துக் கூறினேன்; இங்ஙனம் எத்துணை நாள் நீ வரைந்து கொள்ளுதல் காரணமாகப் பொய்கூறி உய்விப்பது?

காம்பு—மூங்கில்; அதிர்—வழி; ஆகம்—மார்பு; அறுகாற் பறவை—வண்டு; அல்லாந்து—வருத்தமுற்று; ஞெகிழி—கொள்ளி; கோள்—கொலை; வாய்மை—இகழ்ச்சிக் குறிப்பு.

* * *

களவொழுக்கத்தில் ஈடுபடும் தலைவிக்கு ஏற்படும் இடையூறுகளும், அவற்றினின்றும் தப்பிக்கத் தலைவி கையாளும் சூழ்ச்சிகளும் முயற்சிகளும், விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி தலைவனை வற்புறுத்தத் தோழி எடுக்கும் முறைகளும், இச்செய்யுளில் தெளிவுபடவும் நயம்படவும் விளக்கிக் காட்டப் பட்டுள்ளன.

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவன் தலைவியை ஆரத்தழுவி அணைத்திருத்தல் என்பது பண்டைத் தமிழர்க்கு உடன்பட்ட ஒரு பண்பாடு என்றே தெரியவருகிறது. மேனாடுகளில் இதுநாளில் சிறப்பித்துச் சொல்லப்படும் அந்தப் பழக்கம் பண்டைத் .தமிழகத்துக்கு ஏற்புடைத்தான ஒன்று என்றே தோன்றுகிறது.

தலைவியின் தோற்றங்கண்டு, அவள் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று ஐயுற்ற காரணத்தால்தான், "இதற்கு முன்பும் வண்டுகள் உன் தோள்களை மொய்த்த துண்டா?" என்று தாய் கேட்கிறாள். இது மிகவும் நயப்பாடு நிறைந்த கூற்றாகும்.

அடுப்பில் எரிந்துகொண்டிருந்த சந்தனக் கொள்ளியை எடுத்துக் காட்டி, அதில் மொய்த்துக் கிடந்த வண்டுகள்தாம் தலைவியின் தோளில் பாய்ந்தன என்று ஏற்றவாறு பொய் சொல்லித் தலைவியைத் தப்புவிக்கத் தோழி கையாண்ட முறை, நினைத்து நினைத்து மகிழ்வதற்குரியதாகும்.

3. காதல் சிறந்ததா? பொருள் சிறந்ததா?

மணம் ஆகிச் சிலநாட்கள் அவன் மணக்கோலம் கலையாத மணமகனாகவே காட்சியளித்துவருகின்றான்; மங்கையின் அழகிலே மயங்கிக் கிடக்கிறான். அவளை இமைப்பொழுதும் விட்டு அகல மனம் வராமல், அவன், எப்பொழுதும் அவளை இணைபிரியாமல் இருந்துவருகிறான்.

அவன் அவளது அழகிய தோற்றத்தையும், இனிய சாயலையும் அடிக்கடி புகழ்கிறான். அவள் வெண்ணிறங் கொண்ட காட்டு மல்லிகைப் பூவோடு பாதிரியின் தூய பொன் தகடுபோன்ற பூவையும் சேர்த்துக் கட்டப்பட்ட மாலையைக் கரிய கூந்தலில் பொலிவோடு புனைந்திருக்கிறாள். அதன் அழகு கண்டு மகிழ்வது; அப் பூக்களின் மணத்தையும் நறுநெய் தடவப்பட்ட கூந்தலின் மணத்தையும் நுகர்ந்து களிப்பது; அவளுடைய கூந்தலைத் தடவிக்கொடுத்து உவகையுறுவது; அவளுக்கு முத்தங்கள் கொடுப்பது; அவளது இனிய இதழ்களைச் சுவைப்பது; அவளது அழகுத் தேமல் படிந்த மார்புகளைத் தன் மார்போடு சேர்த்து இறுக அணைப்பது போன்ற, இன்ன பிற காதற் களியாட்டங்களில் திளைத்து இன்புற்றிருக்கிறான். கவலையற்ற காதல் வாழ்வில் நாட்களை இனிதே கழித்துக்கொண்டு வருகிறான்.

திருமண நிகழ்ச்சிக்கும், அதனைத் தொடர்ந்து நடத்திய ஆடம்பர வாழ்வுக்கும் மிக்க பொருள் செலவாகியதால், தலைவன் முன்பு சேர்த்துவைத்திருந்த பொருளில் பெரும் பகுதி கரைந்துவிடுகிறது. சேர்த்து வைத்திருந்த பொருள் குறைந்துவருகிறது என்பதையும், மேற்கொண்டு பொருள் சேர்த்துக் கொண்டுவந்து குவித்தால்தான் எதிர்கால வாழ்வு

இனிமையாய், இன்பமாய் நடைபெற இயலும் என்பதையும், அவனது கடமையுள்ளம் மெல்ல அவனுக்கு உணர்த்தத் தொடங்குகிறது. அவனது உணர்ச்சியுள்ளமோ, அருமைத் தலைவியிடம் காதலின்பத்தை ஓயாமல் நுகர்ந்துகொண்டிருக்கும்படி அவனைத் தூண்டுகிறது.

அவன் தன் காதலியிடம் நெருங்கியிருக்கும்போது, அவனது உணர்ச்சியுள்ளம், அவனை முழுக்க முழுக்க ஆட்கொண்டு, அவனது கடமையுள்ளத்தை அவனருகே நெருங்க விடுவதில்லை. அப்பொழுதெல்லாம், உணர்ச்சியுள்ளம், "நீ உன் அருமைக் காதலியை விட்டுப் பிரிந்து போகாதே" என்று, தலைவனுக்கு அடுத்தடுத்து எடுத்து மொழிந்து கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது. இல்லத்தில் தலைவியை விட்டுத் தனியே இருக்கும்படியான நிலைமை தலைவனுக்கு ஏற்படும்போதெல்லாம், கடமையுள்ளம், அந்த நேரமாகப் பார்த்து அவனை நெருங்கி, "நீ இப்படியே வாளா இருந்துகொண்டிருந்தால், உனது எதிர்கால வாழ்வு துன்பத்தில் கிடந்து உழலும்படி நேரிடும்; அத்தகைய கேட்டை நீ தவிர்க்க வேண்டுமானால், விரைவில் பொருள் தேட நீ புறப்பட்டாக வேண்டும்; காலந்தாழ்த்தாதே; போ; மயங்காதே; உன் காதலியை விட்டுப் போ; பிரிவதற்காகக் கவலை கொள்ளாதே" என்று அறிவுரை கூறுகிறது.

அப்படிப்பட்ட பொழுதுகளில், "கடமையுள்ளத்தின் கூற்று எல்லா வகையிலும் பொருத்தமானதுதான்!" என்ற முடிவுக்குத் தலைவன் வருவது வழக்கம். கடமையுள்ளத்தின் பேச்சைக் கேட்டுத் தலைவன் மயங்கியிருக்கிறபோதெல்லாம், உணர்ச்சியுள்ளம் அவனிடம் ஓடோடியும் வந்து, "நீ கடமையுள்ளத்தின் தீய சொற்களைக் கேட்டுப் பாழ்பட்டுப்போய்விடாதே! நீ உன் காதலியைவிட்டுப் பிரிந்து போய்விட்டால், காதலி உடனே உன்னைவிட்டு என்றென்றும் பிரிந்து போய்விடுவாள்! உனக்குப் பொருள் பெரிதா? அல்லது காதலி உயிரா? என்று நினைத்துபார்! உன் காதலி உயிரை விட்டபிறகு, நீ பொருளைக் கொண்டுவந்து என்ன செய்யப்

போகிறாய்? நீ இன்பவாழ்வில் வாழவேண்டுமானால் போ உன் காதலியிடம்! அவளை விட்டுப் பிரிந்துசெல்லக் கனவிலும் நினைக்காதே?'' என்று கூறும், உணர்ச்சி வயப்பட்ட தலைவன் வேறு வழியின்றித் தலைவியிடத்தில் சென்று விடுவான். இப்படியாகச் சில நாட்கள் கழிகின்றன.

ஒருநாள், தலைவன், இல்லத்தின் ஒருபுறத்தில் தனியே உட்கார்ந்து நீடுசிந்தனையில் ஈடுபடுகிறான். அப்பொழுது கடமையுள்ளம்—உணர்ச்சியுள்ளம் ஆகிய இரண்டும் எதிர் பாராத விதமாக எதிர்ப்படுகின்றன. தலைவனைப் பொருள் தேடப் போகச்சொல்லிக் கடமையுள்ளம் வற்புறுத்துகிறது; போகவேண்டாம் என்று சொல்லி உணர்ச்சியுள்ளம் அவனைத் தடுத்து நிறுத்துகிறது. யார் சொல்லுகிறபடி நடப்பது என்று தெரியாமல் தலைவன் விழிக்கிறான். அதற்குள் கடமை யுள்ளமும் உணர்ச்சியுள்ளமும் ஒன்றையொன்று எதிர்த்து நின்று உரையாடத் தொடங்குகின்றன. தலைவன் வாளா இருந்து அந்த உரையாடலை உற்றுக் கவனித்துக்கொண்டிருக் கிறான்.

உணர்ச்சியுள்ளம் : ''உனக்குத் தலைவனிடத்தில் சிறிதுகூட அன்பு இல்லையே, ஏன்?''

கடமையுள்ளம் : ''எனக்கா அன்பில்லை? அன்பு உனக் கில்லையா, எனக்கில்லையா? என்பதை, ஊராரைக் கேட்டாலே உடனே சொல்லி விடுவார்கள்!''

உணர்ச்சி : ''உனக்கு அன்பு இருந்திருந்தால், காதலியை விட்டுப் பிரிந்து போகும்படி தலைவனிடம் சொல்லுவாயா?''

கடமை : ''அவளிடம் நான் அன்பு கொண்டிருக்கும் காரணத்தால்தான் அவனைப் பொருள்தேடப் புறப்படச்சொல்லுகிறேன், ஆனால் நீயோ, அவள் எக்கேடு கெட்டால் என்ன என்று வேலை செய்து வருகிறாய்!''

உணர்ச்சி : "அதனால்தான் அவனைப் பிரிந்து செல்லச் சொல்லுகின்றாயா?"

கடமை : "அவன் பிரிந்து செல்லுவதை அல்ல, அவன் பொருள்தேடச் செல்லுவதைத்தான் நான் அன்பின் அடையாளம் என்கிறேன்!"

உணர்ச்சி : "பிரிவினால் தலைவன் தலைவியர்க்கு ஏற்படும் துன்பத்தைப்பற்றி நீ நினைத்துப் பார்க்கவே இல்லையா?

கடமை : "பிரிவினால் இருவர்க்கும் துன்பம் ஏற்படும் என்பதை உணர்கிறேன். ஆனால், பொருள் குறைந்து வறுமை ஏற்பட்டு அதில் உழலும்போது உண்டாகும் துன்பம், பிரிதலினால் ஏற்படும் துன்பத்தைக் காட்டிலும் மிகவாக இருக்குமே என்றுதான் அஞ்சுகிறேன்."

உணர்ச்சி : "போயும் போயும் அவன் எவ்வளவு பொருள் ஈட்டிக்கொண்டு வந்துவிட முடியும் என்று கருது கிறாய்?"

கடமை : "குளிர்கால வாழ்வுக்குத் தேவையான பொருள் ஈட்டிக்கொண்டு வரமுடியுமே?"

உணர்ச்சி : "பெரிய போர்வீரர்களுக்குத் தலைவனும், சிறந்த கொடைவள்ளலுமான ஓரியின் ஈகைக்குப் போதுமான அளவு பொருளைத் திரட்டுகிறான் என்றே வைத்துக்கொள்ளுவோம்? அதனால் என்ன பலன்?"

கடமை : "என்ன பலனா? பொருளில்லாமல் காதல் வாழ்வு இனிது நடைபெறாதே!"

உணர்ச்சி : "தலைவன் காதலியிடம் பெறும் இன்பத்தைக் காட்டிலும், நீ தேடச் சொல்லும் பொருளினால் கிடைக்கப்பெறும் இன்பம் எவ்வகையிலும் சிறந்த தாகாது?"

கடமை : "அந்தச் சிறந்த இன்பத்திற்கே பொருள்தான் அடிப்படையாகும். எனவேதான் அதனைத் தேடப் புறப்படச் சொல்லுகிறேன்!"

உணர்ச்சி : "ஏன் நீ ஓயாமல் தலைவனின் மனத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கிறாய்? நீ வேண்டு மானால் பொருள்தேடப் போ! நான் அவனைப் புறப்படவிடப் போவதில்லை!"

கடமை : "தலைவன் சிறிதுகாலம் போய்வருவதைத் தலைவி பொறுத்துக்கொண்டிருக்கக் கூடாதா?"

உணர்ச்சி ; "அவன் போய்த் திரும்பும் காலம் வரையில் தலைவி உயிரோடு இருந்தால் அல்லவா, அவள் பொறுத்துக்கொண்டிருக்க! அவன் புறப்படப் போகிறான் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே அவள் உயிரை விட்டுவிடப் போகிறாளே!

உணர்ச்சியுள்ளம்—கடமையுள்ளம் ஆகிய இரண்டின் உரையாடலையும் கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவி உயிரை விட்டுவிடுவாள் என்ற செய்தி காதில் விழுந்ததும், துடித்து எழுந்து, "கடமையுள்ளமே! நான் உன்னோடு புறப் படுவதாக இல்லை! இயன்றால் நீ மட்டும் வேண்டுமானால் போ! நான் உணர்ச்சியுள்ளம் சொல்லுகிறபடிதான் கேட்டு நடக்கப் போகிறேன்! நீ எனக்கு இனிமேல் தொல்லை கொடுக்காதே! நினைக்கும்பொழுதெல்லாம் மகிழ்ச்சியூட்டும் தலைவியின் இன்பத்தைப்போல், நீ தேடச் செல்லும் பொருள் ஒருக்காலும் இன்பம் தராதே! எனவே, நீ மேலும் மேலும் என்னை வற்புறுத்திக்கொண்டு இங்கு நில்லாதே! போய்விடு!" என்று கடமையுள்ளத்தைப் பார்த்துக் கூறிவிட்டு, உணர்ச்சி யுள்ளத்தை அழைத்துக்கொண்டு, தலைவியிடம் போய்ச் சேருகிறான்.

தலைவன் போக்கு ஒழிந்தான் என்ற செய்தியைக் கேள்வி யுற்றுத் தலைவி மிக்க மகிழ்ச்சி கொள்கிறாள்!

* * *

நற்றிணை 52ஆம் செய்யுளின் உட்கருத்தே மேலே விரிவாகச் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளது. இது தலைவன் தலைவியைவிட்டுப் பிரிய நினைந்து, பின்பு பிரியாமல் நின்று கொள்ளுவது என்னும் பாலை ஒழுக்கத்தைச் சார்ந்த செய்யுளாகும். இதனை இயற்றியவர் பாலத்தனார் என்ற புலவராவார். இவரது இயற்பெயர் பாலத்தன். இவரை நப்பாலத்தனார் என்றும் அழைப்பர். இவர் பாலைத் திணையைப்பற்றிச் சிறப்பித்துப் பாடியுள்ளார். கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரியின் காலத்தவர் இவர். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாட்டுக்கள் காணப்படுகின்றன.

மாக்கொடி அதிரல் பூவொடு பாதிரித்
தூத்தகட்டு எதிர்மலர் வேய்ந்த கூந்தல்
மணங்கமழ் நாற்றம் மரீஇ யாமிவள்
அணங்கணி ஆகம் அடைய முயங்கி
வீங்குவர்க் கவவின் நீங்கல் செல்லேம்
நீயே, ஆள்வினை சிறப்ப எண்ணி நாளும்
பிரிந்துறை வாழ்க்கை புரிந்தமை யலையே
அன்பிலை வாழியெம் நெஞ்சே வெம்போர்
மழவர் பெருமகன் மாவள் ஓரி
கைவளம் இயைவ தாயினும்
ஐதேகு அம்ம இயைந்துசெய் பொருளே.

(நற்றிணை—52)

(பொழிப்புரை :) எமது நெஞ்சமே! கரிய கொடியையுடைய காட்டு மல்லிகைப் பூவுடனே, தூய பொன்தகடுபோன்ற பாதிரி மலரையும் சேர எதிரெதிர்வைத்துத் தொடுத்துக் கட்டிய மலர்மாலையைச் சூடிய கூந்தலின் மணங்கமழும் நாற்றத்தைப் பெற்று, யாம் இவளுடைய சுணங்கமைந்த மார்பின் கொங்கையை ஒருசேர அணைத்துக் கொண்டு, மிக்க இன்சுவையையுடைய இவள் கையால் அணைத்திருத் தலினின்றும் நீங்க இயலவில்லை; நீதானும் பொருள் தேடும் முயற்சியை மேம்படக்கருதி நாள்தோறும் எம்மைப் பிரிந்து

தனித்து உறைகின்ற வாழ்வினை விரும்பலைச் சிறிதுபொழுதும் ஒயமாட்டேனென்கிறாய்; ஆதலாலே, நீ என்னிடத்தில் அன்புடையை அல்லை; இங்ஙனமே நெடுங்காலம் வாழ்வாயாக; நீ உட்கொண்டு உடன்பட்டு ஈட்டும் பொருள்தான், வெய்ய போர்செய்ய வல்ல போர்வீரர் தலைவனாகிய சிறந்த கொடையையுடைய ஓரி என்பவனது ஈகைக்குப் பொருந்திய செல்வமே நீ ஈட்டும் பொருளாக நினக்குக் கிடைக்கப் பெறினும், அப்பொருள் இவளது முயக்கத்தைக் காட்டிலும் சிறந்ததல்ல, தெரிந்துகொள்வாய்; அது மிகக் குறைந்த மதிப்புடையதாகும்; ஆகையினாலே, நீயே வேண்டுமென்றால் போவாய்; யாம் வருவதாயில்லை!

மாக்கொடி - கரிய கொடி; அதிரல் - காட்டு மல்லிகை; தகட்டு - பொன்தகட்டு; சுணங்கு - தேமல்; ஆகம் —மார்பு; கவவு - அகத்திடுவது, கையணைப்பு; மழவர் - போர்வீரர்; ஐது - மெல்லிது; ஆள்வினை - முயற்சி; உவர் - இனிய சுவை; அம்ம - வியப்பு.

* * *

கடமை வயப்பட்ட நெஞ்சத்தைத் தனியே நிறுத்தி, அதனோடு உணர்ச்சிவயப்பட்ட தலைவன் பேசுவதுபோல், புலவர் செய்திருக்கும் கற்பனைத் திறன், இச்செய்யுளில் மிகவும் அழகாக அமைந்துள்ளது. இளங்காதலர்கள் பொருளைவிடக் காதலின்பத்தையே சிறந்ததாகக் கருதுவர் என்பதும் இதன்கண் இனிது விளக்கப்பட்டுள்ளது.

கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரியின் வள்ளல் தன்மையைப் புகழ்வதற்குப், புலவர் இச்செய்யுளை ஒரு வாய்ப் பாகக் கொண்டு, ஏற்ற இடத்தில் வைத்து ஏற்றவிதமாகப் புகழ்கிறார். ஓரி எவ்வளவு பொருள்கள் கிடைத்தாலும் அவ்வளவு பொருள்களையும் வழங்கிவிடுவான் என்பதையும். அவன் வழங்கும் பொருள்களுக்குக் கணக்கே இல்லை என்பதை யும், புலவர் மறைமுகமாக உணர்த்திக் காட்டுகிறார். பொருளின் ஒரு முடிந்த பெரிய அளவுக்கு. ஓரியின் ஈகைத்

பொருளைச் சுட்டிக்காட்டியதிலிருந்து, அவனது வள்ளல் தன்மையை எளிதில் புரிந்துகொள்ளலாம். ஓரி வள்ளன்மை யோடு, போர்புரியும் வன்மையும் கொண்டிருந்தான் என்பதை, "வெம்போர் மழவர் பெருமகன்" என்ற செற்றொடரால் உணர்த்துகிறார்.

காதலியை விட்டுப் பிரிய நினைக்கும் காதலனின் மனம் எப்படியெல்லாம் தடுமாற்ற நிலையை அடையும் என்பது இப்பாடலில் அழகுறப் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

காட்டு மல்லிகைப் பூவோடு பொன்னிறம் கொண்ட பாதிரி மலர்களைச் சேர்த்து மாலையாகத் தொடுக்கும் பழக்கமும் இச் செய்யுளால் அறிவிக்கப்படுகிறது.

4. கண்ணுறக்கமும் வருமோ ?

தலைவி தன் மனத்திற்குகந்த தலைவனைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, களவொழுக்கத்திலே காதலின்பம் நுகர்ந்து வருகிறாள்.

தோழி, தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே தூது சென்று வருவதும், இரவுக்குறி பகற்குறியிடங்களை உறுதிப் படுத்துவதும், குறியிடங்களுக்குத் தலைவியை இட்டுச் செல்வதும், தலைவனும் தலைவியும் அளவளாவி மகிழ்ந்து இருக்கும்போது, அவர்களை உற்றார் உறவினர் ஊரார் கண்டு கொள்ளாதபடி பாதுகாத்து வருதலும் ஆன செயல்களை மனமகிழ்ச்சியோடு நிறைவேற்றி வருகிறாள்.

தலைவன், களவொழுக்க இன்பத்தைத் தொடர்ந்து நுகர்ந்து கொண்டிருப்பதிலே கட்டுக்கடங்காப் பேராவலுடையவனாகிக் களவொழுக்கத்தை நீடித்துக் கொண்டிருக்கிறான்.

தலைவியின் பெற்றோர்கள் தம் மகள் மணத்திற்குரிய பருவம் எய்தி விட்டாளாகையால், அவளை வெளியே மிகவாக நடமாட விடாமல், வீட்டிற்குள்ளேயே இருக்கும்படி செய்து, தக்க மணமகன் ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதிலே ஆழ்ந்த கவலை செலுத்தி வருகிறார்கள்.

தன்னை நன்கு ஒப்பனை செய்துகொண்டு அடிக்கடி தோழியுடன் வெளியே சென்றுவருவதில் தலைவி மிகத் துடிதுடிப்புடையவளாக இருப்பதைத் தாய் கவனிக்கிறாள். மகள் எங்கேயோ அடிக்கடி போகிறாள். அதுவும் வெளியே போவதென்றால் சீவி முடித்துச் சீர் செய்துகொண்டு

போகிறாள். வெளியே போவதென்றால் ஆட்டமும் பாட்டமும் மகிழ்ச்சியும் அவளிடத்தில் குதிகொள்கின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் அவள் யாரேனும் கட்டிளங் காளையோடு நட்புறவு கொண்டிருப்பாளோ என்று தாய் ஐயமுறுகிறாள். மகளுடைய நடை உடை நடிப்பு தாயாரின் ஐயத்தை நாளுக்கு நாள் வலுப்படுத்துகின்றன. தெளிவான சான்று எதுவும் இல்லாமல் அதுபற்றி மகளை எப்படிக்கேட்பது என்று தாய்க்குப் புலப்படவில்லை. எதற்கும் மகளை வெளியே போகவிடாமல் தடுத்து வீட்டிலே இருக்கும்படி செய்துவிடுவது நல்லது என்ற முடிவுக்குத் தாய் வருகிறாள். தக்க பருவம் எய்திவிட்டபடியால் இனி வீட்டைவிட்டு வெளியே எங்கும் போகக்கூடாது என்ற கடுமையான கட்டளையை மகளுக்கு இடுகிறாள் தாய். தலைவியை எங்கும் அழைத்துச் செல்லக்கூடாது என்று தோழிக்கும், தலைவி வெளியே செல்லாதவாறு காவல் காக்கும்படி செவிலித்தாய்க்கும் நற்றாய் கட்டளைகள் பிறப்பிக்கிறாள்.

நற்றாயின் கட்டளைக்கேற்பத் தலைவி வீட்டிலேயே இருக்கவேண்டியவளாகிறாள். என்ன செய்வது என்று தெரியாமல், தலைவனை இரவுக்குறியிடத்துக் காண்பதாகச் சொல்லிவிட்டு வந்து விட்டோமே, தலைவனை இனிக் காணமுடியாமற் போய்விடுமே, தலைவன் என்ன எண்ணிக் கொள்வானோ, தன்னை இனி வெறுத்தொதுக்கி விடுவானோ என்றவாறெல்லாம் எண்ணி எண்ணித் தலைவி மனம் புழுங்குகிறாள். வழக்கம்போல் இரவுக்குறியிடத்துக்கு யாரும் அறியா வண்ணம் நழுவிப்போக முடியாதபடி செவிலித்தாயின் கட்டுக்காவல் மிகுந்திருப்பது கண்டு கலங்குகிறாள். தலைவனைக் காணுவதற்கான எளிய வழி ஏதேனும் ஒன்று சொல்லித்தரும்படி தலைவி தோழியை வற்புறுத்தி வற்புறுத்திக் கேட்கிறாள். செவிலித்தாயின் கண்காணிப்பு மிகமும்முரமாக இருக்கும்போது, வெளியே போவதற்கான வாய்ப்பு அவ்வளவு எளிதில் கிடைக்கப்பெறாது என்று தோழி கூறுகிறாள்,

செவிலித்தாய், காவலின் நிமித்தம் தலைவியின் அருகே வெளிவாயில் அடைபடப் படுத்துக் கொண்டிருக்கிறாள். தலைவியும் தோழியும் தமக்குள் ஒருவரோடொருவர் செவிலித் தாயின் காதுக்கு எட்டாமல் குசுகுசு என்று பேசிக்கொண்டும், நல்ல உறக்கங்கொள்வதைப் போல் நடித்துக்கொண்டும், ஆழ்ந்த கவலையில் அமிழ்ந்திருக்கின்றனர்.

இரவுக்குறி நேரமும் வருகிறது; கடந்து செல்கிறது. தலைவன் இரவுக்குறியிடத்திற்குச் சென்று தலைவியின் வருகைக்குக் காத்திருக்கிறான். இரவுக்குறி நேரம் வந்து சென்று நீண்ட நாழிகை ஆனபிறகும் தலைவி வராமைகண்டு மிகவும் வருந்திக் கலங்குகிறான். 'தலைவிக்கு வழியில் ஏதேனும் தீங்கு ஏற்பட்டு விட்டதோ? அல்லது ஊரார் யாரும் அவளது களவு நடவடிக்கையைக் கவனித்து விட்டார்களோ? அல்லது, அவளது பெற்றோர்கள் அவளை வீட்டிலேயே இருத்திவைத்து விட்டார்களோ?' என்றெல்லாம் நினைந்து நினைந்து வருந்துகிறான். பொழுதுவிடியுங்காலம் வரையில் காத்திருந்த தலைவன், பகற் பொழுதில் தலைவியின் இருப்பிடம் சென்று உண்மை அறிந்துகொள்ள முயலலாம் என்ற முடிவோடு, தன் இல்லம் நோக்கித் திரும்புகிறான்.

இரவுக்குறி நேரம் வந்து போய்விட்டது. தலைவனைக் காண்பதைத் தவற விட்டுவிட்டோம் என்று எண்ணிடும் போதெல்லாம், தலைவியின் நெஞ்சு துடிதுடிக்கத் துவங்கி விடுகிறது. தலைவன்பால் அவள் கொண்ட காதல் வேட்கை மிகுதியுற்று அவளது ஆசைப் பெருக்கமானது அவளைத் துன்புறுத்த, அவள் உடல் வெப்பமுறுகிறது. காதல் வெப்பத்தால் துடிதுடிக்கும் அவள் பெருமூச்செறிகிறாள். அம்பால் அடிபட்டு வீழ்ந்த பெண்மான் எப்படிப் பெருமூச்சு வாங்கிவிடுமோ, அடிப்படித் தலைவி பெருமூச்செறிவதைச் செவிலித்தாய் உற்றுக் கவனிக்கிறாள்.

"என் அருமை மகளே! இன்னமும் நீ தூங்கவில்லையா? ஏன் இப்படிப் பெருமூச்செறிகிறாய்?" என்று செவிலித்தாய் தலைவியைக் கேட்கிறாள்.

செவிலித்தாயின் இந்தச் சொற்றொடர்களைக் கேட்டவுடன், தலைவி, மிகத்தொல்லைப்பட்டுப் பெருமூச் செறிவதை அடக்கிக்கொண்டு, உறங்குவதுபோல நடிப்புச் செய்யத் தொடங்குகிறாள். தலைவி நன்கு உறங்குவதுபோல் இருப்பதைக் கண்டுகொண்ட செவிலி, மகள் ஏதோ தூக்கக் கலக்கத்தில் புலம்புகிறாள் போலும் என்று நினைத்துக் கொண்டு, அந்த அளவிலே அமைந்துவிடுகிறாள். தலைவி, தலைவன்மீதும், அவன் உடல் வனப்புமீதும், செல்வச் செழிப்பு மீதும், வளங்கொழிக்கும் அவனது மலைமீதும், அதில் பொழியும் மிக்க மழைமீதும், அதில் செழித்து வளரும் சிச்சிலிப் பறவையின் வாய்போன்ற அரும்புகளையுடைய முல்லை மலர்கள் மீதும், செறிந்து வளர்ந்த அவனது காடுமீதும், அதன் பள்ளங்களில் தேங்கிக் கிடக்கும் மணிகள் மீதும், இவையெல்லாம் சேர்ந்த அவனது நாட்டின் மீதும் தன் எண்ணத்தை அலையவிட்டுக்கொண்டு, அசையாமல் அப்படியே படுத்துக்கொண்டு, தான் சொல்வது வெளியே தெரியாதபடி, தன் நெஞ்சிற்குத்தானே சொல்லிக்கொள்வதுபோல், "அப்படிப் பட்ட தலைமகனை விரும்பி எண்ணியிருப்போர்க்குக் கண்ணுறக்கம் வேறு வருமோ?" என்று சொல்லிக்கொள்கிறாள். அருகே படுத்திருக்கும் தோழி அதற்குள் நன்கு உறங்கி விடுகிறாள். சரியான தூக்கம் இல்லாத நிலையிலேயே தலைவி இரவுப்பொழுதைக் கழிக்கிறாள்.

பொழுது விடிந்தபிறகு தோழியும் தலைவியும் தனியாகப் புறக்கடையில் உலாவச் செல்லும்போது, தலைவி, இரவில் தனக்குத் தூக்கம் வராமல் போனதைப்பற்றியும், தலைவன் பால் கொண்ட காதல் வேட்கை மிகுதியினால், தான் துன்புற்று வெப்பமுற்றுப் பெருமூச்செறிந்ததையும், "இன்னமும் தூங்க வில்லையா?" என்று செவிலி கேட்டதையும், தான் விடை ஏதும் பகராமல் அப்படியே அசைவற்று உறங்குவதைப்போல் நடிப்புச் செய்ததையும், தன் நெஞ்சம் தலைவனைப் பற்றிய நினைவுகளில் அலைந்து திரிந்ததையும், "தலைவனை விரும்பி எண்ணியிருப்போர்க்குக் கண்ணுறக்கம் வேறு வருமோ?" என்று

தனக்குள்ளே தானே சொல்லிக்கொண்டதையும், தோழியிடம் விளக்கமாக எடுத்துக்கூறினாள். தலைவியின் நிலைமையையும் உள்ளக்கிடக்கையையும் நன்கு அறிந்துகொண்ட தோழி, தலைமகனை எவ்வாறேனும் வற்புறுத்தித் தலைவியை விரைவில் மணந்துகொள்ளும்படி தூண்டவேண்டும் என்று முடிவு செய்துகொள்கிறாள்.

தலைவியைப் பற்றிய நிலையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலோடு, பொழுதுபுலர்ந்ததும், தலைவன் தலைவியின் வீடுநோக்கி ஒளிந்து மறைந்து அஞ்சி வருகிறான். தலைவியும் தோழியும் புறக்கடைத் தோட்டத்தில் தனியே உரையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, ஒரு மரத்தின் அடியில் ஒளிந்துநின்று, அவர்கள் பேசிக்கொள்வதை உற்று நோக்கிக் கேட்க முயலுகிறான். தலைவன் வந்திருப் பதையும், மரத்தடியில் மறைவாக ஒளிந்து நின்று உற்றுக் கேட்பதையும் கடைக்கண்ணால் கண்டுகொண்ட தோழி, தலைவியிடம் சிலபல வினாக்களை எழுப்பித், தலைவியை நற்றாய் காவலில் வைத்துவிட்ட செய்தி பற்றியும், இரவில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றியும், தலைவியின் வாயிலிருந்து வெளிவரும்படி செய்கிறாள்.

தோழி—தலைவி ஆகியோரின் உரையாடலைக் கேட்ட தலைவன், தலைவியின் நிலைமையையும், அவளது உள்ளக் கிடக்கையையும், அவள் தன்மீது கொண்டிருக்கும் மட்டற்ற காதலன்பையும், தான் விரைவில் திருமணம் செய்துகொள்ள முன்வர வேண்டுமென்றே அவள் விரும்புகிறாள் என்பதையும் அறிந்து கொள்கிறான்.

"திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வந்து, தலைவியைக் காண்பேன்" என்ற முடிவோடு தலைவன் அவ்விடம் விட்டு அகல்கிறான்.

* * *

இது, நற்றிணை 61ஆம் செய்யுளின் கருத்தை உள்ளடக்கித் தீட்டப்பட்டுள்ள சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள்

குறிஞ்சித் திணையின்பாற்பட்டுத் தலைவன் வரவுணர்ந்து தலைவியைத் தோழி தானாகக் கொண்டு சொல்லுவாளாய்ச் சொல்லியது என்னும் பிரிவின்பாற் பட்டதாகும். இந்தச் செய்யுளை இயற்றிய ஆசிரியர் சிறுமோலிகனார் என்ற சங்கப் புலவராவார். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. இவர் பாடிய செய்யுட்களிலே இது ஒன்றுதான் கிடைக்கப்பெற்றுள்ளது.

கேளாய் எல்ல தோழி! அல்கல்
வேணவா நலிய வெய்ய உயிரா
ஏமான் பிணையின் வருந்தினேன் ஆகத்
துயர்மருங் கறிந்தனள் போல அன்னை
துஞ்சா யோவென் குறுமகள் என்றலில்
சொல்வெளிப் படாமை மெல்லவென் நெஞ்சில்
படுமழை பொழிந்த பாறை மருங்கில்
சிரல்வா யுற்ற(து) அளவில் பரலவல்
கான்கெழு நாடன் படர்ந்தோர்க்குக்
கண்ணும் படுமோ? என்றிசின் யானே.

(நற்றிணை—61)

(பொழிப்புரை :) ஏடீ! தோழி! நான் கூறுகின்ற இதனைக் கேட்பாயாக! நேற்றிரவில் வேட்கை மிகுதியாலுற்ற ஆசைப் பெருக்கமானது துன்புறுத்தலாலே வெப்பமாகப் பெருமூச் செறிந்த அம்புபட்ட மான் பிணைபோல வருத்தமடைந் தேனாக, அப்பொழுது அன்னை யானுற்ற துன்பமிகுதியை அறிந்தாள்போல, என்னை நோக்கி, "என்னிள மகளே! நீ தூங்கவில்லையா?" என்றதும், யான் சொல்லுவது வெளியே தெரியாதபடி மெல்ல என்னெஞ்சினுள்ளே, "மிக்க மழை பொழிந்த கற்பாறையருகிலே பூத்த, சிச்சிலிப் பறவையின் வாய்போன்ற அரும்புகளையுடைய முல்லையும், மணிகள் நிரம்பிய பள்ளங்களுமுடைய,விளங்கிய காடு சூழ்ந்த நாட்டை யுடைய தலைமகனைக் கருதியிருப்போர்க்குக் கண்ணுறக்கமும் வருமோ?" என்றேன் காண்!

அல்கல் - இரவு; வேணவா - வேட்கை மிகுதியாலுற்ற ஆசைப்பெருக்கம்; நலிய - துன்புறுத்த; ஏமான்பிணை - அம்பு பட்ட மான்பிணை; சிரல் - சிச்சிலிப்பறவை, பரல் - கல்; மணி.

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவி, தன்னை விரும்பும் காதலன் விரைவில் தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்பதில், எவ்வளவு துடிதுடிப்பு உள்ளவளாக விளங்குவாள் என்பதையும், தலைவனைப் பிரிந்து வாழ நேரிடும்போது எவ்வளவு துன்பமுறுவாள் என்பதையும் இச் செய்யுள் எவ்வளவு அழகுபட விளக்கிக் காட்டுகிறது!

ஆசைப் பெருக்கத்தால் உடல் வெப்பமுற்றுத் தலைவி பெருமூச்செறிகிறாள் என்பதும், அதனைக் கண்ட அன்னை "இன்னமும் தூங்கவில்லையா?" என்று கேட்டாள் என்பதும், அதற்குத் தலைவி வாய்விட்டு மறுமொழி கூறாமல், தனக்குள்ளேயே, "எப்படிக் கண்ணுறக்கம் வரும்?" என்று முணுமுணுத்துக் கொண்டாள் என்பதும், நயப்பாடு நிறைந்தவையாகும்.

தலைவி வெப்பத்தால் பெருமூச்செறிவதற்கு, அம்புபட்ட மான் பெருமூச்செறிவதை உவமையாக்கி கூறியிருப்பது நினைந்து மகிழ்வதற்குரியதாகும். முல்லையின் அரும்பு களுக்குச் சிச்சிலிப்பறவையின் வாயை உவமையாக்கிக் கூறியிருப்பதும் மகிழ்ச்சி பயப்பதாகும்.

5. இரவிலே தங்க - என்ன குறை?

அவள் வாழும் ஊர், கடற்கரையிடத்தை அடுத்த சிற்றூர். கடற்கரையிடத்தில் உப்பங்கழிகள் நிரம்பிக் காணப்படுகின்றன. உப்பங்கழிகளில் பரந்து பூத்துக் குலுங்கிக் கிடக்கும் நெய்தல் மலர்கள், அக்கடற்கரையிடத்திற்கே தனி அழகைக் கொடுக்கின்றன.

உப்பங் கழிகளில் உலாவும் இறால்மீனையும் சுறாமீனையும் தின்று மகிழ்ந்த வெள்ளிய நாரைகள் கூட்டங் கூட்டமாக வந்து தங்குவதும், பிறகு அவைகள் சிறகை வீசிக்கொண்டு உப்புக் குவியல்களின்மேல் செஞ்ஞாயிறு சென்று வீழும் மாலை நேரத்தில் பறந்து செல்வதும், பின்னர் கரிய கிளைகளை யுடைய பெரிய புன்னைமரங்களிலே அவையெல்லாம் திரள் திரளாகச்சென்று அடைவதும், கடலலைகள் முழவுபோல் ஒலித்துக் கொண்டு பொங்கி எழுவதும், அவை உடைந்து வீழ் வதும் காண்பதற்கு இனிய காட்சிகளாக இருந்து வருகின்றன.

இத்தகைய இயற்கைச் சூழ்நிலைகளிடையே, தோகை விரித்தாடும் மயிலென அவள் நடமாடி வருகிறாள். அவளது அழகும் சாயலும் அந்தக் கடற்கரையிடத்துக்கே பொலிவை யும், பெருமையையும் ஊட்டுகின்றன என்று கூறினால், அது மிகையாகாது. அவள், தன் தோழியை, நாள்தோறும் மாலைப்பொழுதில் உடன் அழைத்துக்கொண்டு, கடற்கரை யில் உலாவுவதும், இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வதும் வழக்கம். அவளுடைய நடமாட்டத்தைக் கண்ட கட்டிளங் காளை ஒருவன் அவள்மீது காதல் மயக்கங்கொண்டு வீசிய காதல்வலையில் வீழ்கிறாள். இருவரும் களவொழுக்கக் காதலர்

களாகப் பகற்குறியிடங்களில் அவர்கள் இருவரும் கூடுவதும், பிரிவதும், ஆன முறையில் களவொழுக்கத்தைக் கடைப் பிடித்து வருகின்றனர். தோழி, தலைவிக்கு உடந்தையாக இருந்து களவொழுக்கம் இனிய முறையில் நடந்தேறுவதற் கான உதவிகளை அவ்வப்போது செய்து வருகிறாள்.

உற்றார்க்கும் உறவினர்க்கும் அஞ்சி வாழும் களவொழுக்க வாழ்வை, நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து கடைப்பிடிக்கத் தலைவிக்கு விருப்பமில்லை. விரைவில் திருமணத்தை முடித்துக் கொண்டால், இல்லற வாழ்வை யாருக்கும் அஞ்சாமல் இனிய முறையில் நடத்திச் செல்லலாமே என்று தலைவி எண்ணுகிறாள். தலைவன் திருமணத்தை ஒத்திப்போடுவ திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறான். களவொழுக்க இன்பமே அவனுக்கு நிகரற்ற இன்பமாகப் படுகிறது.

தலைவியின் வருத்தத்தையும், விருப்பத்தையும் நாமாவது தலைவனிடம் வற்புறுத்திக் கூறுவோம் என்ற முடிவுக்குத் தோழி வருகிறாள். ஒருநாள், தலைவன் பகற்குறியிடத்திற்கு வந்து தலைவியைக் கண்டுவிட்டுப் பிரிந்து செல்லும்போது, தோழி, அவன் முன்னால் சென்று வழிமறித்து நிற்கிறாள். என்றுமில்லாத வகையில் தோழி வழிமறித்து நிற்பதைக் கண்ட தலைவன் திடுக்கிட்டுத் திகைத்துப் போகிறான்.

தலைவன் : ஏன்? என்ன வேண்டும்?

தோழி : "ஒன்றுமில்லை! ஒரு செய்தி தங்களிடம் சொல்ல வேண்டும்,"

தலைவன் : "நீ என்ன சொல்கிறாய் என்பதே எனக்குப் புரியவில்லலயே? என்மீது உனக்கு என்ன ஐயம் ஏற்பட்டது?"

தோழி : "நீங்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இதுநாள் வரையில் இருக்கிறீர்களே ஒழிய,

இங்கேயே தங்குவதற்கான ஏற்பாடு எதனையும் செய்யக் காணோம் என்கிறேன்!''

தலைவன் : "இங்கேயே தங்குவதற்கு எனக்கு விருப்பந்தான். தலைவி விரும்புகிறாளா? என்பதுதானே கேள்வி!''

தோழி : "இங்கேயே என்றால், இந்தக் குறியிடத்தைக் குறிப்பிடுகிறேன் என்று தாங்கள் கருதாதீர்கள். இங்கேயே என்னும்போது, இங்கேயுள்ள தலைவியின் இல்லத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.''

தலைவன் : "தலைவியின் இல்லத்தில் வந்து தங்கியிருக்க எனக்குப் பெருவிருப்பந்தான். ஆனால் அவளது தாய் தந்தையரும் தமையன்மார்களும் அவளையும் சினந்து கொள்வார்கள், என்னையும் அடித்துத் துரத்துவார்களே!''

தோழி : "நீங்களிருவரும் களவொழுக்கம் நடத்திக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டுவிட்டால்தான் அவளைச் சினந்துகொள்ளவும், உங்களை அடித்துத் துரத்தவும் செய்வார்கள். நீங்கள் முறைப்படி அவளைத் திருமணம் செய்துகொள்ள முன்வந்தால், உங்களுக்கு ஏன் அவர்கள் அவ்விதத் தொல்லைகளைக் கொடுக்கப் போகிறார்கள்?''

தலைவன் : "அவர்களுக்குத் தெரியாமல் நான் திருமணம் செய்துகொண்டால், அப்பொழுதும் என்னைச் சினந்து கொள்ளத்தானே செய்வார்கள்?''

தோழி : "அவர்களுக்குத் தெரியாமல் நீங்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டிய இன்றியமையாமை என்ன இருக்கிறது? தலைவியின் தாய் தந்தையர்களைத் தாங்களே நேரிற்கண்டு, முறைப்படி அவளைத் திருமணம் செய்துகொள்ளும் விருப்பத்தை வெளியிட்டால், அவர்கள்

தங்களுடைய அறிவு, ஆற்றல், பண்பு ஆகியவற்றையும், குடிச்சிறப்பையும் கருதி, அவளைத் தங்களுக்கே திருமணம் செய்து வைப்பார்களே!''

தலைவன் : ''இந்தக் களவொழுக்கமே எனக்கு மிக்க மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தந்துகொண்டிருக்கிறது. திருமணத்தைச் சிறிதுநாட்களுக்கு ஒத்திப்போட்டால் என்ன என்று கருதுகிறேன்.''

தோழி : ''நீங்கள் நாள்தோறும் பகற்பொழுதில் வந்துவிட்டு, இரவு நேரத்தில் மீளும்போதெல்லாம் நானும் தலைவியும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் போல் இருக்க வேண்டியிருக்கிறது.''

தலைவன் : ''உங்களுக்கு என் அப்படிப்பட்ட திகில் ஏற்பட வேண்டும்?''

தோழி : ''ஆள் நடமாட்டமில்லாத தனி வழியே தாங்கள் இரவு நேரத்தில் செல்லும்போது, விலங்குகளாலும், ஆறலை கள்வர்களாலும் தங்களுக்கு என்ன இடையூறு ஏற்பட்டதோ என்று எண்ணித் தவித்துக்கொண்டிருக்க நேரிடுகிறது. தாங்கள் உப்பங்கழிகளைக் கடந்து செல்லும்போது சுறாமீன்கள் தம் கொம்புகளால் தங்களைக் கொன்றுவிடவும் கூடும்; மேலும், நீங்கள் தலைவியோடு களவொழுக்கத் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தலைவியின் தந்தையும் தமையனும் அறிந்து கொண்டு விடுவார்களேயானால், தாங்கள் வழியே நடந்து போகும்போது, அவர்கள் சினங்கொண்டு தங்களைத் தாக்கி ஊறு இழைப்பார்கள் என்றும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. எனவேதான், திருமணத்தைச் செய்துகொள்ள முன்வரவேண்டுகிறேன்.''

தலைவன் : "திருமணத்தைப்பற்றித் தலைவி தெளிவாக வற்புறுத்திக் கூறவில்லையே!"

தோழி : "அவள் எப்படி நேரிடையாக வற்புறுத்திக் கூறுவாள்? நாணம் வெளிப்படையாகக் கூற அவளை விடுமோ? அவள் மறைமுகமாக உணர்த்தி வந்ததையெல்லாம் தாங்கள்தான் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவள் கூடத் தங்களுக்குக் கூறவேண்டிய தேவையில்லையே. தாங்கள் அன்றாடம் காணும் மாலைப்போதின் இயற்கைக் காட்சிகளே தங்களுக்கு எவ்வளவோ அறிவுரைகள் கூறியிருக்குமே! நாரைகள் நாள் தோறும் புன்னைமரக் கிளைகளில் சென்று தங்குவது, தாங்கள் தலைவியோடு இல்லறத்தில் தங்கவேண்டும் என்பதையும், உப்பங்கழிகளில் ஆண்சுறாவும் பெண்சுறாவும் சேர்ந்து இயங்குவது தாங்களும் தலைவியும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துவனவாகுமே! தலைவியோடு சேர்ந்திருந்து இல்லறம் நடத்துவதில் தங்களுக்கு ஏற்படும் குறைபாடு என்ன?"

தலைவன் : "குறைபாடு ஒன்றுமில்லை; நிலைமையை இப்பொழுது நான் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளேன். நான் திருமண ஏற்பாட்டுடன் விரைவில் வருகிறேன். தலைவியிடம் இந்தச் செய்தியைக் கூறு!"

தலைவன் திருமண ஏற்பாட்டுடன் திரும்பும் எண்ணத்தோடு ஏகுகிறான். தோழி, தலைவனிடம் விடைபெற்றுக் கொண்டு வந்து, தலைவியைக் கண்டு, தனக்கும் தலைவனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலைப்பற்றிக் கூறுகிறாள். தலைவி அதுகேட்டு மகிழ்ச்சி உறுகிறாள்.

* * *

இது நற்றிணை - 67 ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்ட சொல்லோவியமாகும். அந்தச் செய்யுள் நெய்தல் திணையைச் சார்ந்ததாகும். பகற்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி வரைவு கடாவுவது என்பது செய்யுளின் கருத்துரையாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் பேரி சாத்தனார் என்ற புலவராவார். இவர் வடவண்ணக்கன் பேரிச்சாத்தனெனவும், வடமவண்ணக்கன் பேரிசாத்தனெனவும் கூறப்படுவார். இவர் நாணயச் சோதகராகப் (நோட்டக்காரன்) பணியாற்றி வந்திருக்கக்கூடும் என்று தெரியவருகிறது. இவர் பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோரின் காலத்தவராவார். இவர் பாடிய பாடல்கள் நற்றிணையிலும், குறுந்தொகையிலும், அகத்திலும், புறத்திலுமாக 19 காணப்படுகின்றன.

சேய்விசும்(பு) இவர்ந்த செழுங்கதிர் மண்டிலம்
மால்வரை மறையத் துறைபுலம் பின்றே
இற(வு) அருந்தி எழுந்த கருங்கால் வெண்குருகு
வெண்குவட்ட அருஞ்சிறைத் தாஅய்க் கரைய
கருங்கோட்டுப் புன்னை இறைகொண் டனவே
கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்
துணைச்சுறா வழங்கலும் வழங்கும் ஆயிடை
எல்லிமிழ் பனிக்கடல் மல்குசுடர்க் கொளீஇ
எமரும் வேட்டம் புக்கனர் அதனால்
தங்கின் எவனோ தெய்ய பொங்குபிசிர்
முழவிசைப் புணரி எழுதரும்
உடைகடற் படப்பைஎம் உறைவின் ஊர்க்கே.

(நற்றிணை—67)

(பொழிப்புரை : நீண்ட தொலைவில் வானத்தில் ஏறிவந்த செழுமிய கதிர்களையுடைய ஞாயிற்று மண்டிலம், பெரிய மலைகளைத் தாண்டிச்சென்று மறைதலால், யாருமில்லாமல் நமது கடற்றுறை தனிமையாக இருக்கின்றது; இறாமீனைத் தின்றுவிட்டு எழும் கரிய கால்களையுடைய

வெள்ளிய நாரைகள் வெண்மையான உப்புக்குவியல்களின் மேலாக அரிய இறக்கைகளை வீசிப் பறந்துசென்று, கரையி லுள்ள கரிய கிளைகளையுடைய புன்னை மரங்களிலே தங்குதல் கொண்டன; திரண்ட தண்டினையுடைய நெய்தல் மலர் மறைய நீர் பெருகும் உப்பங்கழியின் கண்ணே துணை யோடு சுறாமீன் இயங்குதலும் செய்யும்: அவ்விடத்தில், இரவில், ஒலிக்கின்ற குளிர்ச்சியையுடைய கடலில், மிக்க விளக்கங்களைக் கொண்டு எமது சுற்றத்தாரும் மீன்வேட்டையாடச் சென்று விட்டனர்; ஆதலால் பொங்குகின்ற பிசிரையும், முழவுபோல் ஒலித்தலையும்முடைய அலையெழுந்து உடைந்து விழுகின்ற கடற்கரையிலுள்ள நெய்தல் நிலத்தில் நாங்கள் வசிக்கின்ற எம்மூரின்கண் இன்று இரவிலே தங்கிச் செல்லின் உமக்கு என்ன குறைபாடுண்டாகுமோ?

சேய் - தொலைவு; விசும்பு - வானம்; இவர்ந்த - ஏறிவந்த; இறவு - இறாமீன்; வெண்குருகு - வெள்ளிய நாரை;வெண் குவடு - வெள்ளிய உப்புக்குவியல், அல்லது வெள்ளியமணற் குவியல்; கணை - திரண்ட; கழி - உப்பங்கழி; எல் - இரவு; வேட்டம் -மீன்வேட்டை.

களவொழுக்கத்தில் இருந்துவரும் தலைவனைத் திருமணம் செய்துகொள்ளுமாறும், தலைவியோடு சேர்ந்து இல்லறத்தில் இனிதே இருக்குமாறும், தோழி மறைமுகமாக வற்புறுத்தும் பாங்கு, இச்செய்யுளில் அழகாகக் காணப்படுகிறது.

''எம்மூரில் இன்று இரவிலே தங்கிச் சென்றால் என்ன குறைபாடு உண்டாகுமோ?'' என்று தலைவனைத் தோழி கேட்பதன்மூலம், அவன் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்பதை மறைமுகமாக வற்புறுத்துகிறாள் என்றாகிறது. எப்படியென்றால், தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொண்டாலல்லாது தலைவியின் வீட்டில் இரவில் தலைவன் வெளிப்படையாகத் தங்குவது வழக்கத்திற்கு மாறுபட்ட செயலாகும். எனவேதான் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதிலே அவனுக்கு என்ன குறை என்று கேட்பதற்குப் பதிலாக, இரவிலே தலைவியின் வீட்டிலே அவன்

தங்குவதிலே என்ன குறை என்று, மறைமுகமாகத் தோழி கேட்கிறாள்.

தோழி சில உள்ளுறை உவமைகளைக் கூறி, அவற்றின் மூலம் சில செய்திகளைத் தலைவனுக்குப் புலப்படுத்துகிறாள். 'சுறாமீனைத்தின்ற நாரைகள் புன்னைமரத்தில் போய்த் தங்குகின்றன' என்ற உண்மையைச் சுட்டிக்காட்டி, அதன்மூலம் களவொழுக்க இன்பத்தை நுகர்ந்த தலைவன் தலைவியின் வீட்டில் போய்த் தங்கவேண்டும் என்ற செய்தியைப் புலப்படுத்துகிறாள். சுறாமீன்கள் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து இயங்குகின்றன என்பதைக் கூறுவதன் மூலம், தலைவன் தலைவியோடு சேர்ந்து வாழவேண்டும் என்பது புலப்படுத்தப்படுகிறது.

தலைவன் இரவிலே தன் ஊர்நோக்கித் திரும்பும்போது, ஆறலை கள்வர்களாலும், சுறாமீன்களாலும், மீன் வேட்டையாடச் சென்றிருக்கும் உற்றார் உறவினராலும், அவனுக்குத் துன்பம் ஏற்படக்கூடும் என்பதை எடுத்துக்கூறி, இரவிலே தலைவியின் வீட்டிலேயே தங்கும்படி அவனைத் தோழி வற்புறுத்தும் தன்மை, நினைந்து மகிழ்வதற்குரியதாகும்.

செழுங்கதிர்களை வீசும் ஞாயிறு மலைகளுக்கப்பால் சென்று மறைதல், நாரைகள் இறாமீனைத் தின்றல், அவைகள் கரிய கால்களையும் வெண்மையான உடம்பையும் கொண்டிருத்தல், வெள்ளிய உப்பு குவியல்களாக இருத்தல், புன்னை மரம் குறிய கிளைகளையுடையதாக இருத்தல், நெய்தல் மலரின் தண்டு திரண்டிருத்தல், உப்பங்கழிகளில் சுறாமீன்கள் உலாவுதல், அலைகள் எழுந்து உடைந்துவிழுதல், மீன் வேட்டையாடச் செல்லும் வலைஞர்கள் இரவுவேளையில் கையில் தீப்பந்தங்கள் ஏந்திச் செல்லுதல் போன்ற காட்சிகள் இனிமையாக நினைவுபடுத்தப்படுகின்றன. அலையின் ஓசைக்கு முழவின் ஓசை உவமையாக்கப்பட்டிருக்கிறது.

6. அறனும் அல்ல! ஆக்கமும் அல்ல!

தலைவி தக்க பருவம் எய்திவிட்டாள், அவளை வெளியே விடுதல் ஆகாது என்று கருதி, நற்றாய் அவளை இல்லிலேயே இருக்கும்படி பணித்துவிடுகிறாள். செவிலித்தாய் தலைவிக்குக் காவலாக இருந்து, அவள் வெளியே போய்விடாதவாறு பாதுகாத்து வருகிறாள்.

சிறைப்படுத்தப்பட்டது தலைவிக்கு மிக்க வருத்தத்தைத் தருகிறது. தன் ஆருயிர்க் காதலனான தலைவனை இனிக் காணமுடியாதே என்றும், களவொழுக்கத்தில் பெற்றுவந்த இன்பத்தை இனிப் பெறமுடியாதே என்றும் எண்ணி எண்ணி அவள் ஏங்குகிறாள். தலைவியின் நிலை தோழிக்கும் மிக்க துயரத்தைத் தருகிறது. தோழி, தலைவியைத் தேற்ற எவ்வளவோ முறைகளில் ஆறுதல் சொல்லிப் பார்க்கிறாள். தலைவி எப்பொழுதும் துன்பக்கடலிலேயே ஆழ்ந்து விடுகிறாள்.

தலைவன் பகற்குறி இரவுக்குறியிடங்களில் அன்றாடம் வந்து, நீண்டநேரம் காத்திருந்து, தலைவியையும் தோழியையும் காணாமல், ஏமாற்றத்துடன் வீடுதிரும்பிய வண்ணமாக இருந்து வருகிறான். திடீரென்று தலைவி, குறியிடங்களுக்கு வராமல் நின்றுபோனதற்கு என்ன காரணம் என்று தலைவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. தன்னைத் தலைவி வெறுத்து விட்டாளோ? அல்லது வரும் வழியில் அவளுக்குக் கொடிய விலங்குகளால் துன்பம் ஏதேனும் நேரிட்டதோ? அல்லது நமது களவொழுக்கத்தை அவளது

தாய்தந்தையர் கண்டுபிடித்து, அவளுக்குக் கொடுந்தண்டனை ஏதும் கொடுத்துவிட்டார்களோ? - என்று பலவாறு எண்ணி எண்ணி ஏங்குகிறான்.

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் காணமுடியாமல் துக்கத்திலும் துயரத்திலும் உழன்று கொண்டிருக்கின்றனர்.

ஒருநாள் இரவு, வானம் இருண்டு கன்னங்கரேரென்று கறுத்துக் காணப்படுகிறது. தலைவனைக் காணாமல் வருந்தும் தலைவிக்குத் தோழி ஆறுதலுரை பகர்ந்து கொண்டிருக்கிறாள். கறுகறுத்த வானில் மின்னலும், இடியோசையும் தொடர்ந்து எழும்பியவண்ண மிருக்கின்றன. தலைவியும் தோழியும் சாளரத்தின் வழியாக எட்டிப் பார்க்கின்றனர். தலைவனின் உயர்ந்த மலைக்குன்றுகளின் முகடுகளைச் சுற்றி முகிற்கூட்டங்கள் சூழ்ந்திருப்பதையும், அங்குத் தோன்றிடும் மின்னல் ஒளி எங்கணும் பாய்ந்து பரவி நிற்பதையும், கொடி நெளிவதைப்போல் மின்னல்கள் நெளிந்து நெளிந்து தோன்றி மறைவதையும், மலைக் குன்றுகளில் சோவென்று மழை பொழிவதையும், அது அருவியாக இறங்கிப் பெருவெள்ளமாகப் பாய்ந்து ஓடுவதையும் பார்க்கிறாள். இந்தக் காட்சிகள் தலைவனைப் பற்றிய நினைவு அலைகளைத் தலைவியுள்ளத்தில் கிளறிவிடுகின்றன. அத்தகைய ஏக்க நினைவுகளோடு தலைவி உறக்கங்கொள்கிறாள்.

மறுநாள் பொழுதுவிடிந்தவுடன், தலைவியும் தோழியும் எழுந்து வீட்டின் புறக்கடையிலிருந்து பார்க்கும்போது, ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

தலைவி : "ஏடி! வெள்ளம் எப்படிப் பெருக்கெடுத்து ஓடுகிறது பார்த்தாயாடீ!"

தோழி : "ஆமாமடீ! இரவு அவ்வளவு மழை பெய்திருக்கிறது!"

தலைவி : "இவ்வளவு வெள்ளமும் எங்கிருந்து வருகிறது?"

தோழி : "எல்லாம் தலைவனின் மலைக்குன்றுகளிலிருந்தே வருகிறது!"

தலைவி : "எல்லாமுமா அங்கிருந்து வருகிறது?"

தோழி : "ஆமாம்! அங்குதானே இரவெல்லாம் இடியோடும் மின்னலோடும் பெருமழை பெய்யக் கண்டோம்!

தலைவி : "அந்த வெள்ளத்தில் விழுந்து நீராட எனக்கு எவ்வளவு ஆவலாக இருக்கிறது தெரியுமா? தலைவனின் குன்றுகளிலிருந்து வரும் நீரில் மூழ்குவதே எனக்குத் தலைவனைக் கட்டியணைப் பதுபோல் இருக்குமடீ!"

தோழி : "உனக்கு ஆவல் இருக்கிறது, அளவுக்கு மீறி. உன்னை வெளியே அனுப்ப யார் ஆயத்தமாக இருக்கிறார்கள்?"

தலைவி : "நாம் சென்று நீராடிவர வழியே இல்லையாடீ?"

தோழி : "எப்படி வழி கிடைக்கும்? செவிலித்தாய்தான் இமைகொட்டாமல் உன்னைக் காவல் காத்து வருகிறாளே?"

தலைவி : "இளமங்கையர் தமது தோழிமாரோடு சென்று பாவை விளையாட்டு விளையாடியும், நீராடியும் வர இடமளிக்காமல், அவர்களை வீட்டில் சிறைப் படுத்திவைப்பது எப்படியடீ அறநெறியாகும்?"

தோழி : "அது அறநெறியல்ல என்று நீயும் நானும் கருது கிறோம்! ஆனால் அப்படிக் கருதவேண்டிய அன்னை கருதவில்லையே!"

தலைவி : "அறநெறிக்குப் புறம்பாக நடந்து கொண்டால் செல்வம் தேய்ந்துபோகும் என்று சொல்லுவார் களே!"

தோழி : "பலரும் சொல்லுகிறார்கள் தான்! இதனை நம் அன்னையிடம் போய்ச் சொல்வது யார்?"

தலைவி : "இவற்றையெல்லாம், அறநெறியுணர்ந்த யாரேனும் அன்னையிடம் சென்று எடுத்துரைக்க மாட்டார்களா?"

தலைவி : "அன்னை போகவிட்டால் எப்படியிருக்கும்? ஆகா! அவருடைய மலையில் பெய்யும் மழை, சிறுசிறு நுரைகளோடு நறுமணமலர்களை வாரிக் கொண்டு அறாகப் பெருகி வரும்போது, அந்தப் புது நீரில் நாம் உள்ளம் மகிழ ஆடலாமல்லவா?"

தோழி : "ஆடி மகிழலாம்! சரி. அன்னையிடம் போய் அறநெறிபற்றிக் கூறுவார் யார்?

தலைவி : "யாருமே இல்லையாடீ?"

தோழி : "ஊரில் பலர் இருக்கிறார்கள். ஆனால்: நமக்கு ஆதரவு தருவார் யாருமில்லை!"

தலைவி : "அப்படியானால், நமது ஆவல் வீணே கழிய வேண்டியதுதானா?"

தோழி : "வேறு வழி என்ன இருக்கிறது? வாய்பேசாமல் வீட்டிற்குள்ளே போய் அமைதியாக இருக்க வேண்டியதுதான்!"

பிறகு தலைவியும் தோழியும் மனவருத்தத்துடன் வீட்டிற்குள் நுழைகிறார்கள்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்துத் தலைவியின் வரவைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த தலைவன், தலைவியின் இருப்பிடம் சென்றே அவளைக் காண முயலலாம் என்ற எண்ணத்துடன் வருகிறான். அப்பொழுது மாலைப்பொழுது· தலைவியும் தோழியும் வீட்டின் புறக்கடைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அவனைக் காணாதவர்கள் போல் அவர்களிருவரும் வேறுபக்கம் திரும்பிக் கொண்டு ஏதோ பொதுப்படையாக உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். தலைவன் தலைவியும் தோழியும் வீட்டின் தோட்டத்தில் உலாவுவதைப் பார்க்கிறான். மெல்ல நடந்து சென்று தோட்டத்தின் புறம்பே ஒரு புதரில் மறைந்துகொண்டு, தலைவியும் தோழியும் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை உற்றுக் கவனிக்கிறான்.

தலைவியும் தோழியும் தம்முடைய உரையாடலைத் தலைவன் கூர்ந்து கவனிக்கிறான் என்பதை அறிந்துகொண்டு, அவன் மனத்தில் படுமாறு, தம் உரையாடலைத் திருப்புகிறார்கள்.

தோழி : "அன்று ஆற்றில் பெருவெள்ளம் வந்ததே, அது எங்கிருந்து வந்தது தெரியுமா?"

தலைவி : "தெரியாதே! எங்கிருந்து வந்தது?"

தோழி : "அது நமது தலைவர் இருக்கிறாரே, அவரது குன்றுகளிலிருந்தே வந்தது!"

தலைவி : "அப்படியானால், நான் அதில் வீழ்ந்து நீராடி மகிழ்ந்திருப்பேனே!"

தோழி : "அதில் உனக்கென்ன தனி மகிழ்ச்சி?"

தலைவி : "அது தலைவருடைய குன்றுகளிலிருந்து வருகிறது என்றால், அதில் நான் மூழ்குவது என்றால், அவரையே நான் கட்டியணைத்துக் கொள்வது போலல்லவா?"

தோழி : "உனக்கு என்ன, அவரைக் கட்டியணைப்பதில் அவ்வளவு ஆவலா?"

தலைவி : "அவர் என்னை மறந்துவிட்டாலும், என்னால் எப்படியடீ அவரை மறக்க முடியும்?"

தோழி : "நீ எவ்வளவு ஆவல்பட்டாலும், நீதான் வீட்டை விட்டு வெளியேற முடியாதே! செவிலித் தாய்தான் உன்னை காவல்காத்து வருகிறாளே!"

தலைவி : "இளமங்கையரை அவர்களது தோழிமார்களோடு பாவை விளையாட்டு விளையாடவும், நீர் விளையாட்டு விளையாடவும் விடாமல், வீட்டிலேயே சிறைவைப்பது அறநெறியாகாது; அப்படிச் செய்தால் வீட்டின் செல்வமும் தேய்ந்துபோய் விடும் என்று, யாரேனும் அன்னையிடம் போய்க் கூறினால், அன்னை, தானாகவே நம்மை வெளியேற விடுகிறாள்!"

தோழி : "நீ கூறியபடி நமக்குப் பரிந்துபோய் அன்னையிடம் நமக்கு ஆதரவாகக் கூறுபவர்கள் யார் இருக்கிறார்கள்? அப்படியே யாரேனும் இருந்தாலும், அன்னை நம்மை வெளியே செல்ல விடுவாளா என்பது ஐயப்பாடே!"

தலைவி : "அப்படியானால், எனது ஆவல் வீணே கழிய வேண்டியதுதானா?"

தோழி : "இந்த வகையில், வீணே கழிந்தது என்றுதான் சொல்லவேண்டும்!"

தலைவி : "அப்படியானால் வேறு வகை என்னடீ இருக்கிறது?"

தோழி : "தலைவர், முறைப்படி வந்து உன்னைத் திருமணம் செய்து கொண்டுவிட்டால், உனக்குள்ள இடையூறுகளெல்லாம் தூள்தூளாய்ப் பறந்துவிடுகின்றன?"

தலைவி : "அவர்தான் என்னைப் பார்க்கவே வரவில்லையே! அவர் என்னைத் திருமணம் எங்கே செய்துகொள்ளப் போகிறார்?"

தோழி : "அவர் இவ்வளவு நாட்களாக வராமலிருப்பதைக் கொண்டே திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார் என்ற முடிவுக்கு வரவேண்டியதுதான்!"

இவ்வளவையும் மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவியைச் சிறைப்படுத்தியிருப்பதால் அவளுக்கு நேர்ந்துள்ள துன்பங்களையும், அத்துன்பங்களைத் துடைப்பதற்கான வழி தலைவியைத் தான் முறைப்படி திருமணம் செய்துகொள்வது ஒன்றே என்றும் அறிந்துகொள்கிறான். அவளைத் திருமணம் செய்துகொள்வதற்கான ஏற்பாட்டுடன் திரும்புவது என்ற எண்ணத்துடன், தலைவன் அவ்விடம்விட்டு விறுவிறு என்று அகன்று செல்கிறான்.

தலைவன் வெடுக்கென்றெழுந்து விறுவிறு என்று நடந்து செல்வதைப் பார்த்த தலைவியும் தோழியும், தம் எண்ணம் நிறைவேறிவிட்டது என்ற மகிழ்ச்சியால், துள்ளிக் குதித்துத் தோட்டத்தில் ஓடி விளையாடுகிறார்கள்.

* * *

இது நற்றிணை 68ஆம் செய்யுளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த நற்றிணைச் செய்யுள் குறிஞ்சித் திணையின்பாற்பட்டுச் சிறைப்புறமாக நிற்கும் தலைவனுக்குத் தோழி, தலைவிக்கு உரைப்பவள்போல் மறைமுகமாக உணர்த்துவதாகும். இதனை இயற்றியவர் பிரான்சாத்தனார் என்ற புலவராவார். இவரைப்பற்றிய விரிவான குறிப்பு எதுவும் அகப்படவில்லை. இவர் பாடியதாக இந்தச் செய்யுள் ஒன்றுதான் அகப்பட்டுள்ளது.

விளையா(டு) ஆயமொடு ஓரை ஆடாது
இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம்
வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே
செல்கென விடுநள்மன் கொல்லோ எல்லுமிழ்ந்து
உரவுரும் உரறும் அரையிருள் நடுநாள்
கொடிநுடங் கிலங்கின மின்னி
ஆடுமழை இறுத்தன் றவர் கோடுயர் குன்றே.

(நற்றிணை—68)

(பொழிப்புரை :) அவரது முடியுயர்ந்த குன்றம் ஒளியை எங்கும் பரப்பி, வலிய இடி முழங்குகின்ற முகில் தங்கி மழையைப் பெய்கின்றது. இப்பொழுது இளமங்கையர், தாம் விளையாடுகின்ற தோழியர் கூட்டத்தோடு பாவை விளையாட்டு விளையாடாமல், வீட்டில் இற்செறிக்கப்பட்டிருத்தலானது அறநெறியன்று, அன்றிச் செல்வமும் தேய்ந்து விடும் என்று, விரைந்து சென்று அன்னையை வணங்கிச்

சொல்பவரை நாம் பெறுவோமாயின், அவ்வன்னை நம்மை நோக்கி நீவிர் செல்வீராகவென்று விடுப்பாளோ? அங்ஙனம் விடுப்பின், அவர் மலையில் பெய்யும் மழை குறிய நுரைகளைச் சுமந்துகொண்டு நறிய மலர்களுடனே ஆற்றிற் பொங்கி வருகின்ற புதுநீரை உள்ளம் மகிழ நாம் ஆடுவோம்; அங்ஙனம் கூறுவாரைப் பெற்றிலேமாதலால் நாம் கொண்ட அவா வீணே கழிந்தது.

ஆயம் - கூட்டம், ஒரை - பெண்கள் விளையாடும் பாவை விளையாட்டு; இளையோர் - இளமங்கையர்; ஆக்கம் - செல்வம்; எல் - ஒளி.

"இளமங்கையரை வீட்டிலே சிறைப்படுத்தி வைப்பது அறமுமல்ல, அது ஆக்கமும் தராது என்று அன்னையிடம் கூறும்படியாகத் தலைவி கூறுவது அவளது மனநிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகும். தலைவி தலைவனை யடைய எவ்வளவு துடிதுடிக்கிறாள் என்பதும், அந்த வாய்ப்பு ஏற்படாதவாறு அன்னை அவளைச் சிறைப் படுத்தியிருப்பது அவளுக்கு எவ்வளவு வேதனையைத் தருகிறது என்பதும், அந்தக் கூற்றில் இனிது புலப்படுகிறது. புலவரின் இந்த நயம் மிகவும் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

காதலன் காதலியர்க்கு அவர்களோடு தொடர்புடைய பொருள்களைக் காண்பதும், அவற்றைப் பயன்படுத்துவதும் மிக்க மகிழ்ச்சியளிப்பனவாகும் என்பதைத், தலைவி தலைவனின் குன்றத்திலிருந்து வரும் மழைநீர் வெள்ளத்தில் நீராட அவாவுறுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

பண்டைய மகளிர் விளையாட்டுக்களுள் பாவை விளையாட்டு என்பதும் ஒன்று என்று தெரியவருகிறது. இளமகளிர் கூட்டமாகக் கூடி விளையாடுவதும் நீராடுவதும் அன்றைய பழக்கங்களாக இருந்துவந்திருக்கின்றன.

7. கூறுவாயோ? அல்லது மறப்பாயோ?

தலைவன் பகலிலும், இரவிலும் தலைவியைத் தனியே காணுவதற்கான வழிவகை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு, கழிபேருவகையோடு களவொழுக்கத்தைக் கடைப்பிடித்து வருகிறான்.

தலைவி, தன்பால் தலைவன் கொண்டுள்ள அன்பையும், தனக்கு அவன் காட்டிவரும் ஆதரவையும் எண்ணி எண்ணி இறும்பூதெய்துகிறாள். களவொழுக்க இன்பமே அவளுக்குக் கழிபேரின்பமாக இருந்துவருகிறது.

அவ்விளங் காதலர்கள் இளமரச் சோலையிலும், நெடுஞ் சாலைப்பக்கமும், குன்றின் சரிவிலும், குளக்கரை ஓரத்திலும், ஆற்றுமணற் பரப்பிலும், அடர்ந்த காட்டிடத்தும் மாறிமாறி ஒருவரையொருவர் காணுவதும், ஓடியாடி மகிழ்வதும், பேசி யிருப்பதும், கூடிமகிழ்வதும் ஆன களவொழுக்கப் பயன்களை நுகர்ந்து வருகின்றனர்.

அக்கட்டிளங் காளையும், அப்பொற்கொடி மகளும் காதல் துறையில் ஈடுபட்டிருப்பதை ஊராரில் சிலர் அறிந்துவிடுகின் றனர். அதுவும் ஓயாமல் ஊர்வம்பு பேசுவதிலும், பிறரைப் பற்றி அலர் தூற்றுவதிலும் வல்ல 'முதுமைப்பெண்டிர், அக் காதலன் காதலியரின் களவொழுக்கத்தைப்பற்றிக் குசுகுசு வென்று பேசத் தொடங்குகின்றனர்.

தனது களவொழுக்கம் ஊர்மக்களில் சிலர்க்குத் தெரிந்து விட்டது என்று அறிந்தவுடன், தலைவன், பகற்குறி—

இரவுக்குறி இடங்களுக்குப் போய்வர அச்சங்கொள்கிறான். 'தனது போக்குவரத்தை யாரேனும் கண்டுவிடுவார்களோ, தலைவியின் தாய் தந்தை தமையன்மார்களால் தனக்கு ஏதேனும் துன்பம் நேரிடுமோ?' என்றும் தலைவன் அஞ்சி அஞ்சிக் குறியிடங்களுக்குப் போகாமல் நின்றுகொள்கிறான்.

தலைவன் வருகை தராமல் நின்றுவிட்டது தலைவிக்குப் பெருத்த மனவருத்தத்தையும், கலக்கத்தையும் தருகிறது. காதலன் தன்னைக் கைவிட்டுவிட்டானோ, அல்லது மறந்து போய்விட்டானோ, அல்லது யாரேனும் அவனைத் தடுத்து நிறுத்திவிட்டார்களோ, அல்லது அவனுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதோ, அல்லது அவனுக்கு ஏதேனும் இடர்ப்பாடு நிகழ்ந்ததோ, அல்லது அவனது தாய்தந்தையர்கள் அவனைச் சினந்து கொண்டார்களோ, அல்லது வேறு யாரையேனும் மணமுடிக்க எண்ணி விட்டானோ - என்று பலவாறு எண்ணி எண்ணித் தலைவி வருந்துகிறாள். அவள் வருத்தமேலீட்டால் ஆடை குலைந்து, அணிகலன்கள் நெகிழ்ந்து, அழகு குறைந்து, கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கிறாள். அவளுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. 'தன்னுடைய நிலையைத் தலைவனிடம் யார்போய்ச் சொல்வார்கள்' என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறாள்.

ஒருநாள் மாலைப்பொழுது, தலைவி வருத்தத்துடன் மேல் மாடியின் நிலா முற்றத்தில் உலாவிக் கொண்டிருக்கிறாள். தலைவனின் நினைவு அலைகள் அவள் உள்ளத்தில் அலைமோது கின்றன. உலகமே இருண்டதுபோல் அவளுக்குக் காணப் படுகிறது. என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்பதே அவளுக்குப் புரியவில்லை.

அப்பொழுது, வெள்ளிய நிறங்கொண்ட நாரை ஒன்று, தலைவியின் எதிரே மாடியின் கைப்பிடிச்சுவரில் வந்து உட்காருகிறது. கலங்கிய உள்ளத்தோடு தன்னந்தனியாக உலாவிக் கொண்டிருக்கும் தலைவி, தனக்கு ஓர் நண்பன் வந்திருப்பதாக எண்ணி, அதன் அருகே நெருங்குகிறாள். மிக அண்மையில் நெருங்கிவிட்டால், அது பறந்துபோய்விடுமோ

என்று எண்ணிச் சற்றுத் தொலைவாகவே நின்றுகொள்கிறாள். நாரையை அவள் உற்றுப் பார்க்கிறாள். நாரையும் அவளை நன்றாக உற்றுப் பார்க்கிறது.

"சிறிய வெள்ளைநாரையே! சிறிய வெள்ளை நாரையே" என்று தலைவி அதனை விளிக்கிறாள். நாரை தன் அலகினைக் கால்களில் தேய்த்துக்கொண்டும், அப்புறம் இப்புறம் தலையை அசைத்துக்கொண்டும் இருக்கிறது.

"என்னோடு பேச உனக்கு விருப்பமில்லையா?" என்று அதனைப் பார்த்துக் கேட்கிறாள். அது அவளை உற்றுப் பார்த்தவண்ணமிருக்கிறது.

"என்னோடு பேச உனக்கு விருப்பமில்லாவிட்டாலும் நான் பேசுவதையாவது நீ கேள்!" என்கிறாள். அது கல்லில் தன் அலகைத் தீட்டிக்கொண்டு, மேலும் கீழும் தலையை அசைத்துக்கொண்டிருக்கிறது. தலைவி அதனிடம் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறாள்.

"சிறிய வெளிய நாரையே! சிறிய வெளிய நாரையே! நீர்த் துறையில் வெளுத்த வெள்ளாடையைப்போன்று, உன் சிறகு எவ்வளவு வெண்மையாக இருக்கிறது தெரியுமா? நாரையே! நீ என் காதலர்பால் போய் என்னுடைய துன்பத்தை இதுவரை சொல்லியதில்லை! இனிமேலாகிலும் சொல்லமாட்டாயா? நீயே பார் என்னை! நான் எப்படி வருத்தத்தால் மெலிந்து கிடக்கிறேன், என் அணிகலன்கள் எப்படிக் கழன்றுகிடக்கின்றன என்பதை நீயே பார்! என்னுடைய இந்த நிலையை அவரிடம் போய்ச் சொல்லமாட்டாயா? அவருடைய ஊர் நீண்ட தொலைவில் இருக்குமோ என்று அஞ்சாதே! இங்குள்ள கழனிகளிடத்துப் பாயும் சிறுவாய்க்கால், அவரது ஊரிலிருந்துதான் வருகிறது! அது மிக அண்மையில்தானிருக்கிறது! நீ பெரிதும் களைப்பாக இருந்தால், எனது ஊர்க்குளத்திலேயுள்ள சினையுள்ள கெளிற்றுமீனைப்பற்றி நன்றாகத் தின்றுவிட்டுப் பிறகு அவருடைய ஊருக்குச் செல்வாயாக! நீ இங்கு வந்து மீனை உண்ட நன்றி மறவாமல், இனியேனும் அவரிடம் போய் என்

நிலையை எடுத்துக் கூறுவாயா? அந்த அளவுக்கு நீ என்னிடம் அன்பைக் காட்டுவாயா? அல்லது மறந்துவிடுவாயா? நாரையே! நீ எதனைச் செய்து காட்டப் போகிறாய்? என்னிடம் சொல் பார்ப்போம்!''

இப்படித் தலைவி சொல்லிக்கொண்டிருக்கும்போதே, நாரை சிறகடித்துப் பறந்து செல்வதாகிறது. தலைவி, அது பறந்துசெல்வதை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டு நிற்கிறாள்!

இது நற்றிணை 70ஆம் செய்யுளின் உட்கருத்தின் விளக்கமாகும். இந்தச் செய்யுள் மருதத்திணையின் பாற்பட்டுக் காதல்மிகுதியால் தானே மொழிதல் என்னும் துறையைப் பற்றி விளங்குவதாகும். இதனை இயற்றியவர் வெள்ளி வீதியார் என்னும் சங்ககாலப் பெரும் பெண்பாற்புலவராவார். இவர் மதுரையில் வெள்ளியம்பலத்தெருவில் வாழ்ந்துவந்ததால் இவருக்கு வெள்ளிவீதியார் என்று பெயர் வந்ததாகக் கூறுவர். இவரது இயற்பெயர் இன்னது என்று தெரியவில்லை. இவர் கணவனைவிட்டுப் பிரிந்து தனித்து வாழ்ந்த காரணம் என்ன என்றும் தெரியவில்லை. இவர் கணவனைவிட்டுப் பிரிந்து வருந்தி அவனிடம் சென்றாகிலும் அவனைக்காண்போம் என்று புறப்பட்டுப் போயினார் என்றும் தெரியவருகிறது. இவருடைய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றில் காணப்படுகின்றன.

சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங் குருகே!
துறைபோகு அறுவைத் தூமடி அன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே!
எம்மூர் வந்தெம் ஒண்துறைத் துழைஇச்
சினைக்கெளிற் றார்கையை அவரூர்ப் பெயர்தி
அனைய அன்பினையோ பெருமறவியையோ
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே!

(நற்றிணை—70)

(பொழிப்புரை) : சிறிய வெள்ளிய நாரையே! சிறிய வெள்ளிய நாரையே! நீர்த்துறையிலே அலசிய வெள்ளாடையின் மாசற்ற மடிபோன்ற நன்னிறம் விளங்கிய சிறகினையுடைய சிறிய வெள்ளியநாரையே! அவ்விடத்திலுள்ள இனிய புனல் இவ்வூரின் கண்ணே வந்து பரக்கின்ற கழனியையுடைய நல்லவூரினை யுடைய எனது காதலர்பால் ஏகி, என்னுடைய அணிகலன்கள் கழலுகின்ற துன்பத்தை இதுகாறும் சொல்லாத நாரையே! நீ எம்மூரினை யடைந்து எமது ஒள்ளிய குளத்தினது துறையிலே புகுந்து துழாவிச் சினையுள்ள கெளிற்று மீனைத் தின்றனை யாகி, அப்பால் அவருடைய ஊருக்குச் செல்வாயாக! எம்மூர் வந்துண்ட நன்றி மறவாமல், இனி அவரிடம் கூறுதற்குத் தக்க அன்பினையுடையையோ? இல்லையேல் பெரிய மறதியை யுடையையோ? ஏதாவது ஒன்றினை ஆராய்ந்து கூறுவாயாக.

குருகு - நாரை; துறை - நீர்த்துறை; ஆறுவை - ஆடை; தூவி - சிறகு; ஒள் - ஒளிபொருந்திய; துழைஇ-துழாவி; இழை-அணிகலன்; மறவி - மறதி; பருவரல் - துன்பம்.

காதலனைப் பிரிந்து வருந்தும் காதலி தன் உள்ளக் குமுறலை நாரையிடத்தில் சொல்லி ஆறுதல் பெறுவதும், நாரையைக் காதலினிடத்தில் தூதுபோகச் சொல்லி ஆறுதல் பெறுவதும், பண்டைக்காலத் தமிழ்ப்புலவர்கள் செய்யுள் மரபில் கற்பித்துக்கொண்ட கற்பனைகளாகும். காதலியின் உளப்பாங்கைப் படம்பிடித்துக்காட்ட இத்தகைய கற்பனைகள் புலவர்க்குப் பெரிதும் பயன்பட்டுவருகின்றன.

தலைவிக்கு அணிகலன்கள் கழலுவது என்பது அவளது ஆழ்ந்த வருத்தத்தையும் துன்பத்தையும் காட்டும் அறிகுறி யாகும். வருத்தமும், துன்பமும் அவளது உடலை மெலிவிக் கின்றன. உடலுறுப்புகள் மெலியவே, அவ் உறுப்புகளில் அணிந்துள்ள அணிகலன்களும் கழலுவனவாகின்றன.

நாரை வெள்ளிய நிறமுடையதாக இருக்கும் என்பதும், அது குளத்திலுள்ள கெளிற்று மீனை விரும்பி உண்ணும் என்பதும் குறிப்பிடப்படுகின்றன.

நாரையின் வெண்மை நிறத்திற்கு, நீர்த் துறையிலே அலசி மாசுபோக்கிய வெள்ளிய ஆடையை உவமையாகக் கூறியிருப்பது மகிழத்தக்க நயப்பாடாகும்.

அங்குள்ள தீம்புனலே இங்கும் வருகின்றது என்று கூறு முகத்தான், அங்கும் தின்னுவதற்கு மீன் கிடைக்கும் அவ்வூருக்கும் போ என்று நாரைக்கு அவள் அறிவுறுத்திய தாகிறது.

8. நோயும் மருந்தும் அவளே!

விடியற்காலம்! வெளிச்சம் மலரமலர இருள் சிறிது சிறிதாக நீங்கிக்கொண்டிருக்கிறது! கார் எருமைகள் இனிய பாலை நிரம்பக் சுறக்கவேண்டும் என்று கருதி, மாடுமேய்க்கும் இளஞ்சிறுவர்கள், அவற்றைத் தொழுவத்திலிருந்து அவிழ்த்து விட்டு, நீர்நிலைக்கு ஓட்டிச் செல்லுகிறார்கள். கன்றுக ளெல்லாம் தொழுவத்திலேயே கட்டிவைக்கப்படுகின்றன. மாடுகளை ஓட்டிச்செல்லும் சிறுவர்கள், மகிழ்ச்சி மேலீட்டால், மாடுகளின் முதுகின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு, வேடிக்கைப் பாட்டுக்கள் பாடிக்கொண்டு செல்லுகிறார்கள். இப்படியாக அவரவரும் விடியற்காலத்தே தாம்தாம் செய்ய வேண்டிய கடமைகளில் கவனஞ் செலுத்தி அவற்றில் ஈடுபடு கின்றனர்.

அச்சிற்றூரிலுள்ள கட்டழகி ஒருத்தியும் நீராடுதற் பொருட்டு விடியற்காலத்தே எழுந்து சோலைப்பக்கமாக நீர்த் துறையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறாள்.

அச்சிற்றூரிலே உள்ள ஆணழகன் ஒருவன் அவளிடம் நீண்ட நாட்களாகக் காதலன்பு செலுத்தி நட்புறவு கொண்டாடி வருகிறான். அவர்கள இருவரும் இரவுக்குறி பகற்குறி இடங்களை ஏற்பாடு செய்துகொண்டு நெடிதுநாள் களவொழுக்கத்திலே ஈடுபட்டு வந்தனர். தலைவியின் வீட்டிலுள்ளாரின் கட்டுக்காவலின் காரணமாகத் தலைவி இரவுக்குறி, பகற்குறியிடங்களுக்கு விரும்பியவாறு செல்ல முடியாமற்போகிறது. தலைவியைக் காணமுடியாமற் போகும்

தலைவன், அவளை எப்படியேனும் காணவேண்டும் என்று துடிதுடிக்கிறான். தலைவி இப்பொழுதெல்லாம் தன்னைக் காணவராமலிருப்பதற்குக் காரணம், தன்னை அவள் வெறுத்து விட்டாளோ, அல்லது தன்னிடம் அருவருப்புக் கொண்டு விட்டாளோ, அல்லது தனக்கு அவளிடம் அன்பில்லை என்று தவறாகக் கருதிக்கொண்டுவிட்டாளோ என்றெல்லாம் எண்ணி அவன் ஏங்குகிறான். எப்படியும் தலைவியை எங்கேயேனும் கண்டு, அவளிடம் தன்னிலையையும், தன்னுள்ளன்பையும் தெளிவுபடுத்திவிட வேண்டும் என்று முடிவு செய்து கொள்கிறான். அவளை எங்கே காணலாம் என்று நெடிதுநேரம் சிந்தித்து, இறுதியில் விடியற்காலையில் அவள் நீராடச் செல்லும்போது, சோலைப்பக்கம் சென்றிருந்து அவளைக் காணுவது, அப்போது பலரும் தம்மைக் காணும் படியான வெளிச்சம் இருந்தாலும் அதைப்பற்றிக் கவலை யில்லை என்று துணிவோடு, சோலைப்பக்கம் சென்று தங்கி மறைந்திருக்கிறான். தன்னுடைய காதலன்பு என்றென்றும் அவள்பால் உண்டு என்பதை நிலைநாட்ட வேண்டித் தன்னுடன் கண்கவரும் தழைகளினாலாய அழகிய உடை யினையும், நறுமண மலர்களால் ஆன மாலையையும் எடுத்துச் சென்றிருக்கிறான்.

தலைவி மெல்ல நடந்து வரும்போது, வேறு யாருடைய நடமாட்டமும் இல்லாத இடமாகப் பார்த்து, தலைவன் திடீரென்று மறைவிலிருந்து வெளிப்பட்டுத் தலைவிமுன் வந்து நிற்கிறான். தலைவி, தலைவனைக் கண்டதும் அச்சமும் வியப்பும் அடைந்து திடுக்கிட்டுப் போய்விடுகிறாள். தலைவி தன்னை வேறு யாரேனும் பார்த்துவிடப் போகிறார்களோ என்று அச்சப்பட்டுக்கொண்டு சுற்றுமுற்றும் திரும்பிப் பார்க் கிறாள். யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்று அறிந்து கொண்டவுடன், காதலன்பு கசியத் தலைவனைப் பார்த்துப் புன்சிரிப்பு சிரித்து, வெட்கத்தால் தலையைக் குனியவைத்துக் கொள்கிறாள். தலைவன் அவளை அணுகி, ஆரத்தழுவி, அன்பு முத்தம் கொடுத்து, மாலையை அவள் கூந்தலில் செருகி

யும், தழையுடையை அவள் இடுப்பில் கட்டியும் அழகு பார்க்கிறான்.

"அன்பே! ஏன் இவ்வளவு நாட்களாக என்னைக் காண நீ வரவில்லை? என்மீது ஏதேனும் மனவருத்தமா?" என்று தலைவன் தலைவியைத் தடவிக்கொடுத்துக் கொண்டே கேட்கிறான்.

"அத்தான்! உங்கள்மீது எனக்கு மனவருத்தம் ஒன்றுமில்லை. என் வீட்டில், எனக்குக் கட்டுக்காவல் மிகுதியாகப் போட்டுவிட்டதால், குறியிடங்களுக்கு வருவதற்கு என்னால் இயலவில்லை. அவ்வளவுதான்!" என்று அவள் விடை கூறுகிறாள்.

"என்னை நீ வெறுத்துவிடவில்லையே?"

"எப்படி உங்களை நான் வெறுத்துவிட்டு உயிர்வாழ முடியும்?"

"அன்னை எப்பொழுதும் என்னைக் கண்காணித்துக் கொண்டிருப்பதால், நான் குறியிடங்களுக்கு வருவது அவ்வளவு எளிதல்ல!"

"பின் எங்குதான் உன்னைக் காண்பது?"

"இந்தவேளையில், இங்குதான் என்னைக் காணமுடியும். வேறு எங்கும் காண வழியில்லை!"

"அப்படியானால் நாளைக்கு இங்கு வருவாயா?"

"வர முயற்சி செய்கிறேன்!"

"முயற்சிப்பதாக இருக்கவேண்டாம்; கட்டாயம் நீ வர வேண்டும். நானும் வருகிறேன்!"

"சரி!" என்று சொல்லிவிட்டுத் தலைவி நீர்த்துறை நோக்கி நடக்கிறாள். தலைவன் அவ்விடம்விட்டு மறைகிறான்.

தலைவி, தலைவன் காதலன்பின் அறிகுறியாகக் கொடுத்த தழையுடையையும் மாலையையும் மறைத்து வைத்துக்

கொண்டு, வீடு சென்றவுடன் தோழியைத் தனியே காண்கிறாள். விடியற்காலம் சோலைப்பக்கம் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அவள் தோழியிடம் சொல்லுகிறாள். தோழி அமைதியாகக் கேட்டுக்கொண்டு மகிழ்ச்சி யுறுகிறாள்.

"அவரை நாளைக்காலை சோலைப்பக்கம் காணுவதாகச் சொல்லிவிட்டு வந்துள்ளேன். நாளைக் காலையும் அந்தப் பக்கம் சென்றால் அன்னை ஐயுறுவாளோ என்று அஞ்சுகிறேன்" என்று தலைவி கூறுகிறாள்.

அதற்குத் தோழி, "அன்னை கட்டாயம் ஐயுறவே செய்வாள். அதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்கிறாள்.

"நான் நல்ல கணவனைப் பெறவேண்டி நோன்பிருக்கப் போகிறேன். அதற்காக நாள்தோறும் நீர்த்துறையில் நீராடி வரப்போகிறேன்.' என்று நீ அன்னையிடம் கூறினால், அன்னை உடனே உனக்கு இசைவு தந்துவிடுவாள்" என்று தோழி வழிசொல்லிக் கொடுக்கிறாள்.

தலைவி, மிக்க மகிழ்ச்சியுற்றுத் தோழி சொல்லியவாறே அன்னையிடம் தன் கருத்தை வெளியிடுகிறாள். அன்னையும் அவள் கருத்துக்கு இசைய ஒப்புதல் அளித்துவிடுகிறாள்.

தலைவனும் தலைவியும் சிலகாலம் வரையில் விடியற்காலத்தில் சோலைப் பக்கம் எதிர்ப்பட்டு உரையாடி மகிழ்வதில் காலங் கழித்து வருகின்றனர். தலைவன் திருமணத்திற்கான ஏற்பாடு ஏதும் செய்யாமல், நாள்தோறும் தலைவியைக் கண்டு உரையாடி மகிழ்ந்திருந்துவிட்டு மட்டும் செல்வது தோழிக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. திருமணத்திற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்யும்படி தலைவனைத் தூண்டும்படி, தோழி தலைவியிடம் கூறுகிறாள். திருமணத்தைப் பற்றிய பேச்சை எடுக்க நாணம் தன்னைத் தடை செய்கிறது என்று தலைவி சொல்லவும், தோழி, 'நான் அதற்கான வழிகாணுகிறேன்' என்று கூறுகிறாள்.

ஒருநாள், விடியற்காலையில், தலைவி செல்வதற்குமுன் தோழி சோலைப் பக்கம் செல்கிறாள். தோழி தலைவனை எதிர்ப்பட்டு நிற்கிறாள். தலைவன், தலைவி வராமல் தோழி மட்டும் வந்திருப்பது கண்டு திகைக்கிறான்.

"எங்கே தலைவி? அவள் வரவில்லையா?" என்று தலைவன் தோழியைப் பார்த்து வினாவுகிறான்.

"இல்லை. அவள் வரமாட்டாள்!" என்று தோழி விடையிறுக்கிறாள்.

"ஏன்? அவளுக்கு உடல் நலமில்லையா?" என்று கலக்கத்தோடு கேட்கிறான்.

"உடல் நலம் நன்றாகத்தானிருக்கிறது! ஆனாலும் இனி அவள் வரமாட்டாள்!" என்று தோழி கூறுகிறாள்.

"ஏன்? என்மீது வருத்தமா?"

"ஆமாம்!"

"என்ன வருத்தம்? நான் ஒரு பிழையும் செய்யவில்லையே!"

"ஏன் நீங்கள் பிழை செய்யவில்லை? செய்திருக்கிற பிழைகளே போதுமே!"

"என்ன பிழை செய்தேன்?"

"நீங்கள் தான் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள மறுத்து வருகிறீர்களே! இந்தப் பிழை போதாதா?"

"இது ஒரு பிழையா? நான் ஒன்றும் திருமணம் செய்து கொள்ள மறுக்கவில்லையே! சிறிது காலம் போகட்டும் என்று தானே சொல்லிவருகிறேன்?"

"நீங்கள் காலந்தாழ்த்திக்கொண்டு போவது அவளுக்கு எவ்வளவு வருத்தத்தைத் தருகிறது தெரியுமா?"

"அவள் ஒன்றும் வருத்தப்பட்டதாக என்னிடம் காட்டிக் கொள்ளவில்லையே;"

"அவன் எப்படிக் காட்டிக்கொள்வாள்? நாணம் அவளைத் தடுக்காதா?"

"சிறிது காலம் சென்ற பிறகு திருமணத்திற்கான ஏற்பாடுகளை நான் உறுதியாகச் செய்யத்தான் போகிறேன்!"

"நீங்கள் காலந் தாழ்த்துவதைப் பார்த்தால் அவளிடம் உங்களுக்கு அன்பு இல்லை என்றுதான் சொல்லவேண்டும்!"

"நான் அன்றொரு நாள் காதலன்பின் அறிகுறியாகத் தழையுடையையும், மலர் மாலையையும் கொடுத்ததிலிருந்தே, நான் அவளிடம் கொண்டிருக்கும் அளவற்ற அன்பு வெளிப் படுமே! அதை அவள் மறக்க முடியாதே!"

"அவளை நீங்கள் ஒரு பொருட்டாக மதிக்க வில்லை என்றுதான் கருதவேண்டியிருக்கிறது!"

"நான் கொண்டுள்ள காதல் நோய்க்குக் காரணமும் அவள் தான்; என் காதல் நோயைத் தீர்க்கும் மருந்தும் அவளை யல்லாமல் வேறொன்றில்லை! நான் அவளிடம் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறேன் தெரியுமா?"

"உங்களுடைய அன்பை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், நீங்கள் திருமண ஏற்பாட்டுடன் வந்தால் தான் தெரிந்துகொள்ள முடியும். அதுவரையில் அவள் உங்களைக் காண வரமாட்டாள்!"

"அப்படியானால், நான் திருமண ஏற்பாட்டுடன் வருகிறேன். அஞ்சவேண்டாம் என்று அவளிடம் நீ போய்ச் சொல்!"

"தலைவன் திருமணம் செய்துகொள்ளும் உறுதியுடன் செல்கிறான். தோழி மகிழ்ச்சியுடன் தலைவியிடம் திரும்பு கிறாள்.

* * *

இது நற்றிணை 80 செய்யுளின் கருத்தைத் தழுவி எழுதப் பட்ட காதற் காட்சியாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர்

பூதன் தேவனார் என்ற புலவராவார். இவர் மருதத் திணையை மிகச் சிறப்பித்து பாடியுள்ளார். ஈழத்துப் பூதன்தேவனார் என்ற வேறொரு புலவரும் இருந்ததாகத் தெரியவருகிறது. இவர் பாடிய பாடல்கள் நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றுமாக, இரண்டு பாடல்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

மன்ற எருமை மலர்தலைக் கார்ஆன்
இன்தீம் பால்பயன் கொண்மார் கன்றுவிட்டு
ஊர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும்
பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து
தழையும் தாரும் தந்தனன் இவனென
இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் அல்லது
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே

(நற்றிணை—80)

(பொழிப்புரை :) தொழுவத்திலுள்ள பெரிய தலையையுடைய கார் எருமையின் இனிய பாலை நிரம்பக் கரந்து கொள்ளும் பொருட்டு, அவற்றின் கன்றுகளைத் தொழுவத்திலேயே நிறுத்திவைத்து விட்டு, ஊரிலுள்ள மாடுமேய்க்கும் இளஞ்சிறார்கள், அவ்வெருமைகளின்மீது ஏறிக்கொண்டு தனியே மேய்த்துவருவதற்காகப் போகும், மிக்க இருள்நீங்கும் விடியற்காலத்தில், விருப்பத்தோடு வந்து, உடுத்திக் கொள்ளுவதற்குரிய தழையுடையையும், சூட்டிக் கொள்வதற்குரிய மாலையையும் இவன் கொடுத்தான் என்று, அணிகலன் அணிந்த ஆயத்தோடு தகுதியுடைய நாணும் தடைசெய்ய, என்னைப் பெறுதற்காகவேண்டி, தான் எடுத்துக்கொண்ட நோன்பின் பயனாகத் தைத்திங்களிலே குளிர்ந்த நீரிலாடுகின்ற பெரிய தோளையுடைய அவ்விளைய மகளே, நான் அடைந்துள்ள நோயை நீக்கும் மருந்தாய் அமைந்துள்ளாள்; அவளையல்லாமல் பிறிதொரு மருந்து இல்லை; நீ இதனை அறிந்து கொள்வாயாக!

கார் ஆன்-காராம் பசு; குறுமாக்கள் - இளஞ் சிறுவர்கள்; போத்தந்து - வந்து; தழை - தழையுடை; தார்-மாலை.

எந்தத் தலைவி, தலைவன் காதல் நோய்வாய்ப் படக் காரணமாக இருக்கிறாளோ, அந்தத் தலைவியேதான் அக் காதல் நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் அமைந்திருக்கிறாள் என்ற கருத்து, இச்செய்யுளில் உணர்த்தப்படும் தன்மை மிகவும் போற்றற்குரியது.

கன்றுகளைத் தொழுவத்திலேயே நிறுத்திவிட்டு, எருமை மாடுகளை மேய்ப்பதற்காக ஓட்டிச்செல்லும் இளஞ்சிறுவர்கள் அவற்றில் முதுகில் உட்கார்ந்துகொண்டு செல்லுகிறார்கள் என்று மருத நிலத்தின் தன்மையை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

காதலின் அறிகுறியாகத் தலைமகன் தலைமகளுக்குத் தழையுடையையும், மலர்மாலையையும் காணிக்கையாகத் தருவது அக்காலப் பழக்கமாக இருந்திருக்கிறது.

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்று கருத்தோ நோன்பு மேற்கொள்ளுபவர்கள், தைத்திங்கள் முழுவதும் தண்ணிய நீரோடையில் வைகறைப் பொழுதில் நீராடுவார்கள் என்பது அக்காலப் பழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

விடியற்காலத்தில் வெளிச்சென்று மேய்ந்து வரும் கறவை எருமைகள் நிரம்பப் பால் கொடுக்கும் என்பது இயல்பாகும் என்றும் தெரியவருகிறது.

9. நனவு ஆகாத கனவு!

திருமணம் செய்து கொள்வதற்கான ஏற்பாடு எதுவும் செய்யாமல், தலைவியோடு களவொழுக்கம் மேற்கொள்ளுவ திலேயே காலங் கடத்தி வருகிறான் தலைவன்.

திருமணத்திற்கான முயற்சி செய்யுமாறு தலைவனைத் தலைவி வற்புறுத்துகிறாள். திருமண முயற்சிக்குப் பொருள் வேண்டும்! பொருள்தேட வெளியூருக்குப் புறப்பட வேண்டுமே என்று தலைவன் ஏங்குகிறான். பொருள் திரட்டாமல் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளவும் அவனால் முடியவில்லை; தலைவியை விட்டுப் பிரிந்து பொருள் தேடுவதற் காகச் செல்லவும் இயலவில்லை. என்ன செய்வதென்று தோன்றாமல் தலைவன் திகைக்கிறான். பொருள் வந்தால் தான் திருமணம் நடைபெறும்; திருமணம் நடைபெற்றால்தான் தலைவியின் துன்பம் தீரும், இல்லற இன்பம் ஏற்படும் என்று கருதிக்கொண்டு, இறுதியாகப் பொருள்தேட வெளியூருக்குப் புறப்படுவது என்று முடிவு செய்கிறான்.

தன் அருமைக் காதலனைவிட்டுப் பிரியத் தலைவிக்கு மனந் தாளவில்லை என்றாலும், வேறு வழியின்றித் தன் எதிர்கால இல்லற இன்ப வாழ்வை எண்ணித் தலைவனுக்கு விடை கொடுத்து அனுப்புகிறாள். தலைவனும் மிக்க வருத்தத்துடன் பிரிந்து செல்கிறான்.

தலைவனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டாளே ஒழிய, தலைவனது பிரிவால் ஏற்படும் துன்பத்தை ஆற்றிக் கொள்ளும் திறனற்றவளாக இருக்கிறாள். தலைவன் சென்று சில நாட்கள்தாம் ஆயின என்றாலும், நீண்ட நாட்கள்

கழிந்துவிட்டனபோல் அவளுக்குத் தென்படுகிறது. தலைவனது வரவை எதிர்பார்த்து ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறாள். தலைவனைப் பற்றிய நினைவு அவளது உள்ளத்தை எப்பொழுது பார்த்தாலும் குடைந்துகொண்டே யிருக்கிறது. களவொழுக்கக் காலத்தில், இரவுக்குறி பகற்குறியிடங்களில், தானும் தலைவனும் பேசி மகிழ்ந்திருந்த நிலைகள் பற்றிய நினைவும், கண்ட காட்சிகளைப்பற்றிய நினைவும், கொண்ட கோலத்தைப்பற்றிய நினைவும் அவள் உள்ளத்தில் எழும்பி எழும்பி அடங்குகின்றன. தன் உள்ளத் துயரத்தைத் தோழியிடம் சொல்லித், தலைவன் விரைவில் வந்து சேருவதற்கான வழிவகைகள் என்ன என்று அவளிடம் ஓயாமல் கேட்டுக் கொண்டே இருப்பாள். தோழி எப்பொழுதும் தலைவியின் அருகே இருந்து அவளுக்கு ஆறுதல் மொழிகள் கூறி, அவளது துயரத்தை மறக்கடிக்க முயற்சி செய்வாள். இப்படியாக நாட்கள் மெல்லக் கழிந்துகொண்டிருக்கின்றன.

ஒருநாள் தலைவி, நண்பகல் உணவுக்குப் பிறகு படுத்து இளைப்பாறிக்கொண்டிருக்கும் போது, தலைவனைப் பற்றிய நினைவுகள் அவளது கவனத்திற்கு வருகின்றன. தலைவனது ஊருக்கு அருகில் கடலின் துறைமுகம் இருப்பதும், கடற்கரையிலுள்ள மணற்பரப்பில் பெரிய பெரிய புன்னைமரங்கள் அடர்ந்திருப்பதும், அவற்றில் அரும்பி மலரும் பூக்கள் கடற்கரையிடத்து உதிர்வதும், அவை கரையிடத்து மேயவருகின்ற சிப்பிகளின்மேல் குவிவதும், அங்குள்ள சிறுகுடிசைகளிலுள்ள பரதவர்கள கடற்சிப்பி களைப் பொறுக்கி மகிழ்வதும், அதில் தானும் தலைவனும் ஓடி ஆடிப் பேசி மகிழ்ந்திருந்ததும் ஆன நினைவுகள் அவளுக்கு வருகின்றன. அதனால் அவள் உவகை கொள்கின்றாள். பிறகு அப்படியே உறங்கிவிடுகிறாள்.

தலைவனைப்பற்றிய நினைவோடு உறக்கங்கொண்ட காரணத்தால், தலைவனோடு சோலைப்பக்கம் செல்வது போலவும், அவனோடு ஓடியாடி விளையாடுவது போலவும், அவனோடு கூடியிருந்து மகிழ்வது போலவும், இன்பத்துறையில்

இனிது இருப்பதுபோலவும் கனவு காண்கிறாள். திடீரென்று விழித்துக் கொள்கிறாள். திகைப்புற்று எழுந்து திகிலுடன் சுற்றுமுற்றும் பார்க்கிறாள். சோலையையும் காணவில்லை. தன்னை அணைத்துக்கொண்டிருந்த தலைவனையும் காணவில்லை. தோழி அருகே படுத்து உறங்கிக் கொண்டிப்பதை மட்டும் பார்க்கிறாள். தலைவி தோழியைத் தட்டி எழுப்பி விடுகிறாள். தோழி வாரிச் சுருட்டிக்கொண்டு திடுக்கிட்டு எழுகிறாள்.

தோழி தலைவியைப் பார்த்து, "என்னடீ? என்ன நடந்தது?" என்று வினாவுகிறாள்.

"ஒன்றுமில்லை!" என்று தலைவி கூறுகிறாள்.

"பின் ஏன் திடீரென்று என்னைத் தட்டி எழுப்பினாய்?" என்று தோழி கேட்கிறாள்.

"நான் கனவு ஒன்று கண்டேன்!" என்கிறாள் தலைவி.

"என்ன கனவு? ஏதேனும் அச்சமூட்டும் கனவா?"

"அல்ல! அல்ல! இன்பந்தரும் கனவுதான் கண்டேன்!"

அப்படியானால், நீ ஏன் திகைப்பும் வருத்தமும் கொண்டவள் போல் காணப்படுகிறாய்?"

"இன்பக் கனவு இடையிலேயே முறிந்துவிட்டது! நுகர்ந்து கொண்டிருந்த இன்பமெல்லாம் அறுந்துவிட்டன!"

"அப்படி என்ன இன்பக் கனவு கண்டாய்?"

"நானும் தலைவனும் சோலைப்பக்கம் செல்வதுபோலவும், ஓடிவிளையாடி மகிழ்வதுபோலவும், கூடி மகிழ்வது போலவும் கனவு கண்டேன். எல்லாம் ஒரு நொடியில் அழிந்து போய் விட்டது."

"ஆதனால் என்ன? நீ கனவுகண்டவரையில் உனக்கு இன்பந்தானே?"

"நம்மூர் மாமரத்தில், முட்களைப் போன்ற தன் பற்களை வைத்துக்கொண்டு கிளையொன்றைப் பற்றித் தொங்கிச்

கொண்டே துயிலும் வெளவாலைப் போல் நான் ஆகி விட்டேன்!''

''வெளவாலுக்கும் உனக்கும் என்ன ஒற்றுமை இருக்கிறது?''

''வெளவாலானது மிக்க தொலைவிலுள்ள காட்டின் கண்ணுள்ள நெல்லிப்பழத்தின் புளிச்சுவையைத் தான் பெற்றதாகக் கனவுகண்டு, பிறகு ஏமாற்றம் அடைவதைப்போல, நானும் கனவுகண்டு, இப்பொழுது ஏமாற்றமும் அடைந்துள்ளேன்!''

''எங்குள்ள நெல்லிப்பழமாக இருந்தாலும், அது வெளவாலுக்கு எப்படியும் கிடைக்கத்தான் செய்யும்; அது போலத் தலைவர் உனக்கு எப்படியும் கிடைக்கப் பெறுவர் என்பது திண்ணம்!''

''மிக்க நெடுந்தொலைவிலுள்ள, போர் பலவற்றையும் வென்ற வீரத்தையுடைய, சோழர் குடியில் தோன்றினவனான அழிசி 'என்பானது, ஆர்க்காட்டைச் சேர்ந்த பெரிய காட்டிலுள்ள நெல்லிப்பழத்தைப்பற்றியே நான் பேசுகிறேன். அந்த நெல்லிப்பழம் இங்குள்ள வெளவாலுக்கு எப்படியும் கிட்டாதே!''

''நெல்லிப்பழம் வெளவாலுக்குக் கிட்டப் பெறாவிட்டாலும், உனது தலைவர் உனக்கு எப்படியும் கிடைக்கப்பெறவே செய்வார். அதுபற்றிய கவலையை நீ விட்டுவிடு. நீ கண்ட கனவு, உன் தலைவர் மிக்கவிரைவில் வந்துவிடுவார் என்பதைத்தான் உணர்த்துவதாக இருக்கிறது, எனவே, எவ்வித வருத்தமும் கொள்ள வேண்டாம்!'' என்று தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

தலைவியும் ஒருவாறு மன ஆறுதல் பெற்று அமைகிறாள்.

இது நற்றிணை 87ஆம் செய்யுளின் கருத்தைத் தழுவி எழுதப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் நெய்தல் திணையின் பாற்பட்ட, 'வரைவிடை வைத்துத் தலைவன் பிரிய ஆற்றாளாய தலைவி, கனாக்கண்டு தோழிக்கு

உரைத்தது' என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். இச்செய்யுளை இயற்றியவர் நக்கண்ணையார் என்னும் பெண்பாற் புலவராவார். பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை என்றும் இவரை அழைப்பர். அரசர்க்குப் பெண் கொடுக்கத் தக்க உயர்ந்த வணிக மரபைச் சேர்ந்தவர். உறையூர் வீரை வேண்மான் வெளியன் தித்தனது மகன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்னும் சோழன், தன் தந்தையைப் பகைத்துக் கொண்டு, நாடிழந்து புல்லரிசிக் கூழ் உண்டு வாழும்போது, ஆமூர் மல்லனைப் போரில் வென்றதுகண்ட இந்நக்கண்ணை யார், அவ்வரசனைத் தம் காதல் மிகுதியைக் காட்டிக் கண்டார். அவனை அணைத்து முயங்குதற்கு அவையத்தார் காண்பார்களே என்று அஞ்சுவதையும், அவனைப் பலபொழுது காணப்பெற்றாலும் முயங்காமையினாலே தம் மேனி பசலை பூத்ததையும், பலவாறாக விரித்துக்கூறி வருந்துகின்றார். இவர் பெருநற்கிள்ளியைப் பெரிதுங் காதலித்தார் என்றும், அக்காதல் கைக்கூடப் பெறவில்லை என்றும் தெரியவருகிறது. இவர் பாடியனவாக நற்றிணை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் ஆறு பாடல்கள் காணப்படுகின்றன. இவர் நெய்தல் திணையையும் குறிஞ்சித்திணையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்
ஓங்கல் அஞ்சினைத் தூங்குதுயில் பொழுதின்
வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
நெல்லியம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு
அதுகழிந் தன்றே தோழி அவர் நாட்டுப்
பனியரும்பு உடைந்த பெருந்தாள் புன்னை
துறைமேல் இப்பி ஈர்ம்புறத்து உறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும்
பெருந்தண் கானலும் நினைந்தவப் பகலே.

(நற்றிணை—87)

(பொழிப்புரை :) தோழி! அத்தலைவரது நாட்டின்கணுள்ள பெரிய அடியையுடைய புன்னையின் குளிர்ந்த அரும்புகள்

மலர்ந்து, அவை கடலின் துறையிடத்து மேய்கின்ற சிப்பியின் ஈரமாகிய வெளிப்புறத்தில் மிகவாக விழும். சிறுகுடியிலுள்ள பரதவர் மகிழும் மகிழ்ச்சியையும், பெரிய உப்பங்கழிக் கரையிலுள்ள சோலையையும் நான் நினைந்து, அப்பகற்பொழுதின் கண்ணே ஊரின் உள்ளதாகிய மாமரத்திலிருக்கின்ற முள் போன்ற பற்களையுடைய வௌவால், உயர்ந்த ஒரு கிளையிற் சென்று பற்றித் தொங்கிக்கொண்டு துயிலும்போது, தனக்குக் கிட்டப்பெறாத, வெல்லும் போர்களையுடைய சோழர்குடியில் பிறந்த ஆர்க்காட்டிலுள்ளவனாகிய அழிசி என்பவனது பெரிய காட்டின்கணுள்ள நெல்லிப்பழத்தின் இனிய புளிச்சுவையைத் தான் பெற்றதாகக் கனவுகண்டாற்போல், நானும் அவரோடு கூடிமுயங்கியதாகக் கனவுகாண, அவ்வின்பமெல்லாம் நான் விழித்தவுடன் ஒழிந்து போயிற்று.

மா - மாமரம்; வாவல் - வௌவால்; தாள் - அடி; இப்பி - சிப்பி.

தலைவன் பிரிந்து வெளியூர் சென்றிருக்கும்போது, தலைவி தலைவனைப் பற்றிக் கனவு காண்பதும், கனவில் இன்பம் பெறுவதும், அக்கனவு நீங்கியவுடன் ஏக்கங்கொண்டு வருந்துவதும், தோழி அவளுக்கு ஆறுதல் மொழி கூறித் தேற்றுவதும், காதல் வாழ்வில் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

கடற்கரைப் பக்கத்தின் இயற்கை எழில் இச்செய்யுளில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

வௌவாலின் பற்களுக்கு முட்களை உவமை கூறியிருப்பது அறிந்து மகிழத்தக்கதாகும்.

நெல்லிப்பழத்தின் புளிச்சுவையை நினைந்து வௌவால் கனவு கண்டுகொண்டிருக்கும் என்னும் கற்பனை பாராட்டத் தக்க நயமுடையதாகும்.

புலவர், சோழன் அழிசியைத் தக்கதொரு இடத்தில் வைத்துப் பெருமைப்படுத்தும் சிறப்பும் பாராட்டுதற்குரியது.

10. மன்றல் பெற வந்த மணமகன்!

ஆற்றலெல்லாம் கூடிய நம்பி ஒருவனும், அழகெல்லாம் கூடிய நங்கை ஒருத்தியும், ஆருயிர்க் காதலராக இருந்து, களவொழுக்கத்திலே மிகவும் திளைத்து இருக்கின்றனர். உற்றார் உறவினர்க்குத் தெரியாமல் இருவரும் பகற்குறி இரவுக் குறி இடங்களை ஏற்படுத்திக்கொண்டு, களவொழுக்கத்தை இன்பகரமாகக் கழித்து வருகின்றனர். அவர்களின் களவொழுக் கத்திற்கு யாதொரு இடையூறும் ஏற்படாவண்ணம் காப்பாற்றி வருவதிலே தோழி பேருதவி புரிந்துவருகிறாள். இப்படியாகச் சிலகாலம் கழிகின்றது.

ஒரு நாள், தலைவனும் தலைவியும் குறியிடத்துத் தனித் திருந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது, "களவொழுக் கத்தை உற்றாரும் உறவினரும் தெரிந்துகொண்டு, இழிச் சொல்லும் பழிச்சொல்லும் வீசி நம்மைக் கொடுமைகளுக்கு ஆளாக்குவதற்கு முன்பு, முறைப்படி நம் தாய் தந்தையர்க்கு அறிவித்துத் திருமணம் செய்துகொண்டு, வெளிப்படையாக இல்லறவாழ்வை இனிதாக நடத்துவது நமக்கு நலம் பயக்குமே!" என்று தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.

தலைவன் சற்றுத் தயக்கத்துடன், "திருமணத்திற்கு இப் பொழுது என்ன அவ்வளவு விரைவு?" என்று கேட்கிறான்.

"நான் இரவுக்குறி பகற்குறியிடங்களுக்கு வந்து சேர எவ்வளவு இடர்ப்பாடு படவேண்டியிருக்கிறது தெரியுமா? என் தாய் தந்தையர்க்குத் தெரியாமல், அச்சப்பட்டு அச்சப்பட்டு

இக் களவொழுக்கத்தை இன்னும் எத்துணை நாட்களுக்கு மூடி மறைத்துக் கொண்டிருக்க முடியும்?'' என்று தலைவி வினாவு கிறாள்.

''இப்பொழுதுள்ள சூழ்நிலையில் திருமணம் வேண்டாம் என்று கருதுகிறேன்!''

''என்ன?...திருமணம் வேண்டாமா? அப்படியானால் நாம் திருமணம் செய்துகொள்ளப் போவதே யில்லையா?''

''நாம் திருமணம் செய்துகொள்ளத்தான் போகிறோம்; ஆனால் அது இப்பொழுது வேண்டாம் என்கிறேன்!''

''ஏன் இப்பொழுது வேண்டாம்?''

''இப்பொழுது எனக்கு விருப்பமில்லை!''

''என்னைத் திருமணம் செய்து கொள்ளவே உங்களுக்கு விருப்பமில்லையா?''

''உன்னைச் செய்துகொள்ள விருப்பமில்லை என்று நான் எப்படிக் கூறுவேன்? நான் உயிர்வாழ்வதே, நீ இருக்கிறாய் என்பதற்காகத்தானே! இப்பொழுதுள்ள சூழ்நிலையில் திருமணம் செய்துகொள்ள விருப்பமில்லை 'என்றுதான் கூறுகிறேன்!'' என்னிடத்தில் போதுமான பொருள் வசதி யில்லை. அதைத் தேடிக்கொண்ட பிறகுதான் திருமணத்திற் கான ஏற்பாடு செய்ய இயலும்!''

''நீங்கள் பொருள் வசதியை எப்பொழுது தேடப் போகிறீர்கள்? திருமணம் எப்பொழுது செய்து கொள்ளப் போகிறீர்கள்?''

''இப்பொழுது வேண்டுமானாலும் பொருள் தேடப் புறப் படுகிறேன்! திரும்பி வந்தவுடன் திருமணத்திற்கான ஏற்பாடு செய்கிறேன்!''

''நான் உங்களைக் காணாமல் எப்படிப் பிரிந்திருப்பேன்?''

"அப்படியானால் பொருள் தேடவும் போக முடியாது திருமணத்திற்கான ஏற்பாடும் செய்ய இயலாது!"

"நீங்கள் என்னதான் சொல்லுகிறீர்கள்?"

"விரைவில் திருமணம் நடைபெற வேண்டுமானால், நான் பொருள்தேடப் புறப்படவேண்டும்; நான் இங்கேயே இருக்க வேண்டுமானால், திருமணம் அண்மையில் நடைபெற வழியில்லை!"

தலைவி திகைத்துப்போய், என்ன கூறுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு நிற்கிறாள்.

"நீ விடைகொடுத்தால், இப்பொழுதே நான் வெளியூருக்குப் புறப்படுகிறேன். என்ன சொல்லுகிறாய்? சொல்லு" என்று தலைவன் திட்டவட்டமாகக் கேட்கிறான். தலைவி வேறு வழியின்றி அரைகுறை மனத்தோடு தலையை அசைத்துத் தன் இசைவைத் தெரிவிக்கிறாள்.

தலைவன் தலைவியிடம் விடைபெற்றுக் கொண்டவுடன், வெளியூருக்குப் புறப்படுவோம், பொருள் திரட்டி வருவோம், மிகச்சிறப்பாகத் திருமணத்தைச் செய்வோம் என்று களிப்போடு எண்ணிக்கொண்டு தேர் ஏறிப் புறப்படுகிறான். தலைவி பிரிவு ஆற்றாமல் கண்களிலே நீர் வழிய அவன் செல்லும் வழியை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டே நிற்கிறாள். பிறகு தோழி, அவளை ஆறுதல்படுத்தி வீட்டிற்கு அழைத்துச் சொல்கிறாள்.

காதலன் பிரிந்து போய்விட்டான், இனி என்ன செய்வோம், எப்படிப் பிரிவு ஆற்றுவோம் என்றெல்லாம் எண்ணி ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறாள் தலைவி. தலைவியின் வருத்தத்தை மாற்றவும், அதனை அவள் மறந்திருக்கச் செய்யவும் ஆன வழிகளிலெல்லாம் ஆறுதல் கூறிப் பார்க்கிறாள் தோழி; ஏதொரு முறையாலும் தலைவி ஆறுதல் அடைந்த பாடில்லை.

மாலைப்பொழுதில் சோலைப்பக்கம் அழைத்துச்சென்று இயற்கை அழகுகளையும், செயற்கை அழகுகளையும் தலைவிக்குக் காண்பிப்பதன்மூலம், அவளைச் சிறிதுநேரம் வருத்தத்தை மறந்திருக்கும்படி செய்யலாம் என்ற எண்ணத்துடன், தோழி தலைவியைச் சோலைப்பக்கம் உலாவுதற்கு அழைக்கிறாள். தலைவியும் தோழியின் அழைப்புக்கு இணங்கி உலாவச் செல்கிறாள்.

தோழி, தலைவியை அழைத்துக்கொண்டு, கடற்கரை ஓரமாய் உப்பங்கழிகளை அடுத்து விளங்கும் சோலையை நோக்கிச் செல்கிறாள். கடல் அலைகள் எழுந்து மடிந்து புரண்டுவிழும் காட்சிகளையும்,செஞ்ஞாயிறு மேலைத்திசையில் சென்று மறையும் காட்சிகளையும் கண்டு மகிழ்ந்துகொண்டே இருவரும் மணலில் நடந்து போகின்றனர். நெய்தல் மலர்கள் பூத்துக் குலுங்கும் உப்பங்கழிகள் எதிர்ப்படுகின்றன. அங்கு நின்று கழிகளின் அழகைப் பார்க்கிறார்கள். கொல்லும் தன்மையுடைய சுறாமீன்கள் கழிகளில் இயங்குவதைக் கண்டு அஞ்சிச் சற்றுத் தொலைவில் நின்று கொள்கிறார்கள். புன்னை மலரின் பொன்னிறத் தாதுகள் காற்றடிப்பதால் வந்து பட்டு, நெய்தல் மலரின் கரிய நிறம் மறைந்து பொன்னிறமாக விளங்குவதைக் கண்டு மகிழ்கிறார்கள். பிறகு மணம் கமழும் தாழைமலர்கள் செறிந்து காணப்படும் வழிவழியே சென்று, புன்னை மரங்கள் அடர்ந்த சோலையில் தங்குகிறார்கள். தலைவி தன் ஆருயிர்க் காதலர் அருகே இல்லையே என்று கவலையுறுகிறாள். தோழி, அவளது கவனத்தை வேறுவகையில் திருப்பி, அவளை வருந்தாமலிருக்கச் செய்ய அரும்பாடு படுகிறாள்.

தலைவி வீட்டிலே இருக்கும்போது மிகவாக வருந்துவதையும், சோலைப்பக்கம் உலாவச் செல்லும்போது அந்த வருத்தத்தைச் சிறிது மறந்திருப்பதையும் காணும் தோழி, நாள்தோறும் மாலைவேளைகளில் தலைவியைக் கடற்கரைச் சோலைக்கு அழைத்துச்செல்வது என்று திட்டமிடுகிறாள். அவ்வாறே அழைத்துச் சென்று தலைவிக்கு ஆறுதல்

கூறுகிறாள். தலைவியும் மாலைப்பொழுதுகளில் சோலைப் பக்கம் வேடிக்கை பார்க்கக் கிளம்புவதால், சிறிது மன அமைதி பெறுகிறாள்.

தலைவன் தான் திரும்பி வருவதாகக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டுச் சென்ற காலம் வந்ததும், தலைவன் வராமை கண்டு பெரிதும் மனங் கலங்குகிறாள் தலைவி. தலைவனுக்கு ஏதேனும் கேடு சூழ்ந்ததோ, அல்லது பொருளின்மேல் கொண்டுள்ள மிக்க விருப்பத்தினால் தன்னை மறந்து விட்டானோ, அல்லது நெடுந்தொலைவு சென்று திரும்பி வரும் திசையறியாது தவிக்கிறானோ, அல்லது அவன் திரட்டிக் கொண்டுவந்த பொருளை யாரேனும் கவர்ந்து சென்று விட்டார்களோ, அக் கள்வர்களைத் துரத்திக் கொண்டுபோய்ப் பொருளை மீட்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறானோ என்றெல்லாம் பலவாறாகச் சிந்தித்து ஏங்குகிறாள், தலைவியின் கவலைகள் ஒவ்வொன்றுக்கும் ஆறுதல் மொழி கூறி அவளைத் தேற்றுகிறாள் தோழி.

ஒரு நாள் மாலைப் பொழுது. தலைவியும் தோழியும் புன்னைமரச் சோலையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். தலைவி, தலைவன் வராமையை நினைந்து நினைந்து வருந்திச் சோர்ந்து காணப்படுகிறாள். தலைவன் விரைவில் வந்து விடுவான் என்பதை உணர்த்தித் தேற்றிக்கொண்டிருக்கிறாள் தோழி.

திடீரென்று மிக்க தொலைவிலிருந்து மணி ஒலி கேட்கத் தொடங்குகிறது. மணியோசை வந்த பக்கம் தோழி தன் செவிசாய்த்து உற்றுக் கேட்கிறாள். அது தலைவனது தேரில் கட்டிய மணியொலியே என்பதையும் அறிந்து கொள்கிறாள். உடனே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, "தலைவர் வந்துவிட்டார்! தலைவர் வந்துவிட்டார்!" என்று சொல்லிக்கொண்டே சாலைப் பக்கம் ஓடிநின்று, மணியோசை வரும்பக்கம் எதிர்நோக்கி நிற்கிறாள். தலைவி ஏதும் புரியாமல் திகைத்துப் போகிறாள். தேரின்

மணியோசையோடு குதிரையின் குளம்படி ஓசையும், தேர் உருண்டோடிவரும் ஓசையும் சேர்ந்து வருகின்றன. தோழி தலைவனே வருகிறான் என்பதை ஐயமற உணர்ந்து கொள்கிறாள். பிறகு, பறவை பறப்பது போன்று பொன்னால் செய்யப்பட்ட அணிகலனையும், பிற அணிகலன்களையும் அணிந்துகொண்டு, குதிரை நாலுகால் பாய்ச்சலில் தேரை இழுத்துக்கொண்டு ஓடிவருவதையும், தேர்ப்பாகனது தாற்றுக்கோலால் தூண்டப்படாமல் வீடுவரும் நோக்கத்தோடு விரைந்து வருவதையும் பார்த்து, குதித்துக்கொண்டு, "ஓடி வா! ஓடி வா! இதோ பார் வந்துவிட்டார்!" என்று தலைவியை அழைக்கிறாள். தலைவியும் ஓடி வருகிறாள். அதற்குள் தேர், தோழியின் அருகில் வந்து நிற்கிறது; தலைவன் தேரிலிருந்து விரைந்து குதித்துத் தலைவியை நோக்கி ஓடுகிறான். தலைவனைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கி, நிலை தடுமாறி நடக்க முடியாமல் நடந்துவருகிறாள் தலைவி. தலைவன் தாவிப் போய்க் கட்டியணைத்துக் கொண்டு, அவள் உச்சி முகர்ந்து காதல் மொழி பகர்கிறான்.

இனித் திருமணம் இனிதே நடந்தேறும், தலைவியின் கவலையும் நீங்கும், தன்னுடைய பொறுப்பும் கழியும் என்று எண்ணித் தோழி மனமகிழ்கிறாள்.

* * *

இது நற்றிணை 78ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு எழுந்த சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் வரைமலிந்தது என்னும் துறையைச் சார்ந்ததாய், நெய்தல் திணையின்பாற் பட்டதாகும். இதனை இயற்றியவர் கீரங்கீரனார் என்னும் புலவராவர். இவருடைய தந்தையின் பெயர் கீரன்; எனவேதான் இவர் கீரங்கீரனார் என்று அழைக்கப்பெறுகிறார். இவர் நெய்தல் திணையைப் புனைந்து அழகுறப் பாடியுள்ளார். இவர் பாடியதாக இந்தச் செய்யுள் ஒன்றுதான் கிடைத்துள்ளது.

கோட்சுறா வழங்கும் வாட்கேழ் இருங்கழி
மணியேர் நெய்தல் மாமலர் நிறையப்
பொன்நேர் நுண்தாது புன்னை தாஅம்
வீழ்தாழ் தாழைப் பூக்கமழ் கானல்
படர்வந்து நலியும் சுடர்செல் மாலை
நோய்மலி பருவரல் நாமிவண் உய்கம்
கேட்டிசின் வாழி தோழி தெண்கழி
வள்வாய் ஆழி உள்வாய் தோயினும்
புள்ளுநிமிர்த் தன்ன பொலன்படைக் கலிமா
வலவன் கோலுற அறியா
உரவுநீர்ச் சேர்ப்பன் தேர்மணிக் குரலே.

(நற்றிணை—78)

(பொழிப்புரை:) *தோழி! வாழி! தெளிந்த உப்பங்கழியின் கண்ணுள்ள நீரிடத்துப் பெருமைவாய்ந்த தேருருளையின் உள்வாய்ப்பக்கம் அழுங்கப்பெற்றாலும், பறவை பறந்து சென்றாற்போன்று, செல்வதும் பொன்னால் செய்யப்பட்ட அணிகலன் முதலியவற்றையுடையதும், மனஞ்செருக்கியதும், தேர்ப்பாகன் தன் தாற்கோலாலே தூண்டப்பட்டறியாது மான குதிரை பூட்டப் பெற்றுவரும், பரந்த கடல் நீரையாளும் சேர்ப்பனது தேரின் மணி ஒலிக்குங் குரலைக் கேட்பாயாக; கொல்லுந்தன்மையுள்ள சுறாமீன் இயங்குகின்ற ஒள்ளிய நிறத்தையுடைய பெரிய உப்பங்கழியிடத்து மலர்ந்த நீலமணி போன்ற நெய்தலின் கரியமலர் நிறையுமாறு, புன்னையின் பொன்போன்ற நுண்ணிய தாது பரக்கும், விழுது ஊன்றிய அடியையுடைய தாழைமலர் கமழ்கின்ற கடற்கரை யிலுள்ள சோலையின்கண்ணே, துன்பம் வந்து மேன்மேலும் வருத்துகின்ற, கதிரவன் மறையும் மாலைப் பொழுதில், காமநோய் மிகுதலால் ஆகிய மிக்க துன்பத்தினின்றும் நாம் இனி இங்கு உய்ந்து வாழ்வோமாக!*

வான்கேழ் - ஒள்ளிய நிறத்தையுடைய; மணி - நீலமணி; ஏர் - ஒத்த; கானல் - கடற்கரைச் சோலை; பருவரல்-துன்பம்;

கலிமா - குதிரை; வலவன் - தேர்ப்பாகன்; உரவுநீர் - கடல் நீர்.

இல்லற வாழ்வை இனிது நடத்துவதற்கு ஏற்றவகையில் போதுமான பொருள்வளம் இருந்தால் ஒழிய, தலைமகன் திருமணம் செய்து கொள்வது அவ்வளவு சிறப்புடைத்தாகாது என்பது, இச் செய்யுளில் உணர்த்தப்படுகிறது.

பொருள் சேர்த்துக்கொண்டு திரும்பும் தலைவன், தலைவியைத் திருமணம் செய்துகொள்ளும் உறுதிப் பாட்டோடு வருவதால், இனி ஊராரைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்ற எண்ணத்துடன்தான், தேரின் மணி மிகவாக ஒலிக்க வெளிப்படையாகவே விரைந்துவரத் தலைப் படுகிறான்.

குதிரை பூட்டிய தேரைப் போக்குவரத்துக் கருவியாகக் கொள்ளுதல், குதிரைக்குப் பொன்னால் ஆன அணிகலன்களை அணிவித்தல், தேர்ப்பாகன் குதிரை ஓட்டத் தாற்றுக்கோலைக் கையிலே பிடித்திருத்தல், தேரில் மணிகள் கட்டியிருத்தல் போன்ற பழக்கங்கள் குறிப்பிடப்படுகின்றன.

காதலால் பீடிக்கப்பட்டுத் தனித்து வாழ்கிறவர்களை மாலைப்பொழுது மிகவும் வருத்தும் என்பதும் உணர்த்தப்படு கின்றது.

புன்னையின் பொன்னிறத் தாது, நெய்தல் மலர் நிறையப் படியும் என்பது, பொருள் திரட்டிவரும் தலைவன், தலைவிக்கும் தலைவியைச் சேர்ந்த உற்றார்க்கும் நிரம்பப் பொருள் கொடுப்பான் என்பதை உணர்த்தும் உள்ளுறை உவமமாகும்.

தாழம்பூவின் மணம் கானல் எங்கும் கமழும் என்பது, தலைவனது திருமணம் நாடெங்கும் மாட்சிமைப்படும் என்பதை உணர்த்தும் உள்ளுறை உவமமாகும்.

11. ஓடிப்போன காதலர்!

உப்பங்கழிகளும் புன்னைமரச் சோலைகளும் நிறைந்த கடற்கரையை அடுத்த சிற்றூர்தான் அம்மங்கை நல்லாளின் இருப்பிடம். அவள் குடிச்சிறப்பும், செல்வவளமும் மிகுந்த குடும்பத்தில் தோன்றியவள். செவிலித்தாய் கண்ணேபோல் காத்துவர, தோழிமார்கள் எப்பொழுதும் அவளுடனிருந்து அவளுக்கு மகிழ்ச்சி ஊட்டிவர, அவள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அழகுற வளர்ந்து வருகிறாள்.

தலைவி, தன் தோழிமார்களோடு சேர்ந்து காலைப் பொழுதில் தாயம்போன்ற வீட்டு விளையாட்டுக்களை விளையாடுவது, நண்பகலில் நீராட ஓடைக்குச் செல்வது, காலைப் பொழுதில் மலர்பறிக்க பூஞ்சோலை செல்வது, கடற்கரை மணலிலே பந்துவிளையாடியும் ஓடியாடிப் பிடித்தும் விளையாடி மகிழ்வது, இயற்கைவளம் காணுவது, நிலாப்பொழுதில் நிலாவிளையாட்டுக்கள் விளையாடுவது ஆகியவற்றிலேதான் பொழுதைப் போக்கிக்கொண்டு வருகிறாள். தோழிமார்கள் தலைவியை வெளியே அழைத்துச் செல்லும்போது, அவளை விலையுயர்ந்த ஆடைகளாலும், வேலைப்பாடுகள் நிறைந்த அணிகலன்களாலும் ஒப்பனை செய்து அழைத்துக்கொண்டு போவது வழக்கம். தலைவி கவலை ஏதுமின்றி மிகச்செல்லமாக வளர்ந்து வருகிறாள்.

ஒரு நாள், அவள், சோலையில் தன் தோழிமார்களோடு ஓடியாடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவ்வழியே அறிவும், ஆற்றலும், அழகும், பண்பும் ஒருங்கே திரண்டு ஒருருவாய் வந்ததுபோலக் கட்டிளங்காளைப்

பருவத்தினன் ஒருவன் வருகிறான். அவன் சோலை மயிலென ஆடித்திரியும் தலைவியைக் காண்கிறான். கண்ட அளவிலே அவள் அழகிலும் கவர்ச்சியிலும், அப்படியே அசைவற்று நின்று விடுகிறான். தலைவியும் தோழிமார்களும் தன்னைக் கண்டு விடுவார்களோ, கண்டு அவ்விடம் விட்டு அப்புறமாகப் போய் விடுவார்களோ என்று கருதி, அவன் புதர் ஒன்றில் மறைந்து ஒளிந்து நின்று, தலைவியின் அழகையும், ஆட்டத்தையும் கண்ணால் பருகிக் கொண்டிருக்கிறான். மாலைப்பொழுது மறையும்போது, அவர்கள் வீடுநோக்கித் திரும்பி, நெடுந் தொலைவில் செல்லும் வரையில் இமைகொட்டாது அவர்களை அவன் பார்த்துவிட்டுப், பின் அவள் பற்றிய நினைவோடு தன் இல்லம் ஏகுகிறான்.

நாள்தோறும் வருவதும், மறைந்திருந்து தலைவியைக் கண்டு மகிழ்வதும். பின் வீடுதிரும்புவதுமான பழக்கத்தைத் தலைவன் மேற்கொள்கிறான். ஒரு நாள், தலைவி தோழிமார்களோடு சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்த பந்து தலைவன் ஒளிந்திருந்த புதருக்கு அப்பால்போய் விழுகிறது. அதனை எடுக்கத் தலைவியே ஓடிவருகிறாள். அதற்குள் தலைவன் அந்தப் பந்தை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டு, தலைவியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறான். தலைவி புதரைத் தாண்டி வந்து பார்க்கும்போது, பந்தைக் கையில் ஏந்தியவண்ணம், தோற்றப் பொலிவோடு கூடிய கட்டிளங் காளையொருவன் எதிரே நின்றுகொண் டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போகிறாள்; பின் அவனது கவர்ச்சிகரமான தோற்றத்தைக்கண்டு திகைத்துப்போகிறாள்; என்ன சொல்லுவது, என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறாள்.

சிறிதுநேரம் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அசைவற்று நின்ற பிறகு, "என்ன வேண்டும்?" என்று தலைவன் அவளைக் கேட்கிறான்.

நாணமும் வெட்கமும் கழுத்தைப் பிடித்து அழுத்த, தழதழத்த குரலில், "நாங்கள் விட்டெறிந்த பந்து இந்தப் பக்கம்

வந்ததா?'' என்று, அவன் கையிலிருப்பதை அறிந்துகொள்ளாதவள்போல் கேட்கிறாள்.

அவன் உடனே ''இதுவா? பார்'' என்று பந்தை அவளிடம் காட்டினான்.

அவள் ''ஆமாம்! இதுதான்'' என்கிறாள்.

''அப்படியானால் இதோ எடுத்துக்கொள்!'' என்று அவளிடம் பந்தைக் கொடுக்கிறான். அவள் கையேந்தி வாங்க முற்படுகிறாள். அவள் கையில் பந்தை வைக்கும்போது, தன் கையும் அவள் கையில் படும்படியாக நெருங்கி நின்று வைக்கிறான். கையோடு கைபட்ட அளவில் இருவருக்கும் உடல் சிலிர்த்துப்போய் விடுகிறது. அவள் திகில்கொண்ட நெஞ்சினளாய் அவ்விடம் விட்டு அகன்று, தோழிகளிருக்குமிடம் போய்ச் சேருகிறாள்.

வெய்யில் எரித்தாலும், காற்று அடித்தாலும், மழை பெய்தாலும் சரி, நாள்விடாமல் மாலைப் பொழுதில் சோலைப் பக்கம் வருவதை அவளும் வழக்கமாகக் கொள்ளத் தலைப்படுகிறாள். இப்பொழுதெல்லாம் வேண்டுமென்றே பந்தைப் புதர்ப் பக்கம் தூக்கி எறிவது, அதனை எடுக்கத் தானே ஓடுவது, தலைவன் எடுத்துக் கொடுக்க வாங்கிக்கொண்டு கடைக்கண் பார்வையைச் செலுத்திவிட்டு வருவது என்ற பழக்கத்தையும் தலைவி மேற்கொள்ளுகிறாள்.

ஒரு நாள் தோழிமார்களையெல்லாம் நிறுத்திவிட்டு அவள் மட்டும் தனியே வருகிறுள். அப்படி வரும் அவளைக் கனிவுடன் வரவேற்றுக் காதல் மொழி பரிமாறி நிற்கிறான் அவன். அவளும் பரிமாறுகிறாள். இருவரும் கூடிக்குலாவிக் களவொழுக்கத்தை இன்பமாய்க் கழிக்கின்றனர். இந்தக் களவொழுக்கம் சில நாட்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பது ஊரிலுள்ள பொல்லா முதுமைப் பெண்டிர்க்கு எப்படியோ தெரிந்து விடுகிறது. அவர்கள் அலர்தூற்ற ஆரம்

பிக்கின்றனர். பொல்லா மகளிர் அலர்தூற்றத் தொடங்கி யிருப்பதைக் கேள்வியுற்ற தோழிமார் சிலர், நிலைமையைத் தலைவியிடம் கூறுகின்றனர். தலைவி தன் தாய் தந்தை யாலும், உற்றார் உறவினராலும், தனக்கு என்ன கேடுகள் வருமோ என்று அஞ்சி நடுங்குகிறாள்.

மாலைப் பொழுதில், சோலையில் தலைவனைத் தனியே காணும்போது தமது ஒழுக்கம் ஊரார்க்கு எப்படியோ தெரிந்துவிட்டது என்று சொல்லி அச்சத்தால் அழத்தொடங்கு கிறாள். தலைவன், இன்றிரவே இருவரும் வெளியூருக்குப் புறப்பட்டுப் போய்விடலாம் என்று சொல்லி, அவளைத் தேற்று கிறான்.

சொல்லிவைத்துக் கொண்டதற்கேற்ப, இருவரும் மறுநாள் பொழுது விடிவதற்கு முன்பே யாருக்கும் தெரியாமல் சோலைக்கு வந்து ஒருவரையொருவர் கண்டுகொண்டு வெளியூருக்குப் பயணமாகிறார்கள்.

உப்பங்கழிகளிலிருந்து புலால்நாற்றம் வீச, அதனை மறைக்கும் அளவில் புன்னை மரங்களினின்றும் மணல்மேல் வீழ்ந்து கிடக்கும் மலர்கள் தேன் மணத்தைப் பரப்ப, கடற்கரையின் தொய்ந்த மணலில் இருவரும் மெல்ல நடந்து செல்கின்றனர். வழியில் கிடைக்கும் காய், கனி, கிழங்கு களையே உணவாக உட்கொள்கிறார்கள். கடற்கரையோரத் திலேயே நீண்ட தொலைவு நடந்து, பின் பருக்கைக் கற்கள் மிகவாக நிரம்பிய காட்டுக்குள் புகுகிறார்கள். காட்டுக்குள் புகும்போது வெயில் மிகவாக எரிக்கும் நண்பகல்வேளை வந்து சேர்கிறது. வெய்யிலோ கொளுத்திக் கொண்டிருக்கிறது. வானமோ வெள்ளைவெளேரென்று காட்சியளிக்கிறது. எங்கு பார்த்தாலும் புத்துக்களும் புதர்களும் நிரம்பிக் கிடக்கின்றன. மரஞ்செடி கொடிகளெல்லாம் பட்டுப்போய்க் கிடக்கின்றன. பெரிய பெரிய ஆலமரங்கள் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறிதளவு நிழல் தந்து கொண்டிருக் கின்றன. நீண்ட தொலைவு நடந்தே பழக்கப்படாத, அதுவும்

கடும் வெய்யிலில் நடந்து பார்க்காத, அதிலும் பருக்கைக் கற்களின்மீது நடந்தறியாத தலைவி மிகவும் வருந்துகிறாள். சிறிது தொலைவு மெல்லமெல்ல அடியெடுத்து வைப்பாள்; பிறகு துடிதுடித்து, உடல் சோர்ந்து, அப்படியே உட்கார்ந்து விடுவாள். தலைவன் அவளை அணைத்து, வாரித் தூக்கி நிறுத்தித் தாங்கிப் பிடித்துக் கொண்டே அழைத்துச் சென்று, ஒரு ஆலமரத்து நிழலில் தங்கவைக்கிறான். தலைவி சோர்ந்து படுத்துவிடுகிறாள்.

"இன்னும் எவ்வளவு தொலைவு போகவேண்டும்?" என்று அவள் மெல்லிய குரலில் வினவுகிறாள்.

"வந்த அளவைப்போல் இன்னும் ஒரு மடங்கு தொலைவு போகவேண்டும்!" என்கிறான்.

"அவ்வளவு தொலைவை நான் எப்படிக் கடக்கப் போகிறேன்? அதற்குள் நான் இறந்துவிடுவேன் என்று கருது கிறேன்!"

"நீ வருந்துவது எனக்கு எவ்வளவு வருத்தமாக இருக் கிறது தெரியுமா? நீ இப்படியெல்லாம் பேசக்கூடாது!"

"மனித நடமாட்டமேயில்லாத இந்தக் காட்டைக் காணும்போது எனக்கு ஒரே அச்சமாக இருக்கிறது!"

"நான் உன் அருகில் இருக்கும்போது நீ எதற்காக அஞ்ச வேண்டும்? வீணாக உன் உள்ளத்தை வருத்திக் கொள்ளாதே!"

"இப்படிப்பட்ட ஆலமரம், போகும் வழியில் எங்கும் இருக் கின்றனவா?"

"அடுத்தடுத்து ஏராளமாக இருக்கின்றன. அவற்றின் நிழலிலே நாம் தங்கித் தங்கிச் செல்லலாம். நீ ஒன்றுக்கும் அஞ்சாதே!"

"பொழுது போவதற்குள் வேற்றூர் போய்ச் சேர்ந்து விடமுடியுமா?"

"கட்டாயம் பொழுதுபோவதற்குள் போய்ச் சேர்ந்து விடலாம். உன்னுடைய இளமையும், செல்வச் செழிப்பில் செல்லமாக வளர்ந்த தன்மையும், என்னால் கடுந்தண்டனைக்கு ஆளாக்கப்படுகின்றன. என் மீது கொண்டுள்ள அன்பால், நான் இழைக்கும் கொடுமைகளை மறக்க முயலமாட்டாயா?"

"நான் ஒன்றுக்கும் வருந்தவில்லை; வாருங்கள் போவோம்!" என்று கூறிக்கொண்டே தலைவி எழுந்து நடக்கத் தொடங்கினாள். தலைவன் மகிழ்ச்சியோடு அவளை அணைத்துக் கொண்டு அழைத்துச் செல்கிறான்.

இது நற்றிணை 76 ஆம் செய்யுளின் கருத்தை விரிவாக்கி எழுதப்பட்ட சொல்லோவியமாகும். இச்செய்யுள் பாலைத் திணையைச் சார்ந்தது. தலைவியோடுகூடி வெளியூருக்குச் செல்லும் தலைவன் இடையில் பாலை நிலத்தில் செல்லும் போது வருந்தும் தலைவிக்கு ஆறுதல் சொல்லுவது என்னும் துறையைச் சேர்ந்ததாகும். இச்செய்யுளை இயற்றியவர் அம்மூவனார் என்ற புலவராவார். இவரது இயற்பெயர் மூவன் என்றும், அம் என்பது இவரது அடைமொழியாக இருக்கக்கூடும் என்றும் கூறுவர். இவர் மேலைக் கடற்கரையைச் சேர்ந்த தொண்டி, மாந்தை முதலிய சேரநாட்டு நகரங்களைச் சிறப்பித்துப் பாடியிருத்தலால், இவர் மேலைக் கடற்கரை ஊர் ஒன்றைச் சேர்ந்தவர் என்று எண்ணுதற்கு இடமிருக்கிறது; இப்பொழுதும் அம்மு, திம்மு, திப்பு போன்ற பெயர்கள் அப்பகுதியில் மக்களுக்கிடப்பட்டு வழங்கி வருவதால், அம்மூவன் என்ற பெயரே இவரது இயற்பெயர் என்று கருதவும் இயலும். பாண்டியநாட்டுக் கொற்கையும் நடுநாட்டுத் திருக்கோவிலூரும், பெண்ணையாறும், சோழ நாட்டுக் கோயில்வெண்ணியும் இவரால் பாடப்பட்டுள்ளன. இவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகியவற்றில் காணக்கிடக்கின்றன.

வருமழை கரந்த வால்நிற விசும்பின்
நுண்துளி மாறிய உலவை அம்காட்டு

ஆல நீழல் அசைவு நீக்கி
அஞ்சுவழி அஞ்சாது அசைவழி அசைஇ
வருந்தா தேகுமதி வாலிழைக் குறுமகள்
இம்மென் பேரலர் நும்மூர்ப் புன்னை
வீமலர் உதிர்ந்த தேனாறு புலவின்
கானல் ஆர்மணல் மரீஇக்
கல்லுறச் சிவந்தநின் மெல்லடி உயற்கே.

(நற்றிணை-76)

(பொழிப்புரை :) தூய அணிகலன்களையணிந்த இளமடந்தாய்! இந்த மெல்லிய பெரிய பழிச்சொல்லைத் தூற்றுதலையுடைய நினது ஊரின்கண் உள்ள, புன்னையின் காம்பில்லாத மலர் மிகுதியாக உதிர்ந்ததனாலே தேன் மணம் வீசுகின்ற, புலவினை யுடைய உப்பங்கழிக்கரைச் சோலையின் மிக்க மணலிலே நடந்து, இப்பொழுது கற்கள் பதிதலாலே சிவந்த உன்னுடைய மெல்லிய அடிகள் வருந்தாமலிருத்தற் பொருட்டு, வருகின்ற மழை பெய்யாதொழிந்த வெள்ளிய நிறத்தையுடைய விசும்பி லிருந்தும் விழுகின்ற நுண்ணிய துளிகளும் இல்லையாகும்படி, காற்றுச் சுழன்று வீசும் அழகிய காட்டு நெறியகத்து, ஆலமரத் தின் நிழலிலே தங்கி இளைப்பாறி, அஞ்சுமிடங் கண்டாலும் அங்கு அஞ்சாது ஏகுவாயாக.

வால் - வெண்மை; உலவை - சுழற்காற்று; அசைவுநீக்கி - இளைப்பாறி; அசைஇ - தங்கி; குறுமகள் - இளமடந்தை; மரீஇ - நடந்து.

தலைவனும் தலைவியும் களவொழுக்கக்காலத்திலே கூடி மகிழ்வதும், ஊரில் அலர் எழும்போது அதற்கு அஞ்சி இருவரும் வேற்றூருக்கு யாருக்கும் தெரியாவண்ணம் ஓடிப் போவதும், பண்டைக்காலத் தமிழ் மக்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட பழக்கங்களாகும் என்பது, இச்செய்யுளால் இனிது பெறப்படும்.

இடையில் பாலைவெளியில் நடந்து செல்லும்போது, நடக்க இயலாமல் தலைவி வருந்தும் தன்மையும், தலைவியின்

வருத்தத்தைப் போக்க முயலும் தலைவன் அவளுக்கு ஆறுதல் கூறும் தன்மையும் அழகுற இச்செய்யுளில் விளக்கப்பட்டிருக்கின்றன.

தலைவன், தான் உடன் இருப்பதால் அவள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை என்னும் கருத்தினை வெளியிடுகிறான். தம்முடைய ஊரைவிட்டு நெடுந்தொலைவு வந்துவிட்டதால், இனி உற்றார் உறவினர் வருபவர்கள் என்று அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்னும் கருத்துத் தோன்ற 'இனித் தங்கக்கூடிய இடங்களில் தங்கிச்செல்லலாம்' என்றும் தலைவன் தலைவிக்குக் கூறுகிறான்.

12. இல்லம் புகமுடியாத இழிநிலை!

தலைவியோடு இணைந்திருந்து இன்பமாய் இல்லறவாழ்வு நடத்திவந்த தலைவனிடம், மயக்கமொழிகள் பல பகர்ந்து, அவனைப் பரத்தையர் சேரிக்குக் கூட்டிச் செல்வதற்கு முனைகிறான் பாணன். பாணனின் பாகுமொழிகளில் மயங்கி, தலைவன் நிலைதடுமாறுகிறான். தலைவியைப்பற்றி நினைக்க மறந்து, பரத்தையர் பற்றிய நினைவுகளில் கவனத்தைச் செலுத்துகிறான்.

விதவிதமான பரத்தையர்களோடுகூடி விதவிதமான இன்பத்தைப் பெறலாம் என்று பாணன் தலைவனுக்குத் தூண்டுகோல் போடுகிறான். பாணன் செலுத்திய வழி செல்லத் தலைவன் தலைப்படுகிறான். தலைவனின் நடை உடை நடப்புக்களில் மாறுதல் ஏற்பட்டிருப்பதைக் கண்ட தலைவி, அந்த மாறுதலுக்குப் பாணனே காரணம் என்று அறிந்து, என்ன துன்பம் நேரிடுமோ, எப்பொழுது நேரிடுமோ என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறாள்.

தலைவி அறியாவண்ணம் பாணன் தலைவனைப் பரத்தையர் வாழும் இடத்திற்கு அழைத்துச் சென்றுவிடுகிறான். தலைவனைக் காணாது, பல இடங்களிலும் அவனைத் தேடிப் பார்த்து, இறுதியில் அவன் பரத்தையர் சேரியில் வாழுவது அறிந்து மனம் ஒடிந்து வருந்தி மிக்க துயரத்தில் ஆழ்கிறாள் தலைவி.

தலைவன் பல பரத்தையர்களையும் அடைந்து, அவர்களோடு கூடியிருந்து காமவின்பம் துய்த்து வருகிறான்.

தலைவனின் கைப்பொருளை யெல்லாம் பரத்தையரும், பாணனும் சிறிதுசிறிதாகக் கரந்து வருகின்றனர். தலைவி தன்னந்தனியாக இல்லத்திலிருந்து தன்னை நினைந்து வருந்து வாளே என்பதைப்பற்றியோ, தன் கைப்பொருள் முழுவதும் செலவழிந்து வருகிறதே என்பதைப்பற்றியோ, தன் ஒழுக்கக் கேடு என்பதைப் பற்றியோ, தன் ஒழுக்கக்கேடு பற்றி ஊரார் பழிப்பார்களே என்பதைப்பற்றியோ சிறிதும் கவலைப்படாமல், பரத்தையர் சேரியை மலர்த்தோட்டத்தைச் சுற்றிவரும் வண்டுபோல் சுற்றி வருகிறான்.

தலைவன் எல்லாப் பரத்தையரையும் நுகர்ந்து பார்த்து விட்டு, இறுதியில் பெண்தன்மை யடையப்பெறாத அழகு வாய்ந்த பெதும்பைப் பருவத்தாள் ஒருத்தியிடம் மனமயக்கங் கொண்டு, அவளோடு ஓடிஆடி விளையாடுவதிலும், ஆடிப்பாடி மகிழ்வதிலும் ஈடுபட்டிருக்கிறான்.

ஊரில் திருவிழா வருகிறது. எல்லோரும் தத்தமக்கு விருப்பமாம் வழிகளில் ஆடியும் பாடியும், கூத்தடித்தும் கும்மி யடித்தும், வேடிக்கைபார்த்தும் விளையாடியும் மகிழ்கின்றனர். ஊரே ஒரே ஆரவாரத்தன்மை கொண்டதாக மாறுகிறது. மக்கள் அழகும் விலையும் உயர்ந்த ஆடை அணிகலன்களால் தம்மை அழகுபடுத்திக்கொண்டு விழாவில் கலந்து கொள் கிறார்கள். ஆடவரும், பெண்டிரும், பிள்ளைகளும் புத்தாடை களையும், வெளுத்து மடித்த ஆடைகளையும் உடுத்துக் கொண்டு போவதும் வருவதுமாக நடமாடிக் கொண்டிருக் கிறார்கள். விழாத் தொடங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே பல்வேறுவகைத் தொழில்புரிவோரும், தொழில் வினைஞரும் தத்தம் தொழில்களில் அல்லும் பகலும் ஈடுபட்டு ஓயாது உழைத்து, விழாவினைச் சிறப்பிக்கவும். வாணிகத்தைப்பெருக்கவும் முனைந்து பாடுபட்டு வருகின்றனர். பொற்கொல்லர் மக்களுக்கு வேண்டிய பொன்னணி களைப் புதிதுபுதிதாகச் செய்து தந்து கொண்டேயிருக் கின்றனர். ஆடை வெளுப்போர் ஓய்வு ஒழிவில்லாமல் ஆடைகளை வெளுத்து மடிபோட்டு தந்தவண்ண மிருக்

கின்றனர். இவ்வாறாக மலர்மாலை தொடுப்போரும், நறுமணம் புகைப்போரும், உண்டிவகை செய்வோரும், வேடிக்கை காட்டுவோரும், ஆடிப்பாடி மகிழ்விப்போரும், பிறரும் தத்தம் வேலைகளில் அயராது ஈடுபடுகின்றனர்.

தலைவனால் விரும்பப்படும் பெதும்பை, வெளுத்துச் சோற்றின் கஞ்சியிட்டு உலர்த்திய, பூவேலைப்பாடு அமைந்த புடவையை உடுத்திக்கொண்டு, பொன்னாலான அணிகலன் களைப் புனைந்துகொண்டு, தன் சுற்றத்தாரோடு விழாவில் கலந்துகொள்ளப் புறப்படுகிறாள். தலைவனும் அவளோடு புறப்படுகின்றான். விழாக்களத்தில் பெரியபெரிய மரக்கிளை களில், பனை நாரினாலான கயிற்றில் ஊஞ்சல்கள் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அப் பெதும்பைப் பருவத் தினள் ஆடைகள் காற்றில் அழகுறப் பறக்க, அணிகலன்கள் அசைந்தாட, ஓடிச்சென்று ஊஞ்சல் ஒன்றில் ஏறிக்கொள் கிறாள்.

அவளோடு வந்த பெண்களெல்லாம் இருபுறமும் பிரிந்து நின்று, அவளது ஊஞ்சலை ஆட்டி விடுகிறார்கள். தன்னுடைய ஊஞ்சலைத் தலைவன் ஆட்டிவிட வேண்டுமென்று அவள் எதிர்பார்த்திருக்கிறாள். தலைவனோ பொதுமக்கள் பலரும் பார்த்துத் தன்னைக் கேலி செய்வார்கள் என்று கருதிக் கொண்டு, ஒரு பக்கத்தில் நின்றுகொண்டு, அவளை வேடிக்கை பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கிறான். ஆயத்தார் ஆட்டுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. தன் ஊஞ்சலை ஆட்டிவிடும்படி அவள் தலைவனை அழைக்கிறாள். போயும் போயும் ஒரு பெதும்பைப் பெண்ணைத் தலைவன் காதலிக்கிறானே என்று எண்ணி ஊரார் கேலிசெய்வார்கள் என்று கருதிக்கொண்டு, அவன் வாளா நின்றுவிடுகிறான். தன் ஊஞ்சலை ஆட்டத் தலைவன் வர மறுப்பதுகண்டு, அப் பெதும்பைப் பெண், ஊஞ்சலைவிட்டு இறங்கி அழுதுகொண்டு ஓடிவிடுகிறாள்.

தலைவன் பின்னால் ஓடிச்சென்று, அவளுக்கு ஆறுதல் அளிக்க முயலுகிறான், அந்தப் பெண் அவனுக்கு முகங்

கொடுத்துப் பேசாமல், அவனை அப்புறந் தள்ளிவிட்டுத் தன் வீட்டிற்கு ஓடி ஒளிந்து கொள்கிறாள். தலைவனின் இந்தச் செயல்கண்டு பரத்தையர் பலரும் எக்கொலி கொட்டி நகைக்கிறார்கள். தலைவன் பரத்தையரின் ஏளனத்தைத் தாங்க முடியாமல், தன் நிலைமை மிகவும் இழிவாகப் போய்விட்டதை நினைத்து வருந்தி, மீண்டும் தலைவியிடம் போய்ச்சேர விரும்புகிறான். பாணனை உடன் துணைக்கு அழைத்துக்கொண்டு தன் வீடு நோக்கிச் செல்கிறான்.

தலைவன் வீட்டிற்கு அருகில் வந்ததும், தானே தலைவியின் எதிரில் செல்ல அஞ்சி, நிலைமையைத் தெரிந்துவருமாறு பாணனை அனுப்பிவைத்துவிட்டுத் தான் சிறிது தொலைவில் மறைந்து நின்றுகொள்கிறான். தலைவி வீட்டின் கூடத்தில் உட்கார்ந்து, ஒரு தூணில் சாய்ந்துகொண்டு, தோழியிடம் தன் வருத்தத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். அப்போது பாணன் மிக்க அச்சத்துடன் மெல்ல அடியெடுத்துவைத்து வீட்டின் தெருக்கதவண்டையில் வந்து நிற்கிறான். கதவின் மறைவில் ஒளிந்துகொண்டு தலைவியும் தோழியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை உற்றுக் கேட்கிறான்.

பாணன் கதவுக்கருகில் நின்று ஒட்டுக்கேட்பதைத் தோழி அறிந்து கொள்கிறாள். தான் அறிந்து கொண்டதாக வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், தலைவியுடன் உரையாடிக் கொண்டிருக்கிறாள்.

தோழி, பாணன் காதில் விழவேண்டும் என்பதற்காகத் தலைவியைப் பார்த்துச் சிலபல செய்திகளை அறிவிக்கிறாள்.

''நம் தலைவர் செய்த வேலை ஒன்று உனக்குத் தெரியுமா?'' என்று தோழி தலைவியைக் கேட்கிறாள்.

அதற்குத் தலைவி, ''என்னடீ! எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! தலைவருக்கு ஏதாவது துன்பம் நேரிட்டதோ?'' என்று கேட்கிறாள்.

"நீ வருந்துகிறமாதிரி அவருக்கு ஒன்றும் துன்பம் நேர்ந்து விடவில்லை; அவரே வருந்துகிற மாதிரிதான் அவருக்குத் துன்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது!"

"அப்படி என்னடீ தோழி, அவருக்குத் துன்பம்?"

"அவர் ஒரு பரத்தையைக் காதலித்தாராம்; ஆனால் அவள் அவரோடு ஊடல் கொண்டுள்ளாளாம்!"

"அப்படி யாரடீ ஒரு பரத்தை இருக்கிறாள்? அவருக்காகத் தான் எல்லோரும் நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு அவரிடம் ஓடிவருகிறார்களாமே!"

"அப்படிப் போட்டாப் போட்டிபோடும் நிகழ்ச்சிகளெல்லாம் நடந்தேறி முடிந்துவிட்டன. இப்பொழுது யாரும் போட்டி போட்டுக்கொண்டு வரமுடியாத ஒருத்தியை நம் தலைவர் நாடி நிற்கிறார்?"

"யாரும் போட்டி போட முடியாதபடி அவ்வளவு அழகி யவளா அவள்?"

"எல்லோரும் நல்ல அழகுடையவர்கள்தான். ஆனால், நான் குறிப்பிடுபவள் பெண் தன்மையடையாத ஒரு பெதும்பைப் பெண்!"

"அப்படியா?"

"ஆமாம்! அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறாய்? போயும் போயும் ஒரு பெதும்பைப் பெண்ணைப் பிடித்தார் பார்!"

"அவள் நம் தலைவரோடு ஊடி நிற்பதற்கு என்ன காரணம்?"

"திருவிழாவின்போது கயிற்று ஊஞ்சலாட அவள் சென்றாளாம். அவள் ஆயத்தார் அவளது ஊஞ்சலை ஆட்டிவிட்டார்களாம். அது அவளுக்குப் பிடிக்கவில்லையாம். நம் தலைவரே தன் ஊஞ்சலை ஆட்டிவிட வேண்டும் என்று விரும்பினாளாம். தனிப்பட்ட முறையில் மறைவான

இடத்தில் இவளோடு ஓடியாடி விளையாட விரும்பும் நம் தலைவர், பலர் சூழ்ந்திருக்கும் விழா நாளன்று பலரும் ஏளனம் செய்யும் வகையில் அவளை ஊஞ்சலில் வைத்து ஆட்டிவிடத் துணிவில்லாமல் தயங்கினாராம். அதனால் அவள் அவரோடு ஊடிக்கொண்டு போய்விட்டாளாம். பிறகு அவர் அவருக்கு எவ்வளவோ ஆறுதல் மொழிகள் எடுத்துக் கூறியும், அவள் கேட்க மறுத்துவிட்டு, அவரிடம் முகங்கொடுத்துப் பேசாம லேயே போய்விட்டாளாம்!''

தோழியின் இந்தக் கூற்றைக் கேட்டதும், தலைவி மனம் நொந்து, தலைவருக்கு இப்படிப்பட்ட இழிநிலை ஏற்பட்டதே என்று வருந்தி, அவரது போக்குக்குறித்து ஆறாச் சினங்கொள் கிறாள்; தலைவியும் தோழியும் சிறிது நேரம் பேச்சு ஏதும் பேசாமல் அமைதியாக வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கிறார் கள்.

அப்பொழுது பாணன் உள்ளே நுழைந்து, அவர்கள் எதிரில் நிற்கிறான். தோழி அவனைப் பார்த்து, ''என்ன செய்தி? எங்கே வந்தாய்?'' என்று அதட்டிக் கேட்கிறாள்.

''நான் தலைவரிடமிருந்து வருகிறேன்!...'' என்கிறான்.

"அதுதான் புரிகிறதே! வந்த செய்தி என்ன?" என்று வினாவுகிறாள் தோழி.

"தலைவர் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறார் என்ற செய்தியை அறிவித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்!'' என்கிறான்.

''எதற்காக வரப்போகிறாராம்?'' என்று வினவுகிறாள் தோழி.

''தலைவியாரைப் பார்க்க!...''

''இவ்வளவு நாட்களாக இல்லாத அக்கறை இப்பொழுது மட்டும் எங்கிருந்து வந்திருக்கிறது?''

"தாங்கள் சினங்கொள்ளக் கூடாது! தலைவியாரைப் பார்த்து நீண்ட நாட்களாயிற்றே என்று காண வருகிறார்!"

"உன்னைப் பற்றியெல்லாம்தான் எங்களுக்கு நன்றாகத் தெரியுமே! நன்றாக இருந்த இல்லறத்தைப் பாழ்படுத்த நீ ஒரு நச்சுப்பாம்பாக அல்லவா தோற்றமெடுத்திருக்கிறாய்? நீ ஒருவன் இல்லாதிருந்தால், இந்தக் குடும்பம் எவ்வளவோ நன்றாக இருந்திருக்குமே! இதுவரையிலும் கொடுத்த தொல்லைகள் போதாது என்று, இன்னமும் தொல்லைகள் கொடுக்க வந்துவிட்டாயா? போய்விடு! இங்கு அடி எடுத்து வைக்காதே!"

"தலைவர் இனிப் பரத்தையர் சேரிப்பக்கம் போவதில்லை என்று முடிவு செய்துகொண்டு அல்லலா இங்கு வருகிறார்! அவரை ஏற்று நீங்கள் ஆதரிக்கவேண்டும்! அதுதான் நான் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்வதெல்லாம்."

"எல்லாக் கதையும் எங்களுக்குத் தெரியுமே! அந்த பெதும்பைப் பெண்ணை ஆற்றுவிக்க உங்களுக்குத் திறமையில்லை; எனவே இங்கு வரப் பார்க்கிறீர்கள்! அவள் தலைவரோடு ஊடினமையால், வேறுவழியின்றி, அவர் இங்கு வரப்பார்க்கிறார். அவர் அவளது ஊஞ்சலை ஆட்டிவிட்டிருந்தால் அவள் அழப்போவதுமில்லை; தலைவரோடு ஊடப் போவதுமில்லை; தலைவரும் அவளை விட்டு நீங்கியிருக்க மாட்டார். இனி அவர் இங்கு வரவேண்டாம் என்று போய்ச் சொல்!" என்று தோழி கடிந்து கூறுகிறாள்.

தலைவி எல்லாவற்றையும் அமைதியாக இருந்து கேட்டுக் கொண்டிருக்கிறாள். பாணன் தலைவிக்கும் தோழிக்கும் எல்லாச் செய்தியும் தெரிந்துவிட்டது என்று அறிந்து, இனி அங்கு நின்று பேசுவதில் பயனேற்படாது என்று கருதி மெல்ல வெளியேறுகிறான்.

பாணன் நடந்தவற்றையெல்லாம் தலைவனிடம் போய்ச் சொல்லுகிறான். தலைவன் தன் போக்குக்கு நாணி, இன்னும்

சிறிதுநாட்கள் கழித்துச் சென்றால், தலைவி மனம் வருத்தம் நீங்கித் தன்னை ஏற்றுக்கொள்வாள் என்று கருதிக்கொண்டு, சிறிதுநாட்கள் மறைந்து வாழத் தலைப்படுகிறான்!

* * *

இது நற்றிணை 90 ஆம் செய்யுளை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட காதற்காட்சியாகும். இந்தச் செய்யுள் மருதத் திணையைச் சார்ந்தது; தோழி தலைமகளுக்கு உரைப் பாளாய்ப் பாணனை நெருங்கி வாயில் மறுத்தது என்னும் பிரிவின் பாற்பட்டது. இந்தச் செய்யுளை இயற்றியவர் அஞ்சிலஞ்சியார் என்னும் சங்ககாலப் புலவராவார். இவர் அஞ்சில் என்னும் ஊரைச் சேர்ந்தவர். அஞ்சி என்பது இவரது இயற்பெயர். இவரைப்பற்றிய வேறு குறிப்பு ஏதும் அகப்பட வில்லை.

ஆடியல் விழவின் அழுங்கன் மூதூர்
உடையோர் பான்மையின் பெருங்கை தூவா
வறனில் புலத்தி எல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு
வாடா மாலை துயல்வர ஓடிப்
பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்
பூங்கண் ஆயம் ஊக்க ஊங்காள்
அழுதனள் பெயரும் அஞ்சில் ஓதி
நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள்
ஊசல் உறுதொழில் பூசல் கூட்டா
நயனில் மாக்களொடு கெழீஇப்
பயனின்று அம்ம இவ் வேந்துடை அவையே!

(நற்றிணை—90)

(பொழிப்புரை :) கூத்து ஆடி மகிழ்கின்ற விழாவின் ஒலியை யுடைய இப்பழமையான ஊரினிடத்து,ஆடைகளை ஆராய்ந்து கழுவுந் தன்மையில் பெரிதும் தன் கை ஒழியாத வறுமையில் லாத ஆடை வெளுக்கும் வண்ணாத்தி, இரவிலே தோய்த்துச்

சோற்றின் கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிது பூத்தொழிலை யுடைய ஆடையுடனே, பொன்னரிமாலை அசைந்தாட ஓடிச்சென்று, கரிய பனைநாரினாலே திரித்த கயிற்றைப் பிணித்துத் தொங்கவிட்ட ஊஞ்சலில் ஏறிப், பூப்போலும் கண்களையுடைய தன் ஆயத்தார் அதனை ஆட்டவும், தான் ஆடாதவளாய் அழுது மீளுகின்ற அழகிய சிலவாகிய கூந்தலை யுடைய, பெண்தன்மையில் குறைவுபட்ட, சிலவாய வளையல் களை அணிந்த பரத்தையாகிய பெதும்பைப் பருவத்தாளாகிய ஓர் இனமகளை, மீண்டும் ஊஞ்சலாடுகிற மிக்க தொழிலின் ஆரவாரத்தில் செய்யாத விருப்பமற்ற மக்களோடு சேர்ந்து, இவ்வேந்தனது அவைக்களந்தான் பயனின்மையுடையதாக இருக்கின்றது. இது மிக்க வியப்பு! அவளை ஆடச்செய்திருந் தால் அவள் ஊடாள்; தலைமகனும் அவளை நீங்கான்; அங்கே அவள் ஊடினமையால் இறைமகன் இங்கு வந்தான்போலும்; இனி இங்கு வாராது ஒழிந்து போவானாக!

அழுங்கல் மூதூர் - ஒலியையுடைய பழமையான ஊர். கைதூவாமை - கையொழியாமை. புலத்தி - ஆடையொலிக்குந் தொழிலி; வண்ணாத்தி. புகா - உணவு; சோறு. காஞ்சி, கலிங்கம் - ஆடை. வாடாமாலை - பொன்னரிமாலை. நாலும் - தொங்கும். இரும் - கரிய. பிணையல் - கட்டப்பட்ட ஊஞ்சல். ஓதி - கூந்தல். நல்கூர் பெண்டு - பெண் தன்மை யில்லாள். மாக்கள் - பாணன் முதலியோர்.

சேரிப் பரத்தையரோடு காலங்கழித்துத் திரியும் ஆடவரைக் குடும்பப் பெண்கள் எப்படி வெறுத்து ஒதுக்கு கிறார்கள் என்பது இச்செய்யுளின் மூலம் அழகுறச் சுட்டிக் காட்டப்படுகிறது.

தலைவன் பரத்தையின்பால் மயக்கங்கொண்டு தலைவியை விட்டுப் பிரிதலும், பரத்தை ஊடும்போது அவளை வெறுத்து வீடு திரும்புதலும் நிலையற்ற ஆடவரின் இயல்பு என்பது இச்செய்யுளால் தெளிவுறுத்தப்படுகிறது.

தலைவன், தன்னை ஊஞ்சலாட்டவில்லை என்பதே பெதும்பையான அந்தப்பரத்தைக்கு மிக்க சினத்தைத்தருகிறது. அது காரணமாக அவனிடம் அவள் ஊடல்கொள்கிறாள்.

- திருவிழாக் காலத்தில் கூத்து ஆடுதல், வெளுத்த ஆடையை சோற்றின் கஞ்சியிட்டு உலர்த்தி மடிபோட்டு வைத்தல், பூவேலைப்பாடுகள் அமைந்த ஆடையை உடுத்துதல், பனைநாரினாலான கயிற்றில் ஊஞ்சல் கட்டி ஆடுதல் போன்ற பழக்கங்கள் குறிப்பிடப்படுகின்றன.

13. பிரிந்து செல்லும் வல்லமை உண்டோ?

திருமணம் முடிந்து சில திங்கள்களே சுழிந்திருக்கின்றன. தலைவனும் தலைவியும் இன்பக்கடலில் மூழ்கிக்கிடக்கின்றனர்.

காதலரிவரும் கவலையற்ற வாழ்வு வாழ்ந்து வந்த காரணத்தால், காலங் கழிவதும் கைப்பொருள் கரைவதும் அவர்களுக்குத் தெரியவில்லை. கைப்பொருள் முழுவதும் கரைந்து, பொருள் முட்டுப்பாடு ஏற்படுகிறது. மேற்கொண்டு இல்லற வாழ்வை இனிது நடத்த மிகுபொருள் வேண்டும் என்பதைத் தலைவன் உணருகிறான். வெளியூருக்குச் சென்று வாணிகமோ அல்லது தொழிலோ செய்தால்தான் பொருள் ஈட்ட முடியும் என்று எண்ணமிடுகிறான். இந்த எண்ணத்தைத் தலைவியிடம் எப்படிக் கூறுவது? கூறினால் அவள் மிக மிக வருந்துவாளே என்று நினைந்து நினைந்து மனங்கலங்கி, ஏதொரு முடிவுக்கும் வர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான்.

வேறு வழி ஏதும் புலப்படாததால், இறுதியாகப் பொருள் தேட வெளியூருக்குப் புறப்படுவது என்ற முடிவுக்குத் தலைவன் வருகிறான். இந்த முடிவைத் தலைவியிடம் நேரிடையாகச் சொல்ல மனந்தாளாமல், தோழியின்மூலம் அறிவிக்கலாம் என்று கருதுகிறான். அதற்காகத் தோழியைத் தேடிக்கொண்டு செல்கிறான். தோட்டத்தின் ஒருபுறத்தில் தோழி தன்னந் தனியாக இருப்பதைக் கண்டு அவளிடம் நெருங்குகிறான். தலைவனைக் கண்டதும் தோழி எழுந்து நின்று வரவேற்கிறாள்.

தலைவன் : "எங்கே வந்தாய்? ஏன் இங்குத் தன்னந்தனியாக இருக்கிறாய்?"

தோழி : "மல்லிகை பறித்தேன்; மாலை தொடுத்துக் கொண்டிருக்கிறேன்!"

தலைவன் : "உன்னுடைய தோழி எங்கே?"

தோழி : "அவள் மாளிகையில்தான் இருப்பாள். நீங்கள் அவளைப் பார்க்கவில்லையா?"

தலைவன் : "நான் இன்னமும் மாளிகைக்குப் போகவில்லை. இப்பொழுதுதான் நான் காடு கழனியைப் பார்த்துவிட்டு வருகிறேன்."

தோழி : "நீங்கள் மாளிகைக்குப் போகாமல் இங்கே தன் பொருட்டு வந்தீர்கள்?"

தலைவன் : "நீ இங்கே இருப்பதைப் பார்த்தேன். உன்னோடு பேசலாம் என்று வந்தேன்."

தோழி : "என்னோடு என்ன பேசப்போகிறீர்கள்? பேச வேண்டிய எல்லாவற்றையுந்தான் உங்கள் திருமணத்திற்கு முன்னால் பேசி விட்டீர்களே!"

தலைவன் : "உன்னால் எனக்கு ஒன்று ஆக வேண்டியிருக்கிறது."

தோழி : "ஆகவேண்டிய எல்லாவற்றையுந்தாம் திருமணத்திற்கு முன்னால் உங்களுக்குச் செய்துவிட்டேனே! இப்பொழுது புதிதாக நீங்கள் சொல்ல வேண்டியதும், நான் செய்யவேண்டியதும் என்ன இருக்கிறது?"

தலைவன் : "நீ தலைவியிடம் தூதுபோய், அவளிடம் ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது!

தோழி : "நான் தூதுபோய்ச் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது?"

தலைவன் : "நான் பொருள் தேடிவர வெளியூருக்குப் புறப் படலாம் என்றிருக்கிறேன். அதற்கு நீ தலைவியினுடைய இசைவைப் பெற்றுத் தரவேண்டும். அதைச் சொல்லிவிட்டுப் போகத் தான் உன்னிடம் வந்துள்ளேன்."

தோழி : "நிலையில்லாத பொருளைத் தேடுவதிலே உங்களுக்கு ஏன் இவ்வளவு இளவயதில் ஆவல் பிறந்துவிட்டது?"

தலைவன் : "பொருள் நிலையில்லாததாக இருந்தாலும், வாழ்வு அதில்தானே நிலைத்திருக்கிறது?"

தோழி : "அவளைவிடப் பொருள் உங்களுக்குப் பெரிதாகப் போய்விட்டதா?"

தலைவன் : "அவளை பெரிதாகக் கருதுவதால்தான், பொருள் தேடும் முயற்சியில் நான் ஈடுபடவேண்டியவனாக இருக்கிறேன். அவளோடு சேர்ந்து நடத்தும் இல்லறவாழ்வை நான் இனிதாக நடத்திச் செல்ல வேண்டுமானால், அதற்கு உறுதுணையாக இருக்கும் பொருளைத் தேடித்தான் ஆக வேண்டியிருக்கிறது."

தோழி : "இதைத் தலைவியிடம் நீங்களே நேரிடையாகச் சொல்லுங்களேன்!"

தலைவன் : "நான் நேரிடையாக அவளிடம் சொல்ல முடியாமையினால்தானே, உன்னிடம் இரந்து கூறுகிறேன். நான் அவளிடம் இதனைக் கூறினால் அவள் மிகவும் துன்பமுறுவாள். அவளுடைய துன்பத்தைப் பார்த்தபிறகு அவளிடம் இசைவு தரச் சொல்லிக் கேட்க எனக்கு மனம் வராது. எனவேதான் உன்னுடைய உதவியைப் பெரிதும் விரும்பி நிற்கிறேன்."

தோழி : "நீங்கள் மிகவும் இரந்து கேட்பதால் உங்களுடைய கருத்தை அவளிடம் போய்த் தெரிவிக்கிறேன். 'நீங்கள் செல்லலாம்' என்று அவள் இசைவு தரவும் செய்வாள். ஆனால், அதற்குப் பிறகு அவளுக்கு ஏற்படும் துன்பத்தை யார் துடைப் பார்கள்?"

தலைவன் : "அவளுக்கு என்ன துன்பம் ஏற்படும் என்கிறாய்?"

தோழி : "உங்களை விட்டுப் பிரிந்து அவள் தன்னந் தனியாக இருப்பாள். உங்கள் வீட்டில் உள் இறப்பில் இருக்கும் அழகிய சிவந்த கால்களை யுடைய ஆண்புறா தான் விரும்பும் பெண் புறாவைப் புணர்ச்சிக்குக் கூவி அழைக்கும். காமவேட்கையோடு கிளம்பும் அக்குரலோசையை ஓயாமல் கேட்டுக்கொண்டிருக்கும் தலைவியும், காமவேட்கையுற்று மிகவும் வருந்துவாள். அப்படிப்பட்டவளை விட்டுப் பிரிந்துபோக உங்களுக்கு மனம் உண்டா?"

தலைவன் : "மனதார நான் பிரிய விரும்பவில்லையே! வேறு வழியில்லை என்ற பொருள் நெருக்கடி காரணமாக அல்லவா நான் பிரிந்து செல்ல விரும்புகிறேன்."

தோழி : "அப்படியானால், நீங்கள் புறப்படுவதற்குமுன்பு தலைவியைப் பார்த்து அவளுடைய நெற்றியை யும் கண்ணையும் தடவிக்கொடுத்து, அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுச் செல்லுங்கள். அதற்கான வன்மை உங்களிடம் உண்டு என்றால் நான் போய் அவளிடம் உங்களுடைய கருத்தைத் தெரிவிக் கிறேன்."

தலைவன் : "சரி! அப்படியே நான் செய்கிறேன்" (என்று சொல்லிவிட்டுப் புறப்படுகிறான்)

தோழியின் சொற்படி தலைவியைக் கண்டு, சொல்லிப் புறப்படும் எண்ணத்துடன் தலைவன் அவ்விடம்விட்டு அகல் கிறான். தலைவன் தலைவியைக் காணுவதற்குமுன் தோழி தலைவியைக் கண்டு நிலைமையை விளக்குகிறாள். தலைவி மிக்க வருத்தத்தில் ஆழ்கிறாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தலைவன் தலைவியிடம் வந்து சேர்கிறான். தலைவி கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி யளிக்கிறாள். அவளைக் கட்டியணைத்து, நெற்றியையும் கண்ணையும் தடவிக் கொடுத்து, ஆறுதல்மொழி கூறி, அவளிடம் விடைபெற்றுச் செல்ல விரும்புகிறான். அவள் மேலும் கண்ணீர் உகுத்து அழுகிறாள். இந்த நிலையில் தலைவியை விட்டுவிட்டுச் செல்ல அவனுக்கு மனம் வரவில்லை. எனவே, பிறிதொரு பொழுது வெளியூருக்கு புறப்பட்டுக் கொள்ளலாம் என்று கருதிக்கொண்டு, பயணத்தை நிறுத்திக் கொள்கிறான். அந்தக் கருத்தைத் தலைவியிடம் வெளியிடுகிறான். தலைவியும் அகமகிழ்ந்து முகமலர்ச்சி கொள்கிறாள்!

நற்றிணை 71 ஆம் செய்யுளின் உட்கருத்தே இங்கு தீட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இது தலைவனைத் தோழி வெளியூர் புறப்படாதவாறு செய்தது என்னும் பிரிவின் பாற்பட்ட பாலைத்திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் வண்ணப்புறக் கந்தரத்தனார் என்ற புலவராவார். இவரது இயற்பெயர் கந்தரத்தனார் என்பது. கந்தரத்தனார் என்று பெயருடையோர் வேறு சிலர் இருந்த காரணத்தால், அவர்களினின்றும் இவரைப் பிரித்துக் காட்ட வேண்டி, இவரது பாடலில் "வண்ணப்புறவின் செங்காற் சேவல்" என்ற அடியில் புறாவினை வண்ணப்புறவு என்று கூறிய சொற்சிறப்பு நோக்கி, அச்சொல்லையே இவருக்கு அடைமொழியாக்கி, வண்ணப்புறக் கந்தரத்தனார் என்று பிறர் அழைக்கலாயினர். இவருடைய பாடல்கள் அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றுமாக இரண்டு கிடைக்கப் பெற்றுள்ளன.

மன்னாப் பொருட்பிணி முன்னி இன்னதை
வளையணி முன்கைநின் இகுளைக்கு உணர்த்தெனப்
பன்மாண் இரத்திர் ஆயின் சென்மென
விடுநள் ஆதலும் உரியள் விடினே
கண்ணும் நுதலும் நீவி முன்நின்று
பிரிதல் வல்லிரோ ஐய செல்வர்
வகையமர் நல்லில் அகஇறை உறையும்
வண்ணப் புறவின் செங்கால் சேவல்
வீழ்துணைப் பயிரும் கையறு முரல்குரல்
நும்மிலள் புலம்பக் கேட்டொறும்
பொம்மல் ஓதி பெருவிதுப் புறவே?

(நற்றிணை—71)

(பொழிப்புரை :) *ஐய! நிலையில்லாத பொருளைத் தேட ஆசை பிணித்தலால், அதனிடத்துக் கருத்தைச் செலுத்தி, இச்செயலை வளையணிந்த முன்கையையுடைய நின் தோழிக்குக் கூறுவாயாக என்று பலவகை மாட்சிமைப்பட இரந்து கூறுகின்றீராதலால், நான் சென்று கூறினால் நீர் செல்லுவீராக என்று உம்மை விடுத்தலுஞ் செய்வாள்; அப்படி உம்மை விடுப்பினும் செல்வருடைய பல கட்டுக்களமைந்த வீட்டின்கண்ணே உள்ளிறப்பிலிருக்கும் அழகிய சிவந்த கால்களையுடைய சேவற்புறா, தான் விரும்பிய பெண்புறாவைப் புணர்ச்சிக்கு அழையா நிற்கும், காமத்தால் செயலுறவுகொண்டொலிக்கின்ற அக்குரலோசையை, நும்மைப் பிரிந்து தனிமையாயிருந்து கேட்குந்தோறும் எம் பொலிவுபெற்ற கூந்தலையுடைய தலைவி பேரவாவால் நடுங்கி வருந்துமாறு, அவளுக்கு முன்பு நின்று, நீர் அவளுடைய கண்ணையும், நெற்றியையும் தடவிக்கொடுத்துப் பிரிந்து போவதற்கு வல்லமையுடையீரோ? உடையீராயின் சென்று சொல்லுவேன்.*

மன்னா - நிலையில்லாத; முன்னி - நிலைத்து; இகுளை - தோழி; மாண் - மாட்சிமைப்பட்ட; இறை - உள்இறப்பு; புறவு - புறா; வீழ்துணை - தான் விரும்பிய பெண்புறா;

பயிர்தல் - புணர்ச்சிக் கழைத்தல்; பொம்மல் - பொலிவு பெற்ற. ஓதி - கூந்தல்; விதுப்பு - ஆசையால் வருந்துகின்ற வருத்தம்.

தலைவனைப் பிரிந்து வாழும் தலைவியது வருத்தம் எத்தன்மையது என்பதை, மேற்கண்ட செய்யுளில் புலவர் நயம்பட எடுத்துக் கூறியுள்ளார். தன்னந்தனியாகத் தலைவி வாழும்போது, வீட்டின் உள் இறப்பிலிருக்கும் ஆண்புறா பெண்புறாவைப் புணர்ச்சிக்கு அழைக்க, அக்குரலோசையை அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கும் தலைவி மிகக் காதல் வேட்கையுற்றுத் துன்புறுவாள் என்று, தோழி தலைவனுக்குச் சுட்டிக்காட்டி, அவனை வெளியூர் செல்லாதபடி தடுத்து நிறுத்தும் பாங்கு நயம் நிறைந்தாகும்.

மாளிகையின் உள் இறப்பில் புறாக்கள் தங்குதல், ஆண்புறா குரல் எழுப்பிப் பெண்புறாவைப் புணர்ச்சிக்கு அழைத்தல், காதலன் காதலியின் நெற்றியையும் கண்ணையும் தடவிக்கொடுத்தல் போன்ற பழக்கங்கள் இச்செய்யுளில் குறிபிடப்படுகின்றன.

புறாக்கள் அடிக்கடி புல்லிப் புணரும் தன்மையன என்றும், அவற்றை நோக்குவார்க்குக் காமவின்பம் மிகவாகும் ஆதலின், அதன்பொருட்டு புறா வளர்ப்பது மக்களுக்கு இயல்பு என்றும் கூறுவர்.

14. நின் நோய் நான் அறிவேன் !

தம் பெண்ணைத் தினைப்புனங்காக்கும் தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள் பெற்றோர்கள். அவள் தினைப்புனத்திற் சென்று, காவல்காப்பதற்கு ஏற்றவண்ணம் உயரமான பரண் ஒன்று அமைத்துக்கொண்டும், அதற்குக் கீழே, இருந்து உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் தகுந்தபடி குடிசையொன்று போட்டுக் கொண்டும் வாழ்ந்து வருகிறாள்.

தலைவியுடன் அன்போடு பழகிவரும் ஆருயிர்த்தோழி ஒருத்தி இருந்து வருகிறாள். தலைவிக்குத் தேவையான உணவு, உடை ஆகியவற்றைத் தலைவியின் இல்லத்திலிருந்து நாள்தோறும் கொண்டு வருவதும், அவளோடு ஓடியாடி மகிழ்வதும், உரையாடி இருப்பதும், பெரும்பொழுது துணையாகத் தங்குவதும் தோழியின் பழக்கங்களாகும்.

தினைக்கதிர்களைக் கொத்தவரும் கிளிகளையும், தினைப் பயிர்களை அழிக்கவரும் யானைகளையும், கவண்கற்களை வீசி நெடுந்தொலைவு விரட்டியடிப்பதில் இருவரும் ஈடுபடுவார்கள். ஒரு கால், முரட்டு யானை ஒன்று தினைப்புனத்தில் புகுந்து, அதனைப் பெருவாரியாக அழிக்கத் தொடங்குகிறது. அதனைக் கண்ணுற்ற தலைவியும், தோழியும் மிகச் சினங் கொண்டு கவண்கற்களை மழைபோல் வீசியெறிந்து அந்த முரட்டு யானையை விரட்டுகிறார்கள். அந்த முரட்டு யானையோ சிறிது தொலைவு சென்று மீண்டும் தினைப்புனம் நோக்கித் திரும்ப முயலுகிறது. உடனே தலைவியும் தோழியும் கவண்கற்களை அடுத்தடுத்துத் தொடர்ந்து வீசி அதனை மேலும் விரட்டுகின்றனர். இப்படியாக நெடுந்தொலைவு

விரட்டிச் சென்று மலைப்பள்ளத்தாக்கு ஒன்றில் அதனைக் கொண்டுபோய் விடுகின்றனர். யானை போய்விட்டது, இனித் திரும்பாது என்ற உறுதி ஏற்பட்டவுடன், தோழியும் தலைவியும் தினைப்புனம் நோக்கித் திரும்பி வருகிறார்கள்.

அப்பொழுது மலைக்காட்டில் வேட்டையாட அப்பக்கம் வந்த கட்டிளங்காளைப் பருவத்தினன் ஒருவன், தலைவியை யும் தோழியையும் கண்டு வியப்புற்று, அங்கிருக்கும் புதர் ஒன்றில் ஒளிந்து கொண்டு, அவர்களையே உற்றுப் பார்க் கிறான். அழகு, ஆடை, அணி முதலியவற்றைக் கொண்டு அவர்களில் ஒருத்தியைத் தலைமகள் என்று உறுதிப்படுத்திக் கொண்டு, அவளிடம் தனது மனத்தைச் செலுத்தி மயங்கி நிற்கிறான். அவளை எப்படியேனும் தனக்குரியவளாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றுகிறது. அவர்களிருவரும் எங்கே போகிறார்கள்ம் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய, அவர்கள் அறியா வண்ணம் அவர்களைப் பின்தொடர்ந்து அவனு,, செல்லுகிறான்.

தலைவியும் தோழியும் தினைப்புனத்திலுள்ள குடிசையில் நுழைவதையும், சிறிது நேரங் கழித்துத் தோழி தலைவியிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு செல்வதையும் சற்றுத் தொலைவில் நின்று பார்க்கிறான். தன் உள்ளத்தைக் கவர்ந்த பெண்ணழகி அக்குடிசையில் தன்னந்தனியே இருப்பது கண்டு மகிழ்ந்து, குடிசையின் அருகே செல்லலாம் என்ற எண்ணத் துடன் நெருங்கிவருகிறான். காலடியோசை ஏதோ கேட்பது அறிந்து, மீண்டும் யானை வந்துவிட்டதோ என்று அஞ்சி கவண்கற்களையும், கவண்பொறியையும் எடுத்துக்கொண்டு விரைந்து வெளியே வருகிறாள். அழகும் கவர்ச்சியும் மிக்க தோற்றங்கொண்ட ஆடவன் ஒருவன் எதிர்பாராமல் எதிரே வந்து நிற்பதைக் கண்டு திகைத்துப் போகிறாள். அவன் அப்படியே வில்லும் கையுமாக நின்று தன் காதல் பார்வையை அன்பொழுகச் செலுத்துகிறான்.

தலைவிக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ மயக்கம் ஏற்படுவதுபோல் அவளுக்குத் தோன்றுகிறது. உடனே குடிசைக்குள் ஓடி ஒளிந்து தாளிட்டுக் கொள்கிறாள். தலைவன் மீண்டும் அவளைக் காணவேண்டி அப்படியே அசைவற்று நிற்கிறான். அவ்வாடவன் அவ்விடம் விட்டு அகலவில்லை என்பதைக் குடிசையிலுள்ள சந்து இடுக்குகளின் வழியாகப் பார்த்துத் தெரிந்து கொண்டு, வெளியே வர நாணி, அங்கேயே இருந்து விடுகிறாள்.

தோழி தலைவிக்கு உணவு எடுத்துக் கொண்டு தொலைவில் வருவதைப் பார்த்த தலைவன், இனி அங்கிருப்பது நல்லதல்ல என்று எண்ணிக்கொண்டு, அங்கிருந்து வெளியேறி மறைகிறான்.

தோழி வந்ததும், அவளிடம் நடந்ததையெல்லாம் கூறலாமா? வேண்டாமா? என்று தனக்குள்ளாகவே கேட்டுக் கொள்கிறாள். தன்னைப்பற்றித் தோழி தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது என்ற கருத்தில், பிறிதொரு பொழுது தேவைப்பட்டால் செய்தியை வெளியிடலாம் என்று எண்ணி அந்த அளவிலே அமைதி பெறுகிறாள். தோழி வழக்கம்போலத் தலைவியிடம் வந்து ஆடிப்பாடி விளையாடிவிட்டு வீடு செல்கிறாள்.

தலைவன் நாள்தோறும் தோழி இல்லாத நேரமாகப் பார்த்துத் தினைப்புனம் பக்கம் வருவதும், பரணுக்குச் சற்று தொலைவில் நின்று கொண்டு தலைவியை உற்றுக் கவனிக்க முயலுவதும், தலைவியானவள் கண்ணில் தட்டுப்படும்போது புன்சிரிப்புச் காட்டிக் காதல் பார்வையை இனிமையாக மெல்ல அவள் பக்கம் செலுத்துவதும் ஆன செயல்களில் ஈடுபடு கிறான்.

தலைவி அந்தக் கட்டிளங்காளையின் முன்வர நாணப் பட்டு அடிக்கடி ஓடி ஒளிந்து கொண்டாலும், ஆணழகன் ஒருவன் தன்னைத்தேடி நாள்தோறும் வருவதும், தனக்காக நீண்டநேரம் காத்துநிற்பதும், தன்மீது அன்புகொண்டு காணப்

படுவதும் அவளது உள்ளத்தில் இரக்க உணர்வை உண்டாக்கு கின்றன. அந்த இரக்க உணர்வு, நாளடைவில், அவனிடம் காட்டும் அன்பாக மாறிப் பிறகு காதலாக மாறுகிறது. நங்கை தன்னையறியாமலேயே மெல்ல மெல்லத் தன் உள்ளத்தை அந்த நம்பியிடம் பறிகொடுத்து விடுகிறாள்.

தலைவி, சிறிதுசிறிதாக நாணப்படுவதைக் குறைத்துக் கொண்டு, அவன் முன்னால் பரண்மீது ஏறிநின்று பாட்டுப் பாடிக் கிளிகளை விரட்டுவதும், தலைவனின் கண்களோடு தன் கண்களைக் கவ்வவிடுவதும், புன்சிரிப்புக்குப் புன்சிரிப்பை மாற்றமாக அனுப்புவதும் ஆன செயல்களில் ஈடுபடுகிறாள். தன்னைத் தலைவி விரும்புகிறாள், வெறுக்கவில்லை என்பதை அறிந்து கொண்ட தலைவன், மகிழ்ச்சியோடு வீடு திரும்பு கிறான்.

மறுநாள் தலைவன் தினைப்புனம் பக்கம் வரும்போது, தலைவி பரணுக்கு அருகே நின்றுகொண்டு, தினைக்கதிர் ஒன்றைப் பிடித்துப் பதம் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தலைவன் மெல்ல அவள் பின்பக்கமாகச் செல்கிறான். அவன் வருவதை அவள் அறிந்து கொள்ளவில்லை. தலைவன் அவள் அருகே வந்து அவளது முதுகுப்புறமாக அவளைக் கட்டி அணைக்கிறான். தலைவி திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்க்கிறாள். அவளது கைகால்களெல்லாம் நடுக்கங் கொள் கின்றன. தலையிலே பூச்சூடி, கழுத்திலே மாலையணிந்து, காலிலே கழலணிந்து, தன் அருமைக் காதலன் வந்து தன்னைக் கட்டியணைத்ததைப் பார்க்கிறாள். என்றும் பெறாத ஒரு வகை இன்பம் அந்த அணைப்பிலே இருப்பதைக் கண்டு அவனது மார்பில் அப்படியே சாய்ந்து விடுகிறாள். காதலன் அவளை வாரி அணைத்து முத்தமிட்டு மகிழ்கிறான்; அவளும் மகிழ் கிறாள். இப்படியாகச் சிலகாலம் இருவரும் வேறு யாருக்கும் தெரியாமல் களவொழுக்கத்திலே ஈடுபடுகின்றனர்.

தலைவன் என்றைக்கேனும் வரத் தவறிவிட்டால், அன்று அவள் மிகவும் வாடி வதங்கி வருந்துவாள். தலைவியின் ஆடை அணிகள் அவ்வப்போது கலைந்து கிடப்பதையும்

சிற்சில நாட்களில் தலைவி வாட்டத்தோடும் வருத்தத்தோடும் காணப்படுவதும் தோழிக்குக் கவலையைத் தருகின்றன. யாரேனும் ஒரு ஆண்மகனின் தொடர்பு அவளுக்கு ஏற்பட்டிருக்கக் கூடுமோ என்று ஐயுறுகிறாள். தன் ஐயத்தைப் போக்கிக்கொள்ள வேண்டி, ஒரு நாள் வீடுசெல்லக் கிளம்பியவள், தினைப்புனத்தில் ஒரு பக்கத்தில் ஒளிந்து கொண்டு ஏதேனும் நடைபெறுகிறதா என்று பார்க்கிறாள். அழகான தோற்றமுடைய ஆடவரிலே வல்லான் ஒருவன் வருவதையும், தலைவி அவனை அன்போடு வரவேற்று மகிழ்வதையும், பிறகு இருவரும் ஆடிப்பாடி விரும்பியிருப்பதையும் காண்கிறாள். களவொழுக்கத்தைப்பற்றித் தலைவி ஏதும் தன்னிடம் இது காறும் கூறாதிருப்பது கண்டு தோழி சிறிது வருத்தமுறுகிறாள் என்றாலும், அவள் அதனை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், வழக்கம்போல் தலைவியிடம் வந்து போய்க் கொண்டிருக்கிறாள்.

ஒருநாள் தலைவன் வராமையால் தலைவி மிக வாட்டத்தோடு காணப்படுகிறாள். தலைவியின் வாட்டத்திற்குக் காரணத்தைப் புரிந்துகொண்ட தோழி, ஏதும் அறியாதவள் போல் "ஏன் வாட்டமாகவும், வருத்தமாகவும் இருக்கிறாய்?" என்று வினவுகிறாள். அதற்கு "அப்படியொன்றும் இல்லையே?" என்கிறாள் தலைவி.

"பகற்பொழுதில் ஏற்றிவைத்த விளக்கு எப்படி ஒளி மழுங்கிக் காணப்படுதோ அப்படி உன் உடல் ஒளி மழுங்கிக் காணப்படுகிறதே! பாம்பு போன்ற நிழல் படுவதால் திங்களின் ஒளிகெட்டுக் காணப்படுவதைப் போல், உன் நெற்றியின் ஒளியும் கெட்டுக் காணப்படுகிறதே! ஏன்!" என்று தோழி கேட்கிறாள்.

"எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! நான் எப்பொழுதும் போல்தான் இருந்து வருகிறேன்!" என்கிறாள் தலைவி.

"நீயும் நானும் இரண்டுடல் ஒருயிர்போல் இதுகாறும் வாழ்ந்து வந்தும், நீ என்னிடம் உண்மையைச் சொல்லத்

தயங்குகிறாய்! நீ என்னதான் மறைத்தாலும், நீ வாட்டத்தோடும் வருத்தத்தோடும் காணப்படுவதற்கான காரணத்தை நான் நன்கு அறிந்துதான் வைத்திருக்கிறேன்!'' என்று கூறி விட்டுத் தோழி கோவெனத் தேம்பித் தேம்பி அழுகிறாள்.

தோழி அழுவதைக்கண்ட தலைவி வருந்தி, அவளுடைய கண்ணீரைத் தன் கைகளால் துடைத்துக் கொண்டு, ''நான் உண்மையை உன்னிடம் மறைக்கவேண்டும் என்பதற்காக மறைக்கவில்லை. உன்னிடம் பிற்பாடு கூறிக்கொள்ளலாம் என்று எண்ணினேன், நீ இப்படி வருந்தி அழுவாய் என்று தெரிந்திருந்தால், முன்னரே அதுபற்றி உன்னிடம் கூறாமல் நான் வேறு யாரிடம் கூறப்போகிறேன்? நீ வீணாக இப்பொழுது அழாதே!'' என்று கூறுகிறாள்.

அதற்குத் தலைவி, ''நான் தினைப்புனங்காவல் செய்து கொண்டிருந்தபோது ஆணழகன் ஒருவன் அங்கேவந்தான், அவன் தலையிலே பூச்சூடிக், கழுத்தில் மாலையணிந்து, காலிலே வீரக் கழலணிந்து கொண்டிருந்தான். அவன் என்னை உற்றுநோக்கிப் புன்சிரிப்புச் செய்தான். நானும் அவனை உற்றுநோக்கி புன்சிரிப்புப் பூத்தேன். இருவர் உள்ளமும் ஒன்றோடொன்று கலந்தன. ஒருநாள் நான் நின்று கொண்டிருக்கும் பொழுது, அவன் என் முதுகுப்புறமாய் வந்து என்னை அணைத்துத் தழுவிக் கொண்டான். நான் இன்ப வெள்ளத்தில் மிதந்தேன். அதுமுதற்கொண்டு அந்த இன்பத்தைக் களவொழுக்கத்தில் பெற முயன்றேன். அவன் வராத போது எனக்கு வாட்டமும், வருத்தமும் ஏற்படுகின்றன. இதுதான் நான் பெற்றிருக்கும் நோய்க்குக் காரணம்!'' என்று கூறுகிறாள்.

''இதனை முதலிலேயே கூறியிருந்தால், நான் உன்னைத் தடுத்தா இருப்பேன்? மாறாக வேண்டிய எல்லா உதவிகளையும் நானேயல்லவா செய்திருப்பேன்!'' என்று தோழி சொல்லுகிறாள்.

''நான் அவனைத்தான் திருமணம் செய்து கொள்ள இருக்கிறேன் என்ற எண்ணத்தை நீ என் தாய்தந்தையர்க்கு

எடுத்துச் சொல்லி, அதற்கு அவர்களுடைய இசைவை நீ பெற்றுத் தந்துவிட்டால், அதுதான் அடுத்து நீ எனக்குச் செய்யக்கூடிய 'பேருதவியாகும்! தோழி! நீ அதை எனக்குச் செய்வாயா?'' என்று தலைவி கேட்கிறாள்.

''என்னால் இயன்றமட்டும் பாடுபட்டு உன் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன். இனி எனக்குச் சொல்லாமல் மட்டும் நீ எந்த ஒரு செயலையும், செய்யக்கூடாது! ஆமாம் தெரிகிறதா?'' என்று தோழி கேலிச்சிரிப்போடு கூறுகிறாள்.

இது நற்றிணை-128ஆம் செய்யுளின் கருத்தைக் கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் 'தோழிக்குத் தலைவி அறத்தோடு நிற்றல்' என்னும் பிரிவின் பாற்பட்ட குறிஞ்சித் திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் நற்சேந்தனார் என்னும் புலவர் பெருமானாவார். இவர் கோடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனா ரெனவும் கூறப்படுவர். இவர் பாலைத் திணையையும், குறிஞ்சித் திணையையும் அழகுறப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் இரண்டுமாக மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன.

பகலெரி சுடரின் மேனி சாயவும்
பாம்பூர் மதியின் நுதலொளி கரப்பவும்
எனக்குநீ உரையா யாயினை நினக்கியான்
உயிர்பகுத் தன்ன மாண்பினேன் ஆகலின்
அதுகண் டிசினால் யானே என்றுநனி
அழிதல் ஆன்றிசின் ஆயிழை ஓலிகுரல்
ஏனல் காவலின் இடையுற் றொருவன்
கண்ணியன் கழலன் தாரன் தண்ணெனச்
சிறுபுறங் கவையினன் ஆக அதற்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃதா கின்றுயான் உற்ற நோயே!

(நற்றிணை—128)

(பொழிப்புரை :) "ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை யுடையவளே! பகற்பொழுதில் எரிகின்ற விளக்கு ஒளி மழுங்கிக் காட்டுதல்போல உன் உடல் வாடவும், பாம்பு பிடித்தல் போன்று நிழல்படியும் திங்களின் ஒளி கெடுதல் போல் நெற்றியின் ஒளி மறைபடவும், அக்காரணத்தை நீ எனக்கு உரைக்கவில்லை; ஓருயிரை இரண்டுடம்பின் கண்ணே பகுத்து வைத்தாற்போன்று உன்னோடு தொடர்ச்சியுற்ற மாட்சிமை யுடையேனாதலால், நீ இப்பொழுது மறைந்து ஒழுகும் அதனை யான் அறிந்துள்ளேன் என்று நீ கருதி, நான் உனக்கு அதனை உரையாததன் காரணமாக மிக அழுது வருந்து கின்றாய்! இனி இப்படியெல்லாம் அழாதே! தலை சாய்ந்த கதிரையுடைய தினைப்புனத்தே காவல் செய்யும் இடத்து, கண்ணிசூடிக், கழலணிந்து, மாலையணிந்து ஒருவன் வந்து என் உள்ளம் குளிர்ச்சியடையும்படி என் முதுகை அணைத்துத் தழுவிக் கொண்டான். அது முதற்கொண்டு அதனையே கருதிய உள்ளத்துடனே இருப்பதால், இப்பொழுது யானுற்ற நோய் இத்தன்மையதாய் இருக்கின்றது.

நுதல் - நெற்றி; கரப்ப - மறைக்க; ஆயிழை - ஆராய்ந் தெடுக்கப்பட்ட அணிகலன்; ஏனல் - தினைப்புனம்.

தலைவி, தலைவன்மீது தான் கொண்டிருக்கும் காதலன் பின் மிகுதியையும், அவனையே திருமணம் செய்துகொள்ளும் விழைவுடையவளாகத் தான் இருக்கும் உறுதியையும் தோழிக்கு உணர்த்தி, அவள்மூலம் தாய்தந்தையர்க்கு அறிவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கூறும் கூற்று படித்து மகிழ்வதற்குரியதாகும்.

தலைவன் பின்புறமாய் வந்து தன்னைக் கட்டித் தழுவினான் என்று தலைவி கூறுவதிலிருந்து, தலைவிக்குத் தலைவனிடம் அதற்கு முன்பே மிகுந்த காதலன்பு இருந்த தென்பதும், அவனும் அவள் நோக்கம் அறியாமல் அவளை அவ்வளவு விரைவாகக் கட்டி தழுவியிருக்கமாட்டான் என்பதும் தாமே பெறப்படுவனவாகும்.

உயிருக்குயிராய் விளங்கும் தன்னிடம் தலைவி உண்மையைச் சொல்லாமல் மறைத்து வாழ்ந்து வருவது தோழிக்கு அழுகையை உண்டாக்குகிறது என்பதும், அவளது அழுகையைப் போக்கத் தலைவி தோழியிடம் உண்மையை வெளியிட்டாள் என்பதும் நயம்படக் கூறப்படுகின்றன.

உடல் ஒளியின்றி விளங்குவதற்குப் பகற்பொழுதில் ஒளி மழுங்கி எரியும் விளக்கினையும், நெற்றி ஒளி குறைந்து காணப்படுவதற்கு நிழல்படியும் திங்களையும் உவமைகளாகக் கூறியிருப்பது பாராட்டுவதற் குரியனவாகும்.

இணைபிரியா அன்புக்குரிய இரண்டு நண்பர்களை, இரண்டு உடலும் ஓர் உயிருமாக வைத்து எண்ணிடும் பழக்கம் இச்செய்யுளில் சிறப்பாக உணர்த்தப்பட்டுள்ளது.

15. கிளியே ! தூது போவாய் !

அவளோ, அழகெல்லாம் உருவாகி உயிர் பெற்று எழுந்து உலாவுவதுபோல் காட்சியளிக்கிறாள். அவனோ ஆற்றலெல்லாம் ஒன்றுதிரண்டு வடிவழகனாகக் காட்சியளிக்கிறான்.

இருவரும் ஒருவரையொருவர் தினைப்புனத்தில் எதிர்ப் படுகிறார்கள். இருவர் கண்களும் பேசிக் கொள்கின்றன; இருவரும் காதல் கொள்கின்றனர்; மனம் விட்டுப் பேசுகின்றனர்; அன்பைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

இரவுக்காலங்களிலும், பகற் காலங்களிலும், யாரும் அறியாதவண்ணம், சிற்சில இடங்களில் கண்டு அளவளாவுவது என்று முன்னேற்பாடு செய்துகொண்டு, களவொழுக்கத்தை இனிய முறையில் இன்பமாய் நடத்தி வருகின்றனர்.

தலைவன் வேற்றூர்க் காரனாக இருந்தபோதிலும், நாள்தோறும் குதிரைமீது கிளம்பி வந்து தன் அருமைக் காதலியைக் கண்டுவிட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறான். தலைவியும், தலைவனிடத்து அளவுகடந்த அன்பு கொண்டு, அவனைத் தன் ஆருயிர்க் காதலனாகப் போற்றிப் பாராட்டி மகிழ்ந்து வருகிறாள்.

நாள்தோறும் பகல்வேளையில் தலைவி தினைப்புனங் காக்கச் செல்லுவாள். தலைவன் அங்கு வருவான். இருவரும் ஓடியாடி விளையாடியும், அருவியில் குளித்தும், அடவியில் திரிந்தும், பாட்டுப் பாடியும், ஆட்டம் ஆடியும் இன்பத் துறையில் இனிது இருப்பர். இப்படியாகச் சில நாட்கள் ஓடுகின்றன.

விரைவில் பலரறியத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற தன் விழைவைத் தலைவி, தலைவனிடம் தெரியப்படுத்துகிறாள். அதுபற்றிக் கவனிக்கலாம் என்று தலைவன் அரை குறையாக இசைவு அளித்துக் காலந் தாழ்த்திக்கொண்டு வருகிறான்.

இடைவிடாத வேலைத் தொல்லைகள் ஏற்பட்டதன் காரணமாகவோ, அல்லது சிறிதுகாலம் கழியட்டும் என்று எண்ணிய காரணந்தாலோ தலைவன் தலைவியைக் காண வருவதை நிறுத்திக் கொள்கிறான்.

தலைவன் வராமை கண்டு தலைவி பெரிதும் வருந்துகிறாள். அவனைக் காணப் பெரிதும் ஏக்கங்கொள்கிறாள். அவனையே தன் மணவாளனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதிலே பெருவிருப்பங் கொண்டு தவியாய்த் தவிக்கிறாள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போயிற்றே என்று எண்ணித் துயருறுகிறாள். தன் அருமைக் காதலனை எப்படியேனும் மீண்டும் அடையவேண்டும் என்று கருதி அதற்கான வழிகளையெல்லாம் பற்றிச் சிந்திக்கிறாள்.

முன்பெல்லாம் திணைப்புனங் காக்க மகிழ்ச்சியோடு ஓடோடியும் வந்து, மகிழ்ச்சியோடு திரும்பும் பழக்கத்தைக் கொண்டிருந்த தலைவியின் நடையுடை நடப்புக்களில் இப்பொழுது ஒருவித வாட்டமும், சோர்வும், தளர்ச்சியும் காணப்படுகின்றன. யாரிடத்தில் தன் மனவருத்தத்தைத் தெரிவித்து ஆறுதல்பெறுவது என்று புரியாமல் ஏங்குகிறாள். திணைப் புனத்திற்கு வருவதும், என்ன செய்வது என்று தெரியாமல் அசைவற்று அப்படியே வருத்தத்தில் ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதும், பின் வாட்டத்துடன் வீடு திரும்புவதும் ஆன செயல்களில் ஈடுபடுகிறாள். கிளிகள் வந்து திணைக்கதிர் களைக் கொய்து கொண்டு போவதைக்கூடக் கவனிக்காமல் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறாள்.

ஒருநாள் திணைப்புனஞ் சென்று, பரணையில் ஏறி உட்கார்ந்துகொண்டு, தலைவனைப் பற்றிய நினைவில்

ஆழ்ந்து, கிளிகள் கூட்டங் கூட்டமாக வருவதையும் போவதையும் பாராமுகமாகச் சோர்வுடன் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்பொழுது சிவந்த வாயையுடைய பச்சைக் கிளியொன்று தினைக்கதிர் ஒன்றினைக் கொய்து கொண்டு, அசைவற்று உட்கார்ந்திருக்கும் தலைவியின் முன்னால், பரணையில் வந்து உட்காருகிறது. அதனைக் கண்ட தலைவி, அந்தக் கிளியை எட்டித் தாவி எடுத்துக் கையில் பிடித்துக் கொள்கிறாள். அதன் அழகைப் பாராட்டிக் கொஞ்சி அதற்கு முத்தமிடுகிறாள். அது அவளிடத்திலிருந்து தப்பித்துப்போக முயற்சிசெய்து பல்வேறு குரல் எழுப்புகிறது. அந்தக் குரலொலிகளைக் கேட்டுக் கிளி தன்னோடு பேசுவதாக எண்ணிக் கொள்கிறாள் தலைவி. தன் மனவருத்தத்தை அதனிடம் சொல்லி ஆறுதல் பெறலாம் என்று எண்ணி அதனோடு பேசத் தலைப்படுகிறாள். கிளி அச்சத்தால் மிக்க நடுக்கங் கொள்கிறது.

"பச்சைப் பசுங்கிளியே! நீ எதற்காக அஞ்சுகிறாய்! இங்குள்ள தினைக்கதிர்களைக் கொய்ததால், யாரேனும் உன்னை அச்சுறுத்தி விரட்டி அடிப்பார்களோ என்பதற்காக அஞ்சுகிறாயா? நீ ஒன்றும் அஞ்ச வேண்டியதில்லை! நீ எவ்வளவு உணவை வேண்டுமானாலும் உட்கொள்ளலாம்! நான் அதற்கு உன்னை அனுமதிக்கிறேன்! நீ உன் குறையெல் லாம் தீருமளவுக்கு நீ தினைக்கதிர்களை எடுத்துக் கொள். நான் தடுக்கமாட்டேன்! நீ ஐயப்பட வேண்டிய தேவையே இல்லை!" என்று கிளியைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

கிளி அப்படியும் இப்படியும் பார்த்துக் குரல் கொடுக் கிறது.

"கிளியே! நீ எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். என்னுடைய குறைபாடு ஒன்றினை நீ செய்து முடிக்கவேண்டும். உன்னுடைய வேலையெல்லாம் முடிந்தபிறகு, நீ அந்த உதவியை எனக்குச் செய்தால் போதும். உன்னை நான்

இருகை குவித்துத் தொழுது இறைஞ்சி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்!'' என்று தலைவி அக் கிளியை உற்றுப் பார்த்துக் கெஞ்சிக் கேட்கிறாள்.

கிளி அப்படி இப்படித் தலையை அசைத்து அவளது முகத்தை உற்றுப் பார்க்கிறது.

''என் அருமைக் கிளியே, என்னுடைய குறைபாடு யாது என்று கேட்கிறாயா?'' என்று கேட்கிறாள்.

கிளி தன் அலகை அவளது கைமீது தேய்க்கிறது.

''என்னுடைய குறைபாடு என்னவென்றால், அதனை நான் சொல்லுகிறேன் கேள்! காய்கள் பலவாகக் காய்த்துத் தொங்கும் பலா மரங்கள் நிறைந்த மலைச் சாரலை அடுத்துள்ள ஊருக்கு, நீ உன் சுற்றத்தாரைக் காணப் போவா யல்லவா?'' என்று கேட்கிறாள். கிளி இயல்பாகத் தலை யசைத்துக் கத்துகிறது. தலைவி, அது தனக்குப் பதிலளிக்கிறது என்று கருதிக்கொண்டு, மேலும் அதனிடம் சொல்ல முயலுகிறாள்.

''கிளியே! அந்த மலைக்கு உரியவர்தான் என்னுடைய காதலர். நான் அவரை மிகவும் காதலிக்கிறேன். அவரை மணஞ் செய்து கொள்வதிலே பெரு விழைவுடையவளாக இருக்கிறேன். ஆனால், இப்பொழுது அவர் என்னைக் காண வராமல், என்னை மறந்து அவர் ஊரிலேயே தங்கியிருக்கிறார். நீ அந்த மலைநாட்டிற்குச் செல்லும்போது, அவரைப் பார்த்து இங்கு இந்த மலையைச் சூழ்ந்துள்ள காட்டின்கணுள்ள குறவருடைய இளைய மகளாகிய நான், முன்போலவே நாள் தோறும் தினைப்புனங்காக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன் என்ற செய்தியை அவரிடம் சொல்ல வேண்டும். இதைத்தான் நான் உன்னிடம் வேண்டிச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் செய்தி ஒன்றைமட்டும் நீ அவரிடம் உரைத்தால், அதுவே போதுமானது. நீ எனக்காக வேறு தொல்லை ஏதும் ஏற்க வேண்டாம். நீ எனக்காக இந்த ஒரு குறையைச் செய்து

முடிக்க வேண்டும். நான் உன்னிடம் கேட்கும் உதவி இது ஒன்றுதான். கிளியே! தூது போவாய்! எனக்காக இந்த உதவியைச் 'செய்வாயா?'' என்று தலைவி கிளியைக் கேட்கிறாள்.

கிளி தலையைப் பல கோணங்களிலே அசைத்துப் பலவிதக் குரலொலிகளை எழுப்புகிறது.

தன்னுடைய வேண்டுகோளைச் செய்யக் கிளி இசைந்து விட்டது என்று எண்ணி, தலைவி பூரிப்பும் பெருமையும் கொண்டு, பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் கிளியை வானில் பறக்கவிடுகிறாள். கிளி வெடுக்கென்று தாவிப் பறந்து திணைப்புனந் தாண்டிச் செல்லுகிறது. அது செல்லும் வழியை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்த தலைவி, தன் காதலன் நாட்டிற்குத்தான் கிளி செல்லுகிறது என்று கருதி மெய்ம்மலியுவகை கொள்கிறாள். தன் உள்ளத்தில் சுமந்து கொண்டிருந்த சுமையை இறக்கி விட்டுவிட்டதிலே ஒரு கலகலப்பு அடைந்து மன அமைதி பெறுகிறாள் தலைவி!

* * *

இது, நற்றிணை—102 ஆம் செய்யுளின் கருத்தைக் கொண்டு வரையப்பட்ட காதற் சொல்லோவியாகும். இந்தச் செய்யுள் 'காமமிக்க கழிபடர் கிளவி' என்னும் பிரிவின் பாற்பட்ட குறிஞ்சித் திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் செம்பியனார் என்னும் புலவராவார். செம்பியன் என்பது சோழர் குடிக்கு உரிய ஒரு பெயராதலால், இவர் சோழ மன்னர்களில் ஒருவராக இருக்கக்கூடும் என்று ஊகிக்கிறார்கள். இவர் கிள்ளைவிடு தூதாக இச்செய்யுளை இயற்றியுள்ளார்.

கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
அஞ்ச லோம்பி ஆர்பதங் கொண்டு
நின்குறை முடித்த பின்றை என்குறை
செய்தல் வேண்டுமால் கைதொழுது இரப்பல்
பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு
நின்கிளை மருங்கிற் சேறி யாயின்

அம்மலை கிழவோர்க்கு உரைமதி இம்மலைக்
கானக் குறவர் மடமகள்
ஏனல் காவல் ஆயினள் எனவே.

(நற்றிணை — 102)

(பொழிப்புரை :) வளைந்த தினைக் கதிர்களைக் கொய்து கொண்டு போகின்ற சிவந்த வாயையுடைய பச்சைப் பசுங் கிளியே! அஞ்சாதிருப்பாய்! நீ இக்கதிர்களைக் கொய்தல் காரணமாக யாரேனும் உன்னை அச்சுறுத்துவார்களோ என்னும் ஐயப்பாட்டைப் போக்கி, வேண்டிய உணவை உட்கொண்டு நின்குறையெல்லாம் முடித்தபின்பு, உனக்கு ஒழிவு ஏற்படும்பொழுது, என்னுடைய குறைபாட்டைச் செய்து முடிக்க வேண்டும். இதுபற்றி உன்னை நான் என் கைகளைக குவித்துத் தொழுது இரந்து கேட்டுக் கொள்கிறேன். அக்குறை பாடுதான் யாது என்றால், பலவாய காய்களைக் காய்க்கின்ற பலாமரங்கள் மிக்க சாரலையுடைய அவர் நாட்டின் கண்ணுள்ள நின் சுற்றத்திடத்து, நீ ஒருகால் செல்லுவாயே யானால், அம்மலைக்கு உரியாராகிய எனது காதலரை நோக்கி, இந்த மலையைச் சூழ்ந்த காட்டின்கண்ணுள்ள குறவருடைய இளையமகள் முன்போலவே தினைக்கொல்லையில் காவலுக்கு அமைந்து அங்கேயிருக்கிறாள் என்னும் இச்செய்தி ஒன்றினை மட்டும் உரைத்து, இவ்வொரு குறையைச் செய்து முடிப் பாயாக.

குரல் - கதிர்; ஓம்பு - பாதுகாத்துக்கொள்; ஆர்பதம் - உணவு; கோள் - காய்.

தலைவி தன் மனவருத்தத்தைக் குறைத்துகொள்ளத் தன் உள்ளக் கிடக்கையைக் கிளியிடத்திற் சொல்லுவது போலவும், கிளியைப் பிரிந்து வாழும் தலைவரிடம் தூது அனுப்புவது போலவும் புனைந்து கூறியிருக்கும் புலவரின் திறம், போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

கிளியினால் தனக்கு ஒரு செயல் ஆகவேண்டியிருக்கிறது என்பதைக் கருத்திற் கொண்டுள்ள தலைவி, அது தினைக்

கதிரை எவ்வளவு வேண்டுமானாலும் கொய்து உண்ணலாம் என்று அனுமதிக்கும் தன்மை, காதலால் துடி துடிக்கும் அவளது உள்ளத்தின் பாங்கைத் தெளிவுற விளக்குகிறது.

குறிஞ்சி நிலத்தில் பலாமரங்கள் நிறைந்திருக்கும் என்பதும், அங்கே குறவர் குடியிருப்பர் என்பதும் தெரியப் படுத்தப்படுகின்றன. பருவம் எய்திய பெண்ணைத் தினைப் புனங்காக்கும் தொழிலில் ஈடுபடுத்துவது என்னும் பழக்கம் இச்செய்யுளில் உணர்த்தப்பட்டுள்ளது. இருகைகளைக் குவித்துத் தொழும் பழக்கம் அக்காலத்திலிருந்தே இருந்து வருகிறதென்பது இச் செய்யுளால் தெரிய வருகிறது.

16. நங்கையிடம் சிக்குண்ட நெஞ்சம் !

தலைவன் அறிவும் ஆற்றலும் ஈகையும், இரக்கமும் அன்பும் ஒருங்கே அமையப்பெற்ற அழகே உருவானவன். செல்வ வளத்துக்கோ, செழிப்பான சூழ்நிலைக்கோ சிறிதும் குறை வில்லை. அவன் கவலையற்று வாழும் அடலேறுபோல் காலங் கழித்து வருகிறான்.

தலைவன் பொழுது போக்குவதற்கு உற்ற துணையாக நண்பன் ஒருவன் அமைகிறான். இருவரும் ஒத்த வயதும், ஒத்த பண்பும் உடையவர்களாக அமைந்து ஆருயிர்த் தோழர் களாக இருந்து வருகிறார்கள். சுருங்கச் சொன்னால், அவன் தலைவனுக்கு ஏற்ற பாங்கனாகத் திகழ்கிறான். பாங்கன் தலைவனின் நலத்திலே மிக்க அக்கறை கொண்டு, அவனுக்கு எல்லா வகையிலும் உதவிபுரிபவனாக இருந்து வருகிறான். வேடிக்கை பார்க்கப் போகும்போதும், விளையாடப் போகும் போதும், நீராடச் செல்லும்போதும், நிலா முற்றத்தில் உலாவும் போதும், உண்ணும்போதும், உறங்கும்போதும், கல்வி பயிலப் போகும் போதும், கலையின்பம் நுகரச் செல்லும் போதும் இருவரும் இணைபிரியாமலே சென்று வருவது வழக்கம்.

ஒருநாள் மாலைப்பொழுதில் பாங்கன் வேறுவேலையாக வெளியே சென்றிருக்கிறான். தலைவன் மாளிகையில் தன்னந் தனியே இருக்கிறான்; தனியாக இருப்பது அவனுக்கு மன மகிழ்ச்சியைத் தராததால், மலைச்சாரலை யடுத்த மரங்க ளடர்ந்த காவற்காட்டின் பக்கம் சென்று உலாவி வரலாம் என்ற எண்ணத்தோடு வெளியே புறப்படுகிறான்,

ஊரையடுத்த குன்றின் அருகே போகும்போது, குழலின் ஒலியும், பல வாத்தியங்களின் முழக்கமும் அவன் செவியில் படுகின்றன. வாத்திய முழக்கங்கள் வந்த பக்கம் செல்லுகிறான். குன்றின் சரிவில் ஒருபக்கம் கழைக் கூத்தாடியின் ஆட்டம் நடைபெறுவதையும், அங்குள்ள மக்கள் சூழநின்று வேடிக்கை பார்ப்பதையும் பார்க்கிறான். தானும் சென்று வேடிக்கை பார்க்கலாம் என்ற விருப்பத்துடன் அருகே செல்கிறான். கழைக்கூத்தி ஒருத்தி, மூங்கில்களிலே கட்டப் பட்ட முறுக்குண்ட வலிய கயிற்றின்மீது ஏறி நடந்து நாட்டியம் ஆடுகிறாள். அவள் நாட்டியத்திற்கேற்ப வாத்தியங்கள் இயங்குகின்றன. மக்கள் கையொலி எழுப்பி ஆரவாரித்துக் கழைக்கூத்தியின் ஆட்டத்தை மகிழ்ந்து வரவேற்கின்றனர். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் கொடுத்த சிறு சிறு உதவிப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு, அருகே இருக்கும் குடிசைக்குக் கழைக்கூத்தியும், அவளோடு வந்தவர்களும் அகலுகிறார்கள். வேடிக்கை பார்க்கவந்த மக்களும் சிறிது சிறிதாகக் கலைந்து செல்கிறார்கள். தலைவன் சற்றுத் தொலைவிலே உள்ள ஒரு பாறையின்மீது உட்கார்ந்து கொண்டு, அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறான்.

எல்லோரும் அவ்விடம்விட்டு அகன்றதும், குரங்குகளும், குரங்குக் குட்டிகளும் அங்கு வருகின்றன. கீழே சிந்திக்கிடக்கும் கடலை போன்ற உணவுப் பொருள்களைப் பொறுக்கித் தின்னுகின்றன. அத்திப்பழம் போன்ற சிவந்த முகத்தையும், பஞ்சுபோன்ற தலையையும் உடைய வலிய குரங்குக்குட்டி ஒன்று, மூங்கிலிலே ஏறிக் கழைக்கூத்தி நடந்த கயிற்றைப் பற்றிக் கொண்டு ஆடத்தொடங்குகிறது. அதனை அங்குள்ள குறவர் குடிகளைச் சேர்ந்த இளம்பிள்ளைகள் பார்த்துவிட்டு ஓடிவந்து, அருகிலுள்ள குன்றின்மேலுள்ள மூங்கிலிலே விரைந்து ஏறி நின்று, கைகொட்டித் தாளம் போட்டுச் சிரிக்கிறார்கள். குரங்குகள் பிள்ளைகளை விரட்டுவதும், பிள்ளைகள் குரங்குகளை விரட்டுவதுமாக இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கண்டு களித்துவிட்டுத் தலைவன் அப்பால் நடந்து செல்கிறான்.

செழித்து வளர்ந்த மரங்கள் அடர்ந்த தோப்பு, அதாவது காவற்காடு ஒன்று தென்படுகிறது. இயற்கைக் காட்சிகளை நுகர, தலைவன் அத்தோப்புக்குள் நுழைகிறான். அங்கு நறுமணம் வீசும் வண்ணப்பூக்களை மலர்ச்செடிகள் பூத்துக் குலுங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. துள்ளியோடும் மானும், புள்ளிமேவிய மயிலும் தலைவனுக்கு மிக்க மகிழ்ச்சியை யூட்டுகின்றன. இன்னிசை எழுப்பும் பறவைகள் பழங்கள் நிறைந்த மரங்களில் உட்கார்ந்து பலவிதமான இனிய ஒலிகளை எழுப்பிக்கொண்டிருக்கின்றன. கொடிகளையும், தழைகளையும், வண்ணப்பூக்களையும் ஏந்திக் கொண்டு, சிற்றருவி ஒன்று சலசலவென்று சிந்துபாடிக்கொண்டு, இழிந் தோடி வருகிறது. தலைவன் இவற்றையெல்லாம் பார்த்துக் களிப்பெய்திக் கொண்டு மெல்லச் சிறுநடை போட்டுக் கொண்டு செல்லுகிறான்.

அந்தக் காவற்காட்டை அடுத்துச் சிற்றூர் ஒன்றும் இருக் கிறது. அந்தச் சிற்றூரைச் சார்ந்த, அழகிய தோற்றமும், இனிய சாயலும் கொண்ட அன்னநடை மின்னற் கொடியாள் ஒருத்தி, பூக்கொய்ய அந்தக் காவற்காட்டிற்கு வந்திருக்கிறாள். அவள் பூச்செடி அருகில் நின்று தாவித்தாவி, உயர்ந்த கொம்பு களிலே உள்ள பூக்களைத் தன் மெல்லிய விரல்களால் கொய்து கொண்டிருக்கிறாள்.

தலைவன் மேலெழுந்தவாரியாகக் காட்சிகளைக் கண்டு கொண்டு செல்லும்போது அந்தப் பூங்கொடியாள் அவன் கண்ணில் தட்டுப்பட்டு விடுகிறாள். அவன் அங்கேயே நின்று அவளை உற்றுப்பார்க்கிறான். அவளது தோற்றமும் சாயலும் அவனைக் கவருகின்றன. அவளைக் காணக்காண அவனுக்கு மனமயக்கம் ஏற்படுகிறது. அவள் தாவித்தாவிப் பூப்பறிக்கும் காட்சி அவனது உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அவளது இனிய முகம் முழுவதையும் நேர்ப்பார்வையில்

நிறுத்திக் காண அவன் துடிதுடிக்கிறான். அவள் முகம் முழுவதையும் காண இயலுமா என்று கருதி முன்னும் பின்னும் தள்ளி நின்று பார்க்கிறான். அதற்குள் யாரோ நடமாடும் குறிப்பறிந்து, அம்மங்கை நல்லாள் தலைவன் நிற்கும் பக்கம் திரும்பிப் பார்க்கிறாள். அடலேறு அன்ன ஆணழகன் ஒருவன் திடீரென்று தோற்றம் அளிப்பதைக் கண்டு வியப்புறுகிறாள். அவனது கவர்ச்சிகரமான தோற்றத்தைக்கண்டு மகிழ்கிறாள். நாணம் அவளைத் தாக்கத் தலைகுனிகிறாள். அச்சம் அவளைத் தீண்ட என்ன நேரிடுமோ, ஏது நேரிடுமோ என்று திகைப்புக் கொள்கிறாள். தலைவன் அப்படியே அச்சடித்த பதுமைபோல் நின்று அவளையே உற்று நோக்குகிறான். இருவரது கண்களும் சிறிதுநேரம் ஒன்றையொன்று உண்ணுகின்றன. அப் பூங்கொடியாள் நாணத்தால் தலைகவிழ்ந்த பின்னும், தலைவன் அவளையே உற்று நோக்கி, அவள் அழகைப் பருகிக்கொண்டிருக்கிறான்.

அவள், வேறு யாரேனும் அங்கு இருக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அவனையும் ஒருமுறை கடைக்கண்ணால் நோக்கி விட்டு, மீண்டும் தலையைக் கவிழ்ந்து கொள்கிறாள். அவள் அருகில் சென்று அவளை யார் என்று அறிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன், தலைவன், அவள் நிற்கும் இடத்திற்கு நெருங்குகிறான். அவன் தன் அருகில் வருவதைக் கண்டு அவள் உடல் நடுக்கங் கொள்கிறாள்.

''யார் நீ? எங்கிருக்கிறாய்?'' என்று தலைவன் அவளை வினாவுகிறான். அதற்கு அம் மடக்கொடியாள் பதிலேதும் உரைக்காமல் நிற்கிறாள்.

"அஞ்சாமல் சொல்! நான் உனக்கு உதவி செய்யத்தான் வந்திருக்கிறேன். நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? சொல் பார்க்கலாம்!'' என்று தலைவன் அவளைக் கேட்கிறான்.

அவள் மீண்டும் வாய் மூடிய வண்ணம் அப்படியே நிற்கிறாள்,

"நீ யார் என்று என்னிடம் சொல்ல வெட்கப்படுகிறாயா? நான் இந்தக் குன்றத்துக்கு அப்பாலுள்ள ஊரைச் சேர்ந்தவன் தான். எனக்கு தெரிந்தவர் வீட்டைச் சேர்ந்தவளாக நீ இருக்கக்கூடும் என்று கருதித்தான் உண்மையை அறிந்து கொள்ள விரும்புகிறேன்! சொல்லமாட்டாயா? நீ யார்?" என்று மீண்டும் அவன் வினாவுகிறான்.

அந்நங்கைக்கு என்னசெய்வது என்று தெரியாமல், உடல் நடுக்கமும், உள்ளநடுக்கமும் ஏற்படுகின்றன. அவனிடத்தில் அவளையறியாமலேயே ஒருவித அன்பும் அவளுக்குப் பிறந்திருக்கிறது. விடையேதும் சொல்லாமல் இருந்தால், அவன் அவ்விடம் விட்டு அகன்று விடுவானோ என்று அச்சமும் கொள்கிறாள். ஒருவாறு தன்னைத்தானே தேற்றிக் கொண்டு, "நான் அந்த ஊரைச் சேர்ந்தவள்! அதோ தெரிகிற அந்த உயர்ந்த மாளிகைதான் என்னுடைய வீடு" என்று தன் வீட்டைச் சுட்டிக் காட்டிவிட்டு, மீண்டும் தலை கவிழ்ந்து கொள்கிறாள். நடுக்கத்தால் கையிலே பறித்துவைத்திருந்த மலர்களெல்லாம் நழுவிக் கீழே விழுந்து விடுகின்றன. தலைவன், உடனே குனிந்து, விழுந்த மலர்களை யெல்லாம் பொறுக்கி எடுத்து அவள் கையில் வைக்கிறான். அவன் கை அவளது கையோடு படுகிறது. ஒரு நொடிப்பொழுதில் இருவரும் உடல் சிலிர்த்து மெய்மறந்து போய்விடுகின்றனர். அடுத்த நொடியில் தம் நிலைக்கு வருகின்றனர்.

"அந்த மாளிகைதானா உன்னுடைய வீடு? உன்னுடைய தாய் தந்தையர்களை நான் சின்னஞ்சிறுவனாக இருக்கும் போழ்தி லிருந்து நன்றாக அறிவேனே!" என்கிறான்.

"அப்படியானால், நீங்கள் என்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறீர்களா?" என்று மெல்லிய குரலில் வினவுகிறாள்.

"நான் சின்னஞ்சிறுவனாக இருக்கும்போது வந்திருக்கிறேன். உன் தாய் தந்தையர் எனது ஊருக்கு அடிக்கடி வரும்போது பார்த்திருக்கிறேன்" என்கிறான்.

"நீங்கள் இங்கு எங்கே வந்தீர்கள்?" என்று கேட்கிறாள்.

"இயற்கைக் காட்சிகளைக் காணும் எண்ணத்தோடு நான் உலாவ இங்கு வந்தேன்! நான் என்றும் கண்டறியாத காட்சியாகிய உன்னைக் கண்டேன்! அப்படியே நின்றுவிட்டேன்!" என்கிறான்.

அச்சத்தாலும் நாணத்தாலும் அவள் உடல் நடுங்குவதைக் கண்ட அவன், அவளைத் தன் இருகையாலும் பற்றி, "ஏன் இவ்வளவு நடுக்கம்?" என்கிறான். அவள் மெய்மறந்து அப்படியே அவன்மீது சாய்ந்து விடுகிறாள். அவன் அவளை வாரி அணைத்துக் கொண்டு, அங்கேயே உட்காருகிறான். அந்தப் பொழுதே இருவரும் வீணையும் நாதமுமாய்க் காதலராகிறார்கள்.

தலைவி சிறிது நேரம் கழித்துத் தேறுதல் பெற்றுக் கண்விழித்துப் பார்த்துப் புன்முறுவல் பூக்கிறாள். தலைவன் அவளது முல்லைச் சிரிப்புக்கு மறுசிரிப்புக் காட்டி, அவள் கண்ணாடிக் கன்னத்திலும், கனி இதழிலும் முத்தங்களைக் கணக்கில்லாமல் அடுக்குகிறான். அவள் கையில் ஏந்தியிருந்த மலர்க்கொத்துக்களை வாங்கி, அவளது கூந்தலிலே சொருகி, அதன் நறுமணம் நுகர்ந்து இன்பத்தில் மூழ்குகின்றான். இருவரும் சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்திருக்கப் பொழுதும் மறைகிறது. தலைவி தன் வீட்டிலுள்ளார் தன்னைத் தேடுவார்கள் என்று சொல்லி விரைந்து புறப்படுகிறாள். தலைவன் அவளை விட்டுப் பிரிய மனமில்லாமல், "நாளையும் இங்கு வருவாயா?" என்று கேட்கிறான். "முயலுகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் விடுகிறாள். தலைவன், அவள் குதித்தோடும் அழகை அவள் சென்று மறையும் வரையில் நின்று பார்த்திருந்துவிட்டுப், பின் மனமகிழ்ச்சியோடு தன் மாளிகைக்குத் திரும்புகிறான்.

தொடர்ந்து சில நாட்கள் தலைவனும், தலைவியும் அந்தக் காவற்காட்டினிடத்துக் கண்டு பேசி மகிழ்ந்திருந்து களவொழுக்கம் நடத்துகின்றனர்.

ஏதோ காரணம் பற்றித் தலைவியை வெளிச்செல்லாத வாறு அவளது தாய் தந்தையர் வீட்டிலேயே இருக்கும்படி திடீரென்று இருத்திவைத்து விடுகின்றனர். தலைவன் வந்து பார்த்துவிட்டுத் தலைவியைக் காணாமல் ஏக்கத்தோடு வீடு திரும்புகிறான்.

தலைவன் தலைவியோடு களவொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பது பாங்கனுக்கு அதுவரையில் தெரியாமலிருக்கிறது. தலைவனது நடை உடை நடப்புக்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதும், அவன் எப்போதும்போல் மனமகிழ்வு கொள்ளாமல் ஏக்கத்தோடு இருப்பதும் பாங்கனுக்குக் கவலையுண்டாக்குகின்றன. தலைவனது ஏக்கத்திற்கான காரணத்தை அறிய முயலுகிறான்.

"ஏன் ஏக்கத்தோடு இருக்கிறாய்? ஏக்கத்திற்குக் காரணம் என்ன?" என்று பாங்கன் தலைவனைப் பார்த்து வினவுகிறான்.

"நான் காரணத்தைச் சொன்னால், உன்னால் என் ஏக்கத்தைத் தவிர்க்க முடியுமா?" என்று கேட்கிறான் தலைவன்.

"காரணத்தை முதலில் சொல்லு! உன் ஏக்கத்தைப் போக்க என்னால் முடியுமா முடியாதா என்று சொல்லுகிறேன்" என்கிறான் பாங்கன்.

"என் நெஞ்சு ஓர் அழகிய பெண்ணின் கையில் சிக்கிக் கொண்டது! அதனை அவளையல்லாமல் வேறு யாராலும் விடுவிக்க இயலாது!" என்கிறான் தலைவன்.

"அவள் யார்? எந்த ஊர்? எங்கிருக்கிறாள்? சொல்லு!" என்று வினவுகிறான் பாங்கன்.

"என்னுடன் வா! அவள் இருக்கும் ஊரைக் காட்டுகிறேன்!" என்று தலைவன் பாங்கனை அழைத்துச் செல்லுறான்.

குன்றின் சாரலையும், அதனை அடுத்துக் கழைக் கூத்தாடும் இடத்தையும், அதனை அடுத்து விளங்கும் காவற் காட்டையும் பாங்கனுக்குக் காண்பித்து, அங்கிருந்துகொண்டு தலைவி வாழும் சிற்றூரையும் சுட்டிக் காட்டுகிறான் தலைவன்.

"அதோ பார்! அதுதான் என்னால் காதலிக்கப்பட்ட அப் பூங்கொடியாள் வாழும் சிற்றூர்! அவளது நறுமணங் கமழும் கூந்தலை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் மணங்கமழுவதுபோல் இருக்கிறது! அதோ தெரிகிறதே, அந்த உயர்ந்த மாளிகைதான் அவள் வாழும் இடம்! என் நெஞ்சம் அவள் கையில்தான் அகப்பட்டுக்கிடக்கிறது! அவளைத்தவிர வேறு யாராலும் என் நெஞ்சத்தை அவளிடமிருந்து விடுவிக்க முடியாது! அவள்தான் இரக்கங் காட்டவேண்டும்!" என்று தலலவன் புலம்புகிறான்.

"அவளை எப்படியும் உனக்கு ஆக்குகிறேன்! நீ வருந்தாதே! ஏக்கத்தை விடு!" என்று பாங்கன் தலைவனைத் தேற்றுகிறான். இருவரும் தம் ஊருக்குப் போகிறார்கள்!

இது நற்றிணை 95ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு தீட்டப்பட்ட காதற் காட்சியாகும். இந்தச் செய்யுள் 'தலைமகன் பாங்கனுக்கு இவ்விடத்து இத்தன்மைத் தென வுரைத்தது' என்னும் பிரிவின் பாற்பட்ட குறிஞ்சித் திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் கொட்டம்பலவனார் என்னும் புலவராவார். இவர் கொட்டம்பலம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சியமான் கோதை என்று சேர அரசன் ஒருவன் குறிப்பிடப்படுவதால், கோட்டம்பலம் என்பது இவ்வூரைத்தான் குறிக்கிறது.. இப் புலவரது பாடலில் 'கொட்டும்' என்னும் சொற்சிறப்பால் 'கொட்டம்பலவன்' என்று இவர் அழைக்கப்பட்டார் என்று எண்ணுவாருமுண்டு. இவர் பாடியுள்ளதாக இப்பாட்டு ஒன்றுதான் கிடைத்துள்ளது.

கழைபாடு இரங்கப் பல்லியம் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று
அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து
குறக்குறு மாக்கள் தாளங் கொட்டும் அக்
குன்றகத் ததுவே கொழுமிளைச் சீறூர்
சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத்ததுவே பிறர்
விடுத்தற்(கு) ஆகாது பிணித்தஎன் நெஞ்சே.

(நற்றிணை—95)

(பொழிப்புரை :) பக்கத்திலே புல்லாங்குழல் ஒலிப்பப், பல வாத்தியங்களும் முழங்க ஆடுகின்ற கழைக்கூத்தி நடந்த முறுக்குண்ட புரியையுடைய வலி கயிற்றின்மீது இனிய அத்திப் பழம் போன்ற சிவந்த முகத்தையும், பஞ்சுபோன்ற தலையையுமுடைய குரங்கினது வலிய குட்டி பற்றி ஆடிக் கொண்டிருக்க, அதனைக் கண்ட குறவர் குடியின் இளஞ்சிறார்கள் பெரிய பாறையின் கண்ணுள்ள மூங்கின்மேல் தாவிப்பிடித்து ஏறிநின்று கையால் தாளங் கொட்டுவார்கள்; அந்தக் குன்றிடத்து உள்ளது வளம்பொருந்திய காவற்காடு சூழ்ந்த சிற்றூர்; என்னால் காதலிக்கப்பட்ட நறுமணங்கமழும் கூந்தலையுடைய கொடிச்சி அச்சிற்றூரிலே இருப்பவளாவாள்; அவளாலே பிணிப்புண்ட என் நெஞ்சமும் அக்கொடிச்சியின் கையில் சிக்குண்டு கிடக்கின்றது. அவள் இரக்கங்கொண்டு விடுத்தாலல்லது என் நெஞ்சம் பிறரால் விடுவித்தற்கு ஆகாது.

கழைபாடு இரங்க - புல்லாங்குழல் ஒலிப்ப; பல்லியம் - பல வாத்தியங்கள்; நோன்கயிறு—வலிய கயிறு; அதவம் - அத்தி; துய் - பஞ்சு; வன்பறழ் - வலிய குட்டி; தூங்க - ஆட; பொறை - பாறை; மிளை - காவற்காடு.

தலைவியைத் தான் மிகவாகக் காதலிக்கிறேன் என்று தோழனிடம் கூறவந்த தலைவன், தன் நெஞ்சத்தைத்

தலைவி வசப்படுத்திக் கொண்டுவிட்டாள் என்றும், அவளை அடைந்தால்தான் தன் ஏக்கம் தீரும் என்பதை உணர்த்த வந்த தலைவன், அவள் இரக்கங்கொண்டு விடுத்தாலல்லது தன் நெஞ்சத்தை வேறு யாராலும் அவளிடமிருந்து விடுவிக்க முடியாது என்றும் சொல்வதாகப் புலவர் கூறியிருப்பது மகிழத் தக்க நயப்பாடு நிறைந்ததாகும்.

கழைக்கூத்தி கயிற்றிலே நடந்து வேடிக்கை காட்டும் வழக்கம் அக்காலத்திலும் உண்டு என்பது இச்செய்யுளால் தெரியவருகிறது. கழைக்கூத்து நடக்கும்போது குழலும், பல வாத்தியங்களும் ஒலிக்கும் என்பதும் குறிப்பிடப்படுகிறது.

கழைக்கூத்தி ஆடிவிட்டுச் சென்ற பிறகு குரங்குக்குட்டி ஏறிக்கொண்டு அந்தக் கயிற்றைப்பற்றி ஆடுவதும், இளங்குறச் சிறுவர்கள் மூங்கில்கள்மீது ஏறிக்கொண்டு அக்குரங்குக் குட்டியைப் பார்த்துக் கைகொட்டி நகைப்பதும், நகைச்சுவை மிகுத்துக் களிப்பூட்டுவனவாகும்.

17. கைவளை கழற்றிய காதலன்!

கொக்கின் மூக்குப் போன்ற ஆம்பல் பூக்கள் நிறைந்து காணப்படும் நீர் நிலைகளையுடைய வளப்பம் பொருந்திய ஊர்தான் அத் தலைவனுடையது. அவன், அழகுக்கே பேர்போன தன் அன்புமனையாளை விட்டுப் பிரிந்து பரத்தை இன்பம் நுகருதற் பொருட்டு பரத்தையர் சேரிப்பக்கம் செல்கிறான். அங்கும் பல கலைகளிலே வல்ல, வனப்பும் வளமும் பெற்ற, கண்டாரைக் கவரும் கவர்ச்சிமிக்க பரத்தை ஒருத்தியை அடைகிறான். வீட்டையும், பண்புமிக்க மனைவியையும், ஊரையும் மறந்து, அவளிடத்திலே இடையறாத காமவின்பம் துய்த்துக் கொண்டிருக்கிறான்.

தலைவன் எங்கே சென்றான் என்பது தலைவிக்குத் தெரியவில்லை. பொருள் தேடும் பொருட்டு, அல்லது போர்ப் படைக்குத் தலைமை தாங்கும் பொருட்டு, அவன் வெளி நாட்டிற்குச் சென்றிருப்பானோ, அல்லது கள்வர்களால் விலங்குகளால் அவனுடைய உயிருக்கு ஏதேனும் ஏதம் ஏற்பட்டதோ என்று பலவாறாக எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கிறாள் தலைவி. தலைவன் சென்றுள்ள இடத்தை, அல்லது அவன் போன வழியைக் கண்டறியும் பொருட்டுத் தோழி எவ்வளவோ அலைந்து திரிந்து சுற்றித் தேடிப்பார்க் கிறாள். தலைவன் அறிவும் ஆற்றலும் மிக்கவனாதலால், அவன் ஏதோ அவசரப்பணியின் காரணமாக வேற்றூர் சென்றிருக்கக் கூடும், அவனுக்கு ஏதம் ஒன்றும் ஏற்படாது, அவன் எப்படியும் விரைவில் வந்து விடுவான் என்று பலவாறான ஆறுதல் மொழி

களைக் கூறித் தோழி தலைவியை ஒருவாறாகத் தேற்றிக் கொண்டு வருகிறாள்.

தலைவன் பரத்தை வீட்டைவிட்டு நீங்காமல், அங்கேயே யிருந்துகொண்டு, அவளுக்கு வேண்டிய ஆடை அணிவகைகளை அவள் விரும்பியவாறு வாங்கிக் கொடுத்துக்கொண்டே யிருக்கிறான். பரத்தையானவள் அவனிடத்தில் எவ்வளவு பெரும்பொருள் கறக்க முடியுமோ அவ்வளவையும் கறந்து கொண்டுவிடுவது என்று திட்டம்போட்டு வேலை செய்து கொண்டு வருகிறாள். அவளுக்குத் தலைவன் வாங்கிக் கொடுத்துள்ள அணிகளிலே கைவளையல் மிகச் சிறந்த தொன்று. அது ஒளியுமிழும் வெள்ளிய வயிரக்கற்கள் பதிக்கப் பெற்றுப் பொன்னாலான சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த தாகும்.

ஒரு நாள் தலைவனுக்கும் பரத்தைக்கும் ஏதோ ஊடல் ஏற்படுகிறது. தான் எவ்வளவோ பொருள்களைக் கொட்டிக் கொடுத்தும், ஆடை அணிகளை வழங்கியும், மாறா அன்பு காட்டிவந்தும்கூடப் பரத்தை தன்னை மதிக்காமல் நடந்து கொள்கிறாளே என்று சினங்கொண்ட தலைவன், அவளுக்குத் தன்னால் போடப்பட்ட அணிகலன்களைப் பிடுங்கிவிட வேண்டும் என்று எண்ணுகிறான். தலைவன் சினத்தோடு அவளைப் பற்றிப் பிடிக்கச் சீறி எழுகிறான். தலைவன் தன்னை அடிக்க வருகிறானோ என்று பரத்தை ஓடுகிறாள். அவள் வீட்டின் கூடத்திலும் தாழ்வாரத்திலும் சுற்றிச்சுற்றி ஓடத் தலைவன் அவளைப் பின்தொடர்ந்து ஓடிப்பிடிக்க முயலு கிறான். இறுதியில்அவளது நறுமண நெய் பூசப்பட்ட கூந்தலை எட்டிப்பிடித்து இழுத்து, அவள் கையிலே அணிந்திருந்த வேலைப்பாடுகள் அமைந்த வளையல்களைக் கழற்ற முயலு கிறான்.

"நான் வளையலைத் தரமாட்டேன்! விடுங்கள்!" என்று பரத்தை கத்துகிறாள்.

தலைவன், "நான் செய்துபோட்ட வளையல்கள் தானே! அவற்றை நான் கழற்றிக் கொள்ளவே செய்வேன்!" என்று கூறி

அவளை அழுத்திப் பிடித்துக்கொண்டு வளையல்களைக் கழற்ற முயலுகிறான்.

பரத்தை எவ்வளவோ திமிறிக்கொண்டு அவனது பிடியி லிருந்து நழுவிச் செல்ல முற்படுகிறாள். அவளால் முடிய வில்லை.

அவள் சினம் முகத்திலே கொப்பளிக்க, "என்னை விடுங்கள்! விடுங்கள்!" என்று அலறுகிறாள்.

தலைவன், "உன்னை விட முடியாது! வளையல்களைக் கழற்றிக்கொண்டுதான் விடுவேன்!" என்று கூறுகிறான்.

பரத்தை, "நீங்கள் என்னை விடுகிறீர்களா இல்லையா? நான் இங்கு நடந்ததையெல்லாம் இப்பொழுதே உங்கள் மனைவியிடத்தில் சென்று விவரமாகச் சொல்லட்டுமா?" என்று அதட்டிக் கேட்கிறாள்.

அந்தச் சொற்களைக் கேட்டவுடனே, தலைவன் நடு நடுங்கிப் போய், அவளை அப்படியே விட்டு விடுகிறான். அவனது கைகளும் கால்களும் நடுக்கம் எடுத்துக் கொள் கின்றன. மனைவியைப் பற்றிய எண்ணமும், அவள் தன்னைச் சினந்து கொள்வாளே என்ற அச்சமும், அப்பொழுதுதான் அவனுக்கு ஏற்படுகின்றன.

உடனே அவன் பரத்தையை நோக்கி, "அன்பே! நீ என் கட்டிக் கரும்பு அல்லவா! கண்மணி! நான் உன்னிடம் இனி ஒருபொருளையும் திருப்பிக் கேட்கமாட்டேன்! நீ சொல்லுகிற படியெல்லாம் நடக்கிறேன்! நீ விரும்புவனவற்றையெல்லாம் செய்கிறேன்! என்னைப் பற்றிமட்டும் என் மனைவியிடத்தில் ஏதும் சொல்லிவிடாதே! நான் இனி எப்பொழுதும் உன்னோடேயேயிருந்து, உன் விருப்பப்படியே நடந்து கொள் கிறேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாயா?" என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறான்.

பரத்தை தலைவனுடைய நிலைக்கு மிகவும் இரங்கி, ஏளனச்சிரிப்புச் சிரித்துக்கொண்டு, அவனிடம் மீண்டும் அன்பு காட்டும் அறிகுறியாக அவனை அணைத்துக் கொள்கிறாள். தலைவனும் பரத்தை மனம் மாறிவிட்டாள் என்பதை அறிந்து மகிழ்ந்து, அவளோடு தொடர்ந்து இருந்து வாழ்ந்து வருகிறான்.

தலைவனைக் காணாது, தலைவி ஆற்றொணாத் துயரத்தில் அமிழ்ந்து, துன்பத்தோடும் வருத்தத்தோடும் உடல் நலமெலாம் இழந்து காணப்படுகிறாள். நாட்கள் செல்லச் செல்லத் தோழி எவ்வளவோ ஆறுதல் கூறினாலும், அதனால் தேறுவதற்கு வழிகாணாது, எப்பொழுதும் படுத்த படுக்கையாகக் கிடந்து உழன்று கொண்டிருக்கிறாள்.

தலைவனுக்கும் பரத்தைக்கும் பிறிதொருநாள் மீண்டும் ஊடல் ஏற்படுகிறது. பரத்தை தலைவனை ஏறிட்டும் பார்க்காமல் அறைக்கதவைத் தாழிட்டுக்கொண்டு, படுக்கையில் போய்ப் படுத்துக் கொள்கிறாள். தலைவன் தன்மானம், மதிப்பு, பொருள் எல்லாம் போய்விட்டனவே என்று எண்ணி, ஏங்கிக் கலங்கி உட்கார்ந்திருக்கிறான். சிறிது நாழிகை கழித்து அவ்விடம் விட்டு அகன்று போய்விடுவது நல்லது என்ற முடிவுக்கு வந்து, தன் வீட்டை நோக்கிச் செல்கிறான்.

தலைவி என்ன சொல்லுவாளோ, எப்படியெல்லாம் ஏசுவாளோ என்ற அச்சத்துடன் மெல்ல வீட்டினுள் நுழைகிறான். தலைவனைக் கண்டதும், தோழி, "நமது தலைவர் வந்துவிட்டார்! ஓடிவா! ஓடிவா!" என்று தலைவியைக் கூவி அழைக்கிறாள். தலைவி வாரிச்சுருட்டி எழுந்துவந்து அகமகிழ்ச்சியோடு அன்புக்கண்ணீர் சொரியத் தலைவனை அப்படியே கட்டி அணைத்துக் கொள்கிறாள். தலைவனும் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் சிந்திய வண்ணம் அவளது கூந்தலைத் தடவிக் கொடுத்து அவளை அணைத்துக் கொண்டு நிற்கிறான்.

"இவ்வளவு நாட்களும் எங்கே போயிருந்தீர்கள்!" என்று தோழி தலைவனை வினவுகிறாள்.

பொருள் தேடி வருவதற்காக வெளியூர் சென்றிருந்தேன். பொருள் தேடும் முயற்சியில் கைப்பொருள் முழுவதும் செலவழித்துவிட்டேன். வருவாய் ஏதும் வந்த பாடில்லை. எவ்வளவோ பாடுபட்டு, இழந்த பொருளை மீட்கப் பெரு முயற்சிகள் எடுத்தேன். ஒன்றாவது பலன் கொடுக்கவில்லை. வேறு வழியின்றி, இப்பொழுது வெறுங்கையோடு திரும்பியிருக்கிறேன். நான் பட்ட துன்பம், அம்மம்ம! சொல்லித் தீராது!' என்று தலைவன் பொய்க் கூற்றை இரங்கத்தக்க நிலையில் கூறுகிறான். அது கேட்டுத் தலைவியும், தோழியும் மிகவும் வருத்தப்படுகிறார்கள்.

"பொருள் போனால் போகிறது. நீங்கள் மட்டுமாவது வந்து சேர்ந்தீர்களே, அதுவே போதுமானது" என்று தலைவி கூறுகிறாள்.

"போனபொழுது எங்களிடத்தில் ஒரு சொல் சொல்லி விட்டுப் போகக் கூடாதா?" என்று தோழி கேட்கிறாள்.

"சொல்லிக்கொண்டு போனால் தலைவி வருந்துவாளே என்று கருதி, விரைவில் வந்துவிடலாம் என்ற எண்ணத்துடன் சென்றேன். பல்வேறு இடையூறுகள் என்னைத் தடுத்து நிறுத்தி விட்டன!" என்று தலைவன் கூறுகிறான்.

தலைவனும் தலைவியும் வழக்கம்போல் இல்லற வாழ்வை இனிது நடத்தத் தொடங்குகிறார்கள்.

தலைவன், தன்னைவிட்டுப் பிரிந்து இல்லக்கிழத்தியிடம் சென்றுவிட்டான் என்பதைக் கேள்வியுற்ற பரத்தை ஆழ்ந்த வருத்தமும், அதற்காகத் துயரமும் கொள்கிறாள். தலைவன் தன்னிடம் கொண்டிருந்த தொடர்பைப் பற்றியெல்லாம் தலைவி அறியும்படி செய்துவிட்டால், பிறகு தலைவி தலைவனை வெறுத்து ஒதுக்கிவிடுவாள்; தலைவி வெறுத்து

ஒதுக்கிவிட்டால், மீண்டும் தலைவன் தன்னிடமே வந்து சேருவான் என்று பரத்தை திட்டம் போடுகிறாள்.

ஒரு நாள் பரத்தை, தன் தோழியாகிய விறலி ஒருத்தியை அழைத்துக்கொண்டு, தலைவனின் தெருப்பக்கம் செல்கிறாள். அங்கோர் வீட்டின் தாழ்வாரத்தில் தலைவியின் தோழியும், பிற மகளிரும் உரையாடிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். தலைவியின் தோழி அங்கு இருக்கிறாள் என்பதை அறிந்த பரத்தையும் விறலியும், மெல்லச் சென்று அந்த மகளிர் கூட்டத்தோடு சேர்ந்து உட்கார்ந்துகொண்டு, உரையாடலில் பொதுப் படையாகக் கலந்து கொள்கிறார்கள்.

சிறிது நேரங்கழித்துப் பரத்தை தன் விறலியைப்பார்த்துத் தலைவனுடைய வீட்டைச் சுட்டிக் காட்டி, "அதோ, அந்த வீட்டில் இருக்கிறாரே தலைவர், அவரை உனக்குத் தெரியுமா?" என்று வினவுகிறாள்.

தலைவனைப் பற்றி ஏதோ பேச்சு பரத்தை—விறலிக்கு இடையே ஏற்படுவது அறிந்து, அவர்களுடைய உரையாடலை உற்றுக் கவனிக்கத் தொடங்குகிறாள் தோழி.

"அவரை நான் பார்த்திருக்கிறேன்! அவருக்கு என்ன?" என்கிறாள் விறலி.

"இப்பொழுது அவருக்கு ஒன்றுமில்லை! சென்ற பல நாட்களாக அவர் என்னுடைய வீட்டில் என்னோடுதான் இருந்துவந்தார்!" என்று கூறுகிறாள். அது கேட்ட தோழிக்குத் தூக்கிவாரிப் போடுகிறது. பரத்தை மேலும் என்ன சொல்லுகிறாள் என்று உற்றுக் கவனிக்கிறாள்.

"இப்பொழுது ஏன் அவர் உன்னைவிட்டுப் பிரிந்து வந்து விட்டார்?" என்று கேட்கிறாள் விறலி.

"எனக்கும் அவருக்கும் சிறு ஊடல் ஒன்று ஏற்பட்டது. அதன் காரணமாக, என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்து விட்டார்!" என்கிறாள் பரத்தை.

"உன்னோடு அவர் எப்பொழுதும் சண்டை போட்டுக் கொண்டுதான் இருந்தாரா?" என்று கேட்கிறாள் விறலி.

"சில சமயங்களிலே எங்களுக்கிடையே ஊடல் ஏற்படும். பிறகு தணிந்துவிடும். பிறகு அவர் எப்பொழுதும் போல் அன்போடு இருப்பார். வேடிக்கை ஒன்றைக் கேளேன்! ஒரு சமயம் எனக்கும் அவருக்கும் ஊடல் ஏற்பட்டது. என்மீது சினங்கொண்டு அவர் செய்துபோட்ட அணிகலன்களை யெல்லாம் கழற்ற முயன்றார். நான் அவருக்கு அகப்படாமல் வீட்டிற்குள் தாழ்வாரத்தையும் கூடத்தையும் சுற்றிச் சுற்றி ஓடினேன். அவர் என்னைப் பிடிக்க ஓடிவந்து, எனது கூந்தலைப் பிடித்து இழுத்து, நான் போட்டுக் கொண்டிருந்த வேலைப்பாடுகள் அமைந்த வளையல்களைக் கழற்ற முயன்றார். 'விடுங்கள்! விடுங்கள்!' என்று நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன், கதறி அழுதுபார்த்தேன், அவர் கேட்பதாயில்லை. இறுதியில், இங்கு நடந்ததையெல்லாம் நான் உம் மனைவியிடம் சென்று சொல்லிவிடுவேன் என்று சொன்னவுடன், அவர் என்னைவிட்டு விலகி நடுநடுங்கிப் போய் அப்படியே நின்றுவிட்டார். அவரது நடுக்கம் எனக்கு மிகுந்த நகைப்பைத்தான் உண்டாக்கிற்று. அவரது நடுக்கத்தைப் பார்க்கும்போது எனக்கு வேறொன்றின் நினைப்பு வந்தது!" என்று பரத்தை கூறுகிறாள்.

அது கேட்ட விறலி 'எதன் நினைவு வந்தது?' என்று கேட்கிறாள்.

"நமது நாட்டு மன்னர் மலையமான் இருக்கிறாரே, அவரது நாளோலக்க (தர்பார்) மண்டபத்தின் காட்சி ஒன்று என் நினைவுக்கு வந்தது. மலையமான் பகைவரது பசு மாட்டுக் கூட்டங்களையெல்லாம் வென்று கொண்டுவந்து, நாளோலக்க மண்டபத்தில் வீற்றிருக்கும்போது, அவரிடம் மாடுகளையும், தேர்களையும், பொருளையும் பரிசில்களாக வாங்க, புலவரும், பாணரும், கூத்தரும் வந்தனர். கூத்தர் மலையமானை மகிழ்விக்கவேண்டி, மத்தளத்தை அதிரச்செய்து

இசையோடு கூடிய கூத்தை நடத்தினர். அந்த மத்தளத்தின் மார்ச்சனை வைத்த பக்கம் எப்படி அதிர்ந்ததோ, அப்படி நடுங்கிற்று தலைவனுடைய கைகால்கள். அதனைக் காணும் போது எனக்கு நகைப்பு உண்டாயிற்று. அதை இப்பொழுது நினைத்துக்கொண்டாற்கூட எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது!'' என்று சொல்லிவிட்டுப் பரத்தை விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.

இந்தச் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் தோழிக்கு, ஒரே திகைப்பு உண்டாகிறது. இவற்றையெல்லாம் தலைவியிடம் போய்த் தெரிவிக்கலாம் என்ற எண்ணத்துடன், தோழி தலைவியின் வீட்டை நோக்கிச் செல்கிறாள்.

தலைவனும் தலைவியும் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடிக் கொண்டிருக்கிறார்கள். தோழி பரத்தையைப் பற்றியும், அவள் சொன்ன செய்திகளைப் பற்றியும் ஒன்றுவிடாமல் அப்படியே கூறுகிறாள்.

அது கேட்ட தலைவி கண்களில் நீர்வழியச் சோர்ந்து ஊஞ்சலின் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு அதன்மேல் சாய்ந்துவிடுகிறாள்! தலைவன் வெட்கத்தால் தலைகுனிந்த வாறு, அப்படியே அசைவற்று உட்கார்ந்து விடுகிறான்.

இது நற்றிணை 100ஆம் செய்யுளின் உட்கருத்தைத் தழுவி எழுதப்பட்ட காதற் காட்சியாகும். இந்த நற்றிணைச் செய்யுள் 'பரத்தை தலைவிக்குப் பாங்காயினார் கேட்ப விறலிக்கு உடம்படச் சொல்லியது' என்னும் பிரிவின்பாற் பட்ட மருதத் திணையைச் சார்ந்ததாகும். இதனை இயற்றியவர் பரணர் என்னும் சங்ககாலப் பெரும்புலவராவார். கபிலர் இவருக்குச் சிறந்த நண்பர். இவரை ஔவையார் மிகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பல்வேறு அரசர்களையும், வள்ளல்களையும், அவர்கள் வாழ்ந்த ஊர்களின் வளங்களின் சிறப்பையும் புகழ்ந்து பாடியுள்ளார். இவருடைய பாடல்களி லெல்லாம் அக்காலத்திய வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படு கின்றன. இவர் பாடிய பாடல்களாக நற்றிணை, குறுந்

தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் எண்பத்தொரு பாடல்கள் காணப்படுகின்றன.

உள்ளுதொறும் நகுவேன் தோழி வள்ளுகிர்
மாரிக் கொக்கின் கூரலகு அன்ன
குண்டுநீ ராம்பல் தண்துறை ஊரன்
தேங்கமழ் ஐம்பால் பற்றி என்வயின்
வால்கோல் எல்வளை வௌவிய பூசல்
சினவிய முகத்துச் சினவாது சென்றுநின்
மனையோட்கு உரைப்பல் என்றலின் முனையூர்ப்
பல்ஆ நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்
புலம்பிரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணார் கண்ணின் அதிரும்
நன்னர் ஆளன் நடுங் கஞர் நிலையே.

(நற்றிணை—100)

(பொழிப்புரை :) தோழீ! பெரிய நகங்களையுடைய கார்காலத்து நடமாடும் கொக்கினது கூரிய மூக்குப்போன்ற, ஆழ்ந்த நீரில் முளைத்த ஆம்பற்பூவையுடைய தண்ணிய துறையையுடைய ஊரன், நெய்ம்மணம் வீசுகின்ற என் கூந்தலைப்பற்றி இழுத்து வைத்து, என் கையிலுள்ள வெள்ளிய வேலைப்பாடுகள் அமைந்த ஒளியையுடைய வளையைக் கழற்ற, அதனால் ஏற்பட்ட பூசலாலே சினங்கொண்ட முகத்தோடு அவனை நோக்கி, 'இனி யான் இங்ஙனம் சினவாது சென்று உன்னுடைய மனைவியிடத்து இங்கு நிகழ்ந்ததையெல்லாம் கூறுவேன்' என்றவுடன், ஊர்முனையிலுள்ள பல நெடிய பசுவின் கூட்டங் களை விற்போரால் வென்று செலுத்திக்கொண்டு, வருகின்ற இரவலர்க்குத் தேர்கொடுக்குங் கைவண்மையை உடையவ னான மலையமான் திருவோலக்கத்தின் முன்பு, வேற்று நாட்டி லிருந்து வந்த பெரிய புகழையுடைய கூத்தர் நன்மையை வைத்த முழவின் பக்கம் அதிர்வதுபோலும் அதிர்ச்சியோடு, நன்மையை மேற்கொள்ளும் அவன்தான் நடுங்கிய, வருத்தத்தோடு கூடிய

நிலையை நினைக்குந்தோறும் சிரிப்புத் தோன்றுதலாலே, நான் சிரிக்கவேண்டியிருக்கிறது.

வள்ளுகிர் - கூரிய நகம்; குண்டு - ஆழம்; தேன் - நெய்; ஐம்பால் - கூந்தல்; ஆ - பசு; ஒய்யும் - செலுத்துகின்ற; நடுங்கஞர் - நடுக்கம்.

பரத்தை வீட்டிற்குச் செல்லும் தலைவன் எவ்வளவு படாதபாடு படுகிறான் என்பதும், தன்னுடைய தீய ஒழுக்கம் தலைவிக்குத் தெரியாதபடி அதனைக் காப்பாற்றுவதிலே எவ்வளவு முனைப்பாக இருக்கிறான் என்பதும், இச்செய்யுளில் நயம்படச் சிறப்பாக விளக்கப்படுகின்றன.

ஆம்பற் பூவிற்குக் கொக்கின் அலகையும், தலைவனின் நடுக்கத்திற்கு மத்தளத்தின் அதிர்ச்சியையும் உவமையாகக் கூறியிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

கூந்தலுக்கு நறுமண நெய் தடவுதல், வளையலை வேலைப்பாடுகள் உள்ளதாகச் செய்தல், வேற்றுநாட்டவரின் பசுக்கூட்டத்தை மன்னன் ஓட்டிவருதல், அரசன் பரிசிலர்க்குத் தேரைப் பரிசாகக் கொடுத்தல், அரசன் திருவோலக்க மண்டபத்திலிருந்து கூத்து நடைபெறுதலைக் காணுதல் போன்ற பழக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

தலைவன் தன்னிடத்தில் நடந்து கொண்ட விதத்தைத் தலைவியிடத்தில் கூறினால், அவன் யாரிடத்தும் வரைமுறையில்லாது ஒழுகுபவன் என்று தலைவி வெறுப்புக் கொள்ள வழியேற்படும்; அப்படி ஏற்பட்டால் தலைவன் மீண்டும் தன்னிடத்தில் வந்து சேருவான் என்ற கருத்தில் பரத்தை அந்தச் செய்தியை வெளியிடுகிறாள். இது பாராட்டி வியத்தற்குரிய குறிப்பாகும்.

18. ஆடு மயிலே ஆடு!

வானை அளாவும் மலையடுக்கங்கள் தொலைவில் தென்படுகின்றன. அவை நீண்டும், வளைந்தும், நெருங்கியும், செறிந்தும், பின்னியும் நீல மலைகளாகக் காட்சியளிக்கின்றன.

மலைமுகடுகளை முத்தமிட்டும், அவற்றின் சரிவுகளை அணைத்துத் தவழ்ந்து சென்றும், வெண்முகிற் கூட்டங்கள் உலாவிக் கொண்டிருக்கின்றன.

வெள்ளிய அருவிகள் நீல மலைகளினின்றும் சோவென இழிந்து ஓடிவந்து, நறுமணமிக்க வண்ணமலர்களை ஏந்திக் காடுகளையும் சோலைகளையும் தொட்டுப் பசும்புற்றரையில் பாய்ந்தோடுகின்றன.

அருவிகளை யடுத்த மலைச்சரிவுகளில் மலைவாழைத் தோட்டங்களும், சுரபுன்னைக் காடுகளும் செழித்து வளர்ந்தோங்கி நிற்கின்றன.

மலை வாழைகளை அழித்துத் தின்னும் யானைகள் மலைச்சரிவுகளில் கூட்டங்கூட்டமாக அலைந்து திரிகின்றன. பெண் யானை படுத்துறங்க, மேகம் ஒன்று அதனை மறைக்க, அதனைக் காவல் காத்துக்கொண்டிருக்கும் ஆள் யானை தன் பெண் யானையைக் காணப்பெறாது தவித்து, ஓடியாடித் தேடிப்பார்த்து, எங்கணும் அகப்படாதது கண்டு வருந்திப் பெருமுழக்கம் எழுப்பும். ஆண் யானையின் அந்த அலறல், மலைகளிலே பட்டு எதிரொலிக்கும்,

இப்படிப்பட்ட வளமிக்க மலை நாட்டிற்கு உரிமையுடைய வனாக ஆணழகன் ஒருவன் விளங்குகின்றான். அவன் குதிரைமீது ஏறி, உலாவி வர மலைச்சாரல் பக்கம் செல் கிறான்.

மலைச்சரிவை அடுத்த சிற்றூர் ஒன்று காணப்படுகிறது. அங்கே தன்னந்தனியான தோப்பு ஒன்றில் நடுவில் சிறு குடிசை இருக்கிறது. அந்தக் குடிசையின் முன்னிலையில் ஓங்கி வளர்ந்த வேங்கைமரம் ஒன்று காட்சிக்கினிமையாகச் சிவந்த மலர்களைப் பூத்துக் குலுங்க விட்டுக்கொண்டு நிற்கிறது. அதன் வளைந்த பெரிய கிளையொன்றில் கயிற்று ஊஞ்சல் ஒன்று கட்டித் தொங்க விடப்பட்டிருக்கிறது.

அந்தக் கயிற்று ஊஞ்சலில் நங்கை நல்லாள் ஒருத்தி உட்கார்ந்து ஆடிக்கொண்டிருப்பதைக் குதிரைமீது ஏறிவரும் நம்பியானவன் பார்த்து விடுகிறான். அவளது அழகு, சாயல், நடையுடை நடிப்புக்களைக் கண்டு மயங்கிய அவன் அவள்மீது காதல் கொள்கிறான். அவள் அங்குள்ள குடிசையைச் சார்ந்த ஏழையரின் அருமை மகள் என்பதைத் தெரிந்திருந்தும் அதைப்பற்றிக் கவலை கொள்ளாமல், அவளோடு காதலுறவு கொள்வதில் முனைகிறான். வெற்றி பெறுகிறான். இருவரும் களவொழுக்கத்தில் ஈடுபட்டு இன்பம் துய்க்கிறார்கள். தோழி தலைவிக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து, தலைவி யின் பெற்றோர்கள் தலைவியின் களவொழுக்கத்தைக் கண்டிடா வண்ணம் தலைவிக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறாள். தலைவன் தலைவியை இரவுக் குறியிடங்களுக்கும், பகற்குறியிடங்களுக்கும் அழைத்துக் களவொழுக்க விளையாட்டுகளிலே திளைத்து மகிழ்கிறான். இப்படியாகச் சிலகாலம் கடந்தோடுகிறது.

நாள்தோறும் பதற்பொழுது முழுவதும் தலைவி எங்கேயோ போய்விட்டு வருகிறாளே என்பதைக் கண்டு, அவள் யாரேனும் ஆடவனோடு களவொழுக்கத் தொடர்பு

கொண்டிருப்பாளோ என்று ஐயுற்ற, அவளின் தாய் தந்தையர் அவளை வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்று கட்டளையிட்டு, வீட்டிலேயே இருத்தி வைத்துக் காவல் போட்டு விடுகிறார்கள்.

தலைவி மிக்க வருத்தத்தில் ஆழ்ந்து தவிக்கிறாள். தோழி அவளுக்கு ஆறுதல் மொழிபல கூறி, அவளை அவ்வப்போது தேற்றிக் கொண்டு வருகிறாள்.

பல நாட்கள் இரவுக்குறி பகற்குறி இடங்களில் வந்து காத்திருந்து, தலைவியைக் காணாது ஏக்கமுற்றுத் திரும்பிய தலைவன், தலைவிக்கு என்ன நேரிட்டது என்பதைக் காண வேண்டி, ஒருநாள் பதற்பொழுது, அவளது தாய் தந்தையர் இல்லாத நேரமாகப் பார்த்து, அவளது குடிசையை நோக்கி வருகிறான். அப்பொழுது தலைவியும், தோழியும் குடிசையின் தாழ்வாரத்தில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கவே, தலைவன் மெல்லக் கொல்லைப்புறமாக வந்து, தாழ்வாரத்தை ஒட்டிப் பக்கத்து வாட்டில் கட்டியுள்ள தட்டியின் ஓரமாக ஒளிந்து நின்றுகொண்டு, அவ்விருவரும் உரையாடுவதை உற்றுக் கேட்கிறான்.

தலைவன் தட்டிக்குப் பக்கத்தில் ஒளிந்து நின்று உற்றுக் கேட்பதைத் தோழி தட்டியிலுள்ள சிறுசிறு இடுக்குகளின் வழியாக அறிந்து கொள்கிறாள். குடிசையைவிட்டு வெளியேற முடியாதவாறு குடிசையிலேயே சிறைப்பட்டுக் கிடக்கவேண்டிய நெருக்கடி தலைவிக்கு ஏற்பட்டிருப்பதையும், தலைவி தலைவனிடத்தில் எப்படிப்பட்ட அளவற்ற அன்பு வைத்திருக்கிறாள் என்பதையும், திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் தலைவன் நேரிடையாக அவளது தாய் தந்தையர்க்குத் தெரிவித்துவிட்டு வந்தாலொழிய, அவன் அவளைப்பெற முடியாது என்பதையும், தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்த வேண்டும் என்று எண்ணி, தோழி தலைவன் காதில் விழும்படி தலைவியிடம் பேச்சுக் கொடுக்கிறாள்.

"ஏடி! அவர் உன்னைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக ஒரு சொல்கூடச் சொல்லவில்லையா?" என்று தோழி தலைவியை வினவுகிறாள்.

"கட்டாயம் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்றும், ஆனால் இப்பொழுது வேண்டாம் சிறிதுநாள் போகட்டும் என்றும்தான் அவர் என்னிடம் சொல்லி யிருந்தால்!'' என்று தலைவி மறுமொழியுரைக்கிறாள்.

''ஏன் காலங்கடத்த விரும்புகிறார்? அவருக்கு வசதிகள் இல்லையா? அல்லது உன்னிடத்தில் அவருக்கு அன்பு இல்லையா?'' என்று தோழி கேட்கிறாள்.

''அவரிடத்தில் வசதிகளும் ஏராளமாக இருக்கின்றன. என்னிடத்தில் அவருக்கு அன்பும் மிகுதியாக இருக்கின்றது. ஆனால் களவொழுக்க இன்பம் சிறந்ததாக இருப்பதால், இன்னும் சிலகாலம் இதனை நுகர்ந்துகொண்டு இருக்கலாம் என்று அவர் எண்ணுகிறார்!'' என்கிறாள் தலைவி.

''ஏடி! அவருக்கு உன்மீது அன்பு இருந்தால், அவர் இதுநேரம் உன்னிடம் வராமல் இருந்திருப்பாரா? அவருக்கு உன்னிடம் அக்கறை இல்லை என்றுதான் நான் கருதுகிறேன்!''

''அப்படிச் சொல்லாதேடீ! நான் வீட்டிலே காவல் வைக்கப்பட்டுள்ளது அவருக்கு எப்படியடீ தெரியும்? அவர் குறியிடங்களுக்கு வந்துவந்து பார்த்துவிட்டு ஏக்கத்தோடு திரும்பி யிருப்பார்! நீ போய்ச் சொன்னால்தானேடீ அவருக்கு உண்மை தெரியும்?''

"நான் போய்ச் சொல்லாவிட்டால் என்ன? அவராக உன்னைத் தேடிக்கொண்டு வரக்கூடாதா?''

''நமது தாய் தந்தையர்க்கு அஞ்சி அவர் இங்கு வராமல் இருந்திருக்கக் கூடும்!''

''நம் தாய் தந்தையர்க்கு அவர் ஏனடீ அஞ்ச வேண்டும்? உன்னைத் திருமணம் செய்துகொள்ளும் நோக்கத்தோடு அவர்

வந்தால், உன் தாய் தந்தையர் விருப்பத்தோடு அவரை வரவேற்கத்தானே செல்வார்கள்! பின் ஏன் அவர் அஞ்ச வேண்டும்?''

''நிலைமையை நீ போய் அவரிடம் விளக்கினால், அவர் ஆவன செய்ய முற்படுவார்!''

''இப்படி நடந்து கொள்ளுகிற அவரிடத்தில், உனக்கு உள்ளபடியே அன்பு இருக்கிறதா!''

"என்னடீ தோழி! நீ இப்படிக் கேட்கிறாய்! நான் அவரை என் ஆருயிராகக் கருதியல்லவா காதலிக்கிறேன். அவரும் என்னை அப்படித்தான் கருதுகிறார். அவரைச் சென்ற சில நாட்களாகக் காணாமையாலும், அவரை முயங்காமையாலும் நான் எவ்வளவு வேதனையோடு துடித்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா? அவரது தோற்றம் என் கண்ணுக்குள்ளே அப்படியே நின்றுகொண்டேயிருக்கிறது! அவரது இனிய சொற்கள் என் செவிகளில் அப்படியே ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன! அவருடைய மலையைப் பார்ப்பதற்குக்கூட எனக்கு வழி கிடைக்கவில்லை. நம் எதிரிலுள்ள காடு அந்த மலையை நான் பார்க்கவொட்டாமலல்லவா மறைத்துக் கொண்டு இருக்கிறது!''

தலைவி ஏங்கித் தவிப்பதைக் கண்ட தோழி, ''நீ அவரது மலையைப் பார்க்க வேண்டுமானால், அதற்கு நான் ஒரு வழி செய்கிறேன்! அதன்படி செய்கிறயோ?'' என்று கேட்கிறாள்.

அதற்குத் தலைவி, ''ஓ! நீ என்ன சொன்னாலும் நான் அதன்படி செய்கிறேன்!'' என்கிறாள்.

நீ நமது வீட்டிற்கு முன்னுள்ள வேங்கைமரக் கிளையில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள கயிற்று ஊஞ்சலில் உட்கார்ந்து கொள்; நான் உன் இடுப்பிலுள்ள பொன்னாலான மேகலை வடத்தைப்பற்றி, உன்னை வீசி ஆட்டுகிறேன். வானத்தில் பறக்கின்ற அழகிய மயில்போல நீ ஆடு; ஊஞ்சலில் வானத்தை நோக்கி மேலே போகும்போது, நீ தலைவரது

மலையை நன்றாகக் கண்டு மகிழ முடியும்! வருகிறாயா?'' என்று தோழி தலைவியை அழைக்கிறாள்.

''சரி! அதையாவது செய்கிறேன்''' என்று சொல்லிவிட்டுத் தலைவி எழுகிறாள்.

தோழியும் தலைவியும் உரையாடிக்கொண்டிருந்ததை ஒளிந்து கேட்டுக் கொண்டிருந்த தலைவன், தலைவியின் கண்ணுக்குப் படாதவாறு வேங்கைமரத்தின் அடியில் போய் ஒளிந்து நின்று கொள்கிறான்.

தோழி, தலைவியை வளைந்த ஊஞ்சல்கட்டையின் மீது ஏற்றி உட்காரவைத்து, இரண்டு கயிறுகளையும் இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டிருக்கும்படி செய்து, அவளது மேகலை வடத்தைப் பிடித்து இழுத்து வீசித் தள்ளி விடுகிறாள். ஊஞ்சல் பின்பக்கமாய் விரைந்து போய் மேலெழும்புகிறது. அப்பொழுது தலைவி, தலைவனது குன்றத்தின் தோற்றங்கண்டு மகிழ்ச்சிநகை கொள்கிறாள். ஒளிந்து நின்று கொண்டிருக்கும் தலைவன், கள்ளத்தனமாகத் தலைவியைப் பார்த்து, அவள் அழகிய மயில்போல் ஊஞ்சலில் சென்று வருவதைக் கண்டு கண்டு அகமகிழ்கிறான்.

தலைவி குன்றத்தைக் கண்டு மகிழ்கிறாள்! தலைவன் நிலைமையை உணர்ந்திருப்பான் என்று எண்ணித் தோழி மகிழ்கிறாள்!

ஊஞ்சல் ஆட்டம் முடிந்து தலைவியும் தோழியும் மீண்டும் குடிசைக்குள் நுழைகிறார்கள். திருமணத்திற்கான ஏற்பாடு களை விரைவில் செய்துகொண்டு தலைவியைக் காண வரலாம் என்ற எண்ணத்துடன், தலைவன் தன் மலைநாட்டிற்குத் திரும்புகிறான்.

* * *

இது நற்றிணை 222 ஆம் செய்யுளின் உட்கருத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியக் காதற் காட்சியாகும். இந்தச் செய்யுள் 'தோழி தலைமகன் வரவுணர்ந்து, அவன் தனியே புறம்பாக மறைந்திருக்க,

தலைவி இற்செறிக்கப் பட்டதை அவனுக்கு உணர்த்தி, அவனிடம் திருமணம் செய்து கொள்ள வேண்டியதை வற்புறுத்துவது' என்ற பிரிவைச் சார்ந்த குறிஞ்சித்திணையின் பாற்பட்டதாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் சங்ககாலப் பெரும்புலவருள் புகழ்மிக்க ஒருவரான கபிலர் ஆவார். இவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்த திருவாதவூரில் பிறந்தவர் என்று கூறுவர். இவர் பரணர், இடைக்காடர், ஔவையார் போன்ற கடைச்சங்கப் புலவர்களோடு பெருநட்புப் பூண்டிருந்தார். இவர் செல்வக்கடுங்கோ வாழியாதன், மலையமான் திருமுடிக்காரி, வையாவிக்கோப் பெரும்பேகன், பாரி, நள்ளி, ஓரி ஆகிய மன்னர்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் வேள் பாரியை உயிர்த் தோழனாகக் கொண்டு, அவனது அவைக்களத்துப் புலவராகக் காட்சியளித்தார். கொல்லிமலை, பறம்புமலை, முள்ளூர்மலை, முள்ளூர்க் கானம் ஆகியவை இவரால் சிறப்பித்துப் பாடப் பட்டவையாகும். கொல்லிமலைப் பாவையைப் பற்றிக் குறிப்புகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் இவரது பாடல்கள் காணப் பெறுகின்றன. இன்னாநாற்பது என்ற நூலும் இவரால் இயற்றப்பட்டது என்று கூறுவர்.

கருங்கால் வேங்கைச் செவ்வீ வாங்குசினை
வடுக்கொளப் பிணித்த விடுமுரி முரற்சிக்
கைபுனை சிறுநெறி வாங்கிப் பையென
விசும்பாடு ஆய்மயில் கடுப்ப யான்இன்று
பசுங்காழ் அல்குல் பற்றுவனன் ஊக்கிச்
செலவுடன் விடுகோ தோழி பலவுடன்
வாழை ஓங்கிய வழையமை சிலம்பில்
துஞ்சுபிடி மருங்கின் மஞ்சுபடக் காணாது
பெருங்களிறு பிளிறும் சோலையவர்
சேணெடும் குன்றம் காணிய நீயே!

(நற்றிணை—222)

(பொழிப்புரை :) தோழீ! பலவாகிய மலைவாழையும், உயர்ந்த சுரபுன்னைகளும் பொருந்திய மலையின்கண்ணே, துயிலுகின்ற பிடியானையின் பக்கத்தில் மேகம் மறைத்தலால் அப்பிடியைக் காணப்பெறாது பெரிய களிற்றியானை பெரு முழக்கமிடும் சோலையையுடைய, அவரது உயர்ந்த நெடிய மலையை நீ பார்த்தேனும் உனது கவலை தணியும்படியாக, கருமையான அடிப்பாகத்தையுடைய வேங்கையின் சிவந்த மலர்களையுடைய வளைந்த கிளையிலே, தழும்புபடக் கட்டிய வளையவிட்ட கயிற்றினாலாகிய கைவண்மையாலே செய்த சிறிய முடக்கத்தை உடைய ஊஞ்சலை இழுத்து மெல்ல உன்னை ஏற்றி வைத்து, நான் இப்பொழுது உன்னுடைய அடிவயிற்றின்மேல் கிடக்கும் பசும்பொன்னாலாகிய வடத்தைப்பற்றி, விண்ணிலே பறக்கின்ற அழகிய மயில்போல் உன்னை ஆட்டி நீளச்சென்று மீளும்படி செய்யவா? கூறுவாயாக!

வீ - மலர்; வாங்குசினை - வளைந்தகிளை; விடுமுரி - வளையவிட்ட; முரற்சி - கயிறு; கைபுனை - கைவண்மை யாலான; சிறு நெறி - சிறிய முடக்கத்தையுடைய (ஊஞ்சல்), பசும்காழ் - பசிய பொன்னாலாகிய வடம்; ஊக்கி - ஆட்டி. சிலம்பு - மலை.

வீட்டில் காவலில் வைக்கப்பட்ட தலைவி, தலைவனோடு சேரவும் அவனைக் காணவும் இயலாமையால், அவனது மலையை நோக்கியேனும் சிறிது ஆறுதல் பெறட்டும் என்று கருதி, தோழி அவளை வேங்கை மரக்கிளையில் கட்டப்பட்ட ஊஞ்சலில் வைத்து ஆட்ட முயலுவதாகப் புலவர் செய்திருக் கும் கற்பனைத்திறம் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

ஊஞ்சலை வீசி யாட்டும்பொழுது, உயரப் போகும் நிலை யில் தலைவனது குன்றம் காணப்படுமாதலால், தோழி தலை விக்குக் குன்றத்தைக் காட்ட அந்த வழியை மேற்கொள்கிறாள்.

இப்படிப்பட்ட செயல் மூலம் தலைவி வீட்டிலேயே இருந்து தீரவேண்டியவளாய் இருக்கிறாள் என்பதும், தலைவி தலைவனிடத்துக் கொண்டுள்ள அன்பு எத்துணை அளவற்றது

என்பதும், தலைவன் திருமண ஏற்பாட்டோடு வந்தாலல்லது தலைவியைக் காண இயலாது என்பதும், சிறைப்புமாக ஒளிந்து நிற்கும் தலைவனுக்கு ஒருவாறு உணர்த்தியவாறாயிற்று.

இவ்வளவு அன்பு வைத்திருக்கும் தலைவி, பிரிவாற்றாமல் இறந்துபடுவாளாதலால், அதனைத் தவிர்க்கத் தலைவன் விரைவாகத் திருமணம் செய்து கொள்ள முயலவேண்டும் என்பதும், குறிப்பால் தலைவனுக்கு உணர்த்தப்படுவதாகிறது.

பெண்யானையை மேகம் மறைத்தலாலே, ஆண்யானை எப்படி வருந்தி முழக்கமிடுகிறதோ, அதேபோல், வீட்டில் காவலில் வைக்கப்பட்டுள்ள தலைவியைக் குறியிடங்களில் காணாமல் தலைவன் வருந்துகிறான் என்பது, உள்ளுறை நயமாகும்.

மலைச்சரிவுகளில் வாழையும் சுரபுன்னையும் வளர்தல், மலைச்சரிவின் கண்ணே துயிலும் பெண்யானையை மேகம் மறைக்க, அதனைக் காணாது ஆண்யானை பிளிறுதல், வேங்கை மரக்கிளையில் கயிற்று ஊஞ்சலைக் கட்டித் தொங்க விடுதல், அடிவயிற்றின்மேல் பசிய பொன்னாலாகிய வடத்தை அணியாகச் சுற்றிக் கொள்ளுதல் ஆகிய உண்மைகள், இச் செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

19. பழிக்குப் பழி!

இரண்டு அரசர்களுக்கிடையிலே பகை மூண்டெழுந்து விடுமேயானால், அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அழிக்கப் போரிலிறங்குவார்கள். பண்டைக் காலத்தில் நால்வகைப்படைகளோடு களத்தில் மோதிக் கொள்வார்கள்.

வெற்றிபெற்ற அரசன் தோல்வியுற்ற அரசனைப் பழிக்குப் பழி வாங்க நினைப்பான். தோல்வியுற்ற அரசனைச் சிறை வைப்பது, ஓடஓடத் துரத்தியடிப்பது, நாடு கடத்துவது, கொன்று போடுவது, அவனுக்குக் கொடுமைகள் பல இழைப்பது, அவனை இழிவாக நடத்துவது, அவனைச் சார்ந்தோருக்குத் துன்பங்களும் துயரங்களும் தொல்லைகளும், துக்கங்களும் பயப்பது, அவனது உரிமைகளையும் அவனது நாட்டையும் தீவைத்துக் கொளுத்தித் தவிடுபொடியாக்குவது போன்ற பல்வேறு செயல்களில், வெற்றிபெற்ற அரசன் ஈடுபட்டுப் பகைவனைப் பழிவாங்க நினைப்பான். மேற்குறிப்பிட்டவைபோன்ற செயல்களைச் செய்து முடிப்பதன் மூலந்தான், வெற்றிபெற்ற அரசன் தன் உள்ளத்தில் மூண்டெழுந்த சினத்தையும் ஆத்திரத்தையும் தணித்துக் கொள்ள முயலுவான்.

சங்க காலத்தில் வாழ்ந்த நன்னன் என்ற அரசன், தன் பகை அரசர்களை எப்படிப் பழிக்குப்பழி வாங்கினான் என்ற வரலாற்றைப் பரணர் என்னும் பெரும்புலவர், நற்றிணை 270 ஆம் செய்யுளில் குறிப்பிடுகிறார்.

அன்பிற்குரிய தலைவியைவிட்டுத் தலைவன் பிரிந்து செல்லும் கொடுமைக்கு, நன்னன் பகையரசர்க்கு இழைத்த கொடுமையைப் புலவர் ஒப்பிட்டுக் காட்டுகிறார்; நன்னன் செய்த செயலிலே உள்ள கொடுமையைக் காட்டிலும், தலைவன் தலைவிக்கு இழைக்கும் கொடுமை பெரிது என்று புலவர் பெருந்தகை புலப்படுத்துகிறார். நன்னனின் செயலைப் புலவர் நெஞ்சம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும், அதனை வெறுக்கிறது என்பதும், அதனை மிக்க கொடியதென்று கருதுகிறது என்பதும், புலவர் கூற்றினால் தெளிவுபடுத்தப் படுகின்றன.

நன்னனுக்கும் பிண்டன் என்ற மற்றொரு அரசனுக்கும் நீண்ட காலமாகப் பகை மூண்டிருந்தது. நன்னன் பிண்டனைப் போரில் அழித்தொழிக்கத் திட்டமிட்டான். பிண்டனும் நன்னனை எதிர்த்துப் போரிட ஆயத்தமானான். பிண்டனுக்கு உதவியாக வேறுசில சிற்றரசர்களும் நன்னனை எதிர்த்துக் கிளம்பினர். பிண்டனும் மற்றவர்களும் நல்ல குதிரைப் படைகளைத் திரட்டிக்கொண்டு போருக்குப் புறப் பட்டனர். நன்னன் நால்வகைப் படையினரோடு, நல்ல வேற் படைகளையும் வைத்துக்கொண்டு, பகைவர்களைத் தாக்கி னான். இறுதியில், பிண்டனும் அவனைச் சார்ந்தோரும் களத்தில் வீழ்ந்தனர். அவர்கள் படையினர் தோற்றோடினர். நன்னன் பகையரசரின் நாடுகளில் புகுந்து சூறையாடினான்.

பரணரால், கொடுமையினும் கொடுமை என்று கூறப்படுகிற அளவுக்கு நன்னன் செய்த கொடுமை என்ன என்றால், நன்னன் அப்பகையரசரின் உரிமை மகளிரையெல்லாம் அழைத்துவந்து, அவர்களது தலையை மழித்து, அக் கூந்தல்களையெல்லாம் கயிறுகளாகத் திரித்து, அக்கயிறுகளால் அப்பகைவரின் யானை களைப் பிணித்து, அவைகளை ஓட்டிக்கொண்டு வெற்றி உலா வந்தானாம். இப்படி நன்னன் பழிதீர்த்துக் கொண்ட செயலைத்தான், பரணர் கொடுமை என்று குறிப்பிடுகிறார்.

வெஞ்சினங்கொண்ட அரசன் பகையரசரின் உரிமைமகளிரின் கூந்தலைக் கயிறாகத் திரித்து, அதனால் யானையைப் பிணித்து

வெற்றி உலாவரும் பழக்கம் பண்டைத் தமிழகத்தில் சிற்சில அரசரிடம் இருந்து வந்திருக்கக்கூடும் என்ற குறிப்பு, பரணரின் கூற்றால் தெரிய வருகிறது.

..............பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியின் கொடிதே

(நற்றிணை : செய்யுள் 270,
வரி 6—9)

(பொழிப்புரை :) அழகு பொருந்திய விரிந்த பிடரிமயிர் பொலிவு பெற்ற, விரைந்த ஓட்டத்தையுடைய நல்ல குதிரைப் படைகளையுடைய, பகையரசாகிய பிண்டன் முதலாயினாரைப் போரிலே தோற்றோடச் செய்த, ஏந்திய வேற்படையையுடைய நன்னன், தான் அப்பகையரசரின் உரிமைமகளிரைப் பற்றிவந்து, அவர் தலையை மழித்து, அக்கூந்தலைக் கயிறாகத் திரித்து, அக்கயிற்றாலே அப்பகைவரின் யானையைப் பிணித்த கொடுமையினும் கொடிதே!

உளை - பிடரி மயிர்; பரி - குதிரை; முரற்சி - முறுக்கிய கயிறு.

20. பிரிவைத் தடுத்த பரிவு !

அவள் அழகு இடையர் சேரிக்கே தனிப் பொலிவையும் பெருமையையும் தருவதாகும்! குடிச்சிறப்பும் செல்வச் செழிப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற உயர்குடியில், அவள் ஒரே மகளாகத் தோன்றியவளாதலால், பெற்றோரும் உற்றோரும் அவளைக் கண்மணிபோல் காத்துவருகின்றனர்.

அவள் இப்பொழுது பருவமங்கையாகக் காட்சியளிக்கிறாள். பருவம் அவளுக்குப் புதுப்புது அழகை மெருகு ஏற்றிக் கொண்டிருக்கிறது. அவளது நடை உடை நடிப்புகளில் கவர்ச்சிகரமான மாற்றம். அவளோடு சேர்ந்து விளையாடப் போவதும், உலாவப்போவதுமே தங்களுக்கு மகிழ்ச்சிதரும் செயல்களாக அச்சேரியில் வாழும் அவளுக்கு ஒத்த பிற மணமாகா மங்கையர் கருதுவர். தன்னை ஆடை அணிகளால் அழகுபடுத்திக்கொள்வதும், தோழியர்களோடு சேர்ந்து தாயம் ஆடுவதும், ஓடி விளையாடப் போவதும், வரிப்பந்தாட்டம் ஆடுவதும், பூக்கொய்யச் செல்வதும், புனல் நீராடி மகிழ்வதும், உலாவி வேடிக்கை பாப்பதும் ஆன நிகழ்ச்சிகளில் காலத்தைக் களிப்போடு போக்கிக் கொண்டு வருகிறாள்.

அவள் வாழும் ஊரைச் சேர்ந்த ஆணழகனான இளைஞன் ஒருவன், அவளைப் பார்த்து விடுகிறான். பார்த்ததும், காதல் மயக்கம் கொள்கிறான். எப்படியேனும் அவளைத் தனக்குரியவளாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று முடிவுகட்டுகிறான்

அவளது உள்ளத்தைத் தன்பால் கவருவதற்கான முயற்சிகளை யெல்லாம் செய்கிறான். காதல் வலையை ஓயாமல் வீசி அவளைப் பிடிப்பதற்கு முயலுகிறான். அவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பின் காரணமாக, வலையில் சிக்க மறுத்துப் பலதடவை தப்பி ஓடிவிடுகிறாள். இளைஞன் விடா முயற்சி யுடன் காதல் வலையை விரித்தவண்ணமாகவே இருக்கிறான். இறுதியில், வேறு வழியின்றி, அவள் அவன் வலையில் சிக்கிக் கொள்கிறாள். இருவரும் காதலராக மாறுகின்றனர். களவொழுக்கமும் நடைபெறுகின்றது.

மணம் புரிந்துகொண்டு இல்லறவாழ்க்கை இனிது நடத்த வேண்டும் என்ற பேரவா இருவருக்கும் உண்டு. ஆனால், தத்தம் பெற்றோர்கள் அதற்கு இசைவார்களோ இசைய மாட்டார்களோ என்ற ஐயப்பாடும் இருவருக்கும் இருந்து கொண்டே யிருந்தது. ஊரார்க்கும், உற்றார்க்கும், பெற்றோர்க்கும் அஞ்சி அஞ்சி நடத்தும் களவொழுக்க வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதைக் காட்டிலும், யாருக்கும் தெரியாமல் வேற்றூருக்குக் கிளம்பிப் போய்விட்டால் தாமும் அச்சமற்ற வாழ்வு நடத்த வழி ஏற்படும், பெற்றோர்களும் வேறுவழியின்றி தமக்குத் திருமணம் முடித்துவைக்க இசைவர் என்ற கருத்தைத் தலைவன் தலைவியிடம் கூறுகிறான். தலைவி, ஏது செய்யலாம் என்பதற்குத் தோழியைக் கலந்து கொள்கிறாள். தோழியும் தன்னாலான உதவியைச் செய்வ தாக வாக்களிக்கிறாள். தலைவி, இறுதியாகத் தலைவனுடன் போய்விடுவது என்ற முடிவுக்குவந்து, உடன்போக்குக்கு இசை கிறாள்.

தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரும் சேர்ந்து உடன் போக்குக்கான நாள் ஒன்றைக் குறித்துக் கொள்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட நாளில் விடியற்காலையான வைகறைப் பொழுதில், தலைவன் ஊருக்கு வெளியே சென்று ஒரு குறிப் பிட்ட இடத்தில் காத்திருக்கவேண்டும் என்றும், தோழி யாருக்கும் தெரியாமல் தலைவியை இட்டுக்கொண்டு வந்து தலைவனிடம் சேர்க்கவேண்டும் என்றும், தலைவி அதற்கான

முறையில் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும், அவர்களுக்குள்ளே முடிவுகள் எடுத்துக் கொள்ளப் பட்டன.

தலைவன் தலைவியர் உடன்போக்காகக் குறித்துக் கொண்ட நாளின் முதல்நாள் இரவு தலைவியின் பெற்றோர் களும், செவிலித்தாயும், நன்றாக உறங்கிக் கொண்டிருக்கிறார் கள். தலைவியின் அருகே தோழி படுத்துக் கொண்டிருக்கிறாள்: மறுநாள் உடன்போக்கில் செல்லப் போகிறோம் என்ற எண்ண அலைகள் தலைவியை உறக்கங்கொள்ள விடவில்லை. தான் போகப்போகும் வழி எப்படியெல்லாம் இருக்குமோ, தலைவன் எங்கெல்லாம் அழைத்துச் செல்வானோ, தாய் தந்தையர்கள் என்னவெல்லாம் எண்ணிக் கொள்வார்களோ என்பனபற்றித் தலைவி தோழியிடம் மெல்லியகுரலில் பேசிக்கொண்டிருக் கிறாள். தலைவனோடு செல்லப்போகிறோமே என்ற ஆவல் ஒரு பக்கமும், அச்சம் ஒரு பக்கமும், தலைவியின் உள்ளத்தைக் குடைந்துகொண்டிருக்கின்றன. மகிழ்ச்சி, மருட்சி ஆகியவற்றிற் கிடையே தலைவி தடுமாறிக் கொண்டேயிருந்து, இரவுப் பொழுதை ஒருவாறு கழிக்கிறாள். இரவின் பிற்பகுதியில் தோழியும் உறக்கங்கொண்டுவிடுகிறாள். தலைவி மட்டுமே விழித்துக்கொண்டு ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருக் கிறாள்.

வைகறைப்பொழுது வருவதற்குச் சற்று முன்னே, வீட்டிலுள்ள பணிப்பெண்கள் எழுந்து, தயிர் கடைவதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றனர். தயிரின் முடைநாற்றம் வீசாமல் இருக்கும்பொருட்டுப் போடப்பட்ட விளாம்பழத்தோடு, தயிர் நிறைந்த பானைகளைத் தயிர்கடையும் தூணிடத்திற்கொண்டு வந்து சேர்க்கின்றனர். பலகாலமாகக் கடைவதால் தேய்ந்து போன நிலைமையிலுள்ள தண்டோடு கூடிய மத்தைத் தயிர்ப் பானையில் இட்டு, அதில் கயிற்றினைக் கோர்த்துக் கடைய ஆரம்பிக்கின்றனர். தயிர்ப்பானையைத் திறந்தவுடன் வெளிக் கிளம்புகிற விளாம்பழத்தின் மணமும், தயிர் கடைவதால் எழும்பும் சலசலப்பு ஒலியும், வைகறைப் பொழுது வந்து

விடுவதைத் தலைவிக்கு உணர்த்துகின்றன. தலைவி உடனே வாரிச்சுருட்டி எழுந்து, தோழியை அவசரமாக, ஆனால் ஓசையிடாமல் எழுப்புகிறாள். தோழி திடுக்கிட்டு எழுகிறாள்.

"வைகறை வந்துவிட்டதாமடீ?" என்று தோழி தலைவியை அவசரமாக வினவுகிறாள்.

"ஆமாமடீ! தயிர்கடையும் ஓசை உன் காதில் விழவில்லையா? நான் என்னடி இப்பொழுது செய்ய வேண்டும்?" என்று தலைவி கேட்கிறாள்.

தோழி : "நம்மைப் பார்ப்போர் நம்மை இன்னாரென்று அடையாளங் கண்டுகொள்ளாமல், இருட்டு குறைவதற்கு முன்பே கிளம்பிவிடவேண்டும். விரைவாகக் கிளம்பு!"

தலைவி : "இப்படியே கிளம்பட்டுமாடீ!"

தோழி : "இப்படியே கிளம்புகிறாயா? எப்படிக் கிளம்புவாய்? நமது தாய் தந்தையர்களெல்லாம் நன்றாக உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியே கிளம்பினால், உன் கால் சிலம்பொலி கேட்டு அவர்கள் எல்லோரும் விழித்துக்கொள்வார்களே!"

தலைவி : "அதற்கு என்னடீ செய்வது?"

தோழி : "என்ன செய்வதா? சிலம்பைக் கழற்றுவது; மெல்ல ஓரிடத்தில் வைத்துவிட்டு வருவது. அதைத்தான் செய்யவேண்டும். போ! நாழி ஆகிறது!"

தலைவி அவசர அவசரமாகச் சிலம்பைக் கழற்றுகிறாள். அவளால் கழற்ற முடியவில்லை. தோழி உதவி செய்கிறாள். இரண்டு சிலம்புகளையும் கையில் எடுத்துக்கொண்டு மெல்லத் தலைவி நகர்கிறாள்.

தோழி : (மெல்லிய குரலில்) "ஏடீ! இங்கே வா! இந்த வரிப்பந்தையும் கொண்டுபோய் வைத்துவிட்டுவா.

தலைவி சிலம்புகளையும், பந்தையும் எடுத்துக்கொண்டு உள்ளறைக்குள் நுழைகிறாள். தோழி, யாரேனும் வருகிறார்களா, தங்களைப் பார்க்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருக்கிறாள். உள்ளே சென்ற தலைவி வெளியே வரவில்லை. என்ன காரணம் என்பது தோழிக்குப் புலப்படவில்லை. நற்றாய் விழித்துக் கொண்டாளோ, செவிலித்தாய் பிடித்துக்கொண்டாளோ, வேறு யாரேனும் பார்த்துவிட்டார்களோ, யாரேனும் இடையூறாக நிற்கிறார்களோ என்று பலவாறாக எண்ணமிட்டுக்கொண்டு, அச்சத்துடன், நாமே போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்ற கருத்துடன், தலைவி சென்ற இடம் நோக்கி மெல்லச் செல்கிறாள். தலைவி சிலம்புகளையும் பந்தையும் ஒருசேர ஓரிடத்தில் வைத்துவிட்டு, அவற்றை நோக்கி அழுதுகொண்டு நிற்பதைத் தோழி பார்க்கிறாள். தோழிக்கு ஒன்றும் புரியவில்லை. தோழியைக் கண்டவுடன், தலைவி சற்றுமிகுதியாகச் செருமிச்செருமி அழத் தொடங்குகிறாள்.

தோழி : "ஏனடி அழுகிறாய்? என்ன நேர்ந்தது?

தவுலவி : (கண்ணீரைத் துடைத்துக்கொண்டே) ஒன்றுமில்லையடி!'

தோழி : "ஒன்றுமில்லாமலா அழுதுகொண்டிருக்கிறாய். அம்மா சினந்து கொண்டார்களா? அப்பா பார்த்துவிட்டார்களா? என்ன நடந்தது?"

தலைவி : "ஏதுமில்லையடி! நான் வெளியூருக்குப் போக வேண்டாம் என்று எண்ணுகிறேன்!"

தோழி : "என்னடீ வேடிக்கை! போகவேண்டும் என்று இந்நேரம் வரையில் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தாய்! இப்பொழுது போகவேண்டாம் என்று எண்ணுகிறேன் என்கிறாயே! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா, என்ன?"

தலைவி : "பைத்தியம் ஒன்றும் பிடிக்கவில்லை! உள்ளபடியேதான் கூறுகிறேன்!"

தோழி : "காரணந்தான், என்ன? அதைச் சொல்லடி!"

தலைவி : "நான் வைத்துவிட்டுப் போகும் இந்தப் பந்தையும் சிலம்பையும் காணும் நம்முடைய விளையாட்டுத் தோழிகளெல்லாம் எவ்வளவு வருந்துவார்கள்? என்னுடைய தாய் தந்தையெரெல்லாம் எவ்வளவு துன்பப்படுவார்கள்? அதையெல்லாம் நினைத்துக் கொண்டேன். எனக்கு ஒரே அழுகையாகவும், துக்கமாகவும் வருகின்றன! நான் என் செய்வேனடி!" (என்று கூறிவிட்டுத் தலைவி மீண்டும் அழுகிறாள்.)

தோழி : "பூ! இவ்வளவுதானா? இந்த நினைவெல்லாம் முன்னாலேயே அல்லவா வந்திருக்கவேண்டும்? இதற்கு இவ்வளவு தொல்லைகள் பட்டிருக்க வேண்டியதில்லையே! இதை அப்பொழுதே சொல்லியிருக்கலாமே! அவனை ஊருக்கு வெளியே காத்திருக்கச் சொல்லியிருக்க வேண்டிய தில்லையே!"

தலைவி : "இப்பொழுது என்னடி செய்வது?"

தோழி : "என்ன செய்வதா? முக்காடிட்டுக் கொண்டு, மூலையில் உட்கார்ந்து அழுவது!"

தலைவி : "தோழி! சினந்துகொள்ளாதே! நீ என் நிலையில் இருந்தால் இப்படியெல்லாம் பேசமாட்டாயடி!"

தோழி : "நல்ல வேளையாக நான் உன் நிலையில் இல்லை! இருந்தால், இன்னும் எவ்வளவோ மானத்தை விடவேண்டி வரும்!"

தலைவி : "மானம் என்னடி போய்விட்டது?"

தோழி : "போகாமல் இன்னமும் இருந்துகொண்டா இருக்கிறது? நாம் வாக்குறுதி அளித்துவிட்டு வந்த அந்தத் தலைவன் முகத்தில் எப்படி விழிப்பது?"

தலைவி : "தலைவனிடம் என்னடி சொல்வது?"

தோழி : "சொல்வதற்கு என்ன இருக்கிறது? தலைவி உன்னை விரும்பவில்லை என்று கூறவேண்டியது தான்!"

தலைவி : "நான் அவனை விரும்பவில்லை என்று கூற வில்லையே! அவனை எப்படியேனும் மணந்து கொள்ளவேண்டும் என்றுதானே சொல்கிறேன்!"

தோழி : "அவனை ஏமாற்றியதற்குப் பிறகு எப்படி மணந்து கொள்ள முடியும்?"

தலைவி : "எப்படியோ நீதான் உதவி செய்ய வேண்டுமடீ! நீ நினைத்தால், எப்படியும் அவனைப் பெற்றோர் களின் இசைவு பெற்றுவந்து, மணம் முடித்துச் செல்லும்படி செய்யலாம்!"

தோழி : "நான் என்னடி செய்ய முடியும்? அவன் எப்படி என்னை மதிப்பான்?"

தலைவி : "அவனது பெற்றோர்களும் எனது பெற்றோர்களும் கலந்து பேசினால், பிறகு எங்கள் திருமணம் முடிந்த மாதிரிதான். எனது பெற்றோர்கள் மறுக்க அவனிடம் ஒரு குறைபாடும் இல்லையே! அவன் முறைப்படி வந்து நேரிடையாகத் திருமணம் முடித்தலைத்தான் நான் விரும்பியிருக்கிறேன் என்று, நீ அவனிடம் போய்ச் சொல்! அவன் என் விருப்பத்தை நிறைவேற்றுவான் என்பது உறுதி. ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், அவன் ஆடவரிலே மிகமிக நல்லவன்!"

தோழி : "என்னால் உன் விருப்பத்தைத் தடுக்க எப்படி முடியும்? என்னமோ என்னால் முடிந்த மட்டிலும் உன் விருப்பத்தை நிறைவேற்ற முயலுகிறேன்!"

தலைவியும் தோழியும் பேசி முடிவதற்குள், பொழுது புலர்ந்து எங்கணும் வெளிச்சம் தோன்றிவிடுகிறது. தலைவன் ஊருக்கு வெளியே குறித்தவிடத்தில் நீண்டநேரம் காத்திருந்து

விட்டு, தலைவி வராததினால் ஏற்பட்ட ஏக்கத்துடனும் வருத்தத்துடனும் வீடு நோக்கித் திரும்புகிறான்.

தோழி, பிறகு தலைவனைத் தனியே கண்டு, தலைவியின் நிலைமையையும், அவள் படும் தொல்லைகளையும், துன்பங் களையும், அவளது விருப்பத்தையும் தெளிவாக எடுத்துக்கூறி உடன் போக்கைக் கைவிட்டுவிட்டுத் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறாள். தலைவன் தலைவியின்பாற் கொண்டிருந்த தணியாக் காதலன்பின் காரணமாகத் தலைவியின் எண்ணத்தின்படி நடக்க உறுதி கூறுகிறான். தோழி களிப்போடு தலைவியை அடைகிறாள். காதலன் உடன்போக்கைத் தவிர்த்துவிட்டுக் கடிமணம் புரிய இசைந்துவிட்டான் என்பதை அறிந்து தலைவியும் பேருவகை கொள்கிறாள்!

*   *   *

இது நற்றிணை 12ஆம் பாடலின் கருத்தை ஒட்டி எழுந்த விளக்கமாகும். இதனைப் பாடியவர் கயமனார் என்னும் புலவராவார்.

விளம்பழங் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசந் தின்ற தேய்கான் மத்த
நெய்தெரி இயக்கம் வெளில்முதன் முழங்கும்
வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
விரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்
'இவைகாண் தோறும் நோவர் மாதோ
அளியரோ அளியரென் ஆயத் தோ'ரென
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத்(து) அன்றியுங் கலுழ்ந்தன கண்ணே.

(நற்றிணை—12)

(பொழிப்புரை :) முடைநாற்றம் தீரும்படி விளாம்பழம் போட்டு வைத்தலாலே, அப்பழத்தின் மணம் வீசுகின்ற

நிறைந்த தயிர்த்தாழியில், கயிறு சுற்றியிழுத்துத் தேய்தலாலே தேய்ந்த தண்டினையுடைய மத்தை இட்டு, வெண்ணெய் தோன்றும்படி கடைதலாலே, தயிர் கடையும் தாழியில் ஓசை கிளம்புகின்ற, தங்கிய இருள்தீரும் வைகறைப்பொழுதில், தன் உடல் பிறர்க்குத் தோன்றாதபடி மறைத்துத் தன் காலி லணியும் பருக்கைக் கற்கள் போடப்பட்ட சிலம்பைக் கழற்றிப் பல மாட்சிமைப்பட்ட வரிந்த புனைந்த பந்தோடு சேர்த்து ஓரிடத்தில் வைக்கச்செல்லுபவள், தன்னுள்ளத்து "என் தோழிமார் இவற்றைக் காணுந்தோறும் துன்புறுவார்களே! அவர்கள் இரங்கத்தக்கவர்கள் அல்லவா?'' என்று எண்ணிக் கொண்டு, நும்மோடு வருதலை மேற்கொள்ள அவள் தயாராக இருக்கவும், அவளது கண்கள் தம் அளவுக்கும் அடங்காமல் அழத்தொடங்கின; ஆதலால், நுமக்கு ஏற்றவாறு இனிச் செய் வீராக!

குழிசி - (தயிர்த்)தாழி; பாசம் - கயிறு; மத்த - மத்திட்டு; நெய் - வெண்ணெய்; இயக்கம் - அசைவு; வெளில் - தயிர் கடைதற்கு நடப்படும் தூண்; வைகு புலர் - தங்கிய இருள் தீரும்; விடியல் - வைகறைப்பொழுது; மெய்கரந்து - உடல் மறைத்து; அரி - பருக்கைக்கல்; கழீஇ - கழற்றி; கலுழ்ந்தன - அழுதன.

* *

தத்தம் பெற்றோர்களின் இசைவு கிடைக்குமோ கிடைக் காதோ என்று ஐயுறுகிற காதலன் காதலியர், யாருக்கும் தெரியாமல் வெளியூருக்கு ஓடிவிடுவது என்ற பழக்கம், இந்தக் காலத்தில் ஆங்காங்கு காணப்படுவதுபோன்றே பண்டைத் தமிழகத்திலும் இருந்து வந்திருப்பது இதனாற் புலனாகும். காதலன் காதலியர் திருமணம் நடைபெறுவதற்கு முன்னால் ஒருவரையொருவர் காணக்கூடாது, கண்டு பேசக்கூடாது என்று இன்று நிலவும் சமுதாயக் கொடுமைகள் பண்டைத் தமிழகத்தில் அவ்வளவாக இல்லை என்று கூறலாம். தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் ஈடுபடுவதும், தோழி அவர்களுக்கு

உதவியாக இருப்பதும், இன்றியமையாமை ஏற்படும்போது அவர்கள் உடன்போக்கில் போவதும் பண்டைத் தமிழகம் ஏற்றுக்கொண்டிருந்த பண்புகளாகும். காதலன்மீது அளவு கடந்த காதலன்பு இருந்தபோதிலும், பெற்றோர்களையும் ஆயத்தாரையும் விட்டுச்செல்ல மனம்வராமல் தலைவி படும் துன்பமும், அவளது மனநிலையும், இச்செய்யுளில் அழகுபட விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. தலைவி தன் துக்கத்தை அடக்கிப் பார்க்கிறாள்; அவளையும் மீறி அழுகை அவளுக்கு வந்துவிடுகிறது என்பது, உலக இயல்பைப் படம் பிடித்துக் காட்டும் பகுதியாகும்.

தயிர்ப்பானையின் முடைநாற்றம் வீசாமல் இருக்கும் பொருட்டு விளாம்பழத்தைத் தயிர்ப்பானைக்குள் போட்டு வைக்கும் பழக்கம் பண்டைநாட்களில் உண்டு என்பது தெரிய வருகிறது. வைறைப்பொழுதுக்கு முன்பே இடைச்சியர் எழுந்து விடுவர்; தயிர்கடைவதற்கு என்று நடப்பட்டிருக்கும் தூணருகில் தயிர்பானையைக் கொண்டுபோய் வைப்பர்: மத்தினை அதில் இடுவர்; தூணோடு மத்தைப் பொருத்துவர்; மத்தின் தண்டில் கயிற்றைச் சுற்றி இருமுனையையும் பிடித்து இழுப்பர்; கயிற்றைச் சுற்றி இழுப்பதால் மத்தின் தண்டு தேய்ந்து போயிருக்கும்; வெண்ணெய் தோன்றும்படி கடைவர்; தயிர் கடையும் ஓசை வைகறைப் பொழுதிலேயே கிளம்பிவிடும் என்பனபோன்ற இடையர் சேரிவாழ்வின் இயல்புகள் இச்செய்யுளில் அழகுறக் கூறப்பட்டிருக்கின்றன. பகற்பொழுதில் கடைந்தால் வெப்பந் தாங்காது வெண்ணெய் உருகிவிடுமாதலால், வைகறைப் பொழுதிலேயே கடையும் பழக்கத்தைக் கொண்டிருந்தது கூறப்பட்டது. மேலும் காலையிலேயே தயிர், வெண்ணெய் முதலியவற்றை விற்பனைக்குக் கொண்டுசெல்லவேண்டிய இன்றியமையாமை குறித்தும், வைகறைப் பொழுதில் தயிர்கடையும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்று கூறலாம்.

பெண்கள் ஓசையிடும் சிலம்புகளைக் காலில் அணிவதும், பூவினாலோ, துணியினாலோ, தோலினாலோ, நாரினாலோ,

கொடியினாலோ வரிந்து கட்டப்பட்ட பந்தினைக் கொண்டு பந்தாட்டம் ஆடுவதும், பண்டைத் தமிழகத்தில் சிறந்திருந்த பழக்கங்களாகத் தெரியவருகின்றன.

தலைவன், தோழியின் கூற்றைக் கேட்டு, உடன்போக்கைத் தவிர்த்துவிட்டுத் திருமணத்திற்கு இசைந்தான் என்பது குறிப்பால் பெறப்படுவதாகும்.

21. காவல் பயந்த காதல் !

பெண் பருவமங்கை ஆகிறாள். பருவம் அவளைப் பொலிவுடையவளாக ஆக்கிக் காட்டுகிறது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய பண்புகள் அவளை முழுக்க முழுக்கத் தழுவத் தொடங்குகின்றன.

தக்க பருவம் அடைந்த மங்கையை முறைப்படி தினைப்புனங் காத்தல் தொழிலில் ஈடுபடுத்தவேண்டும் என்று அவளது பெற்றோர்கள் எண்ணுகிறார்கள். தலைவி தினைப் புனத்திற்குச் செல்ல மறுக்கிறாள். பெற்றோரும் உற்றாரும் அவளைப் போகும்படி வற்புறுத்துகிறார்கள். தாய் தந்தையரைவிட்டுப் பிரிந்துசெல்ல வேண்டி நேரிடுகிறதே என்று எண்ணி அவள் வருந்துகிறாள். பிறகு ஒருவாறு தன்னைத் தானே தேற்றிக் கொண்டு, தினைப்புனங்காக்கச் செல்ல இசைகிறாள். தலைவிக்கு உதவியாக இருக்கும்படி கூறிப் பெற்றோர்கள் தோழியையும் தலைவியுடன் அனுப்பிவைக் கிறார்கள். இருவரும் தினைப்புனஞ் செல்கிறார்கள்.

தினைப்புனத்தில், அடர்ந்து செறிந்த கதிர்களைத் தாங்கிய தினைப்பயிர்கள் விரிந்து பரந்து காணப்படுகின்றன, தினைப்புனத்தின் நடுவில் காவல் காப்போர் தங்கியிருந்து காப்பதற்காகப் பரண் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது. பரண்களை நடுவே கொண்ட தினைப்புனங்கள், அடுத்தடுத்துப் பலப்பலவாகப் பரந்து கிடக்கின்றன. கதிர்களைக் கொத்தப் பச்சைக்கிளிகள் கூட்டங் கூட்டமாக வர, அவைகளைப்

புரண்கள் தோறும் உள்ள பெண்கள் கவண்கற்களை வீசி விரட்டியடிக்கின்றனர். பன்றி முதலிய காட்டு விலங்குகள் தினைப்புனங்களுள் புகுந்து பயிர்களுக்கு அழிவு தேடா வண்ணம் அவ் விலங்குகளைத் தடுக்கவும், அவைகளைக் கொன்றுபோடவும், இளம் மழவர்கள் தினைப்புனங்களைச் சுற்றிச் சுற்றி வருகின்றனர். தினைப்புனங்களை அடுத்து உயர்ந்த மலையடுக்கங்கள் இருக்கின்றன. அவற்றில் வேங்கை மரங்கள் செழித்து வளர்ந்திருக்கின்றன. வேங்கை மரத்தின் நிழலில் மயில்கள் கூடுகள் கட்டிக் கொண்டிருக்கின்றன. செக்கச்சிவந்த வேங்கைப்பூக்கள் அக்கூடுகளின் மேலெல்லாம் சிதறிக் கிடப்பது, கொல்லனது உலைக்களத்து அடிக்கும் இரும்பின் பொறி சிதறிக்கிடப்பதுபோல் காட்சியளிக்கின்றது. வேங்கை மரத்தில் சிறிய காய்கள் காய்த்துத் தொங்குகின்றன. இத்தகைய இயற்கைக் காட்சிகளோடு கூடிய தினைப்புனத்தை நோக்கித்தான் தலைவியும் தோழியும் வந்து சேருகிறார்கள்.

தினைப்புனங்களைச் சுற்றிக் காவல்காத்து வரும் இளம் மழவர்கள், அவள் அருகில் வரும்போது, அவள் அழகு கண்டு சற்று மயங்கி நின்று, அவள் அழகைக் கண்ணால் பருகி, மேற் கொண்டு பெயர்ந்துபோவது வழக்கம். மழவர் கூட்டத்திலே அழகில் மிகச்சிறந்த இளைஞன் ஒருவன், அவளது அழகு நலத்தைக் கண்ணால் மட்டும் பருகினால் போதாது, அவளது நலன்களையெல்லாம் ஐம்புலன்களாலும் பருகவேண்டும் என்ற பேராவல்கொண்டு காதற்பசி கொள்கிறான். மலரைச் சுற்றி வட்டமிடும் வண்டைப்போல, அவன் அம்மங்கை நல்லாளின் தினைப்புனத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே யிருக்கிறான். அவளை எப்படியேனும் அடைந்துவிடவேண்டும் என்று ஆர்வமும் கொள்கிறான். தானே தலைவிக்கு ஏற்ற தலைவனாக மாறவேண்டும் என்றும் தனக்குள்ளே உறுதி செய்து கொள்கிறான்.

தோழி ஒருத்தி தலைவியிடம் வருவதும், சிறிதுநேரம் அவளோடு தங்கியிருப்பதும், பிறகு போய்விடுவதுமான காட்சி

களைக் காண்கிறான். தான் தலைவியைக் காதலிப்பது எவ் வகையிலும் தோழிக்குத் தெரிந்துவிடக்கூடாது, தெரிந்தால் தனது முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவிடுவாள் என்று கருதித் தோழியின் கண்ணில் படாமல் தலைவியைக் காதலிக் கும் வழிவகைகளைக் காணும் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறான். தோழி தலைவியை விட்டு நீங்கிவிட்டாள் என்று அறிந்ததும், அவ்விளைஞன் தலைவியின் தினைப்புனத்தை ஓயாமல் சுற்றி வருவதும், அவளது முழுத்தோற்றமும் பொலிவுறத் தெரியும் இடங்களில் நின்று அவளை உற்றுப் பார்ப்பதும், பன்றி முதலிய விலங்குகளை விரட்டுவதைப்போல் கூச்சலிட்டு அவளது கவனத்தை ஈர்ப்பதும் ஆன முயற்சிகளில் மெல்ல மெல்ல ஈடுபடுகிறான்.

யாரோ ஒரு அழகுள்ள ஆடவன் தினைப்புனத்தை ஓயாமல் சுற்றுவதையும், தன்னையே சிற்சில பொழுது உற்று நோக்குவதையும் அவள் உணர்கிறாள். அவன் உற்று நோக்கும்போது அவள் வெட்கம் தாளமாட்டாமல் வேறு பக்கம் திரும்பிக் கொள்கிறாள். அவனைத் தான் பார்க்கக் கூடாது என்று தனக்குள்ளே எண்ணிக் கொள்கிறாள். சிறிது நேரந்தான் அவளால் அப்படியிருக்க முடிகிறது; மீண்டும் ஒருமுறை அவனைப் பார்க்கவேண்டும்போல் அவளுக்குத் தோன்றுகிறது. அவனைப் பார்க்கிறாள். அவனும் அவளைப் பார்க்கிறான், இருவருடைய கண்களும் இப்படியாகப் பல தடவைகள் பேசிக்கொள்கின்றன. ஒருவர் உள்ளத்தை ஒருவர் பறித்துக் கொள்கின்றனர். சில நாட்கள் அறிகுறி களால் பேசிக் கொள்கின்றனர். இறுதியாக, வாய்விட்டே ஒருவரோடொருவர் பேசிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

யாரும் அறியாத வகையில், யாரும் நடமாடாத இடத்திற்கு ஓடியாடி விளையாடவும், பந்தாட்டாம் ஆடவும், புனல் நீராடி மகிழவும் தலைவன் தலைவியை அழைத்துச் செல்லும் பழக்கத்தை மேற்கொள்கிறான். தாங்கள் ஒழுகும்

களவொழுக்கத்தைத் தோழி எவ்வகையிலும் அறிந்து கொள்ளக்கூடாது என்பதில், தலைவனும் தலைவியும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள்.

தலைவியின் போக்கிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை யும், அளவுக்குமீறி அவளது உள்ளம் களிகொண்டு துள்ளு வதையும் கண்ட தோழி, தலைவியின் ஒழுக்கத்திலே ஐயங் கொள்கிறாள். யாரோடாவது களவொழுக்கத் தொடர்பு கொண்டிருப்பாளோ என்று எண்ணுகிறாள். அதனை எப்படியேனும் கண்டு பிடித்துவிடவேண்டும் என்று உறுதி கொள்கிறாள்.

ஒருநாள், தோழி தினைப்புனத்திற்கு அருகிலுள்ள மலை யின் வேங்கைமரத்தின் மறைவில் ஒளிந்து இருந்துகொண்டு, தலைவியின் நடவடிக்கைகள் தான் இல்லாதபோது எப்படி இருக்கின்றன என்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறாள். தோழி வீடு போய்விட்டிருப்பாள் என்ற எண்ணத்துடன் தலைவன் தலைவியிடம் வருகிறான். இருவரும் ஓடிப்பிடித்து விளையாடி மகிழ்ந்திருக்கிறார்கள். தோழி உண்மையைக் கண்டறிந்து கொள்கிறாள். செய்தியை யாரிடத்தும் வெளிப் படுத்தாமல் தனக்குள்ளேயே வைத்துக் கொள்கிறாள்.

தோழி தான் ஏதும் அறியாதவள்போல வழக்கம்போல் தலைவியிடம் பழகி வருகிறாள்; தலைவியும் தன் களவொழுக் கத்தைத் தோழி அறியமாட்டாள் என்ற எண்ணத்துடன் இருந்து வருகிறாள். சில நாட்கள் இப்படியாகக் கழிகின்றன.

ஒரு நாள் தலைவி தலைவனோடு சென்றிருக்கும் போது, தினைப்புனத்திலுள்ள கதிர்களையெல்லாம் பச்சைக்கிளிக் கூட்டங்கள் சூறையாடிச் சென்றுவிடுகின்றன. தலைவி திரும்பி வந்து பார்க்கும்போது தினைப்புனம் பாழாக்கப்பட்டுக் கிடக்கும் நிலையைக் காண்கிறாள்; கண்கலங்குகிறாள். என்ன செய்வதென்று தோன்றவில்லை; திகைக்கிறாள். கையைப் பிசைந்து கொள்கிறாள். எப்படிப்பட்ட தவறு செய்து

விட்டோம் என்று எண்ணி ஏங்குகிறாள். தோழி பார்த்து விட்டால், தாய் தந்தையர்க்குப் போய்ச் சொல்லிவிடுவாளே என்று அஞ்சுகிறாள். இறுதியாகப் பரண்மீது சோர்ந்து உட்கார்ந்து விடுகிறாள்.

சிறிது நேரங்கழித்துத் தோழி வருகிறாள். தினைக்கதிர் களையெல்லாம் கிளிகள் சூறையாடிச் சென்றுவிட்ட அலங் கோலத்தைக் கண்டு திகைக்கிறாள்.

தோழி : (தலைவியைப் பார்த்து) ஏனடி, இப்படி ஏனடி, நடந்தது?

தலைவி : (அழுதுகொண்டே) கிளிக்கூட்டங்கள் வந்து சூறையாடிச் சென்றுவிட்டன! என்னசெய்வதென்று எனக்கு ஒன்றும் தோன்றவில்லை!

தோழி : நீ அவைகளையெல்லாம் விரட்டவில்லையா?

தலைவி : விரட்டினேன்! ஆனால் என் விரட்டலுக்கு அஞ்சி அவை ஓடவில்லை!

தோழி : நீ கவண்கற்களைக் கொண்டு வீசினாய் அல்லவா?

தலைவி : ஆமாம் வீசினேன்! என்னால் முடிந்த மட்டும் கூச்சலிட்டுக்கொண்டு வீசிப் பார்த்தேன்! நான் ஒருத்தி மட்டும் எப்படியடி அவ்வளவு பெரிய கிளிக்கூட்டங்களை விரட்டியடிக்க முடியும்?

தலைவியின் தலைமயிர் பரந்து கிடப்பதையும், கண்கள் சிவந்திருப்பதையும், ஆடைகள் நனைந்து உலர்ந் திருப்பதையும் கண்டுகொண்ட தோழி, தலைவி தலைவனோடு சுனை நீராடவும், பந்தாடவும் சென்று வந்திருக்கிறாள் என்பதைத் தனக்குள்ளாகவே அறிந்துகொள்கிறாள்.

தோழி : கிளிகள் படையெடுத்து வந்தபோது, நீ வேறு எங்கேயேனும் சென்றிருந்தாயா?

தலைவி : (திடுக்கிட்டு) அப்படி எங்கும் போகவில்லையே! இங்கேயேதான் இருந்தேன்.

தோழி : இங்கிருந்து நீ எழுந்துபோகவே இல்லையா?

தலைவி : எழுந்துபோக எனக்கு வேறு வேலை என்ன இருக்கிறது? நான் இங்கேயேதான் நீ சென்றதி லிருந்து இருந்துவருகிறேன்!

தோழி : கிளிகளை விரட்டக்கூட எழுந்து செல்லவில்லையா?

தலைவி : (தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு) நான் ஒருத்தியாக இருந்ததால் இந்த இடத்திலிருந்தே கவண்கற்களை வீசிப்பார்த்தேன்! நான் என்ன செய்வேன்? என்னால் முடிந்தமட்டிலும் விரட்டி யடிக்கப் பார்த்தேன்!

தோழி : இந்த அழிவை உற்றார்கள் பார்த்தால், உன்னை இனிக் காவலுக்கு வைக்கமாட்டார்கள்! நீ வீடு போய்ச் சேரவேண்டியதுதான்!

தலைவி : (இனித் தலைவனைக் காணமுடியாமற்போய் விடுமோ என்பதை எண்ணி ஓவென அழத் தொடங்கி, அந்தக் கருத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று கருதி) காவலைச் சரியாகக் காக்காமைக்காகத் தாய் என்ன சொல்லித் திட்டுவார்களோ? தந்தை என்ன சொல்லி அடிப்பார்களோ? (என்று புலம்புகிறாள்)

தோழி : கதிர்கள் அழியும்படி கிளிகள் அவற்றைக் கவர்ந்து செல்லும்போது நீ ஓடிப்போயல்லவா அவைகளை விரட்டியிருக்க வேண்டும்?

தலைவி : நான் மட்டும் தனியாக எப்படியடீ ஓடுவேன்?

தோழி : (கேலி கலந்த குரலில்) நீதான் இவ்விடம் விட்டு எழுந்திருக்கவே இல்லை அல்லவா? நீ எழாத

வளாய் இருந்தாலும், அதற்காக இப்பொழுது ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?

தலைவி : கதிர்கள் அழிவைக் குறித்து உற்றார்கள் என்ன சொல்லுவார்களோ என்று நினைக்கிறேன்; அழுகை தானாக வருகிறது!

தோழி : அழாதேடீ! இங்கு அயலார் பலர் இருக்கிறார்கள். அவர்கள் போய் அலர் தூற்றுவார்கள்!

தலைவி : அலரா? என்னைப்பற்றி ஏன் அலர் தூற்றப்போகி றார்கள்? அப்படி என்னிடம் என்ன இருக்கிறது?

தோழி : இனி அவனைக் காணமுடியாமற் போய்விடுமோ என்று எண்ணி நீ அழுகிறாய் என்பதை அவர்கள் அறிந்துகொண்டுவிட்டால், அவர்கள் அலர் தூற்றாமல் வாளா இருப்பரோ?

தலைவி : (சற்றுத் திகைப்புற்றுப் பின் சமாளித்துக்கொண்டு ஏதும் அறியாதவள் போல்) எவனைக் காண முடியாது என்பதற்கடீ நான் அழப்போகிறேன்?

தோழி : (கேலிச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே) எல்லாம் தெரியுமடி! வேங்கைமலர் உதிரப்பெற்ற கூட்டிலே இருக்கும் மயில், தினைக் கதிர்களைக் கிளிகள் கொண்டு போவதை அறிந்திருந்தும், 'நாம் கொய்து கொண்டு போவதை அம்மயில் அறியாது என்று கிளிகள் கருதிக் கவர்ந்தேகுதல் போல, நான் உன் களவொழுக்கத்தை நன்றாக அறிந்துவைத் திருந்தும், "தோழி அறியமாட்டாள்" என்று கருதி நீ களவொழுக்கத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறாயே! இவற்றையெல்லாம் நான் அறியமாட் டேனாடீ!

தலைவி : (சற்று வெட்கத்துடன்) நீ எதைக் கொண்டு அறிந்ததாகக் கூறுகிறாய்?

தோழி : நின் சிவந்த கண்கள் அவற்றைக் கூறுகின்றனவே. மழவர்கள் பன்றி முதலிய விலங்குகள்மீது அம்பை எய்து, அதனை மீண்டும் பறித்து எடுக்கும்போது குருதிக் கறைகள் அவ்வம்பின்மீது எப்படிப் படிந்திருக்குமோ, அப்படி உன் கண்களிலே செவ்வரிகள் படர்ந்திருக்கின்றன! விலங்கினைக் கொன்று பறித்த அம்புபோல, உனது கண்களும் தலைவனை மயக்கிப் பாய்ந்து மீண்ட தன்மை யுடையனவாக இருக்கின்றன!

தலைவி, தோழியின் சொற்கேட்டு என்ன மறுமொழி பகர்வது என்று தோன்றாமல் நாணித் தலைகுனிகிறாள். தோழி தலைவிக்கு ஆறுதல் அளித்து, அவளது விருப்பத்தைத் தான் நிறைவேற்றிவைக்க ஆவன செய்வதாக கூறுகிறாள்!

* * *

நற்றிணை 13-ம் செய்யுளின் கருத்தைக் கொண்டு எழுதப் பட்ட காதற்காட்சியே மேலே காட்டப்பட்டதாகும். இதனைப் பாடியவர் கபிலர் ஆவார். கபிலர் சங்ககாலப் புலவர்களில் மிகச் சிறந்தவர். இவர் பாடிய பாட்டுக் கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவர் அக் காலத்து வள்ளல்களாலும், குறிப்பாக வேள்பாரியாலும் போற்றப்பட்டு ஆதரிக்கப்பட்டவராவார். இவரது அகம் - புறம் பற்றிய பாட்டுக்கள் தெவிட்டாத் தீங்கனிகள் ஆகும்.

எழாஅய் ஆகலின் எழில்நலந் தொலைய
அழாஅ தீமோ நொதுமலர் தலையே
ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி அன்ன சேயரி மழைக்கண்
நல்ல பெருந்தோ ளோயே கொல்லன்
எறிபொற் பிதிரில் சிறுபல தாஅய்
வேங்கை வீயுகும் ஓங்குமலைக் கட்சி
மயிலறி(பு) அறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே.

(நற்றிணை—13)

(பொழிப்புரை :) *தினைப்புனங் காவலையுடைய மழவர், ஆண்டுத் தின்று அழிக்கவந்த பன்றி முதலாய விலங்குகளை அம்பெய்து கொன்று, மீண்டும் அவற்றினின்றும் பறித்தெடுத்த அம்புபோன்ற செவ்வரிபரந்த குளிர்ச்சியையுடைய கண்ணை யும், நல்ல பெரிய தோளையும் உடையாய்! கொல்லனது உலைக்களத்து அடிக்கும் இரும்பின் பொறி சிதறுமாறு போலச் வேங்கையின் மலர்கள் சிறிதும் பலவுமாக உதிர்கின்ற உயர்ந்த மலையிலுள்ள கூட்டில் இருக்கும் மயில்கள்தாம் அறிதலைப் பசிய புறத்தினையுடைய கிளிகள் அறியா வாய், நெருங்கிய தினைக்கதிர்களைக் கவர்ந்து போகாநின்றன. அதனால், அக்கதிர்களும் அழிந்துபோகின்றனகாண்; அவற்றை ஓட்டவேண்டிய நீ இவ்விடத்திருந்தும் எழுந்தாயல்லை! அப்படி எழாது இருப்பினும், நின் அழகிய நலமெல்லாங் கெடும்படியாக அயலார் இருக்கும் இவ்விடத்து அழாது இருத்தலையேனும் செய்வாயாக!*

22. காதலனுக்குப் பரிந்து பேசிய காதலி!

பொருளீட்டி வரும் பொருட்டுத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து வேற்றுநாட்டிற்குப் புறப்படுகிறான். அவன் இடையே பலமலைகளையும் மடுவுகளையும், காடுகளையும் கழனிகளையும், பாலைநிலங்களையும் பசும்புல்வெளிகளை யும் கடந்து செல்லவேண்டியவனாக இருக்கிறான்.

தலைவன் தாண்டிச் செல்லவேண்டிய இடங்களில் வேங்கடமலையும் அதனைச் சார்ந்த காடுகளும் சேர்ந்த இடம் ஒன்றாகும். வேங்கட மலையைப் புல்லி என்ற மாவீரன் தனக்கு உரிமையுள்ளதாகக் கொண்டு ஆண்டுவருகிறான். அவன் விரைந்து செல்லக்கூடிய வலிய குதிரைப்படை யொன்றை வைத்துக்கொண்டு, அதனைக் கட்டியாண்டு வருகிறான். அவனது வேங்கடமலை இயற்கைச் செழிப்பால் நிறைந்து காணப்படுகிறது. இதழ்கள் விரிந்து தலைகவிழ்ந்து காணப்படும் அழகுமிளிர்ந்த காந்தள்செடிகள் அம்மலையின் சாரல்களிலே செறிந்து கிடக்கின்றன. இவற்றைத்தவிர அவ் வேங்கடமலைச் சரிவில் யானைகள் ஏராளமாக உலாவு கின்றன. ஆண் யானையைப் பாம்பு கடித்துக் கொன்றுவிட, அந்தத் துயரத்தைத் தாங்கிக்கொள்ள முடியாததாலும், பாம்பினைக் கண்டு அஞ்சுவதாலும் பெண்யானை பெருங் கூச்சலிட, அந்தக் கூச்சல் மலைப்பிளப்புகளில் சென்று தாக்கிட, அது எதிரொலியாக மாறுகிறது. இப்படிப்பட்ட நலன்க ளெல்லாம் ஒருங்கே செறிந்த வேங்கடமலைக் காட்டினுள் நுழைந்து தலைவன் செல்லவேண்டியவனாக இருக்கிறான்.

ஒருநாள் தலைவியும் தோழியும் ஓரிடத்தில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். தலைவி தலைவனது பிரிவாற்றாமையைக் கூறி வருந்திக் கொண்டிருக்கிறாள்.

தலைவன் இதுநேரம் எங்கு போய்க் கொண்டிருப்பானோ என்று இருவரும் கலந்து கற்பனை செய்து பார்க்கிறார்கள்.

தோழி : இதுநேரம் அவர் வேங்கடமலைக் காட்டிற்குள் நுழைந்திருப்பார் என்று நினைக்கிறேன்!

தலைவி : போடி, பைத்தியக்காரி! இப்பொழுதுதானா அவர் நுழைந்திப்பார்? முன்னமே நுழைந்து, இந்நேரம் அவர் காட்டின் இடைப்பகுதியில் சென்றுகொண் டிருப்பார்! அவர் போய்த்தான் பலநாட்கள் ஆகி விட்டனவே!

தோழி : அவரைப்போல் நெஞ்சழுத்தக்காரர் வேறு யாரும் இருக்க முடியாது

தலைவி : ஏனடி, அப்படிக் கூறுகிறாய்?

தோழி : ஏனடி என்றா என்னைக் கேட்கிறாய்? உன்னுடைய தோற்றமே அதனைத் தெளிவாகத் தெரிவிக்குமே!

தலைவி : என்னுடைய தோற்றத்திலே என்ன குறை?

தோழி : காதலர்மீது நீ கொண்ட காதல் உன் கண்களை மறைத்துவிட்டதே. உன் உடல் அழகு எல்லாம் கெடும்படி பசலைநிறம் உடம்பெல்லாம் பரவியிருப் பதைப் பார்! உன்னுடைய உடம்பு மிகவும் இளைத்து நலங்கெட்டுக் கிடப்பதைக் காண்! இப்படிபட்ட கோலத்தில் உன்னை விட்டுவிட்டுச் சென்ற தன்மை இருக்கிறதே, அது போதாதா அவரின் நெஞ்சழுத்தத்தைச் சுட்டிக் காட்ட!

தலைவி : அவர்தான் என்ன செய்வாரடீ? பொருள்தேடிவர அவர் வெளிநாட்டுக்குச் செல்லவேண்டியிருக்கிறதே!

தோழி : உன்னோடு கூடியிருந்து உனக்கு இன்பங்கொடுக்காமல், உன்மீது அன்புசெலுத்தாமல், பொருள்மீது அன்புகொண்டு, அதனைத் தேடி உன்னைக் கைவிட்டுச் சென்றுள்ளாரே, அது உனக்கு வருத்தத்தைக் கொடுக்கவில்லையா?

தலைவி : என்னை அவர் கைவிட்டுவிட்டுச் சென்றதை நினைக்கும்போதெல்லாம் எனக்கு வருத்தமாகத் தானிருக்கிறது! என்ன செய்வது?

தோழி : உன்வருத்தம் கொஞ்சநஞ்சமாக இருந்தால் கவலைப் படவேண்டிய இன்றியமையாமை இருந்திருக்காது. அவரது பிரிவால் நீ வருந்தும் வருத்தம் ஊராருக் கெல்லாம் தெரிந்து, அவர்கள் இழித்தும் பழித்தும் கூறக்கூடிய அலராக மாறியிருக்கிறது! இந்த நிலைமையை அவர் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

தலைவி : அவர் எண்ணிப்பார்க்காமலா இருந்திருப்பார்?

தோழி : அவர் எண்ணிப்பார்த்திருந்தால் உனக்கு இவ்வளவு அவதி ஏற்பட்டிருக்காதே! அவருக்குத் தானாக அந்த நினைவு வராவிட்டாலும், அவர் செல்லும் காட்டில் காணப்படும் காட்சியே அவருக்கு அந்த எண்ணத்தை நினைவுபடுத்துமே! ஆண் யானையைப் பிரிந்து வருந்தும் பெண்யானை போடும் கூச்சல் எப்படி மலைப்பிளவுதோறும் எதிரொலிக்கிறதோ, அப்படியே தம்மைப் பிரிந்து வருந்தும் தலைவியின் வருத்தம் ஊர் முழுதும் அலராக எதிரொலிக்குமே என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியிருக்க வேண்டுமே!

தலைவி : எனக்குப் பழிச்சொல் தோன்றும்படி காதலர் நடந்துகொள்கிறார் என்பது, எனக்கு மிக்க வருத்தத்தைத்தான் அளிக்கிறது. சோழன் கிள்ளிவளவன் சேரனது கழுமலம் என்ற ஊரைத் தாக்கி, அதன் மதிற்சுவரையெல்லாம் இடித்து அந்த ஊருக்கு நெருப்புவைத்தபோது எவ்வளவு பழிச்சொற்கள் கிளம்பினவோ அவற்றைவிட மிகவான பழிச்சொற்கள் என்னைப் பொறுத்துக் கிளம்பியிருக்கின்றன என்பதை நான் அறிவேன். அறிந்து என்ன செய்யமுடியும்?

தோழி : தலைவரது செயலின் கொடுமையை உணருகிறாய். ஆனால் அவரது குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறாய்! ஏடீ! உன்னுடைய போக்கு வேடிக்கையாகவல்லவோ இருக்கின்றது!

தலைவி : அவர் என்னைக் கைவிட்டுப் போய்விட்டார் என்றாலும், எனக்குப் பழிச்சொல் உண்டாகும்படி நடந்துகொள்கிறார் என்றாலும், அவர் என்னிடத்து மிக்க நட்புடையவராக இருக்கிறார். அவர் குறித்த காலத்தில் வந்து என்னிடம் அன்பு காட்டுவார் என்ற உறுதிப்பாடு எனக்கிருக்கிறது. "அவர் நீடுவாழ்வாராக!" என்றே இப்பொழுதும் நான் வாழ்த்துகிறேன்!

தோழி : நீ அவரை வாழ்த்திக்கொண்டே இங்கு இருக்கலாமடீ; ஆனால் ஊரிலே அலர் பரவுகிறதே. அதற்கு என்னடி செய்யப் போகிறாய்?

தலைவி : ஊரார் அலர் தூற்றினால் நன்றாகத் தூற்றிக் கொண்டு போகட்டும். அதைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை! காதலருடைய நட்புத் தான் எனக்குப் பெரிது; அவர் எப்படி நடந்து கொண்டாலும் அது அவரைவிட்டு நீங்காது என்ற உறுதிப்பாடு எனக்குண்டு!

தலைவி தலைவனைப் பிரிந்து வருத்தத்தோடு இருந்தாலும், பெருமித உணர்ச்சி குன்றாமல் இருக்கிறாள் என்பது தோழிக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

இது நற்றிணை 14ஆம் செய்யுட்கருத்தைத் தழுவி எழுதப்பட்ட காதற்காட்சியாகும். இதனை இயற்றியவர் மாமூலனார் என்ற புலவராவார். இவருடைய பாடல்களில் வரலாற்றுக் கருத்துக்கள் மிகுந்து காணப்படுவதால், இவரை ஒரு வரலாற்றாசிரியர் என்று கூறுவது தகும். இவருடைய பாடல்கள் நற்றிணை குறுந்தொகை அகநானூறு ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன.

தொல்கவின் தொலையத் தோள்நலஞ் சாஅய
நல்கார் நீத்தனர் ஆயினும் நல்குவர்
நட்டனர் வாழி தோழி குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞரட்பினும் மிகப்பெரி(து)
அலரெழச் சென்றனர் ஆயினும் மலர்கவிழ்ந்து
மாமடல் அவிழ்ந்த காந்தளஞ் சாரல்
ஞால்வாய்க் களிறு பாந்தள் பட்டெனத்
துஞ்சாத் துயரத்(து) அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் (து) இயம்பும்
கடுமான் புல்லிய காடிறந் தோரே.

(நற்றிணை—14)

(பொழிப்புரை :) தோழீ! மலர் தலைகவிழ்ந்து பெரிய இதழ் விரிந்த காந்தள் செடிகளையுடைய சாரலின்கண்ணே, தொங்குகின்ற வாயையுடைய ஆண்யானை பெரும்பாம்பின் வாயிலகப்பட்டு மடிய, தணியாத துயரத்தொடு மிக்க அச்சங்கொண்ட பெண்யானை பிளிறும் பெரிய ஒலியானது நீண்ட மலையிடத்திலுள்ள பிளவுகளிடத்தே சென்று எதிரொலி கிளம்பும்படியிருக்கும், விரைந்து செல்லக்கூடிய குதிரையையுடைய கள்வர் கோமான் புல்லி என்பவனுடைய வேங்கடமலையிலுள்ள காட்டின்கண்ணே சென்ற நம் காதலர், என் தோளின் அழகு

கெட்டு வாடிப் பழைய நலனெல்லாம் தொலையுமாறு, என்னைக்கூடி இன்பங்கொடுக்காதவராய்க் கைவிட்டுப் போய் விட்டார் என்று நீ கூறுகின்றாய். அப்படிக் கைவிட்டுவிட்டுப் போய்விட்டாரென்றாலும், அவர் சேரனது கழுமலம் என்ற ஊரின்கண்ணே உள்ள மதிற்சுவர்கள் ஒருமிக்க அழிய, அவற்றை இடித்து அழித்துக் கிள்ளி வளவன் அன்றைப் பகலிலேயே அவ்வூரைத் தீக்கிரையாக்கிய போரைக்காட்டிலும் மிகப்பெரிதாகிய பழிச்சொல்லுண்டாகும்படி சென்றார் என்றாலும், என்னிடத்து மிக்க நட்புடையவராதலால், குறித்த பருவக்காலத்தே வந்து அன்பு காட்டுவார். ஆதலால், அவர் நீடு வாழ்வாராக!

தோள்நலம் சாஅய் - உடம்பு மிகவும் சுருங்குதல்; நல்கார் - (இன்பங்) கொடுக்காதவராய்; நல்குவர் -(இன்பங்) கொடுப் பார்; குட்டுவன் - சேரன்; அகப்பா - மதில்; நூறி - அழித்து. செம்பியன் - சோழன்; அதாவது கிள்ளிவளவன்; ஞாட்பு - போர்; அலர் - பழிச்சொல்; ஞால் - தொங்குகின்ற; பாந்தள் - பாம்பு; களிறு - ஆண்யானை; பிடி - பெண்யானை; பூசல் - கூச்சல்; வரை - மலை; விடர் - மலைப்பிளவு. கடுமான் - விரை வாகச் செல்லும் குதிரை.

தலைவி, தன் காதலன்மாட்டுத் தான் கொண்டிருக்கும் அளவுகடந்த காதலன்பின் காரணமாக, அவன் கொடுமை புரிந்துள்ளான் எனினும், அவனைத் தோழிக்குக் காட்டிக் கொடுக்க மனமில்லாமல், அவன் சார்பாகவே பேசி, அவனது நட்பைப் பாராட்டிப் பேசும் தன்மை மிகச்சிறந்த பண்பாகும். தலைவியின் நல்ல உள்ளத்தின் மேம்பாட்டை இச் செய்யுள் அழகுற எடுத்துக் காட்டுகிறது.

புல்லி என்ற மாவீரன் வேங்கடமலைக்கு உரிமையுடைய வனாக இருந்தான் என்ற வரலாற்றுக் குறிப்பினையும், சோழன் கிள்ளி வளவன் சேரனோடு போரிட்டு அவனது கழுமலம் என்ற ஊரினது மதிற்சுவர்களை அழித்து அவ்வூருக்குப் பட்டப்பகலிலேயே நெருப்புவைத்தான் என்ற

வரலாற்றுக் குறிப்பினையும் மாமூலனார் இச் செய்யுளின் மூலம் அறிவிக்கிறார். மாமூலனார், புல்லி கிள்ளிவளவன் ஆகியோரால் ஆதரிக்கப்பட்ட புலவராக இருந்திருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. எனவேதான் புல்லியின் செல்வச்சிறப்பையும், கிள்ளிவளவனின் வென்றிச்சிறப்பையும் பாராட்டிப் பேசுகிறார் புலவர் எனலாம்.

கவலையுற்று வருந்துவதால் அழகுகெட்டு உடல் மெலிதல், மணர்கவிந்து மடல்விரிந்த காந்தள் செடிகள் மலைச் சாரலில் இருத்தல், யானையைப் பாம்பு கடித்தல், அதற்காகப் பெண் யானை கதறிக் கூச்சலிடுதல், அக்கூச்சல் மலைப்பிளவு களில் சென்றுபட்டு எதிரொலித்தல் போன்ற உண்மைகள், இச்செய்யுளின்மூலம் உணர்த்தப்படுகின்றன.

ஆண்யானையைப் பிரிந்த பெண்யானைபோடும் கூச்சல் மலைப்பிளவுகளிலெல்லாம் எதிரொலிக்கும் என்பது, தலைவனைப் பிரிந்து தலைவி வருந்தும் வருத்தம் ஊர்முழுவதும் அலராக மாறுகிறது என்பதற்கு உள்ளுறை உவமம் ஆகும். 'அலர்' என்பது பழிச்சொல்லைக் குசுகுசுவென்று ஒருவர் மற்றொருவரிடம் பரிமாறுவது.

* * *

23. சொல்லத் தொடங்கினாள்—சொல்லவில்லை!

நீண்டு உயர்ந்த பெரிய மலை; தொலைவில் நின்று காண்போர்க்கு அது நீலநிறமாகக் காட்சியளிக்கிறது. அதன் உச்சியிடத்தில் கருமுகிற் கூட்டங்கள் எப்பொழுதும் தவழ்ந்து கிடக்கின்றன. அதன் சாரலிலே மழை ஓயாமல் பெய்து கொண்டேயிருக்கிறது. மலையுச்சியிலும் சாரலிலும் பெய்யும் மழைநீர் ஒன்று திரண்டு பேரருவியாக மலையினின்றும் இழிந்து வருகின்றது. நீலக்கடலில் வெள்ளிய அலை காணப்படு வதைப்போல், நீல மலையிலிருந்து வெள்ளிய அருவி, இழிந்து வரும் தோற்றம் காட்சியளிக்கிறது. அந்த அருவி பிறகு அகன்று அடர்ந்த பெரிய காட்டினுள் ஆறாக நுழைந்து செல்கிறது. ஆற்றை யொட்டி ஆங்கோர் கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகள் செறிந்த இடம். அந்த இடத்தைத்தான் காதலன் தன் அருமைக் காதலியைத் தனியாகக் காண்பதற்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

அவனும் அவளும் எப்படியோ ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டுவிடுகிறார்கள். அவளுக்குப் பெற்றோர்களின் காவல் கட்டுப்பாடு பெரிதும் இடையூறாக நிற்பதால், இரவு நேரத்தில் காதலனை எதிர்ப்பட இயலவில்லை. பகற்பொழுதில் வேண்டுமானால் காண முயலுகிறேன் என்று காதலி தோழியின் மூலம் காதலனுக்குச் சொல்லியனுப்புகிறாள். அதற்கேற்பத்தான் காதலன் ஆள் நடமாட்டம் இல்லாத காட்டிடத்தைப் பகற்குறியிடமாகக் கொள்கிறான்.

தலைவனும் தலைவியும் அந்த இடத்தில் நாள்தோறும் எதிர்ப்படுகின்றனர். தம் கருத்துக்களையும், காதலின்பத்தை யும் பரிமாறிக்கொண்டு களவொழுக்கத்தை இனிதே நடத்திவருகின்றனர். ஊரார்க்கு அஞ்சிப் பெற்றோர் களுக்கு அஞ்சிக் களவொழுக்கம் நடத்துவதிலுள்ள தொல்லைகளைப் போக்கிக்கொள்ள, விரைவில் திருமணம் செய்துகொள்ளும்படியாகத் தலைவி, தலைவனை வற்புறுத்துகிறாள். தலைவன் களவொழுக்கத்தில் பெறும் இன்பத்தை அவ்வளவு விரைவில் விட்டுவிட மனமில்லாமல், அதனை நீட்டிப்பதிலே விருப்பஞ்செலுத்தி, திருமணத்தைக் காலந்தாழ்த்துவதற்கான சாக்குப்போக்குகளைச் சொல்லி வருகிறான்.

ஒருநாள், தலைவனைக் காணும் விருப்போடு தலைவி பகற் குறியிடத்தை நோக்கி வருகிறாள். தலைவனை எதிர்பார்த்து அந்த இடத்தில் காத்திருக்கிறாள். நீண்ட பொழுதாகியும் தலைவன் வரவில்லை. காதலனின் வரவுநோக்கிச் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டேயிருக்கிறாள். பொழுது ஏற ஏறத் திகிலும் திகைப்பும் ஏற்படுகின்றன. தலைவனோடு கூடிக் கலந்து ஓடிவிளையாடி மகிழ்ந்திருந்த இடத்தைக் காணும் போதெல்லாம் அவளுக்குப் பழைய நினைவுகள் வந்து, அவளை மிக்க வருத்தத்தில் ஆழ்த்துகின்றன. தலைவனைக் காணாத ஏமாற்றத்தால் அழுதுகொண்டிருக்கிறாள்.

தலைவியின் பெற்றோர்கள், மகள் எங்கேயோ தோழிமார் களோடு விளையாடப் போயிருக்கிறாள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். பொழுது சாயும் முன்னே எப்பொழுதும் வீடு திரும்பிவிடுகிற பெண், பொழுதுபோன பிறகும் வரவில்லையே என்று எண்ணிக் கவலை கொள் கின்றனர். மகளைத் தேடுவதற்காகத் தாய் புறப்பட்டுப் போகிறாள். மகளின் தோழிமார்களைப் பார்த்துத் தன் மகள் எங்கே என்று தாய் வினவுகிறாள். அவள் காட்டின் பக்கம் சென்றாள் என்று அவர்கள் கூறுகிறார்கள். தாய் காட்டுக்குள் நுழைந்து மகளைத் தேடுகிறாள். அங்கு ஆற்றங்

கரைதனில், மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, தன் மகள் அழுது கொண்டிருப்பதைத் தாய் காண்கிறாள்; ஓடோடிப் போய் மகளைக் கட்டித் தழுவிக்கொண்டு, "ஏன் கண்ணே இங்கு வந்தாய்? ஏன் அழுகிறாய்? எதையாவது அல்லது யாரை யாவது கண்டு அஞ்சினாயா? என்று, கேட்டுக்கொண்டே, அவளது கண்களைத் தாய் துடைத்துவிடுகிறாள்.

தலைவி மேலும் மேலும் தேம்பி அழுகிறாள். "ஏன் அழுகிறாய்? அழாதே கண்ணு! எங்கே என்னைப்பார்த்து ஒரு சிரிப்புச் சிரி பார்க்கலாம், என் கண்மணியே! நீ அழுவதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்லு!" என்று தாய் மகளைத் தேற்றுகிறாள்.

தலைவி தன்னைத் தேற்றுபவள் தாய் என்பதைச் சற்றே மறந்துவிட்டுத் தோழி என்ற நினைவில், நாணத்தையும் சிறிது மறந்துவிட்டு, "அந்த மலைநாடன் என் மார்பைவிட்டுப் பிரிந்து போய்விட்டான்; அதனால் எனக்கு வருத்தம்; ஆகவேதான் அழுதேன்!" என்று சொல்லுவதற்கு வாயெடுத்துத் திரும்பிப் பார்க்கும்போது, தாய் அருகிலே நிற்பதை அறிந்து, உடனே அந்தப் பேச்சை மாற்றி, "அந்த மலைநாட்டிலிருந்து விலங்கு ஒன்று துரத்திக் கொண்டுவந்தது; அந்த அச்சத்தால்தான் அழுதுகொண்டிருக்கிறேன்" என்று கூறிச் சமாளித்துக்கொள்கிறாள்; பிறகு தாய் தலைவியை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு செல்கிறாள்.

அந்தக் காட்டிற்கு அருகிலுள்ள மலைநாட்டில்தான் தலைவன் வாழ்ந்துவருகிறான். அந்த மலைநாடு வளப்பம் மிகுதியாகப் படைத்தது. மலைச்சாரலிலுள்ள காந்தள் பூக்களிலுள்ள தேனை உண்டு வண்டுகள் யாழிசைபோல் எப்பொழுதும் இசைபாடிக்கொண்டே இருக்கும். அப்படிப் பட்ட மலைக்கு உரிமையுடையவனாகத் தலைவன் விளங்கும் காரணத்தால்தான். "அந்த மலைநாடன்" என்று தாய்க்குச் சுட்டிக்காட்ட இருந்த தலைவி, "அந்த மலைநாட்டு விலங்கு" என்று, தன் உள்ளக் கருத்தை மறைப்பதற்காக மாற்றிக் கூறினாள் தாயிடம்.

தலைவன் தன்னை ஏமாற்றிவிட்டான் என்ற வருத்தத்தினால், சென்று காணவேண்டும் என்று எண்ணாமல், வீட்டிலே தங்கிவிடுகிறாள். பகற்குறி இடத்திற்குத் தலைவி இனி வரமாட்டாள் என்பதை உணர்ந்துகொண்ட தலைவன், அவளை அவள் வீட்டிற்கு அருகில் சென்று பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் வருகிறான். தலைவியும் தோழியும் வீட்டிற்குப் புறத்தே உள்ள தோட்டத்தில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். தலைவன், ஒரு மரத்தின் மறைவில் வந்து ஒளிந்துகொண்டு நிற்பதைக் கண்டுவிட்ட தலைவி, அவனைக் காணாதவளைப் போலத் தோழியோடு பேசிக் கொண்டிருக்கிறாள். தலைவனின் காதில் விழவேண்டும் என்ற எண்ணத்தில் தன் பேச்சைத் தலைவி திருப்புகிறாள்.

தலைவி : ஏடி! நான் அன்று காட்டிற்குப் போயிருந்தபோது என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமாடீ?

தோழி : ஆமாமடீ! அதைப்பற்றித்தானே உன்னிடம் கேட்க வேண்டும் என்று நினைத்தேன்! நான் இதுவரையில் மறந்தே போய்விட்டேன்! என்னடீ நடந்தது?

தலைவி : எனது அம்மா நான் அவருக்காகக் காத்திருந்த இடத்துக்கே வந்துவிட்டார்கள்!

தோழி : நீண்ட நேரமாகியும் உன்னைக் காணாததால், நீ எங்கே போயிருக்கக்கூடும் என்று உனது அம்மா எங்களைக் கேட்டார்கள். நீ வராதது எங்களுக்கும் கவலையாய் இருந்ததால், உன்னைத் தேடி அழைத்துவரட்டும் என்று கருதி, நாங்கள்தான் அவர்களை அந்தக் காட்டிற்குள் அனுப்பி வைத்தோம்.

தலைவி : அவர்கள் வந்தது எனக்கு எவ்வளவு தொல்லையாய்ப் போய்விட்டதடீ தெரியுமா?

தோழி : அம்மா உன்னையும் உன் காதலரையும் பார்த்து விட்டார்களா?

தலைவி : நல்ல வேளையாக அவரை அவர்கள் பார்க்க வில்லை; என்னைமட்டுந்தான் பார்த்தார்கள்!

தோழி : ஏன், அவர் அம்மாவைக் கண்டவுடன் ஓடி விட்டாரா?

தலைவி : இல்லையடீ! அவர் அன்று வரவேயில்லை! வந்து விடுவார், வந்துவிடுவார் என்று அவரை எதிர் பார்த்துக்கொண்டே நான் இருந்ததால்தான், பொழுது போனதை எண்ணிப்பார்க்காமல் இருந்து விட்டேன்!

தோழி : அம்மா வந்து உன்னைச் சினந்து கொண்டார் களா?

தலைவி : அம்மா வந்து என்னைக் கட்டிப்பிடித்து, என் கண்ணைத் துடைத்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்கள். நான் நீதான் வந்து கட்டிப்பிடித்துக் கொண்டு கேட்கிறாய் என்று நினைத்துக்கொண்டு, உயிரைவிடச் சிறந்ததான நாணத்தையும் விட்டு, "மலைநாடன் என் மார்பைவிட்டுப் பிரிந்ததாலே, வருத்தமுற்று அழுது கொண்டிருக்கிறேன்!" என்று சொல்ல வாயெடுத்துத் திரும்பிப் பார்த்தபோது தாயைக் கண்டேன். உடனே என் பேச்சை மாற்றி "மலைநாட்டு விலங்குக்காக அஞ்சி அழுகிறேன்!" என்று கூறினேன்.

தோழி : அம்மா அது கேட்டு ஒன்றும் சொல்லவில்லையா?

தலைவி : அவர்கள் என்ன சொல்ல முடியும்? என்னைத் தேற்றி அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந் தார்கள்!

தோழி : பிறகு எப்பொழுதாவது தலைவரைப் பார்த்தாயா?

தலைவி : இவ்வளவு தொல்லைகளையும் எவ்வளவு நாட்களுக்கு நான் தாங்கிக்கொண்டு, அவரைப்

பகற்குறியிடத்தில் கண்டுகொண்டிருப்பது? அவர் திருமணம் செய்து கொள்ளும் முடிவோடு வந்தா லொழிய, அவரை, இனி நான் பகற்குறியிடத்தில் காணப் போவதில்லை!

தலைவியின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவியின் உள்ளக் கிடக்கையை அறிந்து, திருமணத்தின் மூலம் அவளை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுகிறான்.

நற்றிணை 17ஆம் செய்யுளில் கண்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டதே மேலே காணும் காதற் காட்சியாகும். இச் செய்யுளினை இயற்றியவர் புலவர் நொச்சி நியமங்கிழார் ஆவார். இவர் நொச்சிநியமம் என்ற ஊரைச் சேர்ந்தவர். வேளாண்குடியில் தோன்றியவர் என்று தெரியவருகிறது. இவர் நற்றிணையில் மூன்றும், அகநானூற்றில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றும் ஆக ஐந்து பாடல்கள் பாடியுள்ளார்.

நாள்மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து
மால்கடல் திரையின் இழிதரும் அருவி
அகலிருங் கானத்(து) அல்கணி நோக்கித்
தாங்கவும் தகைவரை நில்லா நீர்சுழல்பு
ஏந்தெழில் மழைக்கண் கலுழ்தலின் அன்னை
எவன்செய் தனையோநின் இலங்கெயி(று) உண்கென
மெல்லிய இனிய கூறலின் வல்விரைந்(து)
உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்(து)
உரைக்கலுய்ந் தனனே தோழி சாரல்
காந்தள் ஊதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நரம்பின் முரலும்
வான்றோய் வெற்பன் மார்பணங் (கு) எனவே.

(நற்றிணை—17)

[தோழி : நாள் மழை தலைஇய குன்றத்து, அருவி அல்கணி நோக்கித் தாங்கவும், தகைவரை நில்லா மழைக்கண் கலுழ்தலின், அன்னை உண்கென இனிய கூறலின்; நாணு நனிமறந்து, வெற்பன் மார்பணங்கென உரைக்கலுய்ந்தனனே என்று கொண்டுகூட்டி முடிக்கவும்.]

(பொழிப்புரை :) தோழி! விடியற்காலையில் மழைபெய்துவிட்ட நல்ல நெடிய மழையினின்றும் கரிய கடலினலைபோல இழிகின்ற அருவி, அகன்ற பெரிய காட்டினிடத்துச் சென்று தங்கியோடும் அழகை நோக்கி, அது அவரைக் கண்டு பேசிய இடமாதலின், அடக்கவும் அடக்குமளவில் நில்லாமல், பெரிய அழகினையுடைய குளிர்ந்த கண்கள் நீரைப்பெருக்கி அழுதலானே, அதனைக் கண்ட அன்னை நோக்கி, "நீ ஏன் அழுகின்றனையோ; இனி அழாதே; நினது ஒளிவீசும் பற்கள் மகிழ்ச்சியைப் பெறுமாக" என்று மேன்மையான இனிய மொழிகளைக் கூறுதலாலே, நான் மிக விரைந்து உயிரைக் காட்டிலும் சிறந்த நாணத்தையும் மறந்துவிட்டு, மலைச் சாரலிடத்திலுள்ள காந்தள் பூவின் தேனையுண்ட நீலமணிபோலும் நிறத்தையுடைய வண்டு யாழிற்கூட்டிய இனிய நரம்பு ஒலித்தல் போல ஒலிக்காநிற்கும், வானத்திலோங்கிய மலையையுடைய தலைவனது மார்பைப் பிரிந்தமையால் ஏற்பட்ட வருத்தத்திற்கு அழுதேன் என்று 'கூறத்தொடங்கி, அப்பால் நினைவுவர அந்த நெருக்கடியிலிருந்து நீங்கிப் பிழைத்தேன்.

நாள்மழை - விடியற்காலம் பெய்யும் மழை; தலைஇ பெய்த; அல்குஅணி - தங்கும் அழகு; ஏந்தெழில் - பெரியஅழகு; கலுழ்தல் - அழுதல்; எயிறு - பல்; உய்ந்தனன் - பிழைத்தனன்; தும்பி - வண்டு; முரலும் - ஒலிக்கும்.

களவொழுக்கத்தை நீட்டித்தலாகாது என்பது பெண்களின் விருப்பமாகவும், அதனை எவ்வளவுக் கெவ்வளவு நீட்டிக்கவேண்டும் என்பது ஆண்களின் விருப்பமாகவும் இருக்கும் என்ற உண்மை இச்செய்யுளால் நன்கு புலப்படுத்தப்படுகிறது.

காதலனின் பிரிவாற்றாமையால் வருந்துகிறேன் என்று சொல்லத் தவறி வாயெடுத்த தலைவி, அதனைக் கூறாமல் தாயின் சினத்திற்கு ஆளாகாமல் தப்பித்துக்கொண்டாள் என்று கூறப்பட்டிருப்பது இனிமைதரும் நயம் ஆகும்.

நீலமலையினின்றும் அருவி இழிந்துவரும் தோற்றத்திற்கு, நீலக்கடலில் எழும்பும் அலையும், வண்டின் ஓசைக்கு யாழின் இசையும் உவமையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

பண்டைத் தமிழகத்தில் உயிரைக்காட்டிலும் நாணத்தைச் சிறந்ததாகக் கருதினர் என்பது, "உயிரினுஞ் சிறந்த நாண்" என்பதனால் அறியலாம்.

காந்தள் பூவின் தேனை உண்டுவிட்டுத் தன் விருப்பம் போல் இசைபாடித் திரியும் வண்டுபோல், தலைவியின் நலத்தை யெல்லாம் நுகர்ந்துவிட்டுத் தன் விருப்பம்போல் திரிகிறான் என்பது, உள்ளுறை உவமத்தால் பெறப்படும் கருத்தாகும்.]

24. குத்தாத கூர்முள்ளால் குத்து !

தலைவனும் தலைவியும் மணம் புரிந்துகொண்டு சில நாட்களே ஆகின்றன. அவர்களிருவரும் இல்லற இன்பத்தை இனிது நுகர்ந்து வருகின்றனர்.

அறிவிலும் ஆற்றலிலும் மேம்பாடுற்று விளங்கிவரும் தலைவன், வீரர் கூட்டம் ஒன்றிற்குத் தலைவனாய் இருந்து வருகிறான். அவன் வாழும் நாட்டின் அரசனுக்குத் தேவை ஏற்படும்போது சென்று உதவுவதும், அரசன் விரும்பித்தரும் பரிசுகளைப் பெற்றுவருவதும் தலைவனின் வேலையாகும்.

தன் நாட்டு அரசனுக்கும் வேற்றுநாட்டு அரசனுக்கும் வேற்று நாட்டிலே போர் மூளுகிறது. அரசன் படையெடுத்துக் கிளம்புகிறான். தலைவனும் தன் வீரர் கூட்டத்தை அழைத்துக் கொண்டு உடன் செல்லவேண்டியவனாகிறான். தலைவியை விட்டுப் பிரிந்துசெல்ல மனமில்லாமல், வேறு வழியில்லாமல், பிரியா விடைபெற்றுச் செல்லுகிறான்.

காதலியை விட்டுப் பிரிந்து செல்லுகிறோமே என்ற வருத்தம் அவனுக்கு ஏற்படுகிறது என்றாலும், இரண்டு கடமைகளை நிறைவேற்றுகிறாமே என்று எண்ணும்போது அவனுக்கு ஏற்படும் களிப்பு, அவ் வருத்தத்தைச் சிறிது மறக்கடிக்கிறது. நாட்டிற்காகப் போரிட்டு நாட்டிற்கு வெற்றி பயக்கவேண்டும் என்பது ஒன்று; அரசன் விரும்பிக் கொடுக்கும் பரிசுகளைப் பெறவேண்டும் என்பது மற்றொன்று, போரிடுதல்-பொருளீட்டுதல் ஆகிய இரு கடமைகளையும் நிறைவேற்றத் தலைவன் வெளியூருக்குப் புறப்படுகிறான்.

தன்னை விட்டுத் தலைவன் பிரிவது கண்டு தலைவி ஏங்குகிறாள் என்றாலும், தலைவன் கடமையாற்றச் செல்கிறான், அவனைத் தடுத்து நிறுத்தல் முறையாகாது என்று கருதித் தலைவி தன்னைத்தானே ஆற்றிக் கொள்கிறாள்.

தலைவன் தன் வீரர் கூட்டத்துடன், தன் அரசனுக்காகக் கோடைகாலம் முழுவதும் வெம்போர் புரிகிறான். மழைக் காலம் நெருங்குகிறது. போரோ முடிந்த பாடில்லை. முதல் மழையும் பெய்கிறது. இனிப் போரை நிறுத்திவிட வேண்டிவருமே, இப்பொழுதே முடிவு கண்டுவிட்டாலல்லவா நல்லது, என்று கருதித் தலைவன் மிகக்கடுமையாகப் போரிடு கிறான். இறுதியில் அரசனுக்கு வெற்றி பயக்கிறான். அரசனும் மகிழ்கிறான். அரசன் தலைவனுக்கு வெற்றிமாலை சூட்டுகிறான்; வெற்றிப் பரிசுகளாக ஏராளமான பொருள்களை வழங்குகிறான். தலைவன், அரசன் கொடுத்த பொருள்களை யெல்லாம் பெற்றுக்கொண்டு, வெற்றிக்களிப்போடு, தன் வீரர் கூட்டத்தோடு ஊருக்குத் திரும்புகிறான்.

தலைவன், குதிரைகள் பூட்டிய தேரிலே உட்கார்ந்து செல்ல, வீரர்கள் புடைசூழ்ந்து நடக்கின்றனர். வீரர்களின் நடைக்கு ஒப்ப, தேரை மெல்ல ஓட்டிச்செல்கிறான் தேர்ப்பா கன். ஊருக்குத் திரும்புகிறோம் என்ற நினைப்புடனே, தன் அருமைக் காதலியையும் காணப்போகிறோம் என்ற நினைப்பு வர, விரைவாகச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் தலைவனுக்கு ஏற்படுகிறது. ஆனால் தேர்ப்பாகனோ தேரை மெல்ல ஓட்டிக்கொண்டு செல்கிறான். காதலியை நினைத்துக் கொண்டு, தேர் விரைவாகச் செல்லவேண்டுமே என்று எதிா பார்க்கிறான் தலைவன். வீரர்கள் நடந்து வருவதை நினைத்துக்கொண்டு, அவர்களது நடைக்கு ஏற்பத் தேர் மெல்லச் செல்லவேண்டுமே என்று எண்ணுகிறான் தேர்ப்பாகன். தலைவன் தேர்ப்பாகனுக்குத் தன் எண்ணத்தைக் குறிப்பால் உணர்த்த ஆவலுறுகிறான்.

தலைவன் : பாகனே! தேரை விரைவாக ஓட்டு!

பாகன் தலைவ! தேரை விரைவாக ஓட்டினால் வீரர்கள் நம்மோடு சேர்ந்து அவ்வளவு விரைவாக ஓடிவர முடியாதே!

தலைவன் : அவர்கள் நம்மோடு வரவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லையே!

பாகன் : அவர்கள் வ ர வே ண் டும் என்று எண்ணிக் கொண்டல்லவா வருகிறார்கள்.

தலைவன் : அவர்கள் மெ ல் ல வரட்டும். இடையில் அணிந்துள்ள கச்சையைத் தளர்த்தி விட்டுக் கொண்டு, ஆங்காங்கு அவரவர்கள் விரும்பிய வண்ணம் தங்கித் தங்கி வரட்டும்! நாம் விரை வாகச் செல்வோம்! தேரை ஓட்டு!

பாகன் : தலைவ! அவர்களை விட்டுவிட்டு நாம் ஏன் விரைவாகப் போகவேண்டும்? அவர்களையும் அழைத்துக்கொண்டே மெல்லப் போகலாமே!

தலைவனின் உள்ளக் கிடக்கையைப் பாகனால் அறிந்து கொள்ள முடியவில்லை. வேறு ஏதொரு குறிப்பினாலாவது தன் உள்ளக் கிடக்கையைப் பாகனுக்கு அறிவிக்க இயலுமா என்று முயலுகிறான் தலைவன். அவன் சுற்றுமுற்றும் பார்க்கிறான். காட்டுச்சேவல் ஒன்றின் நடமாட்டம் அவன் கண்ணில் தென்படுகிறது. உருக்கிய கருநிறமுள்ள நெய்யில், வெள்ளிய பால்துளிகள் பட்டால் எப்படி காட்சியளிக்குமோ அப்படிப்பட்ட தோற்றம் அதன் கழுத்திடத்தே காணப் படுகிறது. தயிர் கடையும்போது எப்படிப்பட்ட ஒலி கிளம்புமோ அப்படிப்பட்ட ஒலி அதனிடத்தே கிளம்புகிறது. இவையெல்லாம் அவனைக் கவருகின்றன. மழை பெய்து ஈரம் புலராத நிலத்திலிருந்து புழு பூச்சிகளைக் கிண்டி, எடுத்துக் கொண்டு அந்தச் சேவல் போகும் காட்சியைக் காண்கிறான். உடனே பாகனுக்குச் சுட்டிக்காட்டிக் கூறுகிறான்.

தலைவன் : பாக! அதோ பார்! அந்தக் காட்டுச் சேவலை!

பாகன் : ஆமாம்! அழகாகத் தானிருக்கிறது!

தலைவன் : நான் பார்க்கச் சொல்லியது அதன் அழகையல்ல; அதன் செயலை!

பாகன் : அது என்ன செய்கிறது?

தலைவன் : புழு பூச்சிகளைக் கிண்டி எடுத்துக்கொண்டு செல்வதைப் பார்!

பாகன் : இயற்கைதானே இது! இதிலென்ன வியப்பு இருக்கிறது?

தலைவன் : வியப்புக்கல்ல நான் சொல்லியது. அது எங்கே போகிறது என்பதைச் சொல்லுவாயா?

பாகன் : பூ! இதுதானா? இதையா சொல்ல முடியாது. அது எங்கே போகும்? அது தன் பெட்டையைத் தேடிப்போகிறது!

தலைவன் : அது எவ்வளவு விரைவாகப் போகிறது பார்த்தாயா?

பாகன் : ஆமாம்! அதிலென்ன வியப்பு!

தலைவன் : அதுபோலப் பொருளைத் தேடிவைத்திருக்கும் நானும், என் காதலியைப் பார்க்க விரைவாகப் போகவேண்டாமா?

பாகன் : தலைவ! போகவேண்டாம் என்று யார் சொல்லு வார்கள்?

தலைவன் : பின் ஏன் காலந்தாழ்த்துகிறாய்?

பாகன் : இதை முன்னரே தெளிவாகச் சொல்லியிருந்தால் செய்திருப்பேன்!

தலைவன் : இப்பொழுதுதான் சொல்லுகிறேன், செய்வாயாக. நாம் முன்னே விரைந்து செல்லுமாறு இது

வரையில் குத்தாத உன்னுடைய கூரிய தாற்று முள்ளாலே குதிரையைக் குத்தித் தேரைச் செலுத்துவாயாக!

தலைவனின் உள்ளக் கிடக்கையை அறிந்து கொண்ட தேர்ப்பாகன், தலைவனின் கட்டளைக்கு ஏற்பத் தேரை விரைவாகச் செலுத்துகிறான்!

* * *

இது நற்றிணை 21ஆம் செய்யுளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் செய்யுளை இயற்றிய புலவர் மருதனிள நாகனார் என்பவர் ஆவார். இவரை மதுரை மருதனிள நாகனார் என்றும், மதுரை பூதனிள நாகனார் என்றும் கூறுவர். இவர் மதுரையைத் தம்மூராகக் கொண்டவர் என்று தெரியவருகின்றது. இவருடைய செய்யுட்களில் கற்பனைகளும், உள்ளுறையுவமங்களும், வெளிப்படையுவமங்களும் நயம்படக் காணப்படும். இவருடைய பாடல்கள் நற்றிணை; குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன.

* * *

விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்பழித் (து) அசைஇ,
வேண்டமர் நடையர் மென்மெல வருக
தீண்டா வைமுள் தீண்டிநாம் செலற்(கு)
ஏமதி வலவ தேரே உதுக்காண்
உருக்குறு நறுநெய் பால்விதிர்த் தன்ன
அரிக்குரல் மிடற்ற அந்நுண் பல்பொறிக்
காமரு தகைய கான வாரணம்
பெய(ல்) நீர் போகிய வியனெடும் புறவில்
புலரா வீர்மணல் மலிரக் கெண்டி
நாளிரை கவர மாட்டித்
தன்பெடை நோக்கிய பெருந்தகு நிலையே.

(நற்றிணை—21)

[வலவ! இளையர் நடையர் மென்மெல வருக! கானவரேணம் தன் பெடை நோக்கிய பெருந்தகு நிலை உதுக்காண்! நாம் செலற்குத் திண்டா வைமுள் தீண்டித் தேர் ஏமதி! என்று கொண்டு கூட்டவும்.]

(பொழிப்புரை :) பாகனே! விரைந்து செல்லுதலாலே வருத்தந்தரும் மிக்க நடைப்போக்கினையுடைய நம் வீரர், இடுப்பிலே கட்டிய கச்சையின் கட்டை நெகிழ்த்துவிட்டு, அங்கங்கே தங்கியிருந்துவிட்டுத், தாம்தாம் விரும்பிய வண்ணம் மெதுவான நடையராய் மெல்ல மெல்ல வருவார்களாக; உருக்கிய நறுமணம் கமழும் நெய்யில் பாலைச் சிதறவிட்டாற் போன்ற, தயிர்கடையும் போது எழும் ஒலிபோன்ற குரலை யுடைய கழுத்தினையுடைய, அழகிய நுண்ணிய பலவாகிய புள்ளிகளமைந்த, கண்டார்க்கும் விருப்பம் வரும் தகுதிப் பாட்டினையுடைய காட்டுக் கோழி, மழைபெய்த நீர் வடிந்த அகன்ற நெடிய காட்டிடத்தே சுவறாத ஈரமணலை நன்றாகத் தோண்டி, விடியற்காலையில் இரையாகிய புழுவைக் கவர்தலும், அதனைக் கொண்டுபோய்த் தன் பெடைக்கு ஊட்டவேண்டி அப்பெடையை நோக்கிய பெருமையோடுகூடிய நிலையை அதோ பாராய்; ஆதலால், நாம் முன்னே விரைந்து செல்லுமாறு, இதுவரையிலும் தீண்டாத கூரிய தாற்று முள்ளாலே குதிரையைத் தீண்டித் தேரைச் செலுத்துவாயாக!

பரி - செலவு; வீங்கு - மிக்க; இளையர் - வீரர்; யாப்பு - பிணிப்பு; அசைஇ - அவிழ்த்து; வைமுள் - தாற்றுமுள்; ஏமதி - செலுத்துவாயாக; வலவன் - தேர்ப்பாகன்; கான வாரணம் - காட்டுக் கோழி.

வினையை முடித்து மீளும் காதலன், தன் காதலியைக் காண எவ்வளவு துடிப்புணர்ச்சியோடு விரைந்தோடிச் செல்வான் என்பதைப் புலவர் இச்செய்யுளில் நயம்பட விளக்கிக் காட்டியுள்ளார். போர்முனைக்கு வரும்போது வீரர் களை அக்கறையோடு உடன் அழைத்துக்கொண்டுவந்த தலைவன், திரும்பும்போது, அவர்கள் மெல்ல வேண்டு

மானாலும் வரட்டும். தான் மட்டும் விரைவாகச் செல்ல வேண்டும் என்ற கருத்தைத் தேர்ப்பாகனிடத்தில் தெரிவிப்பதிலிருந்து, தலைவனின் காதலுள்ளத்தின் துடிப்பை அறிந்து கொள்ளலாம். தேரை இழுத்துச் செல்லும் குதிரைகள் எவ்வளவு விரைவாக ஓடினாலும், அது தலைவனுக்கு விரைவாகத் தெரியவில்லை. காதலியை இன்னும் விரைவாகக் காணவேண்டும் என்று அவன் எண்ணுவதால், குதிரைகளின் ஓட்டம் அவனுக்குக் குறைவாகவே படுகிறது. அதனால்தான் அதுவரையில் பயன்படுத்தாத தாற்றுமுள்ளால் குதிரையைக் குத்தி விரைவாக ஓட்டும்படி தலைவன் கூறுகிறான். இவையெல்லாம் தலைவனின் உள்ள நிலையை எடுத்துக்காட்டும் அறிகுறிகளாகும்.

தலைவன் தன்னுடைய உள்ளக் கிடக்கையைத் தேர்ப் பாகனுக்கு அறிவிக்க, பெட்டைக் கோழியை நோக்கி இரை கொண்டு செல்லும் காட்டுச்சேவலின் செயலைச் சுட்டிக் காட்டியதாகப் புலவர் கற்பித்திருக்கும் கற்பனை படித்துப் படித்து மகிழ்வதற்குரியதாகும்.

இச்செய்யுளில் முல்லை நில ஒழுக்கமே மிகுத்துக் கூறப் படுதலுக்கேற்ப, முல்லை நிலத்திற்குரிய 'உருக்கு நெய்யில் பால்துளிகள்', 'தயிர் கடையும் ஒலி' போன்றவைகளை உவமைகளாகக் கூறியிருக்கும் திறன் வியந்தின்புறுதற்குரிய தாகும்.

தாற்றுமுள் கொண்டு குதிரையைக் குத்தி விரைவாக ஓட்டும் பழக்கம் அக்காலங்களிலும் இருந்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

25. வெட்கத்தால் வெளியிடவில்லை!

பாண்டிய நாட்டில் கொற்கைத் துறைமுகத்தை அடுத்த சிற்றூர். இயற்கை வளன்களெல்லாம் கொழிக்கும் இடம். எங்கு பார்க்கினும் சாலைகளும் சோலைகளும் கண்ணுக்கினிய காட்சிகளை வழங்குகின்றன!

அடர்ந்த சோலை! அதில்தான் அந்த ஆணழகனும் பெண்ணழகியும் நாள்தோறும் ஒருவரையொருவர் எதிர்ப் படுவது வழக்கம். தலைவனும் தலைவியும் தனியே கூடியிருந்து சிரித்துப் பேசி மகிழ்ந்திருக்கும்போதெல்லாம், யாரும் அந்தப் பக்கம் வந்துவிடாமல் காவல் புரிந்து கண்காணித்து வருகிறாள் தோழி.

உற்றார்க்கும், ஊரார்க்கும் தெரியாமல் நடந்துவரும் இந்தக் களவொழுக்கம் நீண்ட நாட்களாக நடைபெறுகிறது. காதலியைக் காண்பதும், அவளோடு கூடியிருந்து மகிழ்ந்து விட்டுச் செல்வதும் காதலனுக்குத் தனி இன்பம் தருகின்றன. இந்தக் களவொழுக்க இன்பத்தை நாள்தோறும் பெறவேண்டும் என்பதிலே ஆவலுற்றுக் களவொழுக்கத்தை எவ்வளவுக் கெவ்வளவு நீண்டநாட்கள் நீட்ட முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு மிக்க நாட்கள் நீட்டுவதில் கவனம் செலுத்துகிறான் தலைவன்.

தாய் தந்தையர்க்கு அஞ்சித், தமையனார்க்கு அஞ்சி, உறவினர்க்கு அஞ்சி, ஊரார்க்கு அஞ்சி, மறைந்து மறைந்து சென்று காதலனைப் பார்த்துவிட்டுத் திரும்புவது என்பது தலைவிக்கு தொல்லைதரும் ஒன்றாகவே இருந்து வருகிறது.

தொல்லையை எப்படித் தவிர்க்கலாம் என்று சிந்திக்கிறாள். ஊரார் அறியச் செய்யப்படும் திருமணத்தைச் செய்துகொண்டால், இருவரும் வெளிப்படையாகவே கூடிவாழலாமே என்று எண்ணுகிறாள். தன்னை விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி தலைவனிடம் எப்படி நாணத்தைவிட்டுச் சொல்வது என்று தெரியாமல் விழிக்கிறாள்.

சோலைக்குப் புறத்தே நின்று, யாரேனும் வந்துவிடுவார்களோ என்ற அச்சவுணர்வுடன், வழிகளின்மேல் விழிகளை வைத்துக்கொண்டிருந்து, எவ்வளவு நாட்களுக்குத்தான் காவற்றொழில் புரிவது என்று தோழி மனதிற்குள் சலித்துக்கொள்கிறாள். தலைவனுக்கும் தலைவிக்கும் திருமணம் நடந்தேறிவிட்டால், தனக்குத் தூது செல்லும் வேலையும், காவல் காக்கும் வேலையும் குறையுமே என்று அவள் கருதுகிறாள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு விரைவில் திருமணம் நடைபெறுவதற்கான வழி ஏதும் ஏற்படாது போலிருக்கிறதே என்பதை அறிந்துகொண்ட தோழி, ஒருநாள் தலைவியைப் பார்த்து, "ஏடீ! எவ்வளவு நாட்களுக்குத்தான் எனக்கு இந்தக் காவல் காக்கும் தொழிலைக் கொடுத்துக் கொண்டிருக்கப் போகிறாய்? எப்பொழுதுதான் உனக்குத் திருமணம் நடைபெறுமோ? நானும் எப்பொழுதுதான் 'அக்கடா' என்று உட்காரப்போகிறேனோ? தெரியவில்லை!" என்று சலிப்புடன் கூறுகிறாள்.

அதற்குத் தலைவி, "திருமணம் விரைவாக நடைபெற வேண்டும் என்று நானுந்தான் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறேன். திருமணம் நடைபெறாமலிருப்பது எனக்குந்தான் தொல்லையாக இருக்கிறது! நான் எல்லோர்க்கும் எவ்வளவு அஞ்சி அஞ்சி நடக்கவேண்டியிருக்கிறது தெரியுமா?" என்று வருத்தத்துடன் கூறுகிறாள்.

"பின், ஏன் திருமணம் செய்து கொள்வதற்குக் காலந் தாழ்த்துகிறாய்?"

"நானா காலந் தாழ்த்துகிறேன்?"

''பின் யார் தாழ்த்துகிறார்கள்?''

''திருமணம் செய்து கொள்ளும்படி நீ வற்புறுத்த வில்லையா?''

''நானா?''

''நீயல்லாமல் வேறு யார் வற்புறுத்துவார்கள்? திருமணம் செய்துகொள்ளப்போகிற நீதான் வற்புறுத்தவேண்டும்!''

''நான் எப்படியடீ வற்புறுத்துவேன்? திருமணம் பற்றிப் பேசலாம் என்று எண்ணினால், உடனே வெட்கம் தொண்டையை அடைக்கிறது! நான் என்னடீ செய்வேன்!''

''உன்னால் முடியாவிட்டால் சொல்லு, நான் வற்புறுத்திக் கேட்கிறேன்! எப்படியாவது நீயாவது அவருக்குச் சொல்லடீ!''

தோழிக்கும் தலைவிக்கும் இடையே இப்படி உரையாடல் நடந்த பிறகு, அடுத்துத் தலைவனைக் காணும்போது, அவனிடம் திருமணம்பற்றி வற்புறுத்தவேண்டும் என்று தோழி எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

மறுநாள், தலைவியை வரவேண்டாம் என்று சொல்லி விட்டுத், தோழிமட்டும் சோலைப்பக்கம் நோக்கிச் செல்கிறாள். தலைவன் வழக்கம்போல் தலைவியைக் காணக் குறிப்பிட்ட நேரத்தில் சோலைக்கு வந்து சேருகிறான். அங்குத் தலைவியைக் காணாமல், தோழிமட்டும் நின்றிடக் கண்டு திகைப்படைகிறான். சுற்றுமுற்றும் பார்க்கிறான். தலைவி கண்ணுக்குப் படவில்லை. தோழியின் அருகே வந்து, ''என் அருமைக் காதலி எங்கே?'' என்று வினவுகிறான்.

தோழி : ''அவள் வரவில்லை!''

தலைவன் : ''ஏன்? அவள் உடலுக்கு ஏதேனும்...!''

தோழி : ''அப்படி ஒன்றும் புதிதாக ஏற்படவில்லை!''

தலைவன் : ''நேற்றுக்கூட நன்றாகத்தானே இருந்தாள்!''

தோழி : "உன் கண்பார்வைக்குத் தோற்ற அளவில் நன்றாகத்தான் இருந்திருப்பாள்! அவள் உள்ளம் படும் வேதனையை நீ எப்படி அறிந்திருக்கப் போகிறாய்?"

தலைவன் : நேற்று என்னைவிட்டுப் பிரியும்போது மிக்க அன்போடுதான் பிரிந்து சென்றாள்! என்மீது அவளுக்கு வருத்தம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரிய வில்லையே!"

தோழி : "வெளிக்குக் காட்டிக்கொண்டால் அல்லவா, அவளது வருத்தம் உனக்குத் தெரியப்போகிறது.

தலைவன் : "ஏன் அவள் வருத்தப்படவேண்டும்?"

தோழி : "நீ திருமணம் செய்துகொள்ளவில்லையே என்று தான் அவள் வருந்துகிறாள்!"

தலைவன் : "நான் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று கூறவில்லையே!"

தோழி : "நீ அப்படிக் கூறவில்லை என்றாலும் காலந் தாழ்த்திக் கொண்டு வருகிறாயே?"

தலைவன் : "நான் காலந்தாழ்த்துவதுபற்றி அவள் ஒன்றும் என்னிடம் கூறவில்லையே! களவொழுக்கம் நீடிப்பது எனக்கு எப்படி இன்பந் தருவதாக இருக்கிறதோ அப்படித்தான் அவளுக்கும் இன்பந் தருவதாக இருக்கிறது என்றல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறேன்! காலந்தாழ்த்துவதில் அவளுக்குத் தொல்லை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே!

தோழி : "அவள் தன்னை விரைவாகத் திருமணம் செய்து கொள்ளும்படி, உன்னிடம் எப்படி வாய்விட்டுச் சொல்லுவாள்? அவள் ஒரு பெண் அல்லவா? வெட்கம் அவளைத் தடுக்குமே! இது நீயாக

உணர்ந்துகொள்ளவேண்டிய ஒன்றேதவிர கேட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்ப தில்லையே! அவள் உன்னிடம் கூறாமலிருக்கிறாள் என்பதற்காக, அவளுக்குத் தொல்லை ஏதும் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டாயா?"

தலைவன் : "அவளுக்கு என்ன தொல்லை?"

தோழி : என்ன தொல்லையா? பருவ மங்கையான அவள் வெளியே செல்லுதல் தகாது என்று கருதி அவளது தாய் காவற் கட்டுப்பாடுகளை மிகுதியும் ஏற்படுத்தியிருக்கிறாள். அந்தக் கட்டுக்காவல் களையெல்லாம் நாள்தோறும் மீறிவருவ தென்றால் அவ்வளவு எளிதல்லவே? அதுமட்டு மல்லாமல் ஊரார் என்ன என்ன பழி தூற்று கிறார்களோ என்றும் அஞ்ச வேண்டியிருக்கிறது. எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படிப்பட்ட தொல்லைகளுக்கு ஆளாகிக் கொண்டிருப்பது?"

தலைவன் : "இப்பொழுது என்ன செய்து கொண்டிருக் கிறாள்?"

தோழி : "அவள் நலமெல்லாம் குலையும்படியாக உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கிறாள்? நீதான் அவளது அழகிய கண்களைப் பார்த்திருப்பாயே! கொற்கைப் பட்டினத்தின் தெளிந்த நீர்த்துறை யில், சிறிய பசுமையான இலைகளோடு கூடிய நெய்தல் மலர் எப்படிப்பட்ட அழகோடு காட்சி யளிக்கின்றதோ, அப்படிப்பட்ட அழகுபயக்கும் அவளது கண்கள், இப்பொழுது அழகு குலைந்து காணப்படுகின்றன!"

தலைவன் : "நேற்றுப் பார்க்கும்போது, அவளது உடலில் வேறுபாடு ஒன்றையும் காணமுடியவில்லையே!"

தோழி : "தலைவி, தன்னிடத்தில் காணப்படும் வேறுபாடு களையெல்லாம், உற்றாரும் ஊராரும் கண்டு கொள்ளமுடியாதபடி, எப்படியெல்லாம் மறைத்துக்கொள்ள முடியுமோ, அப்படியெல்லாம் மறைத்துக் கொள்கிறாள்! நீயோ மற்றவர்களோ எப்படி அவ்வளவு எளிதாக அந்த வேற்றுமை களைக் கண்டுகொள்ளமுடியும். தலைமயிர் சரிந்து விழும் போதெல்லாம், காற்றடிப்பதால் அவிழ்ந்து விழுவதாகக் கருதும்படி அதனை வாரி முடித்துக் கொள்கிறாள்! கழலும் வளையல்களைக் கழலாத வாறு இறுக்கிக் கைகளில் வாட்டந் தோன் றாதபடி மறைத்துக் காட்டுகிறாள்! உடம்பில் ஏற்படும் களைப்பு காதல் நோயால் ஏற்படுகிறது என்பதைக் காட்டிக் கொள்ளாமல், மற்றப் பெண்கள் கூட்டத்தோடு சேர்ந்து விளையாடு வதால் ஏற்படுகிறது என்று காண்போர் கருதும்படி நடந்துகொள்கிறாள்! இவையெல்லா வற்றையும் மற்றவர்களுக்காகச் செய்கிறாள்! எனவே மற்றவர்களால் அறிந்துகொள்ள முடிய வில்லை. அவளின் உண்மையான நிலையை உன்னால் கூடவா அறிந்துகொள்ள முடிய வில்லை!"

தலைவன் : "களவொழுக்கத்தில் பெறும் காதலின்பத்தால் இவற்றையெல்லாம் காண நான் மறந்து விட்டேன்."

தோழி : "எல்லாவற்றையும், அவள் மறைத்துப் பார்த் தாள்; ஆனால் அழுகையை மட்டும் அவளால் மறைக்க முடியவில்லை. அவளுடைய கண்கள் இப்பொழுது ஓயாமல் அழுதுகொண்டிருக்கின்றன. கட்டுப்பாடு மிகுதியும், உன்னைக் காணமுடிய வில்லையே என்ற வருத்தமும் அவளை அழச் செய்கின்றன. அவள் காதல் நோயால் வருந்திக்

கொண்டிருக்கிறாள் என்பதை அவளது கண்கள் இப்பொழுது காட்டிக்கொண்டேயிருக்கின்றன: நான் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லி விட்டேன்; இனி நீ செய்ய வேண்டியதைச் செய்!''

இவ்வாறாகத் தலைவியின் நிலையைத் தோழி விளக்கிக் கூறியதும், மனம் உருகிய தலைவன், ''விரைவில் வந்து மணம் முடிப்பேன்; அதற்கான முயற்சியில் இப்பொழுதே ஈடுபடு கிறேன். இச்செய்தியைத் தலைவியிடத்தில் போய்ச் சொல்'' என்று கூறுகிறான்.

தோழி மிக்க மகிழ்ச்சியோடு, புன்முறுவல் பூத்த முகத்துடன், ஓடோடிப்போய்த் தலைவியிடத்தில் செய்தியை அறிவிக்கிறாள். இனிய செய்தியைக் கேள்வியுற்ற தலைவியும் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறாள்.

* * *

நற்றிணை 23ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு இக் காதலோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. செய்யுளை இயற்றியவர் கணக்காயனார் என்ற புலவர் பெருந்தகையார் ஆவார். இவரது பெயர் குறுந்தொகையில் கணக்காயன் தத்தன் என்று கூறப்படுவதாலும், மதுரைக் கணக்காயன் என்று வேறு வேறு இடங்களில் கூறப்படுவதாலும், இவரது இயற்பெயர் தத்தன் என்பதும், ஊர் மதுரை என்பதும் பெறப்படுகின்றன. இவர்தான் நக்கீரரின் தந்தையாவார் என்று கூறுவர். இவர் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராக விளங்கியதால், இவரைக் கணக்காயர் என்று வழங்கினர். இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. தலைவியின் ஆற்றாமையை உணர்ந்த தோழி தலைவனைத் திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துவதால், இது குறிஞ்சி ஒழுக்கத்தின் பாற்பட்ட செய்யுளாகும்.

தொடிபழி மறைத்தலில் தோ(ள்) உய்ந்தனவே
வடிக்கொள் கூழை ஆயமோ(டு) ஆடலின்
இடிப்பு மெய்யதொன்(று) உடைத்தே கடிக்கொள
அன்னை காக்கும் தொல்நலம் சிதையக்
காண்தொறும் கலுழ்தல் அன்றியும் ஈண்டுநீர்
முத்துப்படு பரப்பில் கொற்கை முன்துறைச்
சிறுபா(சு) அடைய செப்பூர் நெய்தல்
தெள்நீர் மலரில் தொலைந்த
கண்ணே காமம் கரப்(பு) அரிய அவ்வே.

(நற்றிணை—23).

(பொழிப்புரை :) வாரிமுடித்த கூந்தலையுடைய இவள் தன்னைப் பிறர் கூறும் பழிச் சொற்களுக்கு அஞ்சி, வளைகளைக் கழலாதவாறு செறித்து மறைத்தலாலே தோள்கள் வாட்டந் தோன்றாவாயின; அல்லாமலும் தன் ஆயத்தாரோடு விளையாடுதலால், உடம்பில் களைப்பும் அவ்விளையாட்டினால் உண்டாகியது என்று நினைப்பதற்குரியதாய் இருந்தது: காவல் மிகுதியாக, அன்னையானவள் பாதுகாக்கும் இவளது பழைய நலமெல்லாம் சிதையும்படி காணுந்தோறும் அழுதலல்லாமலும், நெருங்கிய நீர்மிக்க முத்துக்கள் விளைகின்ற கடற்பரப்பினையுடைய கொற்கை நகரத்து முன்புள்ள துறையிலிருக்கும் சிறிய பசிய இலைகளையுடைய அழகமைந்த நெய்தலின் தெளிந்த நீரிலுள்ள மலர்போலக் கண்களே அழகு குலைந்தன; அவை காதலை மறைக்க முடியாதனவாய் இருக்கின்றன; ஆதலாலே உனக்கு ஏற்றதொன்று செய்வாயாக!

தொடி - வளையல்; உய்ந்தன - வாழ்ந்தன; கூழை - தலைமயிர்; ஆயம் - கூட்டம்; இடிப்பு - களைப்பு; கடி - காவல்; தொல் - பழமையான; கலுழ்தல் - அழுதல்; ஈண்டு - நெருங்கிய; பாசு - பாசி; கரப்பு - மறைப்பு.

* * *

காதலன் விரைவாக மணந்துகொள்ளாத நிலையில், களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் காதலி எவ்வளவு

வேதனைப்படுவாள் என்பதையும், எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாவாள் என்பதையும் இச்செய்யுள் அழகுற எடுத்துக் காட்டுகின்றது.

பெண் தக்க பருவம் எய்தும்போது, தாய் அவளுக்கு மிகுதியான காவல் போட்டு வீட்டிற்குள்ளேயே இருக்கும்படி செய்வாள் என்பதும், இளம்பெண்கள் மற்ற பெண்களோடு கூட்டமாகக் கூடி இருந்து விளையாடிப் பொழுதுபோக்கு வார்கள் என்பதும் பெறப்படுகின்றன.

கொற்கைத் துறைமுகத்தை அடுத்துக் கடற்பரப்பில், நீரோட்டமுள்ள நல்ல முத்துக்கள் கிடைத்தன என்ற செய்தி இச்செய்யுளின் மூலம் அறியக் கிடக்கின்றது.

கொற்கையில் முத்துக் கிடைக்கும் செய்தியைத் தோழி தலைவனுக்கு நினைவு படுத்துவதன்மூலம் ஒரு கருத்தைத் தலைவனுக்கு உணர்த்த முற்படுகிறாள். அதாவது தலைவன் திருமணம் செய்துகொள்ள முயல்வானேயானால், அந்தச் செய்தி தலைவியின் வீட்டார்க்கு மிக்க மகிழ்ச்சியளிக்கும் என்பதாகும். கொற்கை நீரில் முத்து விளையும் என்பது உள்ளுறை உவமமாகும்.

26. நன்று என்றது நன்று !

இல்லற வாழ்வின் இன்பத்தை இனிது துய்க்கிறார்கள் தலைவனும் தலைவியும். அவர்களின் இல்லறம் குறைவறச் செவ்வனே நடைபெறுகிறது.

தலைவியோடு, தான் சேர்ந்து வாழ்கிறோம் என்பதில் தலைவனுக்கு அளவிலா மகிழ்ச்சி. அதுபோல், தலைவன் தன்னை விட்டு நீங்காமல், தன் அன்புப் பணிவிடைகளை ஏற்று உடன்வாழ்கிறானே என்பதில் தலைவிக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

காலம் குளிர்காலமாகவும், பனிக்காலமாகவும் இருந்ததால் தலைவனை எங்கும் வெளியேற முடியாமல்செய்தது. தலைவன் சேர்த்து வைத்திருந்த பொருள், செலவுக்குப் போதுமானதாக இருந்ததால், வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு அவனை அது உள்ளாக்காமல் இருந்தது. இடையில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லாமலிருப்பதற்குக் காரண மாக இருந்தவை இயற்கையால் ஏற்பட்ட காலமும், செயற்கை யால் ஏற்பட்ட செல்வச் செழிப்பும் ஆகும்.

இல்லறம் இனிது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேனிற் காலமும் பிறக்கிறது. உற்றார் உறவினரைக் காப்பாற்றுதல், விருந்தினரை வரவேற்றல், இரப்போர்க்கு ஈதல், அறவோரிடம் அன்புகாட்டுதல் போன்ற இல்லறச் செயல்கள் நல்ல முறையில் நடந்தேறி வருகின்றன. சென்ற கோடைக்காலத்தில் தலைவன் ஈட்டிவந்த பொருளை

யெல்லாம், தலைவனும் தலைவியும் இல்லறச் செயல்களுக் காகக் குளிர்காலத்தில் எடுத்து எடுத்துச் செலவழிந்து வந்த தால், அது மிகவும் குறைந்து, இப்பொழுது அருகிக் காணப் படுகிறது. செல்வம் குறைந்து கொண்டு வருவதை எண்ணித் தலைவன் கவலையுறுகிறான். பொருள் போதுமானதாக இருந்தால்தான் இல்லறம் இனிது நடைபெறும்; இல்லறம் இனிது நடைபெற்றால்தான் இன்பம் ஏற்படும் என்ற இந்த உண்மையைத் தலைவன் நன்கு அறிந்திருக்கும் காரணத்தால், பொருள் தேடவேண்டும் என்பதில் கருத்தும் கவலையும் செலுத்தவேண்டியவனாகிறான். பொருள் தேடப் புறப்படு வதற்கு ஏற்ற காலமாகிய வேனிற்காலமும் பிறந்துவிட்டதால் தலைவனின் கவலை நாளுக்குநாள் மிகைப்பட்டுக்கொண்டே போகிறது. இப்பொழுது இருக்கும் பொருளோ தலைவிக்கு மட்டும் கோடைக்காலத்திற்கு மட்டும் போதுமானதாகத்தான் இருக்கிறது. தலைவன் வெளியேறாமல் இருவரும் தங்கி யிருப்பது என்ற நிலை ஏற்பட்டால், இருக்கும் பொருள் இருவர்க்குமே கோடைக்காலம் முழுவதற்கும்கூட வராது என்பது உறுதி. இந்த நிலையில்தான் பொருள்தேட வெளியூர் புறப்படலாமா என்று எண்ணுகிறான் தலைவன்.

தலைவியை விட்டுத் தான் பிரிந்துசெல்ல வேண்டியிருக் கிறதே என்ற வருத்தமும், தான் பிரிந்து செல்வதால் தலைவி வருந்துவாளோ என்ற வருத்தமும், அவனது உள்ளத்தைக் குடைகின்றன. இல்லறத்தை நடத்துவதற்கான பொருளைத் தேடித்தர வேண்டியது தன் கடமையாதலால், அந்தக் கடமையை மறந்து, பிரிவினையால் ஏற்படும் துன்பத்தை எண்ணி வருந்திக் கொண்டிருக்கக்கூடாது என்று கருதித் தலைவன் தன்னைத்தானே ஒருவாறு தேற்றிக் கொள்கிறான். தலைவியை எப்படித் தேற்றுவது என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. மறுபடியும் வெளியூருக்குப் புறப்படப்போகிறேன் என்று தான் கூறினால், அதனைக்கேட்டுத் தலைவி எப்படி யெல்லாம் சினந்துகொள்ளுவாளோ—அழுவாளோ—வருந்து வாளோ என்றெல்லாம் தன் மனதுக்குள்ளே எண்ணி எண்ணித்

தலைவன் மனம் புழுங்குகிறான். நான் நேரிடையாகத் தலைவியிடம் செய்தியை வெளியிடுவதைவிடத் தோழியின் மூலம் விளக்கத்துடன் வெளியிட்டால் தலைவியின் சினமும் வருத்தமும் சற்றுக் குறையக்கூடும் என்று எண்ணுகிறான். அதேபோழ்து, தோழியும் தலைவிக்குப் பரிந்துகொண்டு தானே பேசுவாள்; தன்னுடைய எண்ணத்திற்கு எதிராகத்தானே நிற்பாள் என்று நினைத்துக் கலக்கமுறுகிறான். வேறு வழி ஏதும் புலப்படாததால், எதற்கும் தோழியின்மூலம் முயன்று பார்ப்போம் என்று முடிவுசெய்துகொண்டு, தலைவன் தன்னைத் தானே உறுதிப்படுத்திக் கொள்கிறான்.

தலைவன் தோழியைத் தனியே காணும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவளுடைய நலன்களையெல்லாம் அன்புடன் கேட்டறிகிறான். அவளிடம், தலைவியைப் பற்றிப் பெருமையாகப் பேசிப் புகழ்ந்து கூறுகிறான். தலைவன், ஏதோ ஒரு உதவியைத் தன்னிடம் பெற வேண்டித் தான் மகிழும்படி என்ன என்னமோவெல்லாம் தன்னிடம் பேசுகிறான் என்று தோழி தனக்குள்ளே நினைத்து கொள்கிறாள்.

தோழி : "என்ன இன்றைக்கு ஒரே மகிழ்ச்சிப் பெருக்கு?"

தலைவன் : "புதிதாக ஒன்றும் இல்லையே! எப்பொழுதும் போல்தான் பேசுகிறேன்."

தோழி : "ஏதோ இருக்கிறது! இல்லாவிட்டால் இப்படி என்னையும், தலைவியையும் புகழ்ந்து பேசுவீர்களா?"

தலைவன் : "உள்ளதைத்தான் சொல்லுகிறேன்! ஏதோ நினைவிற்கு வந்ததைச் சொல்கிறேன்! இதில் இல்லாதது என்ன இருக்கிறது?"

தோழி : "இல்லை! இல்லை! என்னிடத்தில் ஏதோ எதிர் பார்க்கிறீர்கள்! இல்லையானால் இவ்வளவு குழைவாகப் பேசுவீர்களா?"

தலைவன் : "ஏன், நான் உன்னிடம் இதற்குமுன் குழைவாகப் பேசியதில்லையா?"

தோழி : "திருமணத்திற்கு முன்னால் பேசியிருக்கிறீர்கள்! இல்லை என்று சொல்லவில்லையே! அப்பொழுது தலைவியை அடைய என் அருள் தேவைப்பட்டது! இப்பொழுது எந்த அருளுக்காக அடிபோடுகிறீர் களோ, தெரியவில்லை!"

தலைவன் : "நான் எதற்கும் அடிபோடவில்லையே!"

தோழி : "உம்முடைய அகத்திலுள்ளதுதான் முகத்தில் தெரிகிறதே! ஏன் மறைக்கப் பார்க்கிறீர்கள்?"

தலைவன் : "சரி! அப்படியே வைத்துக்கொள்ளேன்! நான் ஒரு உதவிகேட்டால் செய்வாயா?"

தோழி : "கேளுங்களேன்! செய்ய முடிந்தால் செய்கிறேன்!"

தலைவன் : "உன்னால் செய்ய முடியக்கூடியதுதான்!"

தோழி : அப்படியானால் சொல்லுங்களேன்!"

தலைவன் : "பொருள் தேடும்பொருட்டு வெளியூர் செல்ல லாம் என்றிருக்கிறேன்! தலைவி என்ன கருது வாளோ, தெரியவில்லை! நீ அவளுக்கு ஆறுதல் சொல்லி அவளை இசையவைப்பாயா?" (தலைவன் தோழி சீறி விழுவாளோ என்று எதிர்பார்த்து, அச்சத்துடன், குழைவாகக் கேட்கிறான்.)

தோழி : (சிரித்துக்கொண்டு) "பூ! இவ்வளவுதானா? பொருள் தேடத்தானே? போங்களேன்! அதுதான் உங்கள் கடமையாயிற்றே! அதனை யார் தடுக்கப் போகிறார்கள்? இதனைச் சொல்ல ஏன் இவ்வளவு தயக்கம்?" (தோழி இப்படிச் செல்லுவாள் என்று தலைவன் எதிர்பார்க்காததால், தலைவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.)

தலைவன் : (மகிழ்ச்சிப் பெருக்கோடு) "உண்மையாகவா சொல்லுகிறாய்?"

தோழி : "உண்மையாக வல்லாமல், பின்னைப் பொய் யாகவா செல்லுகிறேன்? நான் தலைவியிடம் ஆறுதல் சொல்லிக்கொள்ளுகிறேன்; நீங்கள் நல்ல படியாகப் போய்வர முயலலாம்! ஆமாம், நீங்கள் போகவேண்டிய இடம் மிகக் கொடுமையானதாக இருக்குமே!"

தலைவன் : "ஆமாம்! அதற்கு என்ன செய்வது? கடமையைச் செய்யவேண்டியிருக்கிறதே! கொடுமைக்கு அஞ்சிக் கடமையை விட்டுவிட முடியாதே!"

தோழி : "போகும் வழியெல்லாம் ஒரே பாலை வெளி தானா?"

தலைவன் : "ஆமாம்! சிற்சில இடங்களில் பெரிய விளாமரங்கள் தென்படும். நிலம் வெடித்துக் கிடக்குமாறு அவற்றின் பெரிய வேர்கள் நிலத்திற்குள் இறங்கிக் கிடக்கும். அவற்றின் அடிப்பகுதி உடும்புகள் செறிந்தாற்போல் கரடுமுரடான செதில்கள் நிறைந்ததாக இருக்கும். கிளைகளும் பெரிது பெரிதாக இருக்கும். கிளைகளில் விளாங்கனிகள் ஏராளமாக இருக்கும். அந்தக் கனிகள் மூக்கு ஒடிந்து விழுந்து, சும்பளத்தை விரித்தாலொத்த பச்சைப் பசேலென்ன பயிரின்கண்ணே உருண்டு போய், ஆடாமல் விட்டொழிந்த பந்துபோலப் பரவிக் கிடக்கும். அந்த விளாம்பழத்தைத்தான் உணவாக உட்கொள்ளவேண்டும்! வேறு வழி யில்லை!" (தோழி தன்பால் மிக்க இரக்கங் கொள்ளவேண்டும் என்பதற்காகத் தலைவன் மிக்க உருக்கமாக வெளியூரின் நிலைமையை விளக்கினான்)

தோழி : "வெளியூர்ப் பயணம் மிகக் கடினந்தான்! என் செய்வது? வேறு வழியில்லை! நான் தலைவிக்கு எடுத்துக்கூறுகிறேன்! நீங்கள் எதற்கும் கவலையுற வேண்டாம்! 'தோழியின் கூற்றைக் கேட்டுக் கொண்டு தலைவன் மனமகிழ்ச்சியோடு அகல்கிறான். தோழி தலைவியின் இருப்பிடம் நோக்கிச் செல்கிறாள். தோழி தலைவனிடம் வாக்குறுதி அளித்துவிட்டாளே ஒழிய, தலைவி என்ன சொல்லுவாளோ, எப்படிச் சினந்து கொள்ளுவாளோ, எப்படி வருந்துவாளோ என்ற கவலையுடன் தோழி தலைவியை அணுகுகிறாள்.'

தலைவி இல்லறக் கடமைகளை இனிது முடித்துவிட்டு, ஒய்வாக ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிறாள். தலைவியின் அருகில் தோழி·போய் உட்காருகிறாள். இருவரும் ஏதேதோ பற்றி இனிமையாக உரையாடுகிறார்கள்.

தோழி : (ஏதோ உரையாடிக்கொண்டிருக்கும்போது) "நம் தலைவர் எவ்வளவு நல்லவரடீ, பார்த்தாயா?"

தலைவி : "என்ன புதிதாகக் கண்டுபிடித்து விட்டாய்?"

தோழி : "புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்க வில்லை! இருப்பதைச் சொன்னேன்!"

தலைவி : "அதைச் சொல்ல இப்பொழுது என்ன இன்றியமை யாமை ஏற்பட்டது உனக்கு?"

தோழி : "நீ அதனை ஒப்புக்கொள்கிறாயா என்று பார்த் தேன்!"

தலைவி : "நான் எப்பொழுதும் ஒப்புக் கொள்ளத்தான் செய்வேன்."

தோழி "நம் தலைவர், பொருள்தேட வெளியூருக்குப் போகப்போகிறாராமே!" (தலைவி திகைப்படை வாள் என்று தோழி எதிர்பார்க்கிறாள்.)

தலைவி : (திகைப்பு ஏதும் அடையாமல்) "உனக்கு எப்படித் தெரியும்?" (என்று சாதாரணமாகக் கேட்கிறாள்)

தோழி : "நான் வெளியூருக்குப் பொருள்தேடப் போகட்டுமா என்று கேட்டார்!"

தலைவி : "நீ என்ன கூறினாய்?"

தோழி : "நான் கூறுவது இருக்கட்டும், நீ என்ன கூறுவாய்?"

தலைவி : "போய்விட்டு வாருங்கள் என்று வழியனுப்பி வைத்திருப்பேன்!"

தோழி : (எதிர்பாராத மகிழ்ச்சியடைந்தவளாய்) "நானும் அப்படித்தான் கூறினேன்!"

தலைவி : "அவர் பொருள்மேற் செல்வது நல்லதொருசெயல் என்று கருதித்தான் நீ விருப்பத்தோடு கூறியிருக்கிறாய்! நீ செய்த செயலும் நல்லதொரு செயல் தான்!'

தோழி : "அவர் உன்னைவிட்டுப் பிரிந்துசெல்வது உனக்கு வருத்தத்தை அளிக்க வில்லையா?"

தலைவி : "செயல்புரியவேண்டும் என்ற எண்ணத்துடனே பொருளீட்டுவதற்கு ஆடவர்கள் வேற்றூர்க்கு அகலவேண்டுவது அவர்களது கடமையாகும்! அவர்கள் அகலும்போது மறுத்துக் கூறாமல், அதற்கு உடன்படுவதுதான் பெண்டிரின் பண்பாகும்!"

தலைவியின் இசைவு தன்னுடைய செயலுக்கு முழுக்க முழுக்க இருக்கிறது என்பதை அறிந்துகொண்ட தலைவன், களிப்போடும், கடமையுணர்ச்சியோடும் பொருள்தேடும் பொருட்டு வேற்றூருக்கு அகலுகிறான். தலைவியும், தோழியும் உவகையோடு வழியனுப்பி வைக்கிறார்கள்!

மேற்கண்ட காதற்காட்சி நற்றிணை 24ஆம் செய்யுளின் கருத்தினை உள்ளடக்கியதாகத் தீட்டப்பட்டதாகும். இந்த

நற்றிணைச் செய்யுளை இயற்றியவர் கணக்காயனார் என்ற புலவராவார். இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்றும், இவர் இயற்பெயர் தத்தன் என்றும், பள்ளி ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர் என்றும் கூறுவர். இவர்தாம் நக்கீரரின் தந்தையாவார் என்றும் கூறுவர். இவருடைய பாடல்களில் சில, வேறு சங்க இலக்கிய நூல்களிலும் காணப்படுகின்றன.

பார்பக வீழ்ந்த வேருடை விழுக் கோட்(டு)
உடும்படைந்(து) அன்ன நெடும்பொரி விளவின்
ஆட்டொழி பந்தில் கோட்டுமூக்(கு) இறுபு
கம்பலத்(து) அன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்றுநாட் டாரிடைச்
சேறும் நாமெனச் சொல்லச் சேயிழை
நன்றெனப் புரிந்தோய் நன்றுசெய் தனையே
செயல்படு மனத்தர் செய்பொருட்(கு)
அகல்வர் ஆடவர் அதுவதன் பண்பே.

(நற்றிணை—24)

(பொழிப்புரை :) நன்கு செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தவளே! நிலம் பிளவுபடுமாறு இறங்கிய வேரும், பெரிய கிளைகளும், அடியில் உடும்பு சேர்ந்தாற்போன்ற மேல் கிளம்பிய செதில்களும் உடைய நெடிய விளாமரத்தின் கிளையில், மூக்கு அவிழ்ந்து விழுந்து, கம்பளத்தை விரித் தாலொத்த பசிய பயிரின்கண்ணே ஆடாமல் போடப்பட்ட பந்து கிடப்பதுபோலப் பரவியிருக்கும். அவ்விளாம்பழங் களையே உணவாகவுடைய வேற்றுநாட்டிலே, செல்லுதற்கரிய பாலை நிலத்தின் வழியில் யாம் போவோம் என்று தலைவர் சொல்லவும், அது நல்லதொரு செயலென்று விருப்பத்தோடு கூறினாய்; ஆகையினாலே, நீ நல்லதொரு செயலையே செய்தாய் ஆவாய்; ஆடவர் செயல் மேற்கொண்ட உள்ளத்த வராய்ப் பொருளீட்டுதற்கு நீங்குவர்; அப்படி அவர் அகலும் பொழுது மறுத்துக் கூறாமல் உடன்படுவதே அதற்குரிய பண்பாகும்.

பக - பிளவுபட; பைம் - பசிய; வெள்ளில் - விளாமரம்; வல்சி - உணவு.

தலைவன், தலைவியை விட்டுப் பிரியும்போது, தலைவியிடம் விடை தரும்படி கேட்பானாயின், விடை தர மறுப்பது தான் தலைவியின் பொதுப்பண்டையான பண்பாகப் பெரும்பாலும் விளக்கப்பட்டிருக்கும். தலைவியே, தலைவனின் கடமையுணர்ந்து, மனமுவந்து தலைவனை வழியனுப்பி வைப்பதாக இச்செய்யுளில் கூறப்படும் கருத்து மிகச்சிறப்பான ஒன்றாகும்.

இல்லறத்தை இனிது நடத்தத் தலைவன் வேற்றுநாடு சென்று தொழில்புரிந்தாவது பொருள் திரட்டிக்கொண்டு வரவேண்டும் என்பது தலைவனின் இன்றியமையாக் கடமை என்று இச் செய்யுளில் வற்புறுத்திக் கூறப்படுகிறது. அத்தகைய கடமையைச் செய்யத் தலைவன் வேற்றுநாட்டிற்குப் போவானேயானால், அவன் திரும்பிவருங்காலம் வரையிலும் ஆற்றியிருப்பது கற்புடைமகளின் சீரிய பண்பாகும் என்பதும் இச்செய்யுளில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய தலைவன் தலைவியரின் கடமைகளைத் தலைவியே கூறுவதாக ஆசிரியர் அமைத்திருக்கும் பாங்கு போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

விளாமரத்தின் அடிப்பகுதிச் செதில்களுக்கு உடும்பு செறிந்திருத்தலையும், பசியபயிர் பரவியிருத்தலுக்குக் கம்பளம் விரித்திருத்தலையும், விளாம்பழத்திற்குப் பந்தினையும் உவமைகளாகக் கூறியிருப்பது நயம் பயப்பதாகும்.

பாலைவழிச் செல்வோர் வேறு உணவு ஏதும் கிடைக்கப் பெறாத நிலையில், விளாம்பழத்தையே உணவாக உட்கொள்வர் என்பது அறியப்படுகின்றது.

பொதுவாக ஆடவர்கள் வேனிற்காலத்தில் வேற்றுநாடுகளுக்குச் சென்று, குளிர்காலத்தில் இல்லம் வந்து தங்குவது என்பது பண்டைத் தமிழகத்தில் நிலவிவந்த வழக்கமாகும்.

*   *   *

27. அன்னை கருதியது என்னை?

கடற்கரைச் சோலை கண்ணுக்கினிய காட்சியாக இருந்துவருகிறது! நாள்தோறும் அங்குச் சென்றுவரத் தலைவி யும் தோழியும் தவறுவதில்லை.

கடலையடுத்து உப்பங்கழிகளும், அவற்றையடுத்து அலை ஒதுக்கிய மணல் முட்டுகளும், அவற்றையடுத்து மலர் பூத்துக் குலுங்கும் மரஞ்செடி கொடிகள் நிறைந்த மாமலர்ச் சோலை யும், காண்போர் உள்ளத்தை ஈர்க்கும் தன்மையனவாக இருந்து வருகின்றன. குளங்களிலுள்ள இறாமீன்களைத் தின்றுவிட்டு, சுறாமீன்களைக் கொத்தித் தின்னவேண்டிப் பறவைகளின் கூட்டங்கள் உப்பங்கழிகளிடத்து வந்து சேரும். நீண்டு திரண்ட தண்டினையும், நுண்ணிய பலவாகிய பசிய இலைகளையு முடைய நெய்தற்கொடிகள் அவ்வுப்பங்கழிகளில் படர்ந்து கிடக்கும். கண்களைப் போன்ற நெய்தற்பூக்கள் அக்கொடி களில் நாள்தோறும் மலர்ந்து காணப்படும்.

இத்தகைய இயற்கைக் காட்சிகளைக் காணவும், மலர் களில் மொய்த்துக் கிடக்கும் வண்டுகளை விரட்டிச் சோலை மலர்களைக் கொய்யவும், நெய்தல் மலர்களை அரிக்கவும். வெண்மணற் பரப்பில் ஆட்டம்ஆடி, ஓட்டம்ஓடி, பாட்டுப்பாடி, பந்து ஆடி மகிழவும், தலைவியும் தோழியும் நாள்தவறாமல் மாலைப்பொழுதுகளில் அங்குச் செல்லுவது வழக்கம், இருட்டிற்குமுன்னே, அன்னை சினந்துகொள்வாளோ என்ற அச்சததால், இருவரும் வீட்டிற்குத் திரும்பிவிடுவார்கள்.

கட்டிளங்காளைப் பருவத்தினன் ஒருவன், ஒருநாள் அச் சோலைப் பக்கம் வருகிறான். அச்சோலையில் மயிலென ஆடி மகிழும் தலைவியின் அழகுத் தோற்றத்தைக் காணுகிறான். அவள்மீது காதல் கொள்கிறான். நாள்தோறும் அப்பக்கம் வருகிறான். காதலைக் குறிப்பால் அவளிடம் தெரிவிக்கிறான். பிறகு வெளிப்படையாகவே தன் விருப்பத்தை வாய்விட்டுத் தோழியின்மூலம் தெரிவிக்கிறான். தலைவியும் அவன் அழகை யும் பழகும் பண்பையுங் கண்டு மயங்குகிறாள்; அவனைக் காதலிக்க இசைகிறாள். இருவரும் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர். இன்ப மாலைப் பொழுதுகள் பல கழிந்து கொண்டிருக்கின்றன!

தலைவியின் நடையுடை நடிப்புகளில் ஒரு விதமான மாற்றம் ஏற்பட்டிருப்பதைத் தலைவியின் தாய் உணருகிறாள். யாரேனும் காதலனுடன் களவொழுக்கத்தில் மகள் ஈடுபட் டிருப்பாளோ என்று ஐயுறுகிறாள். களவொழுக்கம் முற்றி, அது ஊரார்க்குத் தெரிந்து, அலர் தூற்றல் ஏற்பட்டுவிடுமாயின் தன் குடும்பத்திற்குப் பழிவந்து சேரும் என்று எண்ணிய தாய், எதற்கும் மகளை வெளியே செல்லவொட்டாமல் தடுத்து. வீட்டிலேயே இருக்கும்படி செய்வது நல்லது என்ற முடிவுக்கு வருகிறாள். அதன்படிக்கு, எங்கும் போகக்கூடாது என்று மகளுக்குத் தாய் கட்டளை பிறப்பித்துவிடுகிறாள்.

யாருடனாவது களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கிறாயா என்று கேட்டால், மகள் உண்மையான விடையைக் கூறமாட்டாள் என்று கருதித்தான், தாய் ஏதொன்றும் மகளிடத்தில் கேட்காமல், அவளை வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என்று கூறி, இல்லிலேயே இருத்திவைத்து விடுகிறாள்.

தலைவன் சோலையிடத்து வந்து நீண்ட நேரம் காத்திருந்துவிட்டு, தலைவியைக் காணாததால், எப்படியும் காணவேண்டும் என்ற ஆவலோடு தலைவியின் வீடுநோக்கி வந்து, தலைவியின் வருகையை எதிர்பார்த்து ஓரிடத்தில் மறைவாக ஒளிந்து நிற்கிறான்.

தலைவன் ஒளிந்து நிற்பதைத் தோழி கண்டு கொள்கிறாள். அவனைக் கண்டும் காணாதவள் போல் இருந்து கொண்டு, தலைவனின் காதில் விழவேண்டும் என்பதற்காகத் தலைவியுடன் உரையாடல் நிகழ்த்திக் கொண்டிருக்கிறாள் தோழி.

தோழி : ஏடி! அம்மா அவர்கள் ஏன் அவ்வளவு சினமுடையவராக இருக்கிறார்கள்?

தலைவி : காரணம் இன்னதென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!

தோழி : நீ தலைவனோடு கூடியிருந்து மகிழும் களவொழுக்கத்தைப்பற்றி அம்மாவிடம் ஏதேனும் கூறினாயோ?

தலைவி : நான் ஒன்றும் கூறவில்லையே!

தோழி : அவர்களாக எப்படியாவது கண்டு பிடித்திருப்பார்களா?

தலைவி : அவர்களாகக் கண்டுபிடிக்க ஒரு பற்றுக்கோடும் இல்லையே!

தோழி : அவர்களே ஒருகால் மறைந்து நின்று உனது களவொழுக்கத்தைப் பார்த்திருக்கலாம்; அல்லது வேறு யாரேனும் பார்த்துவிட்டு வந்து அவர்களிடம் கூறியிருக்கலாம்!

தலைவி : நேற்று நீயும் நானுந்தானே கடற்கரைச் சோலைப் பக்கம் சென்றோம்! நாம் இருவரும் அங்கு விளையாடினதைத்தவிர, நான் வேறு என்ன செயலைச் செய்தேன்? நான் நேற்று ஏதேனும் செய்திருந்தாலல்லவா, அந்தச் செய்தி பரவ வழி ஏற்பட்டிருக்கும்? அப்படி ஒரு செய்தியைத்தான் யாரும் அறிந்து வைக்கவில்லையே!

தோழி : (சிரித்துக்கொண்டு) நேற்றுத் தலைவன் வரவில்லை, நீ களவொழுக்கம் மேற்கொள்ளவில்லை

என்றால், என்றுமே அது நடக்கவில்லை என்றா அதற்குப் பொருள்?

தலைவி : நேற்றைக்கு முன்பே அது அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாதே! தெரிந்திருந்தால்தான் அப்பொழுதே நான் வெளியேற வொட்டாமல் தடுத்திருப்பார்களே!

தோழி : அந்தச் செயல் அல்லாமல் வேறு எந்தச் செயலுக் காக அம்மா அவர்கள் உன்னிடம் சினந்து கொள்ளப் போகிறார்கள்?

தலைவி : அது தானே எனக்குப் புரியவில்லை! எப்பொழுதும் நெய்தல் மலரைப் பறித்துச் சூடிக் கொள் என்று சொல்லிக் கடற்கரைக்கு அனுப்பி வைக்கும் அன்னை, இன்று ஏன் அப்படிச் செய்யாமல், வேறு வகையாகச் செய்து விட்டார் கள் என்பது எனக்கு மிக்க வியப்பைத் தருகிறது! அன்னைதான் என்ன கருதியிருக்கக் கூடும் என்று நீ எண்ணுகிறாய்?

தோழி : உன் களவொழுக்கத்தை அவர்கள் புரிந்து கொண் டார்கள்; எனவே உன்னை வெளியே செல்ல விடக்கூடாது என்று கருதிக்கொண்டார்கள். அவ்வளவுதான்! இதில் வேறு என்ன இருக்கிறது. வேறு விதமாகக் கருதிக்கொள்ள?

தலைவி : அன்னைக்கு எப்படியடீ தெரிந்திருக்கும்? யார் சொல்லியிருப்பார்கள்?

தோழி : யார் சொல்லவேண்டும்? உன் உடல் வேறுபாட் டிலிருந்தே உணர்ந்து கொண்டிருப்பார்களே! அவர்களும் உன்னைப்போல் ஒரு காலத்தில் பருவமங்கையாக இருந்தவர்கள் என்பதை மறந்து விட்டாயா?

தலைவி : என் உடலில் என்ன வேறுபாடு தெரிகிறது?

தோழி : உனக்கொன்றும் தெரியாது! ஏனென்றால் நீ காதல் மயக்கத்தில் இருப்பவள்! நீ காதலனோடு களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கிறாய் என்பதற்கு உன் உடலில் என்ன என்ன அறிகுறிகள் காணப் படவேண்டுமோ அவ்வளவும் காணப்படுகின்றன!

தலைவி : இனி நான் தலைவனை எப்படியடீ காண்பது?

தோழி : இனி நீ போய் அவனைக் காண வழி ஒரு பொழுதும் ஏற்படாது! அவராக வந்து உன்னை முறைப்படி மணந்து கொண்டுதான் செல்ல வேண்டும்.

தலைவி : அவனுக்கு யாரடீ இதனை உணர்த்துவார்கள்?

தோழி : அவனுக்கு ஒருவரும் உணர்த்த வேண்டியதில்லை. அவனே உணர்ந்து கொள்வான். உன்மீது அவன் கொண்டிருக்கும் காதல் உண்மையான காதல் என்றால், களவொழுக்கம் நீடிக்காத இடத்து உன்னை முறைப்படி திருமணம் செய்து கொண்டு, உன்னோடு கூடி வாழ்வதுதான் அவ் ஆண்மகனுக்கு அழகு! அவன் அப்படிப்பட்ட ஆண் மகன் அல்லன். என்று யாரும் கூறிவிட முடியாதே! அவன் அவ்வளவு நல்லவனாயிற்றே!

தோழியும் தலைவியும் இவ்வாறாக உரையாடிக்கொண் டிருந்ததை மறைந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த தலைவன், தலைவியைக் களவொழுக்கத்தில் இனிக் காணமுடியாது என்ற முடிவுக்கு வந்து, திருமணம் செய்து கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்ற உறுதியான முடிவுடன், அவ்விடத்தைவிட்டு அகல்கிறான்.

* * *

இது நற்றிணை 27 ஆம் செய்யுளின் கருத்தைத் தழுவி எழுந்த காதற்காட்சியாகும். இதனை இயற்றியவர் குடவாயிற்

கீரத்தனார் என்ற புலவராவார். இவர் சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தைச் சேர்ந்த குடவாயில் (குடவாசல்) என்னும் ஊரைச் சேர்ந்தவர். சோழ அரசரது கருவூலச் சாலை (பணச்சாலை) இவ்வூரில் இருந்தது என இப்புலவர் கூறியுள்ளார். நன்னனது ஏழில் மலை, உறையூர், காவிரி ஆகியவை இவரால் பாராட்டப் பெற்றவை யாகும். இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில், பதினேழு பாடல்கள் கிடைத் திருக்கின்றன.

நீயும் யானும் நெருநல் பூவின்
நுண்தா(து) உறைக்கும் வண்டினம் ஓப்பி
ஒழிதிரை வரித்த வெண்மணல் அடைகரைக்
கழிசூழ் கானல் ஆடிய(து) அன்றிக்
கரந்துநாம் செய்ததொன் றில்லை உண்டெனில்
பரந்துபிறர் அறிந்தன்றும் இலரே நன்றும்
எவன்குறித் தனள்கொல் அன்னை கயந்தோறும்
இற(வு) ஆர் இனக்குரு(கு) ஒலிப்பச் சுறவம்
கழிசேர் மருங்கில் கணைக்கால் நீடிக்
கண்போற் பூத்தமை கண்டு நுண்பல
சிறுபா(சு)அடைய நெய்தல்
குறுமோ சென்றெனக் கூஉரு தோளே.

(நற்றிணை—27)

(பொழிப்புரை :) தோழி, நேற்றைப் பொழுதில் நீயும் நானும் சென்று, மலரின் நுண்ணிய தாதில் பாய்ந்து வீழுகின்ற வண்டினங்களைப் போக்கி, ஒழித்த திரைகொழித்த வெண்மை யான மணலடித்த உப்பங்கழிக்கரை சூழ்ந்த சோலையிடத்து விளையாடியதல்லாமல், மறைந்து நாம் செய்த செயல் வேறொன்றுமில்லை; அப்படி யாதேனும் செய்தது ஒன்று உண்டு என்றால், அது எங்கணும் பரவி நிற்கும்; நிற்க, அதனைப் பிறர் அறிந்துகொண்டார்களுமில்லை; அப்படியாக, அன்னை நம்மை நோக்கிப் பொய்கைதோறும் இறால்மீனைத் தின்னும்

பறவையினம் ஒலிகிளப்பச், சுறாமீன்கள் மிக்க கழிசேர்ந்த இடத்துத் திரண்ட தண்டு நீண்டு நம்முடைய கண்களைப் போலப் பூத்தமை நோக்கியும், நுண்ணிய பலவாகிய பசிய இலைகளையுடைய சிறிய நெய்தல் மலரைப் பறித்துச் சூடிக் கொள்ளுங்கள் என்று கூறவில்லை; ஆதலின், இவள்தான் பெரிதும் என்ன கருதியிருக்கின்றாளோ? தெரியவில்லை!

ஓப்பி - போக்கி; கானல் - கடற்கரைச் சோலை; கரந்து - மறைந்து; கயம் - கு ள ம்; இறவு - இறால்; குருகு- பறவை; சுறவு - சுறா; கழி - உப்பங்கழி; பணை - திரண்ட; குறுதல்- பறித்தல்.

28. பரத்தையர் கையில் பட்ட பாடு!

இளம் மணமக்கள்! திருமணம் நடந்தேறிச் சிலபல திங்கள்களே கழிந்திருக்கின்றன! இருவரும் இல்லற வாழ்வை இனிது நடத்தி வருகின்றனர்!

பாணன் ஒருவன் தலைவனோடு தொடர்பு கொள்ளு கிறான். அவன் சிறிய யாழ் இயக்குவதிலே வல்லுநன். அவனது யாழிசை அழகிய வண்டுகள் எழுப்பும் இம்மென்ற ஒலிபோல் மிக்க இனிமை பயப்பதாக இருப்பதால், தலைவன் யாழிசை மாட்சியிலே ஒன்றி விடுகிறான். இதனால் தலைவனுக்கும் பாணனுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு ஏற்படுகிறது.

தலைவன் இளைஞனாகவும், காதலின்ப வேட்கை மிக்கவ னாகவும் இருப்பது கண்டு, அதனைப் பயன்படுத்திக்கொள்ள முயலுகிறான் பாணன். தலைவனைப் பரத்தையர் சேரிக்கு அழைத்துச் சென்று, பரத்தையர் பலர்க்கு அறிமுகப்படுத்தி வைப்பதன்மூலம், தான் தலைவனின் அன்பையும், பொருளை யும் மிகவாகப் பெற வழி ஏற்படும் என்று கருதி, அதற்கான முயற்சிகளில் பாணன் ஈடுபடுகிறான்.

பாணன், தலைவனிடம், பரத்தையரின் அழகுபற்றியும், அவர்களின் ஆடல்பாடல் இனிமைபற்றியும், அவர்களை எப்படி எளிதில் அடைந்து காதலின்பம் பெறலாம் என்பது பற்றியும் அடிக்கடி எடுத்துச் சொல்லிவருகிறான். பாணனின் நயமான பேச்சுகளில் தலைவன் மயங்குகிறான். பாணன்

மூலம் பரத்தையர் இன்பத்தை நுகர அவாவுகிறான். ஒரு நாள் தலைவியிடமும் தோழியிடமும் சொல்லாமல் பாணனோடு பரத்தையர் சேரிக்குப் போய்விடுகிறான்.

பாணன் பரத்தையர் பலரையும் தலைவனோடு தொடர்பு படுத்திவிடுகிறான். தலைவன் காலத்தையும், தன் கைப் பொருளையும் செலவழித்துக் கொண்டு பரத்தையர் சேரியில் இன்பவாழ்வு நடத்திக் கொண்டிருக்கிறான்.

தலைவனைக் காணாமல் தலைவியும் தோழியும் தவிக்கிறார்கள். தலைவன் எங்கு போயிருக்கக்கூடும் என்று நீடு நினைத்துப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. தலைவன் பொருள்தேடப் புறப்பட்டிருப்பானோ, அல்லது போர்க்களத்திற்குச் சென்றிருப்பானோ, அல்லது பெருங்கல்வி பயிலப் போயிருப்பானோ, அல்லது அவனுக்கும் ஏதொன்றும் நிகழக்கூடாதது நிகழ்ந்ததோ என்றவாறெல்லாம் எண்ணி எண்ணி இருவரும் வருந்துகிறார்கள். சிலபொழுது தலைவனின் அறிவையும் ஆற்றலையும் 'நினைத்து, அவன் எப்படியும் விரைவில் வந்து சேர்ந்துவிடுவான் என்று மனஅமைதி கொள்கிறார்கள்.

தலைவன் பாணன் ஒருவனோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால், அப் பாணன் தலைவனைப் பரத்தையர் சேரிப்பக்கம் இழுத்துச் சென்றிருப்பானோ என்ற எண்ணம் தோழிக்குத் தோன்றுகிறது. அப்படிச் சென்றிருக்கமாட்டான் என்று தலைவி மாற்றுரை பகர்கிறாள். எதற்கும் பரத்தையர் சேரிப்பக்கம் சென்று பார்த்துவிட்டு வருவோம் என்ற எண்ணத்தோடு தோழி, ஒருநாள் மாலை பரத்தையர் சேரிப்பக்கம் புறப்பட்டுச் செல்கிறாள்.

தன் கையில் ஏந்திய சிறிய யாழை மீட்டிக் கொண்டு பாணன் உடன்வரத், தலைவன், மாலைகள் அணிந்துகொண்டு, பெருமிதத்தோடு, பரத்தையர் சேரியின் தெருவில் வந்து கொண்டிருப்பதைத் தோழி கண்டு கொண்டுவிடுகிறாள். சிறிது நேரம் திகைத்துப்போய் அப்படியே நின்றுவிடுகிறாள்,

தலைவனின் நடவடிக்கைகளை மறைந்து நின்று காணலாம் என்று கருதித் தோழி அங்கு ஒரு பக்கம் ஒளிந்துகொள் கிறாள்.

ஆடை அணிகலன்களால் தம்மை அழகு படுத்திக்கொண்ட பரத்தையர் ஒவ்வொருவரும், தலைவன், தம் வீட்டிற்கு வருவான் என்று எதிர்பார்த்துத் தத்தம் வீட்டு முற்றத்தில் வந்து நிற்கிறார்கள். தலைவன் தெருவோடு நேராகச் செல்லும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் மனம் ஒடிந்து, ஓடோடியும் வந்து அவனது கையைப்பிடித்து இழுக்கிறார்கள். அவன், தன்மேல் தொத்தும் அவர்களை உதறித் தள்ளிவிட்டு மேற்கொண்டு நடந்து செல்ல முயலுகிறான். அவனால் உதறித் தள்ளப்பட்டுக் கீழே விழும் பரத்தையர், சினத்தால் வெம்மையுற்று எழுந்து வெப்பமான கண்ணீர் கண்களில் வழிய, மீண்டும் மீண்டும்போய் அவனைப் பற்றி இழுக்கிறார் கள். பல பரத்தையர் கூடிக்கொண்டு வெவ்வேறு பக்கம் இழுக்க, என்ன செய்வதென்று தோன்றாமல், தலைவன் திண்டாடிப் போகிறான். இத்தகைய இரங்கத்தக்க காட்சியைக் கண்டுகொண்டு தோழி இல்லம் திரும்புகிறாள்.

தோழி தலைவியிடம், தான் பரத்தையர் சேரியில் தலை வனைப் பாணனோடு கண்டதையும், அங்குக் காணப்பட்ட இரங்கத்தக்க காட்சியையும் தெளிவுபடுத்துகிறாள். தலைவி அது கேட்டு வருந்தி ஆறாத் துயரடைகிறாள்.

சில நாட்கள் கழித்துத் தலைவன் தன் இல்லம் நோக்கி வருகிறான். வீட்டின் வாயிலண்டை தோழி நின்றுகொண் டிருக்கிறாள். தலைவன் தன்போக்கு யாருக்கும் தெரியாது என்ற எண்ணத்துடன் பெருங்களிப்போடு வருகிறான். வாயிலை அடைத்துக்கொண்டு தோழி சினக்குறிப்போடு நிற்கிறாள். தலைவன் புன்சிரிப்புப் பூத்த முகத்துடன் தோழி யின் எதிரில் வந்து நிற்கிறான்.

தோழி : "என்ன ஒரே மகிழ்ச்சி?" (என்று ஏளனந்தோன்றக் கேட்கிறாள்.)

தலைவன் : "எல்லாம் உன்னையும் தலைவியையும் காண வேண்டும் என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சிதான்!"

தோழி : "ஓகோ! இப்பொழுதுதான் அந்த நினைவு உனக்கு ஏற்பட்டதோ?"

தலைவன் : "எனக்கு எப்பொழுதுமே அந்த நினைவு உண்டே!"

தோழி : "அந்த நினைவு கொண்ட நீ இவ்வளவு நாட்களாக எங்கே போயிருந்தாய்?"

தலைவன் : "எங்கே போயிருந்தேன்? வெளியூர்களுக்கு வேடிக்கை பார்க்கச் சென்றிருந்தேன்! அவ்வளவுதான்!"

தோழி : "வெளி ஊருக்கா? அல்லது ஊருக்கு வெளியே உள்ள சேரிக்கா?"

தலைவன் : "ஊருக்கு வெளியே பரத்தையர் சேரி அல்லவா இருக்கிறது! அங்கே நான் ஏன் போகப் போகிறேன்?"

தோழி : "ஏன் போகப்போகிறேன் என்று என்னையா கேட்கிறாய்? உன்னோடு ஒழியாமல் சுற்றித் திரிந்தானே பாணன், அவனைக் கேட்டுப்பார்! அவன் சொல்லுவானே காரணத்தை?"

தலைவன் : "தோழி! நீ என்னைத் தவறாகக் கருதிக் கொண்டாய் போலும்! பாணன் எனக்கு உற்ற நண்பனாக இருந்து ஊருக்கு ஊர் அழைத்துச் சென்று வேடிக்கை காட்டி என்னை மகிழ் வித்தான்! அவன் வேறு குற்றம் ஏதும் அறியானே!"

தோழி : (ஏளனச் சிரிப்புடன்) "ஆகா... அவன் ஒரு குற்றமும் அறியாதவன்...அல்லவா? அவன் பரத்தையர் சேரியில் உன்னை வீட்டுக்கு வீடு

அழைத்துச் சென்று ஒவ்வொரு பரத்தையாக வேடிக்கை காட்டி உன்னை மகிழ்வித்தான் என்று சொல்வேன்! ஏன் இல்லாததைச் சுற்றி வளைத்துப் பேசுகிறாய்?''

தலைவன் : (ஏதும் அறியாதவன்போல்) ''நான் பரத்தையர் சேரிக்குப் போனதாக யார் அந்தப் பொய்யை உன்னிடம் கூறினது?''

தோழி : ''எனக்கு யாரும் கூறவேண்டாமே. நானே அந்த உண்மையை நேரில் கண்டேனே!''

தலைவன் : (சற்றுத் திடுக்கிட்டுப்போய், ஆனால் தன்னைத் தானே சமாளித்துக்கொண்டு) ''நானாக இருக்காதே! நீ வேறு யாரையேனும் நான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறாய் போலும்!''

தோழி : (அழுத்தந்திருத்தமாக) ''நான்தான் என் இரு கண்களால் உன்னை அங்குக் கண்ணாரக் கண்டேனே! பாணன் சிறிய யாழை மீட்டிக் கொண்டு உன் பக்கத்திலேவர, நீ பெருமிதத்தோடு பரத்தையர் சேரியின் தெருவில் வந்துகொண்டிருந் ததையும், உன் மார்பைத்தழுவி உன்னிடம் இன்பம்பெற்ற பரத்தையர், நீ தங்களைவிட்டுத் தெருவோடு போவதையறிந்து, உன்னிடம் கொண்ட அன்பு மிகுதியாலே, ஒவ்வொருவரும் உன்னைத் தத்தம் வீட்டிற்குப் பிடித்து இழுத்த தையும், நீ அவர்களை உதறித் தள்ளியதையும், அவர்கள் மென்மையற்றுக் கண்ணீர்விட்டுக் கலங்கி அழுததையும், பெரிய சுழற்காற்று வீச அதன் சுழற்றுதலாலே கொந்தளித்த கடலிலே சென்று கொண்டிருந்த மரக்கலம் கவிழ்ந்துவிட, அதில் ஏறியிருந்தவர்கள் மிக்கக் கலக்கமுற்றுத் தாமும் ஒருசேரக் கடலில்விழ, அப்படி விழுந்த பலரும் அங்கு மிதந்துவந்து ஒரு பலகையைப்

பற்றிக்கொண்டு தாம்தாம் தனித்தனி அதனை எப்படி இழுப்பார்களோ அப்படிப் பரத்தையர் பலரும் உன் கைகளைப் பற்றிக்கொண்டு தங்கள் தங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தனித்தனி இழுத்ததையும், நீ அவர்களிடையே அகப்பட்டுக்கொண்டு திண்டாடித் தவித்ததையும் நான் கண்ணாரக் கண்டேனே!'' (தலைவன் வாய்பேசாயல் வெட்கத்தால் தலைகுனிந்த வண்ணம் நிலத்தை நோக்கிக்கொண்டு, அப்படியே அசைவற்று நிற்கிறான. மீண்டும் தோழி பேசுகிறாள்) ''நான் கண்ணாரக்கண்டு வைத்தும் உன்னை என்ன செய்யமுடியும்? நீயோ ஆடவன்! அப்படியிருக்க நீ ஏன் பரத்தையர் யாரையும் பார்க்கவில்லை என்று பொய் கூறவேண்டும்.

தலைவி : (வீட்டினுள்ளே நின்று கொண்டிருக்கிறவள் தலைவன்பால் இரக்கங்கொண்டு) ''ஆடவர் வண்டுபோன்ற பண்புடையவராதலால் அவர் வரும்போது எதிர்தொழுவதும், அவர் போகும் போது பின்னே தொழுவதும் அல்லாமல், அவர் செயலைக் குறித்துப் பெண்டிர் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? இதுதான் உலக நியதி ஆகிவிட்டதே! எனவே தலைவனைச் சினந்து கொள்ளாதே! உள்ளே வர வழிவிடு!'' (என்று தோழியிடம் தலைவன் காதில் விழும்படி கூறுகிறாள்.)

தலைவன் தன் செயலுக்கு நாணி, இனி அத்தகைப தவறைச் செய்வதில்லை என்ற முடிவுக்கு வந்து திருத்தம் பெற்றவனாகிறான்.

* *

இது நற்றிணை 30 ஆம் செய்யுளின் தழுவல். இதனை இயற்றியவர் கொற்றனார் என்ற புலவராவார். இவரைச்

செல்லூர்க் கொற்றனார் என்றும் செல்லூர்க்கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார் என்றும் கூறுவர். செல்லூர் என்பது சோழநாட்டில் கடற்கரை அருகிலுள்ள ஒரு ஊராகும். இவர் வணிக மரபினர் என்று சொல்லப்படுகிறது. இவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன.

கண்டெனன் மகிழ்ந கண்டெவன் செய்கோ
பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்
ஏர்தரு தெருவின் எதிர்ச்சி நோக்கிநின்
மார்புதலைக் கொண்ட மாணிழை மகளிர்
கவலே முற்ற வெய்துவீழ் அரிப்பனி
காலே முற்ற பைதரு காலைக்
கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி உடன்வீழ்பு
பலர்கொள் பலகை போல
வாங்க வாங்கநின் தூங்(கு) அஞர் நிலையே.

(நற்றிணை—30)

(பொழிப்புரை :) மகிழ்ந! பாணன் கையிடத்தாகிய பண் அமைந்த சிறிய யாழ் அழகிய வண்டுபோல இம்மென ஒலிக்க நீ எழுந்து வருகின்ற தெருவிலே, நீ வருதலை எதிர்பார்த்து நின் மார்பை முன்பு தம்முடையதாகப் பற்றிக் கொண்டிருந்த மாட்சிமைப்பட்ட இழையை அணிந்த பரத்தையர் பலரும், நீ பிரிந்ததனால் உண்டாகிய கவலை மிகுதலாலே கண்களினின்று வெப்பமாய் வடிகின்ற கண்ணீருடனே, கடிய புயற்காற்று வீசிக் சுழற்றுதலாலே துன்புற்ற காலத்துக் கடலிலே தாம் ஏறியிருக்கும் மரக்கலம் கவிழ்ந்துவிட்டதாக, அங்ஙனம் கவிழ்ந்ததும் கலக்கமுற்றுத் தாமும் ஒருசேர வீழ்ந்து, அப்படி விழுந்த பலரும் ஆண்டு மிதந்துவந்த ஒரு பலகையைப் பற்றிக்கொண்டு தாம்தாம் தனித்தனி இழுப்பதுபோல, நின் கைகளைப்பற்றி அவரவர் தம்தம் கருத்து நிறைவேறுமாறு இழுத்தலாலே, நீ அவர்களிடையே அகப்பட்டு மிக வருந்து கின்ற நிலைமையை யான் கண்கூடாகக் கண்டேன்; கண்டும்

நின்னை யாது செய்ய இயலும்காண்? ஆதலின் நீ யாரையும் அறியேன் என்றது எப்படிப் பொருந்துவதாகும்?

பாணன்-தலைவனைப் பரத்தையோடு தொடர்பு படுத்துபவன்; யாணர் - அழகு; இமிரும் - ஒலிக்கும்; மாண் - மாட்சிமைப்பட்ட; இழை - அணிகலன்; கவல் - கலை.

ஆடவர் பல பரத்தைப் பெண்டிரோடு கூடி முயங்குதலும், அதனை மனைவியார்கள் பொறுத்துக்கொண்டு போதலும் ஆன பண்புகள் பண்டைத் தமிழகத்திலும் நிலவியிருந்தன வாகவே தெரியவருகின்றன. ஆடவர் பரத்தை இல்லிற்குச் செல்லுதலையும் பரத்தையரோடு முயங்கி இருத்தலையும் பண்டைத் தமிழ் ஆன்றோரும் சான்றோரும் வெறுக்கவே செய்தனர் எனினும், அத்தகைய பழக்கங்கள் ஒப்புக்கொள்ளப் பட்ட பழக்கங்களாகச் சமுதாயத்தில் இருந்தே வந்திருக் கின்றன.

தலைவன் பரத்தையர் வீட்டிற்குச் செல்வதைத் தலைவியும் தோழியும் வெறுத்தே வந்திருக்கின்றனர் என்பதும், வேறுவழியில்லாமல் தலைவனை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதும் இச்செய்யுளால் அறியப்படுகின்றன.

பரத்தையர் சேரியில் தலைவனைப் பலர் பிடித்து இழுப்பதற்குக் கடலில் கப்பலில் இருந்து வீழ்ந்தவர்கள் மரத்துண்டைப் பற்றித் தத்தமக்கு என்று இழுப்பதை உவமை யாகக் காட்டியிருப்பது பெரிதும் நயப்பாடு நிறைந்ததாகும்.

புலவர் கடலோரத்தில் வாழ்ந்தவராதலால், கடலில் காணப்படும் நிகழ்ச்சிகளில் மிகவும் ஈடுபாடுடையவர் என்பது மேற்கண்ட உவமையால் தெளியப் பெறும்.

பாணனாக இருப்பவன் யாழ் மீட்டுவதில் வல்லவனாக இருந்து, ஆடவரை மயக்குபவனாக இருப்பான் என்றும் தெரிய வருகிறது.

29. கட்டித் தழுவினான் - எட்டித் தள்ளினாள்!

அந்த அழகின் மிக்க இளையோளையே தன் வாழ்க்கைத் துணைவியாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று தனக்குள்ளே முடிவு கட்டிக்கொள்கிறான் அந்த ஆர்வமிக்க இளைஞன்.

அவள் நடமாடும் இடங்களில் தானும் நிற்பதும், கவனம் செலுத்துமிடங்களில் தானும் கவனம் செலுத்துவதும் ஆன செயல்களில் தொடர்ந்து அந்த இளைஞன் ஈடுபடுகிறான். வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் தன் காதல் கனிந்த இனிய பார்வையை அவள்மீது செலுத்த அவன் தவறுவதில்லை.

தோற்றப் பொலிவும், ஆற்றல் திறனும் நிறைந்த இளைஞன் ஒருவன் ஓயாமல் நிழல்போல் தொடர்வதையும், தப்பித்தவறி அவன்பக்கம் தன் பார்வையைச் செலுத்தினால் அவன் அன்பு ஒழுகும் பார்வையால் தன்னைக் கவருவதையும் உணர்கிறாள். இளைஞன் ஒருவன் தன்னை உற்றுப்பார்க்கிறான் என்ற உணர்வோடு அவள் நடமாடுவதால், அச்சம் - மடம்—நாணம்—பயிர்ப்பு போன்றப் பண்புகள் அவளைத் தாக்கி அவளது செயல்களில் தடுமாற்றத்தை உண்டாக்குகின்றன. அவனைப் பற்றிய நினைவுக்குச் சிறிதும் இடமளிக்காமல் தன்னுடைய செயல்களிலே கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று எவ்வளவோ முயன்று பார்க்கிறாள் அந்த மடக்கொடி. அவளால் முடியவில்லை. அவன் அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவளும் காதலன்பு ஒழுகும் பார்வையை அவன் பக்கம் அவளையறியாமலேயே செலுத்தி

விடுகிறாள். இப்படியாக இருவர் கண்களின் இணைநோக்கும் ஒன்றி நின்று பேசத் தொடங்கிவிடுகின்றன. இருவரும் வாய் திறந்து பேசிக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு இடமளிக்காமல் கண்களாலேயே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கிறார்கள் இருவரும் தலைவன்—தலைவியர் ஆகிவிடுகின்றனர்.

தலைவன் நாளடைவில் தலைவியோடு நெருங்கிநிற்பதும் அவளோடு பேச்சுக் கொடுப்பதும், அன்பு மொழிகளைப் பகர்வதும் ஆன பழக்கவழக்கங்களில் ஈடுபடுகிறான். தலைவி யைத் தனியாகப் பூம்பொழில்போன்ற இடங்களுக்கு வரும்படி வற்புறுத்துகிறான். அவள் நாணத்தாலும், அச்சத்தாலும், அவனைத் தன்னந்தனியாகக் காண மறுத்துக்கொண்டே வருகிறாள். அவனது அன்புத்தொல்லை பொறுக்கமாட்டாமல் ஒருநாள் பூம்பொழிலுக்கு வர இசைகிறாள்.

தலைவி, தன்னை மிக்க அழகாக ஆடை அணிகலன் களால் புனைந்துகொண்டு, தன்னந்தனியாகத் தலைவனைக் காணப் பூம்பொழிலுக்குச் செல்கிறாள். தலைவன் தலைவி யைக் காண்கிறான். அவனுக்கு என்றுமில்லாத காமவேட்கை மிக்குத் தோன்றிவிடுகிறது. அவன் அவளோடு அன்பாக உரையாடல் நடத்திக் கொண்டிருக்கும்போதே, அவன் அவள் மீது தாவி, இறுகக் கட்டித் தழுவி, அவளது கண்ணாடிக் கன்னங்களிலே பலப்பல முத்தங்களை மடமடவென்று அடுக் கடுக்காய்த் தெளிக்கிறான், அப்படி ஒரு நிலையைத் தலைவி எதிர்பார்க்கவில்லை. அவள் யாரேனும் பார்த்து விடுகிறார் களோ என்ற அச்சத்தாலும், பருவமங்கைக்குரிய நாணத்தா லும் நடுநடுங்கிப்போய்த் தன் கைகளால் இரு கண்களையும், கன்னங்களையும் பொத்திக்கொண்டு, தலையைக் குனிய வைத்துக்கொண்டு, அப்படியே குந்திவிடுகிறாள்.

மெல்ல, அவளது விருப்பம் அறிந்து செய்யவேண்டிய செயலைச் செவ்வியறியாது செய்துவிட்டோமே என்ற படபடத்த உள்ளத்துடன் அவளைத் தூக்கி நிறுத்தத் தலைவன் முயலுகிறான். அவள் பிடிவாதமாக அப்படியே தலைகுனிந்தபடி

வாய் திறவாமல், கண்ணைத் திறக்காமல், கண்களையும் கன்னங்களையும் கைகளால் மூடிய வண்ணம் குந்தியிருக்கிறாள்.

''கண்ணே! ஏன் இப்படி அஞ்சுகிறாய்? என்மீது உனக்குச் சினமா? எழுந்திருக்கமாட்டாயா? இதோ பார்! என்னைத் தலைநிமிர்ந்து பார்க்கமாட்டாயா? என்மீது உனக்கு அன்பு இல்லையா! எழுந்திரு கண்ணே! எழுந்திருக்க மாட்டாயா? நான் செய்தது தவறா? தவறு என்றால் மன்னித்துவிடு அன்பே! நீ ஏன் இப்படி அஞ்சிசுகிறாய்? இங்கு ஒருவருமில்லையே! நீயும் நானும் மட்டுந்தானே இருக்கிறோம். என்மீது வருத்தமா? சொல்லு கண்ணே! உன்மீது எனக்கு எவ்வளவு அன்பு தெரியுமா? அதனால்தான் கட்டியணைத்து முத்தமிட்டேன்! அது தவறா கண்ணே? தவறு என்றால் இனி விட்டுவிடுகிறேன்! எழுந்திரு! கண்ணே, எழுந்திரு! எங்கே, என்னைப் பார்க்க மாட்டாயா?'' என்று தலைவன் தலைவியைக் கேட்டுக்கொண்டே, அவளைப் பிடித்து அணைத்துத் தூக்கி நிறுத்த முயலுகிறான்.

தலைவி கூச்சத்தாலும் அச்சத்தாலும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கிறாள். பிறகு திடீரென்று அவன் பிடிகளினின்றும் தன்னை உதறிக்கொண்டு ஓட்டமாக ஓடிவிடுகிறாள்.

தலைவன், 'தலைவியின் முழு அன்பைப் பெறமுடியாமல் போய்விட்டேனே! என்மீது வெறுப்புக் கொண்டுவிட்டாளோ? இனி என்னைப் பார்க்க வரமாட்டாளோ? நான் அவள் முகத்தை என்றென்றும் பார்க்கமுடியாமல் போய்விடுமோ? சேச்சே! நான் என்ன தவறு செய்துவிட்டேன்? என்ன இருந்தாலும் அவ்வளவு அவசரப்பட்டிருக்கக் கூடாது! இனி என் செய்வது?' என்ற ஏக்கவுணர்வோடு, ஆற்றாமை தாளாமல் தன் வீடு நோக்கிச் செல்கிறான்.

இல்லம் சென்று சேர்ந்த தலைவி, 'அவரை உதறித் தள்ளிவிட்டு வந்துவிட்டோமே! அவர் என்ன நினைத்துக்கொள்வாரோ? என்ன இருந்தாலும் நான் அவ்வளவு பிடிவாதம்

செய்திருக்கக் கூடாது? அவர் அவ்வளவு கெஞ்சியபோது, அவருக்கு ஆறுதலாக ஏதேனும் சொல்லியிருக்கலாம்! இனி என்னைக் காண வருவாரோ, வரமாட்டாரோ? 'பிறகு பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்திருக்கலாம்! அதைக்கூடச் சொல்லாமல் வந்துவிட்டேனே! அவர் அன்போடுதானே அணைத்தார்! ஏன் அவ்வளவு அவசரப்பட்டு அவரைத் தடுத்து விட்டேன்? இனி அவரைக் காண முடியுமோ முடியாதோ?' என்று தனக்குள்ளே எண்ணி ஏங்குகிறாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் காணமுடியாமல், வீட்டை விட்டு வெளியே புறப்படாமல், அவரவர் வீடுகளில் தங்கிவிடுகிறார்கள். சிலநாட்கள் கழிகின்றன. 'தலைவி எங்கேனும் தென்படுகிறாளா என்று பார்ப்போம்' என்று எண்ணிக் கொண்டு, தலைவன் பூம்பொழில் பக்கம் உலாவப் போகிறான். 'தலைவர் பூம்பொழில் பக்கம் வருகிறாரா என்று பார்ப்போம்' என்று கருதிக்கொண்டு தலைவியும் பூம்பொழில் பக்கம் செல்கிறாள். எதிர்பார்த்துக்கொண்டு சென்றதற்கிணங்க, தலைவி பூம்பொழிலில் இருக்கக் கண்ட தலைவன், பெருவியப்பும், பெருமகிழ்ச்சியும் அடைகிறான். தலைவி, தலைவனைக் கண்டதும் ஒருபக்கம் மகிழ்ச்சியும் ஒருபக்கம் நாணமும் கொண்டவளாய், அவனைப் பார்க்காதவள்போல் வேறுபக்கம் திரும்பிக்கொள்கிறாள்.

தலைவன் துணிவை வரவழைத்துக்கொண்டு, மெல்லச் சென்று, அவள் பின்பக்கம் நிற்கிறான். தலைவன் மெல்லவந்து தன் பின்பக்கம் நிற்பதைத் தலைவி கடைக்கண்ணால் ஒருவாறு உணர்ந்துகொள்கிறாள். அவளிடம் எப்படிப் பேச்சுக் கொடுப்பது என்று தெரியாமல் தலைவன் சிறிதுநேரம் விழித்துக்கொண்டு நிற்கிறான். பிறகு துணிந்து, "நங்கையே என்மீது உனக்குச் சினமா?" என்று கேட்கிறான்.

தலைவி அவன் வந்ததை அறியாதவள் போல், திரும்பி அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, நாணத்தால் புடவையின் முந்தானையின் நுனியை வாயில்வைத்துப் பல்லால் மெல்லக்

கடித்துக்கொண்டு, தலையைத் தாழ்த்திப் பார்வையை நிலத்தின்மீது செலுத்திக்கொண்டு, காலின் பெருவிரலால் நிலத்தைக் கீறிக்கொண்டு இருக்கிறாள்

"கண்ணே! அன்று நான் உன்னை இறுகத் தழுவிக் கொண்டு, உன்னிடம் அன்புரைகள் சில சொல்லும்போது, அவற்றை ஏற்றுக் கொள்ளாதவள்போல், உன்னுடைய அழகிய முகத்தை மறைத்துக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு, தலையைத் தொங்கவைத்துக்கொண்டு இருந்துவிட்டாயே! ஏன் அப்படிச் செய்தாய்? என்னிடத்தில் உனக்கு ஏன் அவ்வளவு வெட்கம்?" என்று தலைவன் அவளைக் கேட்கிறான். தலைவி விடை ஏதும் பகராமல் அப்படியே நிற்கிறாள்.

தலைவன் மேலும் தொடர்ந்து, "நங்கையே! நான் உன்னிடத்தில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் தெரியுமா? உன்னிடம் நான் கொண்டுள்ள காதலன்பு அளவு கடந்து மிகும்போது, நான் அதனை எப்படித் தாங்கிக்கொண் டிருக்கமுடியும்? அந்த நிலையில் நான் உன்னை ஆரத் தழுவாமல் எப்படி இருக்கமுடியும்? நீயே சொல்லு!" என்று கேட்கிறான். அதற்கும் அவள் ஒன்றும் சொல்லாமல் நிற்கிறாள்.

அவளைப் புகழ்ந்து சில சொல்லுவதன் மூலம் அவளின் அன்பைப் பெறலாம் என்று எண்ணிக்கொண்டு, அவளைப் பற்றிப் புகழ்ந்து கூற முற்படுகிறான். தான் ஒரு போர்வீரன் என்ற பெருமிதத்தை அவளிடம் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், போர்வீரனோடு தொடர்புடைய உவமைகளைக் கூறி அவளைப் புகழ முற்படுகிறான். "பெண்ணே பெரிய வரிப்புலி நடுங்குமாறு, அதனுடைய முதுகிலே குத்தி, அதனை வீழ்த்தி, விளையாடி மீளும் யானையின் வெண்மையான கொம்புகள் குருதிக்கறைபடிந்து எப்படிச் சிவந்து காணப்படுமோ, அப்படி உன்னுடைய வெண்மையான கண்கள் சினத்தால் சிவந்து காணப்படு கின்றனவே? இது தகுமா?" என்று கேட்கிறான். அதற்கும் அவள் வாய்பேசாமல் நிற்கிறாள்.

தான் பாண்டிய மன்னனோடும், அவனது போர்ப்படையோடும், அவனது வளமிக்க மதுரை மாநகரோடும் தொடர்புடையவன் என்பதைக் காட்டிக் கொள்ள, அதுபற்றிய செய்திகளை உவமையாகக் கூறி அவளது தோள்களைப் புகழ எண்ணுகிறான், "அன்பே! உன்னுடைய தோள்கள் எவ்வளவு அழகாகவும், வளப்பமாகவும் இருக்கின்றன தெரியுமா? அவற்றில் எழுதப்பட்டிருக்கும் தொய்யிலோவியம் எவ்வளவு அழகாக இருக்கின்றது! ஆ! பகைவர்கள் மதிற்புறத்திடத்தே வந்துவிட்டால், உடனே மேல்விழுந்து சென்று பகைவரது முரசத்தைக் கைப்பற்றி, அவர்களது படைகளையும் கோட்டைகளையும் அழிக்கும் பாண்டிய மன்னனது பெரும் புகழையுடைய மதுரை எவ்வளவு வளப்பமாக இருக்கின்றதோ, அவ்வளவு வளப்பமாக இருக்கின்றன உன்னுடைய தோள்கள். உன்னுடைய கண்களும் தோள்களும் என்னை வாட்டி வதைக்கின்றன தெரியுமா? நீ ஏதும் அறியாதவள்போல் இருக்கிறாயே என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்று தலைவன் புகழ்ச்சிச் சொற்களை வீசிப் பார்க்கிறான். தலைவி அதற்கும் வாய்திறந்தபாடில்லை. தலைவனின் கூற்றுக்கேட்டு தலைவி தனக்குள்ளாகவே சிரித்துக்கொள்கிறாள். அவள் முகத்தில் சிரிப்பின் குறிப்புத் தோன்றுவதைத் தலைவன் பார்த்துவிடுகிறான்.

"கண்ணே! இனி என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது! நீ இப்படிப் பிடிவாதம் செய்துகொண்டிருப்பதை இனியும் நான் தாங்கிக் கொண்டிருக்கமுடியாது! நானே உன் மீது விழுந்து முயங்கப்போகிறேன்! உன் இனிய கண்களால் என்னை நயந்து நோக்கி, உன் அழகிய தோள்களால் என்னை இறுகக் கட்டியணைத்து முயங்கமாட்டாயா?" என்று தலைவன் அன்புடன் நயமாய் வினவுகிறான்.

அப்பூங்கொடியாள், தலைநிமிர்ந்து புன்சிரிப்பை அவன் மீது வீசுகிறாள். உடன் அவன் அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தின்புறுகிறான்!

* * *

நற்றிணை 39ஆம் செய்யுளின் கருத்தே கதைப் போக்கில் மேலே தீட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இந்தச் செய்யுளை இயற்றியவர் மருதனிளநாகனார் என்ற பெரும்புலவராவார். தலைவன் இரண்டாங்கூட்டத்தின்போது தலைவியை எதிர்ப் பட்டுக்கூறியதாக இந்தச் செய்யுளில் கருத்து வைக்கப்பட்டிருப் பதால், இது குறிஞ்சி ஒழுக்கத்தின்பாற் பட்டதாகும்.

சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமம் கைமிகின் தாங்குதல் எளிதோ
கொடுங்கேழ் இரும்புறம் நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப்(பு) ஏய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ அல்ல நண்ணார்
ஆண்டலை மதிலர் ஆகவும் முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே.

(நற்றிணை—39)

(பொழிப்புரை :) நங்கையே! நான் உன்னைத் தழுவிக்கொண்டு சில அன்புரைகள் கூறினால், அவற்றை ஏற்றுக்கொள்ளாதவள் போல், உன் அழகிய முகத்தைத் தாழ்த்தி வைத்துக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு வெட்கப்படுகின்றாய்! விரைவாகக் காமமானது கைகடந்து மிகுமேயானால், அதனை நான் தாங்கிக்கொள்ளுதல் எளிதான ஒரு செயல் ஆகுமா? புலி நடுங்குமாறு அதன் வளைந்த கரியநிறமுள்ள வரிகளையுடைய பெரிய முதுகிலே குத்தி வீழ்த்தி விளையாட்டயர்ந்த புலவு நாற்றத்தையுடைய யானையின் இனிய நுனியையுடைய கொம்புபோலக் கடைமணி சிவந்த உன்னுடைய கண்கள்தாம் சினந்து காணப்படுகின்றனவே! அவை மட்டுமல்ல, பகைவர் அரண்மிக்க மதிலிடத்தில் வரவும், உடனே மேல்வீழ்ந்து வென்று, அவரது முரசைக்கைக்கொண்டு, அவரால் பாதுகாக்கப் படுகின்ற அரணையும் கைப்பற்றிய, போரில் கொல்லவல்ல

பாண்டியனது பெரிய புகழையுடைய மதுரையைப் போன்ற உன்னுடைய தொய்யிலெழுதப்பட்ட கரும்புபோன்ற தோள்களும் என்னை வருத்துகின்றன! தெரியுமா?

இறைஞ்சி - தாழ்த்தி; கதும் - விரைவாக; கொடும் - வளைந்த; இரும்புறம் - பெரிய முதுகு; வேழம் - யானை, மருப்பு - கொம்பு; நண்ணார் - பகைவர்; ஆண்டலை - அரண்மிக்க.

*　　　*　　　*

காதலியை முதன்முறையாகக் காதலன் கட்டியணைக்கும் போது, காதலி எப்படிப்பட்ட அச்சத்திற்கும் நாணத்திற்கும் உள்ளாவாள் என்பதுபற்றிய மெய்ப்பாட்டுணர்ச்சிகளை இச்செய்யுள் மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

திருமணம் நடைபெறுவதற்கு முன்பு காதலனும், காதலியும் களவொழுக்கத்தில் மெய்தொடுதல், கட்டித் தழுவுதல், முத்தமிடுதல் போன்ற மெய்யுறுபுணர்ச்சிகளில் ஈடுபடுவதைப் பண்டைத் தமிழகம் ஏற்றுக்கொண்டிருந்தது என்பதை இச் செய்யுளால் இனிதே உணரலாம். இக்காலத்தில் மேனாட்டார் போற்றிக்கொள்ளும் அத்தகைய சிறந்த பழக்கம், பண்டைத் தமிழகத்தில் மிகச்சிறப்பாகப் போற்றப்பட்டு வந்தது என்பது பெருமிதங் கொள்ளுவதற்குரியதாகும்.

வெண்மையான கண்கள் சினத்தால் சிவந்து காணப்படுவதற்கு, சினங்கொண்ட யானையின் குருதி தோய்ந்த கொம்புகளை உவமையாகக் கூறியிருப்பதும், தோள்களின் நலன்களுக்கு, புகழ்வாய்ந்த 'மதுரையின் நலன்களை உவமையாகக் கூறியிருப்பதும் நயம் நிறைந்தவைகளாகும்.

பாண்டியனையும், அவனது வீரத்தையும் ஆற்றலையும் அவனது மதுரைமாநகரையும் புகழ்ந்து சொல்லவேண்டும் என்று எண்ணங்கொண்ட புலவர் மருதனிளநாகனார், இந்தச் செய்யுளை ஏற்ற முறையில் பயன்படுத்திக்கொண்டு, தம் கருத்தை அழகுற விளக்கியுள்ளது மகிழ்வதற்குரியதாகும்.

30. தனயனைக் காணவந்த தந்தை!

இவன் மனத்திற்குகந்த மங்கை நல்லாளைத் தன் காதலி யாகத் தேர்ந்தெடுக்கிறான். இருவரும் தலைவன் தலைவியர் ஆகின்றனர். திருமணம் நடந்தேறுகிறது; வாழ்க்கைத் துணைவர்களாக மாறுகின்றனர்.

அவனோ செல்வக்குடியிற் பிறந்த செழுமையாளன்; அவளோ நற்குடியிற் பிறந்த மங்கை நல்லாள். எனவே, இல்லற வாழ்வு யாதொரு குறைபாடுமின்றி இனிதே நடந்தேறி வருகின்றது.

இனிய இல்லற வாழ்வுக்கான எல்லா வசதிகளும், வளங் களும் நிரம்பிக் கிடக்கின்றன. அகன்ற பெரிய மாளிகையில் தான் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இட்டவேலையை ஏற்றுச் செய்ய ஏவலாளர்கள் ஏராளமாகக் காத்துக்கிடக் கின்றனர். உற்றாரும், உறவினரும், விருந்தினரும் நாள்தோறும் வந்துவந்து போகின்றனர். வரவேற்பும், விருந்தும், வழியனுப்பும் ஓயாமல் நடந்தேறிக்கொண்டே யிருக்கின்றன. மாளிகை கட்டுக்காவலை யுடையதாகையால், காவல்புரிவோர் மாளிகையின் வாயிலில் மணிகட்டிக் காவலின் தன்மையை உணர்த்திக்கொண்டே யிருக்கின்றனர். நிலவள மும், நீர்வளமும், துறைவளமும் ஏராளம். அவ்வளவு செல்வ மிகுதியில் அவ் இள மணமக்களின் இன்பவாழ்வு இனிது நிறைவேறி வருகிறது.

பெரும் பொழுதை மனைவியோடு கொஞ்சுதலிலும் குலாவுதலிலும், சிறு பொழுதை ஆடல் பாடல் போன்ற

களியாட்டங்களைக் கண்டு களிப்பதிலும் தலைவன் செலவிட்டு வருகிறான்.

சில காலம் சென்ற பிறகு மனைவி கருவுறுகிறாள். கருவுற்றிருக்கும் தன் இளம் மனைவியின் அருகிருந்து அவளுக்கு ஆதரவும், பாதுகாப்பும் தரவேண்டும் என்ற கடமையும் பண்பும் அறியாத தலைவன், அவளைச் சிறுகச் சிறுகப் புறக்கணித்துவிட்டு, ஆடல் - பாடல் புரியும் பரத்தையரிடத்துத் தன் மனத்தைச் சிறிது சிறிதாகப் பறிகொடுத்து விடுகிறான். நாளாக நாளாக மனைவியோடு சிறுபொழுதே சேர்ந்திருத்தலும், பரத்தையரின் ஆடல் - பாடல் களியாட்டங்களில் பெரும்பொழுதைச் செலவிடுதலிலும் காலங்கழிக்கத் துவங்குகிறான்.

தலைவனின் நிலைமையையும், அவனது குறைபாட்டையும் நன்கு அறிந்துகொண்ட சிலர், பாணர்கள், அவனைப் பரத்தையரோடு தொடர்புகொள்ளச் செய்ய முயலுகின்றனர். தலைவன் அவர்கள் வீசிய வலையிலே சிக்குகிறான். மதி மயங்கி, அவன் அன்புமனைவியை மறந்து, பரத்தையர் சேரிக்குப் போய்விடுகிறான்.

தலைவன் தீய வழியிற் புகுவதைத் தடுக்க இயலாத தலைவி, ஏக்கத்தோடு வாழ்கிறாள் என்றாலும், இல்லற அறங்களைத் தலைவனுக்குப் பதிலாக இருந்து நல்ல முறையில் நடத்தி வருகிறாள்.

தலைவன் இளைஞனாக இருப்பதாலும், செல்வமகனாக இருப்பதாலும், கண்மண் தெரியாமல் பணத்தையெல்லாம் பரத்தையர்க்கும், பாணர்க்கும் வாரி இறைத்துக் கொண்டிருக்கிறான். தலைவனிடம் எவ்வளவு பணத்தைக் கறக்கமுடியுமோ அவ்வளவு பணத்தைக் கறக்கப் பரத்தையரும், பாணரும் படாதபாடு படுகின்றனர்.

தலைவி கருநிறைவுற்று அழகிய ஆண்மகன் ஒருவனை ஈன்றெடுக்கிறாள். செல்வக்குழந்தைக்கு ஆண்மகன் பிறந்திருப்பது

மாளிகையில் வாழ்வோர் அனைவர்க்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. தாய்க்கும் சேய்க்கும் நீராட்டுவிழா நடத்தவும், பெயரிடுவிழா நடத்தவும் மாளிகையிலுள்ளோர் சீரிய ஏற்பாடுகள் பலவற்றையும் செய்கின்றனர். ஊரார்க்கும், உறவினர்க்கும் அழைப்புகள் விடுக்கின்றனர். மாளிகையின் நடுமுற்றத்திலும், தெருவாயிலிலும் தென்னங்கீற்றினால் பெரும் பந்தல்கள் போடப்பட்டு, நன்கு அழகுபடுத்தப்பட்டிருக்கின்றன. பந்தலின் கீழே வெண்மணல் பரப்பப்பட்டிருக்கிறது. விழாவினை அறிவிக்கும் மணியின் ஓசை மாளிகை வாயிலின் கண்ணே எழும்பியவண்ணம் இருக்கின்றது.

திருந்திய அணிகலன்கள் அணிந்துள்ள நற்பெண்டிர் பலரும் வந்து, தாய்க்கும் சேய்க்கும் வெண்கடுகையும் பசுநெய்யையும் தேய்த்து முழுக்காட்டுவிக்கின்றனர். செவிலி குழந்தைக்குத் தொட்டிலிட்டு, அதில் மெல்லிய மிருதுவான அணையைப்போட்டு, அதன்மீது நறுமணம் மிக்க விரிப்பு விரித்து வைக்கின்றாள். மாலைப்பொழுதில் பெண்டிர் குழந்தைக்குப் புத்தாடை உடுத்தி, நறுமணச் சாந்தம் முதலியன தடவித் தொட்டிலில் இடுகின்றனர். பெண்டிர், தலைவனின் தந்தையின் பெயரைக் குழந்தைக்கு வைத்து, அதனை வாழ்த்தி, அதற்குத் தாலாட்டுக்கூறித் தொட்டிலை ஆட்டுகின்றனர். தாயின் மென்மையான உடலுக்கு நெய்யைப்பூசி, அவளை அணிகலன்களால் அழகுபடுத்துகின்றனர். அவள் மகனைப் பெற்றெடுத்த மகிழ்ச்சியோடு உடல்வாட்டத்தின் காரணமாக ஓர்புறம் சோர்ந்து படுத்துக் கொள்கிறாள். விழாநிகழ்ச்சிகள் முடிவுற்று, வந்த விருந்தினர் தத்தம் வீடு ஏகுகின்றனர். விழா ஆரவாரம் மாளிகையில் ஓரளவுக்கு அடங்குகிறது.

மனைவிக்கு ஆண்குழந்தை பிறந்துள்ள செய்தியும், நீராட்டுவிழா, பெயரிடு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்ற செய்தியும் பரத்தையர் சேரியில் இருக்கும் தலைவனின் காதுக்கு எட்டுகின்றன. தனக்கு மகன் பிறந்துள்ளான் என்ற செய்தி கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டதோடு, மகனைக்

காணவேண்டும் என்றும் ஆவல் கொள்கிறான். பரத்தை யரினின்றும் எப்படித் தப்பிப்போவது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறான். நடு இரவுக் காலத்தில், எல்லாப் பரத்தையரும் உறங்கிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் யாரும் அறியாவண்ணம் மெல்லக் கிளம்பித் தன் மாளிகை நோக்கி விரைந்து செல்கிறான்.

பிறந்து இளமை கலையாத நிலையிலிருக்கும் மகன் மெல்லிய அணையின்மீது உறங்குவதையும், மனைவி ஈன்ற களைப்பால் தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு உறங்கு வதையும் காண்கிறான். பாழும் பரத்தையரிடம் பழகிய அவன் கண்களுக்குத் தலைவி மிக்க அழகான தோற்றமுடைய வளாகக் காணப்படுகிறாள். மனைவியையும், மகனையும் அன்பு வழியும் பார்வையால் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் தோழி விழித்துக் கொண்டு, "யாரது?" என்று அதட்டிக் கேட்கிறாள்.

தலைவன் "நான்,நான்...!" என்று தழதழத்த குரலில் விடை பகர்கிறான்.

"உனக்கு வெட்கமில்லை! போ வெளியே! மிக்க கவலையாக இப்பொழுது வந்துவிட்டாயா? உனக்கு மனைவியும், மகனும் ஒரு கேடா?" என்று தோழி ஏசுகிறாள்.

தலைவன், "நான் இனிமேல் அத்தகைய தவறு செய்ய மாட்டேன். என்னை மன்னித்துவிடு!" என்கிறான்.

"இந்த நள்ளிரவிலே ஏன் திருடன் நுழைவதைப்போல் நுழைந்து வந்திருக்கிறாய்?" என்று தோழி கேட்கிறாள்.

"இப்பொழுதுதான் மகன் பிறந்துள்ள செய்தியைக் கேள்வியுற்றேன்" என்கிறான்.

"மகன் பிறந்துள்ளான் என்றவுடன் ஓடிவந்துவிட்டாய் போலும்! இத்தனை நாளும் அவள் இருந்தது உனக்குத் தெரியவில்லையோ!" என்று தோழி அதட்டிக் கேட்கிறாள்.

"இனி இருவரையும் விட்டு அகலமாட்டேன் நீ என்னை நம்பு" என்கிறான்.

இதற்குள் தலைவி விழித்துக்கொண்டு, தலைவனின் தவறுகளையெல்லாம் மறந்து, அவனை விரும்பி ஏற்றுக் கொள்கிறாள்.

* *

நற்றிணை 40ஆம் செய்யுளின் உட்கருத்தே மேலே எடுத்துக்காட்டப்பட்டிருப்பதாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் கோண்மா நெடுங்கோட்டனார் என்ற புலவராவார். இவரைப்பற்றிய விரிவான குறிப்பு ஒன்றும் தெரியவில்லை. இதைத்தவிர இவரது பாடல் வேறு எதுவும் கிடைத்திலது. இப்படிப்பட்ட அழகான செய்யுளை இயற்றியவர் இதனைப் போன்று இன்னமும் எத்தனையோ பாடியிருக்கக்கூடும் என்று எண்ணி, அவை கிடைக்காமல் போனதற்கு ஏங்கவேண்டியிருக்கிறது.

நெடுநா ஒள்மணி கடிமனை இரட்டக்
குரையிலைப் போகிய விரவுமணல் பந்தர்ப்
பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியோடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட்(டு) ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த
நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே.

(நற்றிணை—40)

(பொழிப்புரை :) காவலையுடைய மாளிகையிடத்து நெடிய நாக்கையுடைய ஒள்ளியமணி ஒலிக்க, இரைச்சல்போடும் தென்னங்கீற்றால் போடப்பட்டு அழகுசெய்யப்பட்ட மணல் பரப்பிய பந்தலின்கண்ணே, முன்பு பரத்தை வீட்டிற்குச் சென்றபோது பெரிய பாணர் தலைவனை சூழ்ந்து காவலை மேற்கொண்டதுபோலத், திருந்திய அணிகலன்கள் அணிந்த பெண்டிர் இப்பொழுது நல்லவிழாவின் பொருட்டு சூழ்ந்து நிற்க, நறுமணமிக்க விரிப்பு விரித்த மெல்லிய அணையின்மீது செவிலியுடனே ஈன்ற அருமை விளங்கிய மகன் தூங்க, வெண்கடுகை அப்பிய எண்ணெய் தேய்த்து நீராட்டியதனால் ஈரமுடைய அணிகலன்களை அணிந்த குளிர்ந்த நெய்பதிய, மிக்க மென்மையாகிய உடம்பினையுடைய, அழகு விளங்கும் மனைவி தன் இரண்டு இமைகளும் ஒன்றே பொருந்த உறங்க, அகன்ற நீர்த்துறையையுடைய ஊரனும், சிறந்த தந்தையின் பெயரனாகிய தன் மைந்தன் பிறந்ததனால், நள்ளிரவிலே கள்வனைப்போல வந்துற்றான்.

கடி - காவல்; இரட்ட - ஒலிக்க; குரையிலை - இரைச்சலிடும் தென்னங்கீற்று; விரிச்சி - நிமித்தம்; பொருட்டு; அறுவை - ஆடை; புனிறு - ஈன்றதன் அணிமை; ஐயவி - வெண்கடுகு.

பரத்தையர் சேரியில் காமமயக்கங்கொண்டு கண்டபடி திரிந்துகொண்டிருந்த தலைவன், மகன் பிறந்த செய்தியறிந்ததும் இல்லம் தேடிவந்தான் என்பதிலிருந்து, மகவு, தந்தையின் உள்ளத்தைக் கவர்வதில் எவ்வளவு வலிவுடையதாக விளங்குகிறது என்பதை அறிந்துகொள்ளலாம். தலைவன் தலைவியரின் மகிழ்ச்சியைப் பெருக்குவதற்கும், நீங்காப் பிணைப்பை ஏற்படுத்துவதற்கும் பிள்ளைப்பேறு எவ்வளவு இன்றியமையாததாக வேண்டப்படுகிறது என்பதை இச் செய்யுளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

பெரும் மாளிகையின் வாயினில் மணிகட்டி ஒலிக்கச் செய்தலும், வீடுகளில் விழா ஏற்பட்டால் முற்றத்தில்கீ ற்றுப்

பந்தல்போட்டு வெண்மணல் பரப்புதலும், விழாக்காலங்களில் பெண்டிர் முக்கிய பங்குகொள்ளுதலும், நறுமணம் தெளிக்கப் பெற்ற ஆடையை மெத்தையின்மீது விரித்து அதில் குழந்தையைப் படுக்கவைத்தலும், குழந்தையைச் செவிலி பாதுகாத்து வருதலும், வெண்கடுகையும் பசுநெய்யையும் தேய்த்துத் தாயை முழுக்காட்டுதலும், தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு இடுதலும் ஆன பழக்கவழக்கங்கள் பண்டைத் தமிழகத்தில் விளங்கிவந்தமை இச்செய்யுளால் இனிது அறியப் படும்.

13. பெண்ணாக நடித்த பொய்யன் !

திருமணம் நடந்தேறிச் சில ஆண்டுகள் ஆகின்றன. தலைவனும் தலைவியும் அறநெறியில் நின்று, செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்த்து இல்லற வாழ்வில் இனிது வாழ்ந்து வருகின்றனர்.

தலைவனது செல்வச்செழிப்பையும், அழகுத் தோற்றத்தையும், புதுமை காணும் பண்பையும், இன்பத் துறையிலே காட்டும் ஆர்வத்தையும் கண்ட பாணன் ஒருவன், எப்படியேனும் தலைவனுக்கு நண்பனாகி, அவனைப் பரத்தையர் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, அவனையும் மகிழ்விக்கச் செய்து, அதன் காரணமாகத் தானும் பொருளீட்டிக்கொள்ள வேண்டும் என்று திட்டமிடுகிறான். ஆளை மயக்கி நண்பனாக்கிக்கொள்ளும் அறிவும் ஆற்றலும் நிரம்ப உண்டாதலால், அவன் தலைவனை நெருங்கித் தலைவனோடு மெல்ல மெல்லப் பழகிச் சிறிதுநாளில் தலைவனுக்கு உற்ற நண்பனாகி விடுகிறான்.

தலைவனைத் தனியே உலாவிற்கு அழைத்துச்செல்வதும், பரத்தையர் பலரின் அழகைப்பற்றியும், அவர்கள் கற்றறிந்துள்ள காதற்கலையைப் பற்றியும், அவர்களோடு சேர்ந்து வாழ்வதால் எப்படிப்பட்ட இன்பத்தை இடைவிடாது நுகர்ந்து கொண்டிருக்கலாம் என்பதைப் பற்றியும் அடிக்கடி எடுத்துச் சொல்வதும் ஆன பணிகளில் பாணன் விடாமுயற்சியோடு ஈடுபடுகிறான். தலைவன் முதலில் அவைகளையெல்லாம் வேடிக்கைக் கதைபோல் கேட்டுவருகிறான். பரத்தையர்பால்

காதல்கொண்டு போதல் ஆன்றோரும் சான்றோரும் வகுத்த ஒழுக்கநெறிக்கு மாறுபட்டதாகுமே என்று அஞ்சிப் பாணன் வீசிய வலையில் நெடிது நாட்கள் விழாமல் தன்னைத்தானே காத்துக்கொண்டு வருகிறான். பரத்தையர் வீட்டுக்குப் போவதால் யாதொரு தவறுமில்லை. செல்வ மக்கள் எவ்வளவோ பேர் பரத்தையர் சேரியிலே இன்பம் நுகர்ந்து வருகிறார்கள் என்று பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கித் தலைவனது உள்ளத்தைக் குழப்புகிறான் பாணன்.

பாணனது அன்புச்சொற்களையும், அழகுச் சொற்களை யும், கேட்டுக் கேட்டுத் தலைவனது மனமும் சிறிது குழப்ப மடையத் தலைப்படுகிறது. 'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்பதைப்போல், தலைவியோடு இருந்து பெறும் இன்பம் தலைவனுக்குச் சிறிது கசப்பாகத் தோன்றுகிறது. வேறு புதுமை இன்பங்களைக் காணவேண்டும் என்ற ஆவல் அவனைத் தூண்டத் துவங்குகிறது. பரத்தையரைப்பற்றிப் பாணன் சொல்லியவைகளைக் கேட்டுவந்த தலைவனுக்கு இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதைப்போல், பரத்தையர்பால் பெறும் இன்பம், தான் தலைவியோடு இருந்து பெரும் இன்பத்தைக் காட்டிலும் நன்றாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தையும் தருகின்றது. பாணன் தன் முயற்சியில் வெற்றி பெறுகிறான். தலைவன் பரத்தையர் வீடு செல்ல ஒருப்படு கிறான்.

தலைவனைக் காணாது தலைவியும் தோழியும் பெருந் துயருறுகிறார்கள். தோழி தலைவனை எங்கெங்கும் தேடிப் பார்க்கிறாள்; யார் யாரையோ கேட்டுப் பார்க்கிறாள். தலைவன் அகப்பட்டபாடில்லை. தலைவன் பண்புள்ளம் கொண்டு வாழ்ந்து வந்தவனாதலால், அவன் பரத்தையர் சேரிப்பக்கம் சென்றிருக்கமாட்டான் என்ற துணிவில், அந்தப் பக்கம் தேடிப்பார்க்கத் தோழி முயற்சி எடுக்கவில்லை.

சில நாட்கள் கழிந்தன. தலைவனைப் பரத்தையர் சேரியில் கண்டதாகவும், அவன் பெண் வேடம் போட்டுக்

கொண்டு, பரத்தைப் பெண்களோடு சேர்ந்து கைகோர்த்து ஆடும் துணங்கைக்கூத்து ஆடுகிறான் என்று சிலர் தோழியிடமும் தலைவியிடமும் செய்தியைத் தெரிவிக்கிறார்கள். இச் செய்தியை கேள்வியுற்றதும், தலைவி, மீளா வருத்தத்தில் ஆழ்ந்து மிக்க வாட்டமுறுகிறாள். தலைவனைச் சென்று பார்த்துவரலாம் என்ற எண்ணத்துடன், தோழி, பரத்தையர் சேரி நோக்கிப் புறப்படுகிறாள்.

தலைவன் பெண்களைப்போல் இடிமயிர் வைத்துத் தலைவாரிப் பின்னிக்கொண்டு, மாலை சூட்டிக்கொண்டு, கைகளில் வளையல்களை மாட்டிக்கொண்டு, பரத்தைப் பெண்களோடு சேர்ந்து துணங்கைக்கூத்து ஆடிக்கொண்டிருக்கிறான். பரத்தையர் சேரியில் நுழைந்தவுடன் விழாக் களத்தில் துணங்கைக்கூத்து நடைபெறும் செய்தி கேட்டுத் தோழி விரைவாக அந்த இடத்திற்கு நடந்து செல்கிறாள். தலைவனைக் கையோடு பிடித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு தோழி செல்கிறாள்.

துணங்கைக் கூத்து நடைபெறும் இடத்திற்குத் தோழி வந்துகொண்டிருப்பதைச் சிறிது தொலைவில் அவள் வரும் போதே தலைவன் கண்ணுறுகிறான். தலைவன் தோழிக்கு அஞ்சியும், வெட்கப்பட்டுக்கொண்டும், அந்த இடத்தைவிட்டு மெல்ல நழுவி வேறுபக்கமாக விரைந்து செல்கிறான். தலைவன் தன்னைக் கண்டதும் நழுவி ஓடுகிறான் என்பதை அறிந்து கொண்ட தோழி, வேறு ஒரு தெருப்பக்கமாகச் சென்று அவனை எதிர்ப்படலாம் என்று கருதிக்கொண்டு வேறோர் தெருப்பக்கம் ஓடுகிறாள். வேறோர் நீண்ட தெருவின் வளைந்த முனைப்பக்கம், பெண்வேடம் தாங்கிய தலைவன் திரும்பும்போது, தோழி எதிர்ப்படுகிறாள்.

தலைவன் தோழியைக் கண்டுகொள்ளாததுபோல் நாணிக்கோணி ஒரு பக்கமாக ஒதுங்கிச் செல்ல முற்படுகிறான். தோழி அவனைப் பார்த்து, "ஏடா! நில்லடா!" என்கிறாள்.

அதற்குத் தலைவன், "யாரைப் பார்த்து ஏடா என்கிறாய்? என்னை ஒரு ஆண்மகன் என்று நினைத்துக்கொண்டாயோ? உனக்கு கண் என்ன குருடோ?" என்று கேட்கிறான்.

அதற்குத் தோழி, "என்னுடைய கண் இன்னமும் அப்படி யொன்றும் ஆகிவிடவில்லை. உன்னை யார் என்று நன்றாக அறிந்துகொண்டுதானே உன்னைப் பிடிக்க ஓடோடியும் வருகிறேன். நீ ஒன்றும் என்னை ஏமாற்ற முடியாது. உள்ளதைச் சொல். நீ எப்பொழுது இங்கு வந்தாய்?" என்று வினவுகிறாள்.

"என்மேல் காணப்படுவது பசலை என்று நினைத்துக் கொண்டு, உள்ளதைச் சொல் என்று கேட்கிறாயே? இது பசலையல்ல; அழகுக்காகப் பூசப்பட்ட மணமுள்ள பொடி" என்று, பேச்சை மாற்றித் தலைவன் விடை கூறுகிறான்.

"ஏடா! ஏன் உன்னை மறைத்துப் பேசுகிறாய்? உன்னை யாரென்றுதான் எனக்கு நன்றாகத் தெரிகிறதே! ஏன் என்னோடு வீணாக விளையாடிக்கொண்டிருக்கிறாய்?" என்று தோழி வினாவுகிறாள்.

அதற்குத் தலைவன், "நீ என்னை வம்புக்கு இழுத்து விளையாடுகிறாயா? நான் உன்னோடு விளையாடுகிறேனா? ஏன் என்னைப்போன்ற பரத்தையரிடம் வந்து வீண் வம்பு வளர்க்கிறாய்" என்று கேட்கிறான்.

"நானா வீண் வம்பு வளர்க்கிறேன்? ஏடா! உன் அழகான பண்புள்ள மனைவி மனையகத்தே வருந்தி வாடிக்கொண் டிருக்கும்போது, நீ இங்குக் கூத்தடித்துக் கும்மாளமா போட்டுக் கொண்டிருக்கிறாய்?" என்று சுடுசொல் வீசுகிறாள்.

"நான் என் குலத்துக்கு ஏற்ற விளையாட்டு விளையாடி னால், அதனால் உனக்கென்ன? நீ ஒன்றும் என்னைக் கேட்க

வேண்டியதில்லை!'' என்று சொல்லிவிட்டுத் தலைவன் மேற்கொண்டு நகர ஆரம்பிக்கிறான்.

''ஏடா! உனக்குச் சிறிதுகூட வெட்கமில்லையா? பெண் வேடம் தாங்கி இங்கு ஆட்டம் ஆடுகிறாயே! உனக்கு அழகாக இருக்கிறதா?'' என்று அதட்டிக் கேட்கிறாள். அதற்குள் தலைவன் விறுவிறு என்று போய்விடுகிறான். வேறு வழியின்றித் தோழி வீடுநோக்கித் திரும்பி விடுகிறாள்.

சில நாட்களில் தலைவன் தன் கைப்பொருள்கள் முழுவதும் இழந்துவிடுகிறான். அவன் வறியவனாக ஆகிவிட்டதை உணர்ந்த பரத்தையர் அவனைப் புறக்கணித்து அருகில் நெருங்கவொட்டாமல் தடுத்து நிறுத்துகின்றனர். தலைவன் தன் நிலை அப்படி இழிந்து போய்விட்டதை எண்ணி எண்ணி மிகுவருந்தி, மீண்டும் தன் இல்லம் நோக்கிச் செல்ல நினைக்கிறான். தலைவியின் உயர்வும், பண்பும், அன்பும் அப்பொழுது தான் அவனுக்குத் தெரிய வருகின்றன. ஆனால், எப்படித் தலைவியின் முகத்தில் விழிப்பது, 'அவள்தான் தன்னைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறாளே என்று எண்ணி ஏங்கு கிறான். தலைவியும், தோழியும் எப்படியிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காகத் தலைவன் பாணனைத் தலைவியின்பால் அனுப்பிவைக்கிறான்.

பாணன் தலைவனின் வீட்டிற்குச் சென்று தலைவி—தோழி முன்செல்ல அச்சப்பட்டுக்கொண்டு, வீட்டுக்கு வெளியில் மறைந்து கொண்டு நிற்கிறான். பாணன் வந்து வீட்டிற்கு வெளியே மறைந்து நிற்பதைத் தோழி அறிந்துகொள்கிறாள். தலைவன் அனுப்பித்தான் பாணன் வந்திருக்கிறான் என்பதைத் தோழி குறிப்பால் உணர்ந்து கொள்கிறாள். தாங்கள் தலைவன்மீது சினங்கொண்டிருக்கிறோம் என்பதைத் தலைவனுக்குப் பாணன்மூலம் அறிவிக்கவேண்டி, தோழி, அதனைப் புலப்படுத்தும் முறையில் தலைவியோடு உரையாடல் நடத்துகிறாள்.

தோழி : (தலைவியைப் பார்த்து) "தலைவன் மீண்டும் வந்தால் அவனை நீ ஏற்றுக் கொள்வாயாடீ?"

தலைவி : "அவன் ஏன் வரப்போகிறான்? என்னைப்பற்றி அவனுக்கு ஏன் நினைவிருக்கப் போகிறது?"

தோழி : "அவனை அந்தப் பரத்தைச் சிறுக்கிகள் விரட்டி விட்டால், அப்பொழுது அவன் இங்குதானே வரவேண்டும். அப்படி வந்தால் நீ ஏற்றுக் கொள்ளப் போகிறாயா என்று கேட்கிறேன்?"

தலைவி : "நான் ஏன் அவனை ஏற்றுக்கொள்ளப்போகிறேன்? நான்தான் அவன் முகத்தில் இனி விழிப்பதில்லை என்று முடிவுசெய்துவிட்டேனே!"

தோழி : "நான்கூட அவன் வெட்கப்படும்படியாக அன்று நன்றாகக் கேட்டுவிட்டேன்!"

தலைவி : "அப்படி அவன் வெட்கத்துக்கு உரியவனாகவுமா நடந்து கொண்டான்?"

தோழி : "அந்த வெட்கக்கேட்டை ஏன் இன்னொரு தடவை கேட்கிறாய். அவன் கொஞ்சம்கூட வெட்கப்படாமல், பரத்தையர்கள் அவனை ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடினான். அவர் களைப்போல் அவனும் பெண்வேடம் புனைந்து கொண்டு, அவர்களோடுகூடி சேர்ந்து துணங்கைக் கூத்தும் ஆடினான்!"

தலைவி : "உன்னைக்கண்டு அவன் சிறிதுகூட நாணப்பட வில்லையா?"

தோழி : "ஏன் நாணப்படவில்லை? என்னைக் கண்டவுடன் நாணம் அவனது உயிரைப் பறித்துத் தின்றது என்றுகூடக் கூறலாம். அவன் என்னைக் கண்ட வுடன் நழுவி ஓட்டம் பிடித்தான். நானும் விட வில்லை. வேறு தெருப்பக்கமாகச் சென்று,

அவனைத் தெருமுனையில் எதிர்ப்பட்டு நின்றேன். அவன் நாணிக் கோணி நழுவிப்போகப் பார்த்தான். நான் இழுத்துப்பிடித்து நிறுத்தினேன். அவன் தான் ஒரு பெண்ணேதான் என்று நான் நம்பவேண்டும் என்று, என்ன என்னவோ வெல்லாம் சொல்லிப் பார்த்தான். நான் அவனை விடவில்லை. 'உனக்குச் சிறிதுகூட வெட்கமில்லையா?' என்று சூடாகவே கேட்டேன். அவன் என் முன்னே நிற்கமுடியாமல் வெட்கப்பட்டுக் கொண்டே நகர்ந்துவிட்டான்!''

தலைவி : ''அப்படி உன்னிடத்தில் அன்று சொல்லடி வாங்கிக் கொண்டவன் ஏன் திரும்பிவரப் போகிறான்? எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவன் நம்முன் வரமுடியும்?''

தோழி : ''அவன் வரமாட்டான் என்றே நீ முடிவு செய்து விட்டாயா?''

தலைவி : ''அவன்தான் பெண்வேடம் போடும் பேடியாகி விட்டானே! அவன் இங்கே ஏன் வரப்போகிறான்?''

இப்படித் தோழிக்கும் தலைவிக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை, ஒண்டிநின்று கேட்டுக்கொண்டிருந்த பாணன், தலைவனிடம் சென்று, தலைவி சீற்றந்தணியாமல் இருக்கும் நிலையைச் செப்புகிறான். தலைவன் என்ன செய்வதென்று தெரியாமல் வருந்துகிறான்.

இது நற்றிணை 50ஆம் செய்யுளின் விளக்கமாகும். இது மருதத் திணையைச் சார்ந்தது. 'தோழி பாணற்கு வாயில் மறுத்தது' என்னும் தன்மையைக் கொண்டதாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் மருதம்பாடிய இளங்கடுங்கோ என்பவராவார். இவர் சேரர் மரபைச் சார்ந்தவர். பாலைபாடிய பெருங்கடுங்கோவின் தம்பி என்று கூறப்படுகிறது. இவர்

மருதத் திணையைச் சிறப்பித்துப் பாடிய பேராற்றலால் 'மருதம் பாடிய' என்ற அடைமொழியிட்டு அழைக்கப்படுகிறார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாட்டும், அகநானூற்றில் இரண்டும் ஆக மூன்று பாடல்கள் மட்டுமே இப்பொழுது கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

அறியா மையின் அன்னை யஞ்சிக்
குழையன் கோதையன் குறும்பைந் தொடியன்
விழவயர் துணங்கை தழூஉகஞ் செல்ல
நெடுநிமிர் தெருவில் கைபுகு கொடுமிடை
நொதும லாளன் கதுமெனத் தாக்கலின்
கேட்பார் உளர்கொல் இல்லைகொல் போற்றென
யாணது பசலை யென்றனன் அதனெதிர்
நாணிலை எலுவ என்றுவந் திசினே
செறுநரும் விழையும் செம்ம லோனென
நறநுத லரிவை போற்றேன்
சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே.

(நற்றிணை—50)

(பொழிப்புரை:) அம்மையே! நறிய நெற்றியுடைய தலைவி! நான் அறியமாட்டேன் என்று கருதிக் கொண்டு, உனக்கு அஞ்சி மலர்முடித்து மாலைசூடிக் குறிய பசிய வளையல் அணிந்தவனாகி, விழாக்களத்தில் அவன் துணங்கை யாடுதலைக் கையோடு பிடிக்கக் கருதி நாங்கள் செல்லும்போது, நமக்கு வேறுபட்டு விளங்கும் அவன்தான் அவ்வணிகளையுடையவனாய், நீண்ட நிமிர்ந்த தெருமுனையில் வேறொரு வழிவந்து புகுந்த வளைந்த இடத்தே விரைவில் வந்து என்முன் எதிர்ப்பட்டானாக, "இப்படிச் செய்யும் உன்னைக் கேட்பாருண்டோ இல்லையோ? அறிந்துகொள்!" என்று நான் கூற, அவனும் ஏதும் அறியாதவன் போல என்னிடத்தில் காணப்படும் பசலை அழகுடையது என்றான்; அதற்கு எதிர்மொழி கொடுக்கத் துணிந்து, அவன் பகைவராலும் விரும்பப்படும் செம்மாப்புடையான் எனக்கொண்டு நான் வணங்கிச் சொல்லாமல், என்

சிறுமை பெரிதானதால், ஆராயாதே துணிந்து, "ஏடா! நீ நாணமுடைய வனல்லன்" என்று கூறிவந்தேன்.

கோதை - மாலை; தொடி - வளையல்; துணங்கை - பெண்கள் சேர்ந்து ஆடும் ஒரு வகைக் கூத்து; யாணது - அழகுடையது; செறுநர் - பகைவர்.

*　　　　*　　　　*

தலைவன் பரத்தை வீட்டிற்குப் பிரிந்து செல்லும் தன்மையைத் தலைவி எப்படி வெறுப்போடு நோக்குகிறாள் என்பதையும், அவனைத் திரும்ப ஏற்றுக்கொள்வதற்கு அவள் மனம் எப்படி ஒருப்படுவதில்லை என்பதையும், ஆசிரியர் இச் செய்யுளில் தெளிவுபட விளக்கிக் காட்டுகிறார்.

விழாக் கொண்டாடுதல், விழாக்கொண்டாடும் இடத்தில் பெண்கள் துணங்கைக்கூத்து ஆடுதல், ஆடவர்கூட பெண்டிர் வேடம் புனைந்து அவருடன் கூத்து ஆடுதல்போன்ற பழக்கங்கள் இச்செய்யுளில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

32. மகிழ்ந்து அணைத்த மங்கை !

போர் முடிந்து, வெற்றி ஏற்பட்டு, அமைதி நிலவத் தொடங்கிவிட்டபடியால் காதலனாகிய படைத்தலைவன், தன் அருமைக் காதலியைக் காணவேண்டித், தன் ஊர் திரும்பு வதற்கான ஆயத்தங்களைச் செய்கிறான்.

அதற்குள் கார்காலமும் நெருங்கிவிடுகிறது. பல ஆண்டு களாகப் பெய்யாதிருந்த மழையும் பெருமழையாகச் சோவெனப் பெய்துவிடுகிறது. தலைமழை பெய்துவிட்டதைக் கண்ட காதலன், "மழை பெய்வதானது, கார்காலம் முன்னரே துவங்கிவிட்டது என்பதைக் காட்டுகிறது; நாமோ கார்காலம் துவங்குவதற்கு முன்னரே வந்துவிடுவோம் என்று தலைவியிடம் சொல்லிட்டு வந்துள்ளோம்; இனி ஒரு நொடியும் காலந் தாழ்த்தினால் தலைவி பெரிதும் வருந்தித் துன்புறுவாள்; எனவே உடனே புறப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நாம் செய்யவேண்டும்" என்று தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டு, பயணத்திற்கு ஆயத்தப்படுகிறான்.

அரசனிடத்திலும், பிற படைத்தலைவர்களிடத்திலும், போர்வீரர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு, விரைந்து செல்லக்கூடிய குதிரைகள் பூட்டிய தேரையும், மிக்க திறமை யாக ஓட்டிச் செல்லக்கூடிய பாகனையும் அமர்த்திக்கொண்டு, புறப்படுகிறான்.

தேர், மிக விரைவாகத் தலைவனின் ஊர்நோக்கிச் செல்லு கிறது. ஊர் நெருங்க நெருங்க, "தேர் இன்னும் விரைவாகச்

கூடாதா..." என்று தலைவன் தன் மனத்திற்குள்ளே எண்ணிக் கொள்கிறான்.

பல நாட்களுக்குப் பெருமழை பெய்துள்ளதால், ஆறுகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், பள்ளங்கள், படுகுழிகள் எல்லாம் நீர் நிரம்பிக்கிடக்கின்றன. தேரோடும் வழியெல்லாம் சேறும் சகதியுமாகக் கிடக்கின்றன. கார்காலத்துக் குளிரையும் நீர்த்தேக்கங்களையும் கண்ட தவளைகளெல்லாம் வழிநெடுகப் பேரொலி எழுப்பத் துவங்கிவிடுகின்றன. தேரில் கட்டியுள்ள மணிகளின் ஒலியை மறைக்கும் அளவுக்குத் தவளைகளின் இரைச்சல் காரணமாக, தன் தேரின் மணியொலி, தலைவிக்கு முன்கூட்டியே கேட்குமோ அல்லது கேட்காதோ, தன் வருகையை அவள் முன்கூட்டிய அறிந்துகொள்ளுவாளோ அல்லது அறியாமற் போய்விடுவாளோ என்று ஐயப்பட்டுக் கொண்டு, உடன் குதிரை ஏறிவரும் வீரர்கள் இருவரை விளித்து, "நீங்கள் இருவரும் விரைவாகச் சென்று நான் பின்னால் வந்து கொண்டிருக்கிறேன் என்பதை முன்கூட்டியே தலைவியிடம் அறிவியுங்கள்!" என்று சொல்லியனுப்புகிறான். அந்த இரண்டு குதிரைவீரர்களும் காற்றெனப் பறந்துசெல் கிறார்கள். பின், தலைவன் தேர்ப்பாகனோடு உரையாடிக் கொண்டே போகிறான்.

தலைவன் : "பாகனே! தேரை விரைவாகச் செலுத்து பார்க்கலாம்!"

பாகன் : "இவ்வளவு விரைவுபடுத்தி ஓட்டுகிறேனே, போதாதா?"

தலைவன் : "இன்னும் விரைவாகச் செலுத்த முடியாதா?"

பாகன் : "எப்படிச் செலுத்துவது? முடிந்தால் நான் செலுத்தாமல் இருப்பேனா?"

தலைவன் : "தார்க்குச்சியால் குத்திச் சாட்டையால் சுழற்றி அடித்து ஓட்டிப் பாரேன்!"

பாகன் : "நாம் எவ்வளவு குத்தினாலும், எவ்வளவு அடித்தாலும் குதிரைகள் ஓடமுடிந்த அளவுக்குத் தானே ஓடும்?"

தலைவன் : "என் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை நீ அறியமாட்டாய், பாகனே!"

பாகன் : "தாங்கள் தான் முன்னரே செய்தி சொல்லி அனுப்பிவிட்டீர்களே! இன்னமும் ஏன் விரைவுப் படுத்துகிறீர்கள்?"

தலைவன் : "அந்தக் காட்சியைக் காணவேண்டுமென்று என் மனம் எவ்வளவு துடிதுடிக்கிறது தெரியுமா?"

பாகன் : "எந்தக் காட்சியைக் காண...?"

தலைவன் : "நான் மாளிகை சென்று சேர்ந்ததும், என் மனைவி வரவேற்கப் போகும் காட்சியைத்தான் சொல்லுகிறேன்!"

பாகன் : "தாங்கள் எப்படிப்பட்ட வரவேற்பை எண்ணி எப்படிக் கனவுகண்டுகொண்டிருக்கிறீர்களோ...? தலைவியார் எப்படிப்பட்ட வரவேற்பை அளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்களோ...? இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாக அமைந்து விட்டால்...!"

தலைவன் : "நீ அப்படி ஒன்றும் நினைக்காதே! அவள் என்னிடத்தில் என்றென்றும் அன்புடைவளாகத் தான் இருப்பாள். அவள் என்பால் கொண்டுள்ள அன்பு வற்றாது வாடாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சென்றமுறை நான் போருக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவந்தபோது அவள் அளித்த வரவேற்பையும், காட்டிய அன்பையும் கண்கூடாகக் கண்டேனே!"

பாகன் : "சென்ற முறை தலைவியார் எப்படிப்பட்ட வரவேற்பைத் தங்களுக்கு அளித்தார்கள்?"

தலைவன் : "இப்பொழுதைப் போலவேதான், அப்பொழுதும் நான் செல்வதற்கு முன்னால் குதிரைவீரர்களை விரைவாகச் சென்று நான் வரும் செய்தியைத் தலைவிக்கு அறிவிக்கும்படி ஏற்பாடு செய்தேன். குதிரைவீரர்கள் சென்று செய்தியைச் சொல்லும் போது, தலைவி என்னைப் பிரிந்திருந்த வருத்தத்தால் சரிவர நீராடாமல், நல்ல ஆடை அணிகலன்கள் அணிந்துகொள்ளாமல், பின்னி முடியாத பூச்செருகாத கூந்தலையுடைய வளாய்க் காட்சியளித்தாளாம். நான் வரப் போகிறேன் என்ற செய்தியைக் கேள்வியுற்றவுடன் அவள் தூய நீரில் நீராடிக், கூந்தலிலிருந்த அழுக்குகளைப் போக்கிச் சிக்கல் எடுத்து, அதனைச் சீவி அழகுபடுத்தி, அதில் மலர்களை வைத்து முடிக்குந் தறுவாயில் நான் போய்ச் சேர்ந்தேன். நான் உள்ளே நுழைந்ததும், அவள் கூந்தலை முடிகின்ற வேலையை அப்படியே விட்டு விட்டு, கூந்தல் அவிழ்ந்து சரியும் நிலையில் உடலானது கொடிபோல் துவண்டு அசைய, ஓடிவந்து என்னைக் கட்டி அணைத்துக் கொண்டாள். அவள் அவ்வளவு மகிழ்ச்சியை என்னிடத்தில் காட்டிக்கொண்டாள். அவள் மகிழ்ந்து கொண்டாடும் அந்தத் தன்மையை நான் என்றென்றும் மறக்கமுடியாது. அப்படி மகிழ்ந்தணைக்குந் தன்மையை நான் இன்றும் பெறுமாறு, நீ விரைவாகத் தேரைச் செலுத்து வாயாக!"

தலைவனின் ஆர்வத்தை அறிந்துகொண்ட பாகன் தேரை மேலும் விரைவாகச் செலுத்த முற்படுகிறான். தேர்க்குதிரை கள் நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்துவந்து சிறிதுபொழுதிற் கெல்லாம் தலைவனின் மாளிகைக்கு எதிரே வந்து நிற்கின்றன.

தலைவன் எதிர்பார்த்தவண்ணம் தலைவியும் வரவேற்று அளிக்கிறாள்!

* *

மேலே காட்டப்பட்டிருக்கும் காதற்காட்சி நற்றிணை 42 ஆம் செய்யுளின் கருத்தை உள்ளடக்கியதாகும்; இந்தச் செய்யுளை இயற்றியவர் கீரத்தனார் என்ற புலவராவார். இவர் குடவாயிற் கீரத்தனார் என்றும் அழைக்கப்படுவார். குடவாயில் என்னும் பேரூர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் வட்டத்தில் இருக்கிறது. அந்தக் காலத்தில் சோழரது பணச்சாலை குடவாயிலில் இருந்ததாக அகநானூறு 60-ஆம் செய்யுவில் இவர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் குடவாயிலில்தான் பணச்சாலையையும் சிறைச்சாலையும் பண்டைச் சோழர்கள் வைத்திருந்தார்கள் என்று தெரிய வருகிறது. சோழன் செங்கணான், கணைக்காலிரும்பொறை என்ற சேரமன்னனைப் போரில் தோற்கடித்து, அவனைப் பற்றிவந்து, குடவாயிற்கோட்டத்துச் சிறையில் அடைத்தான் என்று 'களவழி'யிலும், 'புறநானூற்றி'லும் சொல்லப் பட்டுள்ளதும் இங்குக் கவனிக்கத் தக்கதாகும். வள்ளல்கள் நன்னனும், எவ்வியும் இவரால் சிறப்பித்துப் பாராட்டப் பட்டுள்ளனர். இவர் உறையூரையும், காவிரியையும் பாடியுள்ளார். இவர் பாடிய பாட்டு நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களில் காணப்படுகின்றன.

மறத்தற்(கு) அரிதால் பாக! பன்னாள்
அறத்தொடு பொருந்திய அல்குதொழில் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக்(கு) அறியுந ராக மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்

சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துறாஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே.

(நற்றிணை—42)

(பொழிப்புரை :) தேர்ப்பாகனே! நீரில்லாமையாலே கோடைக்காலத்தில் பலநாட்களாக வறட்சியடைந்திருந்த உலகத்து உயிரினங்கள், மகிழ்ச்சியோடு தத்தம் தொழிலை மேற்கொண்டு நிகழ்த்தும்படி, தொன்றுதொட்டுப் பெய்யும் வழக்கம்போல மழைபெய்ததனால் ஏற்பட்ட புதிய நீர் நிரம்பிய பள்ளங்கள்தோறும், நாவினால் ஒலிக்கிற பலவாகிய கூட்டத்தையுடைய தவளைகள் இரைச்சல் இடுதலாலே, நாம் செல்லுகின்ற தேரிற் கட்டிய நாக்கினையுடைய மணிகளின் ஒலியை, ஒளிபொருந்திய நெற்றியையுடைய நமது தலைவி கேட்டறியமாட்டாள்; ஆகையாலே நீவிர் முன்னே சென்று சொல்லுவீர் என்றதற்கொப்ப அக்கட்டளையை ஏற்றவேலைக் காரர்கள் விரைந்து நமது மாளிகையில் புகுந்து அறிவித்தனராக, உடனே மெல்ல அதுகாறும் சீவி அழகுப்படுத்தாத கூந்தலின் அழுக்குப்போகத் தூய நீராடிச் சிலவாகிய மலர் களைக் கொண்டு பலவாகிய கூந்தலிலே முடிக்கின்ற அந்தத் தறுவாயில் நான் உள்ளே புகுதலும், என்னை நோக்கித் தன் உடல் துவளும்படி வந்து, அவிழ்ந்து குலையும் கூந்தலை யுடையவளாய் என்னை அணைத்துக்கொண்ட மடப்பத்தை யுடைய சிறந்த நமது தலைவி மகிழ்ந்து கொண்டாடுந் தன்மை நான் மறப்பதற்கு அரியதாகும்; அத்தகையவள் இன்றும் மகிழ்ந்தணைக்குமாறு விரைவிலே தேரைச் செலுத்துவாயாக!

உலகு - உயிர்; கொளீஇய—கொண்டு, மேற்கொண்டு; அவல் - பள்ளம்; வாள் - ஒளி பொருந்திய; நுதல் - நெற்றி; இளையர் - வேலைக்காரர்; குரல் - கூந்தல். மண்ணாக்கூந்தல் - நீராட்டாத கூந்தல்; கவைஇய - அணைத்த.

காதலியை விட்டுப் பிரிந்திருந்த காதலன் மீண்டும் வீடு திரும்பும்போது அவளைக் காணவேண்டும் என்று எவ்வளவு மனத் துடிப்புக் கொண்டவனாக இருப்பான் என்பதை இப் பாடல் இனியமுறையில் எடுத்துக் கூறுகிறது.

காதலன், தான் திரும்பிவரும்போது தன்னைத் தலைவி எதிர்பார்த்திருக்க வேண்டும் என்று விரும்புகிறான். தேரின் மணியொலி கேட்டுத் தலைவி தலைவனை எதிர்பார்த்திருக்க லாம் என்றாலோ, தவளைகளின் இரைச்சல் அந்த ஒலியை மறைத்துவிடுகிறது. எனவேதான் வேலைக்காரர்களாகிய குதிரை வீரர்களை முன்கூட்டியே அனுப்பித் தன்னைத் தலைவி எதிர்பார்த்திருக்கும்படியான நிலையைக் காணத் தலைவனின் உளப்பாங்கு எவ்வளவு துடிதுடிப்புக்கொண்டதாக இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

நீராடி மாசுபோக்கப்படாத கூந்தலையுடையவளாய்த் தலைவி இருந்தாள் என்பதிலிருந்து, தலைவி காத்துவந்த கற்பின் தன்மையை உணரலாம், கற்புடைய மகளிர் தம்முடைய அழகைத் தம் கணவன்மார் கண்டு களிக்க வேண்டும் என்று எண்ணுவார்களே ஒழிய, பிறர் கண்டு களித்துத் தம்மீது விருப்பமுற இடங்கொடுக்க மாட்டார் களாதலால், இந்தத் தலைவியும், தன் கற்பினை நிலைநாட்டத் தன்னைப் புனைந்து கொள்ளாமல் இருந்தாள் என்று நயம்படக் கூறப்பட்டுள்ளது.

தலைவி தலைவனைக் கண்டதும் முடியும் கூந்தலை அப்படியே விட்டுவிட்டுத் தள்ளாடி நடந்துவந்து தலைவனைக் கட்டி அணைத்துக்கொண்டாள் என்பதிலிருந்து, பிரிவுக்காலத் தில் தலைவி தலைவனை நினைந்து எவ்வளவு ஏக்கமுற்றிருந் திருக்கிறாள் என்பதையும், தலைவனிடம் எவ்வளவு தணியாக் காதல் கொண்டிருந்திருக்கிறாள் என்பதையும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

தேரில் மணிகட்டி ஓட்டும் பழக்கம் இருந்து வந்திருப்பது இச்செய்யுளால் உணரப்படும்.

மழை பெய்தவுடன் தவளைகள் கூட்டங்கூட்டமாக இருந்து இரைச்சல்போடும் இயற்கை நிகழ்ச்சியும், நீண்டகால வறட்சியை நீக்கிடும் மழை பெய்தால் மக்கள் அதனை மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தத்தம் தொழிலிலே நாட்டம் செலுத்தும் தன்மையும் இச்செய்யுளில் இனிது கூறப்பட்டிருக்கின்றன.

33. கலப்புமணக் காதலர் !

அவன் அரசனது மகனாதலால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறான். அழகிலும், அறிவிலும், ஆற்றலிலும் அவனை மிஞ்சுவார் யாருமில்லை என்ற நிலையில் அவன் திகழ்கிறான்.

விரும்பிய வசதிகளையெல்லாம் பெறுவதற்கேற்ற வகையில் அவனுக்குச் செல்வம் குவிந்துகிடக்கிறது. விரும்பிய செயலையெல்லாம் செய்வதற்கேற்ற வகையில் அரச ஆணையிருக்கிறது. எனவே, அவன், கவலைக்கிடமில்லாத வகையில் பொலிவோடும் பூரிப்போடும் காலங்கழித்து வருகிறான்.

அவள் வாழும் ஊர் கடற்கரையை அடுத்த பட்டினமாகும். அது மிகப் பழங்காலந்தொட்டுச் சீரோடும் சிறப்போடும் வளர்ந்துவரும் அரசிருக்கை நகரமாதலின், மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் நிறையப்பெற்று, மிகுதியான மக்களைக் கொண்டதாக இருந்து வருகிறது. அல்லும் பகலும் எங்கணும் மக்களின் ஆரவாரமான போக்குவரத்து நடைபெறுகிறது. பிறநாட்டுவணிகர்கள் வணிகத்தின் பொருட்டு வந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். பெரும்பெரும் கடைத்தெருக்கள் நகருக்கே தனி அழகைக்கொடுக்கின்றன. கடைத்தெருவிலுள்ள விற்பனைப் பொருள்கள் தாம் தனித்தனிக் கொடிகளை ஏந்தியனவாய்ப் பொலிவுற விளங்குகின்றன. இவ்வாறு வாணிகத்திலும், வளத்திலும் சிறந்து காணப்படுகின்றது அக் கடற்கரைப் பட்டினம்.

அரசன் மகன், நகரின் ஆரவாரத்தினின்றும் ஒதுங்கி, அமைதியான சூழ்நிலையைப் பெற, மாலைப் பொழுதில் குதிரைமீது சென்று, கடற்கரையின் வெண்மணல் பரப்பில் உலாவிக் கடற்காற்றை நுகர்ந்து தனிமை இன்பம் பெறுவதுண்டு. ஒருநாள் கடற்கரையில் உலாவிக் கொண்டிருக்கும் போது, அழகான பெண்ணொருத்தி குனிந்து பொறுக்கிக் கொண்டிருக்கிறாள். இளவரசன் கிளிஞ்சல் பொறுக்கும் பெண்ணைப் பொதுநோக்காக நோக்கிக்கொண்டு மெல்ல நடந்துசெல்கிறான். அவன் அவளருகாமையில் நடந்து செல்லும்போது, யார் போவது என்று பொதுவாகப் பார்ப்பதற்காகத் தலைநிமிர்ந்து பார்க்கிறாள் அவள். இளவரசனின் தோற்றப் பொலிவுகண்டு அப்படியே மயங்கி நிற்கிறாள். இளவரசனும் அவளைப் பொதுவாகக் காணத்தொடங்கி, உற்றுப் பார்க்கிறான். அவளது ஒளி உமிழும் கண்களும் பிறை நெற்றியும், கறுத்து நீண்ட நெளிந்த கூந்தலும், நிறப் பொலிவும், தோற்ற அழகும் அவனுள்ளத்தை அப்படியே கவர்ந்துவிடுகின்றன. அவன் அசைவற்ற நெடுமரம்போல் அப்படியே நிற்கிறான்; அவளும் அசைவற்று நிற்கிறாள். இருவரின் கண்களும் ஒன்றையொன்று கவ்வி நிற்கின்றன. இளவரசனின் தோழன் தொலைவில் வந்துகொண்டிருக்கிறான். அதற்குள் இளவரசனின் குதிரை இயல்பாகக் கனைக்கிறது. குதிரையின் கனைப்பொலி கேட்டு, அவன் திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துவிட்டு மெல்ல மேல் நடக்கத் முயலுகிறானே ஒழிய, அவனது கால்கள் அவனைப் பின்பக்கமாக இழுக்கவே செய்கின்றன. தோழனைத் திரும்பிப்பார்ப்பது போல் அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்கிறான். அவளும் அரசமகனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்று ஒரே ஓட்டமாக ஓடித் தன் குடிசைக்குள் நுழைந்துவிடுகிறாள். அவள் பரதவர் குடிசையில் நுழைந்ததைக் கொண்டு, அவள் அந்தப் பகுதியில் தான் வாழ்கிறாள் என்பதையும், மீன் வலைஞர் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதையும் அறிந்துகொண்டு, அரச மகன் அரண்மனை நோக்கித் திரும்புகிறான்.

மறுநாள், இளவரசன் தன் தோழனைத் தொலைவில் நிறுத்திவிட்டு, முதல்நாள் அந்த மங்கை நல்லாளைக் கண்ட விடத்திற்கு அவள் இன்றும் வருவாள் என்ற எண்ணத்துடன் வருகிறான். மறுநாளும் அந்த ஆணழகன் வருவான், அவனை மீண்டும் காணலாம் என்ற பெருவிருப்போடு, அவள் முன்கூட்டியே கடற்கரைக்குச் சென்று கிளிஞ்சல் பொறுக்கும் வேலையில் ஈடுபடுகிறாள். அவள் எதிர்பார்த்தபடியே அவன் வருகிறான்; அவன் எதிர்பார்த்தபடியே அவள் வந்திருக் கிறாள். இருவரும் ஒருவருக்கொருவர் கண்களைத் தூதனுப்பு கிறார்கள். அவன் அவள் அருகாமையில் வருகிறான். அவள் நாணிக்கோணி முகந்தாழ்த்தி நிற்கிறாள். இளவரசன் அவளிடம் பேச்சுக்கொடுத்துத் தனக்குச் சில கிளிஞ்சல்கள் தரும்படி கேட்கிறான். அவளும் விரும்பிச் சில கிளிஞ்சல் களைத் தருகிறாள். அவன் அவற்றைத் தன் கை அவள் கையோடு படுமாறு வைத்துப் பெற்றுக்கொள்கிறான். கிளிஞ்சல்களுக்குப் பதிலாக அவன் முத்துமாலை ஒன்றை அவளுக்கு அளிக்கிறான். அவளும் அதனைப் பெருவிருப்போடு பெற்றுக்கொள்கிறாள். இப்படியாக நாள்தோறும் இருவரும் அதே இடத்தில் கூடுகிறார்கள். இருவரும் நொதுமலர்களாகப் பழகிப், பிறகு நண்பர்களாகப் பழகிப், பிறகு காதலர்களாகப் பழகி விடுகிறார்கள். அரச இளைஞன் அவளுக்கு நாள் தோறும் விதவிதமான ஆடை அணிகலன்களைப் பரிசாக அளிக்கிறான். அவளும் மகிழ்ந்து பெற்றுக்கொள்கிறாள். பலநாட்கள் வரையில் தலைவன் யாரோ ஒரு செல்வக்குடியில் பிறந்தவன் என்றுதான் தலைவி எண்ணிக்கொண்டிருக்கிறாள். தலைவியின் தோழி கூறியதற்குப் பிறகுதான் தலைவன் இளவரசன் என்பதை அறிந்துகொள்கிறாள். இளவரசன் என்பதைத் தெரிந்து கொண்டதும் அவளின் காதலன்பு மிக உயர்கிறது.

தோழி, தலைவிக்கான எல்லாவகை உதவிகளையும் புரிந்து, தலைவியின் களவொழுக்கத்தைத் தாய்தந்தையர், தமையன்மார் முதலியோர் அறியாவண்ணம் பாதுகாத்து

வருகிறாள். தலைவியின் புதுப்புது ஆடைகளையும், அணிகலன் களையும் கண்டு தாய்தந்தையர் வினவினால், இளவரசன் அவற்றைக் கடற்கரையில் பெரும்போக்கில் விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறான் என்றும், அவற்றைத் தான் எடுத்துக் கொண்டு வருவதாகவும் தலைவி கூறுவாள். தோழி அதற்குச் சான்று பகர்ந்து அது உண்மை என நிலைநாட்டுவாள்.

இடையில் சில நாட்கள் அரண்மனையில் ஏற்பட்ட அலுவல்களின் காரணமாக இளவரசன் கடற்கரைக்கு வர இயலாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. தலைவி தலைவனது வரவைக் காணாமல், தன்னை அவன் கைவிட்டுவிட்டானோ என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறாள். அதற்குள், தலைவியின் தாய்தந்தையர் தம் மகள் மணப்பருவம் அடைந்து விட்டபடியால், இனியும் அவளை வெளியே செல்ல விட்டுக் கொண்டிருப்பது முறையாகாது என்று கருதிக் குடிசை யிலேயே இருக்கும்படி செய்துவிடுகிறார்கள். தலைவி தலை வனையும் காணமுடியாமல், வெளியேயும் செல்லமுடியாமல் வருந்திக்கொண்டிருக்கிறாள். தலைவன் எப்பொழுதாவது கடற்கரைக்கு வருகிறானா என்று பார்க்கும்படி தோழியை அவள் நாள்தோறும் கடற்கரைக்கு அனுப்பிவைக்கிறாள்.

பல நாட்கள் கழித்து, ஒருநாள், தலைவன் தலைவியைக் காணும் பெருவிருப்போடு கடற்கரைக்கு வருகிறான். அங்குத் தலைவியைக் காணாமல், தோழியை மட்டும் காண்கிறான். அவளிடம் நெருங்குகிறான். அவளிடம் பேச்சுக் கொடுக் கிறான்.

தலைவன் : (தோழியைப் பார்த்து) "ஏடீ! உன் தலைவி எங்கே? அவள் வரவில்லையா?"

தோழி : (சற்றுச் சினத்துடன்) "அவள் எங்கே இருந்தால் உமக்கென்ன? உம் வேலையைப் போய்ப் பாரும்!"

தலைவன் : "ஏன் இப்படிச் சிடுசிடுவென்று விழுகிறாய்?"

தோழி : "பின் ஏன் என்னிடம் பேச்சுக் கொடுக்கின்றீர்?"

தலைவன் : "தலைவி எங்கே என்று உன்னைக் கேட்கக் கூடாதா?"

தோழி : "இவ்வளவு நாட்களாக அவளைப்பற்றி இல்லாத கவலை இப்பொழுது மட்டும் எங்கிருந்து வந்தது?"

தலைவன் : "அரண்மனையில் அலுவல்கள் பல ஏற்பட்டு விட்டன. ஒய்வு ஒழிவு ஏற்படவில்லை. நான் என் செய்வேன்? இன்றுதான் ஒழிவு ஏற்பட்டது! ஓடோடியும் வந்தேன்!

தோழி : "நீர் அவளைப் பார்க்க வேண்டிய தேவையில்லை. உமக்கும் அவளுக்கும் எவ்வகையிலும் பொருத்த மேற்படாது!"

தலைவன் : "ஏன்? அவள் என்னை வெறுத்துவிட்டாளா?"

தோழி : "நீரோ அரசரின் மகனாவீர்; அவளோ மீன் வலைஞரின் மகள்! உம்முடைய குலமோ உயர்ந்தது; அவளுடைய குலமோ தாழ்ந்தது. இரண்டு குலத்திற்கும் எப்படிப் பொருத்தம் ஏற்பட முடியும்?"

தலைவன் : "நான் அவளின் வற்றாக் காதலன்பைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேனே யல்லாமல், அவளது குலத்தைப் பற்றிக் கவலைப்பட வில்லையே!"

தோழி : "தலைவியோ கடற்கரைச் சோலையில் சிறுகுடிசை யின் கண்ணே இருக்கிறவள்; நீரோ பெரிய அரண்மனையில் இருப்பவர்! இருவர்க்கும் எப்படிப் பொருத்தம் ஏற்படமுடியும்?"

தலைவன் : "நான் அவள் குடிசையையும் மாளிகையாக ஆக்கிக் காட்டுவேனே! அவள் அன்பு மட்டும்

இருந்தால், அவள் விரும்பும் அனைத்தையும் செய்து காட்டுவேனே!"

தோழி : "நீரோ தேரேறி ஆணை செலுத்துபவர்! செல்வ மன்னனது அருமை மைந்தனாவீர்! அவளோ காயவைக்கும் சுறாமீன் துண்டுகளைக் காக்கைகள் கவராதவாறு அவற்றை ஓட்டிப் பாதுகாக்கின்ற தொழிலில் ஈடுபட்டவள்! அவள் சுறாத்துண்டுகளைப் பரப்புதலால் புலால் நாற்றம் நாறும் உடலைப் படைத்தவள்! அவள் உமக்கு எவ்வகையிலும் ஒப்பானவள் ஆகாள்!"

தலைவன் : "அவளை நறுமணம் வீசும் நங்கையாக ஆக்கிடும் ஆற்றல் என்னிடத்தில் உண்டு! நான் அவள் சூழ்நிலையைப் பற்றிக் கவலைப்பட்டதில்லையே! அவள் காதலன்புக்குத்தானே காத்துக் கிடக்கிறேன்!"

தோழி : "அவளோ எளிய தாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள்; நீரோ செல்வமிகுந்த உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்! உமக்கு அவள் ஒருக்காலும் ஒத்துவரத் தக்கவள் அல்லள்!"

தலைவன் : "நீ அவளை என்னோடு சேரவிடு! பிறகு பார். எந்தப் பொருத்தமற்ற தன்மையாவது தென்படுகிறதா என்று!"

தோழி : "அவளைக் களவொழுக்கம் நடத்தத்தானே அழைக்கிறீர்!"

தலைவன் : "ஆமாம்!"

தோழி : "அவளை மணம்புரிந்துகொண்டு இல்வாழ்க்கை நடத்த, பரதவர் குலத்தில் உம்மைப்போன்ற எவ்வளவோ செல்வர்கள் காத்துக்கிடக்கிறார்கள்! நீர் ஒன்றும் களவொழுக்கத்துக்கு அழைக்க

வேண்டாம். போம்! அவள் இனி வரமாட்டாள். அவள் வீட்டில் காவலில் வைக்கப்பட்டு விட்டாள்!''

தலைவன் : ''அவளை நான் இனிக் காணமுடியாதா?''

தோழி : ''முறைப்படி திருமணம் செய்துகொள்ள முன் வந்தாலல்லாமல், அவளைக் காணமுடியாது!''

தலைவன் ; ''அப்படியா...? திருமணத்திற்கான ஏற்பாட்டுடன் வருகிறேன் என்று நீ அவளிடம் சொல்!''

என்று சொல்லிவிட்டுத் தலைவன் அகலுகிறான்; தோழியும் அகலுகிறாள்!

* * *

மேலே தீட்டிக்காட்டப் பட்டிருக்கும் காதற்காட்சி நற்றிணை 45 ஆம் செய்யுளின் கருத்தை உள்ளடக்கியதாகும். இது, குறைவேண்டிய தலைவனைத் தோழி சேட்படுத்துதல் என்னும் நெய்தல் திணையின்பாற் பட்டதாகும். இச் செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று தெரியவில்லை.

இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே!
நீயே, நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதல் மகனே!
நிணச்சுறா, அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஒப்பும் எமக்குநலன் எவனோ
புலவு நாறுதும் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே
எம்ம னோரிற் செம்மலும் உடைத்தே.

(நற்றிணை—45)

(பொழிப்புரை :) உன்னால் காதலிக்கப்படும் இவள்தான் கடற்கரைச் சோலையிடத்தே அமைந்த அழகிய சிறு குடிசை

யின் கண்ணேயிருக்கின்ற, நீலநிறத்தையுடைய பெரிய கடலும் கலங்குமாறு அதற்மேற் சென்று வலைவீசி மீனைப்பிடிக்கின்ற பரதவரின் மகளாவாள்; நீதானும் நெடிய கொடிகள் காற்றா லசைந்து துவளும் கடைத்தெருக்களையுடைய பழைய ஊரின் கண்ணுள்ள மிக்க விரைவினையுடைய தேரையுடைய செல்வ மன்னனது காதலிற் பெற்று வளர்ந்த மகனாய் இருக்கின்றாய்; ஆதலால் குலத்திற்கே பொருத்தமில்லை; அப்படி மணப்பதா யிலும், கொழுப்பையுடைய சுறாமீனை அறுத்திட்ட தசை களைக் காயவைத்தல்வேண்டி வெயிலில்போட்டு அத்தசை களைக் கூட்டமாகிய காக்கைகள் கவராதவாறு அவற்றை ஓட்டிப் பாதுகாக்கின்ற எமக்கு, உனது சிறந்த நலந்தான் எவ்வகையில் வேண்டப்படுவதாகும்? ஒருவகையிலும் வேண்டா. சுறாவின் தசைகளை வெட்டிப் பரப்புதலால் நாங்கள் புலவு நாற்றம் நாறுகின்றோம்; இந்நாற்றத்தை நீ பொறுக்கமாட்டாய். ஆதலால் எம் அருகில் வராதே; அகன்று போய் நிற்பாய்; கடல் நீரை விளைவயலாகக் கொள்ளுகின்ற எமது சிறிய நல்ல வாழ்க்கையானது உம்மோடு ஒத்த உயர்வு டையதொன்று அல்ல; எம்போன்ற பரதவரில் உன்னைப் போன்ற செல்வமுடையவர்களும் இருக்கவே செய்கிறார்கள்; எம் மரபு அத்தகையோரை உடையதுதான்!

கானல் - கடற்கரைச்சோலை; காமர் - அழகு; நுடங்கும்- துவளும்; நியமம் - கடைத்தெரு. நிணம் - கொழுவிய தசை. இனப்புள் - கூட்டமான பறவை, காக்கைகள்; ஒப்பும் - விரட்டும்.

* * *

களவொழுக்க இன்பத்தையே நெடிது நாட்கள் நுகர்ந்து கொண்டிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் தலை மகனை, மணந்துகொள்ளும்படி வற்புறுத்தத் தோழி இச்செய் யுளில் கையாண்டுள்ள முறை நயப்பாடு நிறைந்ததாகும். தலைவியின் அருமையை எடுத்துச்சொல்லி, அவள் தலை வனுக்குக் கிட்டமாட்டாள் என்று சொல்லுவதன் மூலம்,

தலைவனைத் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள வைக்கிறாள் தோழி. தலைவனும் வேறு வழியின்றி விரைவாகத் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டியவனாக ஆகிறான்.

உயர்வு—தாழ்வு, மேல்குலம்—தாழ்குலம், பணக்காரன்—ஏழை போன்ற வேற்றுமை கருதப்படாமல் காதற் கலப்பு மணம் பண்டைத் தமிழகத்தில் சிறக்க நடந்துகொண்டிருந்தது என்பதற்கு, இது சீரிய எடுத்துக் காட்டாகும்.

மீன்வலைஞர் கடற்கரைச் சோலையில் குடிசை போட்டுக் கொண்டு வாழ்தல், அவர்கள் ஆழ்கடல் சென்று மீன் பிடித்தல், மீன் தசைகளை வெட்டிக் காயவைத்தல், கடைத்தெருவிலுள்ள கடைகளில், அவை என்ன கடைகள் என்பதைக் காட்டும் கொடிகள் கட்டியிருத்தல் போன்ற பண்டைப் பழக்க வழக்கங்கள் அறியப்படுகின்றன.

34. ஊடலைத் தீர்க்கும் மருந்து !

தன் காதற்கினிய இல்லக் கிழத்தியைத் தனியே விட்டு விட்டு—பரத்தையின்மீது கொண்ட காம வேட்கையின் காரணமாகப் பரத்தையர் சேரிப் பக்கம் செல்கிறான் தலைவன்!

தலைவனது அழகுத் தோற்றத்தையும்—செல்வச் செழிப்பையும் கண்ட சேரிப் பரத்தையரிலே வனப்புமிக்க ஒருத்தி, தலைவனை மயக்கித் தன் வயப்படுத்திக் கொள் கிறாள்!

பரத்தையின் காம இன்பத்தில் திளைத்துக் கிடக்கும் தலைவன், தன் அருமைக் காதலியையும்—வீடு வாசல்களை யும்—தோட்டம் துரவுகளையும் மறந்து. 'பரத்தையின் இல்லமே பேரின்ப ஊற்று' என்று கருதி, அங்கேயே வாளா விருக்கிறான்.

தலைவனைக் காணப் பெறாத தலைவி, பெருந் துக்கத்தி லும் துயரத்திலும் ஆழ்ந்து—பொலிவிழந்து—வாடி வதங்கிக் காணப்படுகிறாள்!

தன் அருமைத் தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து விட்டானே என்று எண்ணி எண்ணி ஏக்கமுறுகிறாள்; தன் இளமை ததும்ப—எழில் ததும்ப—கண்ணீர் ததும்பி வருந்துகிறாள்.

"தலைவன் எங்கே போயினனோ—யாரேனும் கள்வர்கள் அவனை இட்டுச் சென்றனரோ—விலங்குகளில் ஏதேனும் அவனுக்குத் தீமை விளைவித்ததோ—அவனது உயிருக்கு

ஏதேனும் கேடு ஏற்பட்டதோ—என்று பலவாறாக எண்ணி எண்ணி ஏக்கமுறுகிறாள்!

தலைவன், 'பரத்தை ஒருத்தியின் வீட்டில் இருந்து கொண்டு காமக்களியாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறான்!' என்ற செய்தி எப்படியோ ஊரில் பரவுகிறது; அந்தச் செய்தி, மெல்ல மெல்ல ஊராரின்மூலம் தலைவிக்கும் எட்டுகிறது; அது கேட்ட தலைவி, வெட்கமும் வேதனையும் கொண்டு மனம் புழுங்கி வருந்துகிறாள்; 'தன் தலைவனின் போக்குச் சான்றோரால் பழிக்கப்படக்கூடியதாக—மிக்க இழிவுடையதாக ஆகிவிட்டதே என்று நினைந்து நினைந்து விம்முகிறாள்!

தன்னந்தனியே இருக்கும் அவளுக்கு ஆறுதல் சொல்லக் கூட யாருமில்லை; நாள் ஏறஏறத் தன்னைத்தானே தேற்றிக் கொண்டு—ஊராருக்கும் உலகத்துக்கும் அஞ்சி—தன் துயரத் தையும் துக்கத்தையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்—இல்லறத்தை நெறி பிறழாமல் இனிது நடத்தி வருகிறாள்.

நல்ல ஆடை அணிகலன்கள் அணிந்து கொள்வதிலே விருப்பங்கொள்ளாமல், எளிய வாழ்வைக் கடைப்பிடித்துக் கடமையாற்றி வருகிறாள்; உள்ளதைக் கொண்டு இல்லறச் செயல்கள் புரிவதிலே கவனம் செலுத்துகிறாள்; தன் வீடு நோக்கி உற்றார் உறவினர் வந்தால், அவர்களை முகமலர்ச்சி யுடன் வரவேற்று ஓம்பி—அவர்களை வழியனுப்புவாள். 'தலைவன் எங்கே' என்று யாரேனும் கேட்டால், வெளியூருக் குப் போயிருப்பதாகச் சாக்குப்போக்குச் சொல்லி ஒருவாறு தப்பித்துக் கொள்வாள்.

வேலையாட்களின் உதவிகொண்டு பயிர்த்தொழிலைக் கவனிப்பது—மாடு கன்றுகளைக் காப்பாற்றுவது—மாளிகை பேணுவது போன்ற செயல்களில் ஈடுபடுவாள்!

அரிசி, பால், தயிர், வெண்ணெய், நெய் போன்ற உணவுப் பொருள்களை ஏழை எளியவர்க்கு வழங்குவதிலே மிக்க விருப்பங்கொள்வாள்; என்றாலும் தலைவனின் போக்கை நினைத்துக்கொள்வாளேயானால், வெறுப்பும்—அருவருப்பும் அவளது உள்ளத்தில் தோன்றித் தோன்றி மறையும்!

தலைவனிடத்திலுள்ள கைப் பொருள்களையெல்லாம் கவர்ந்து கொண்ட பிறகு, அவனைப் புறக்கணித்து, வெளியே துரத்தியடிப்பதில் கவனம் செலுத்துகிறாள்—பரத்தை. தலைவன் சில நாட்கள் வரையில் சமாளித்துப் பார்க்கிறான். இறுதியில், வேறுவழியின்றி—வெறுங்கையோடு வெளியேறும் நிலை ஏற்படும்போதுதான், இல்லக்கிழத்தியின் அருமை பெருமைகளைப்பற்றியும், தன் வீடு வாசல்களைப் பற்றியும் நினைவுகொள்கிறான்.

தன் இழிநடத்தையை அறிந்து, 'தலைவி எப்படி வெறுப்பும் அருவருப்பும் கொண்டிருப்பாளே—அவளை எந்த முகத்தை வைத்துக்கொண்டு பார்ப்பது?' என்று எண்ணி, அச்சமும் வெட்கமும் கொள்கிறான்!

தலைவியை எப்படிக் காண்பது—எப்படி அவள் எதிரே செல்வது—எப்படி அவளது வெறுப்பையும், சினத்தையும் தாங்கிக்கொள்வது—என்று பலவாறாகச் சிந்தித்துச் சிந்தித்து, வழியேதும் காணாமல் கலங்குகிறான்!

இறுதியில், அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது 'யாரையேனும்—அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஒரு விருந்தினரை உடன் அழைத்துச் சென்றால், அப்பொழுது தலைவி, வெறுப்பையோ சினத்தையோ தன்னிடம் காட்டாள்' என்று எண்ணி, தனக்குள்ளே முடிவு செய்துகொள்கிறான்!

'தலைவன், தன் நெருங்கிய உறவினரும்—அன்பிற்கும் மதிப்பிற்குரிய வருமான ஒரு பெரியவரிடம் சென்று, 'இன்று எங்கள் இல்லத்தில் விருந்துண்ணத் தாங்கள் வரவேண்டும்' என்று அழைக்கிறான்!

"என்றைக்கும் இல்லாதவாறு இன்று திடீரென்று விருந்துக்கு அழைக்க வந்துள்ளதன் காரணம் என்ன மகனே?" என்று அந்தப் பெரியவர், தலைவனை வினவுகிறார்!

"ஒன்றுமில்லை; நான் மணவாழ்க்கை மேற்கொண்டதற்குப் பிறகு, தாங்கள் என் வீட்டிற்கு வரவேயில்லை; தங்களை அழைத்து விருந்து வைக்கவேண்டும் என்பது என் பேராவல்;

இன்று நினைத்துக்கொண்டேன்; அழைத்துப் போகலாம் என்று வந்தேன்" என்று தலைவன் கூறுகிறான்.

"அப்படியா? உன் விருப்பத்தைக் கெடுக்கவில்லை—வருகிறேன்" என்று அந்தப் பெரியவர் இசைவு தருகிறார்!

தலைவன் அந்தப் பெரியவரை அழைத்துக்கொண்டு, தன் வீடு நோக்கிச் செல்கிறான்; 'தலைவி எப்படியிருக்கிறாளோ—தன்னைக் கண்டவுடன் என்ன சொல்லுவாளோ?' என்றெண்ணிய தலைவன், பெரியவர் பின்னால் நெளிந்து ஒளிந்து—அவரையொட்டிப் பின்னால் நடந்து வருகிறான்!

மாளிகை செம்மையாகவும் தூய்மையாகவும் வைக்கப் பட்டிருக்கும் காட்சியையும், எருமையின் இளங்கன்றுகள் கொட்டிலின் தூண்களில் கட்டப்பட்டிருக்கும் காட்சியையும் கண்டு, தலைவன் பெருமிதமும் பூரிப்பும் கொள்கிறான்; பெரியவர் முன் நடக்க—தலைவன் மெல்லப் பின் நடந்துவந்து—இருவரும் மாளிகையின் படிக்கட்டில் ஏறுகிறார்கள்!

தம் நெருங்கிய உறவினரும், மதிப்பிற்குரியவருமான பெரியவர் வருவதைக் கண்டு, தலைவி ஓடோடியும் வாயிலண்டை வந்து, அவருக்கு வணக்கம் கூறிப் புன்முறுவ லுடன் வரவேற்கிறாள்.

தலைவி, முதலில் பெரியவரை மட்டுந்தான் பார்க்கிறாள். பெரியவர் அண்மையில் வரும்போது, அவருக்குப் பின்னால் தலைவன் ஒளிந்துகொண்டு வருவதையும் பார்க்கிறாள்!

தலைவனைப் பார்த்தவுடன், தலைவிக்குத் தூக்கிவாரிப் போடுகிறது; 'தன் வெறுப்பையும் திகைப்பையும் வெளியே காட்டிக் கொள்வது அவ்வளவு நல்லதல்ல; உண்மை பெரிய வருக்குத் தெரிந்தால், தன் குடும்பத்தைப்பற்றிப் பெரியவர் இழிவாய்க் கருதிக்கொள்வார்' என்று நினைத்துத் தலைவி, தன் உண்மையான உள்ளக்கிடக்கையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்—தலைவனை வழக்கம்போல் புன்முறுவல் காட்டி அழைத்து—பெரியவரைப் பொறுத்து அவன் நடந்து கொள்ளவேண்டியதை இனிய சொற்களால் விளக்கிச் சொல்லியவளாக உள்ளே போகிறாள்,

தலைவனும், ஏதும் நடந்தறியாதவன் போல் காட்டிக் கொண்டு, தலைவி கூறியதைச் செய்வதில் முனைகிறான்!

தலைவி உள்ளே சென்று, நல்ல ஆடை ஒன்றை எடுத்து உடுத்துக் கொண்டு, காதில் வளைந்த குண்டலத்தையும், கழுத்தில் பொன்னரிமாலைகளையும், விரலில் பொன் மோதிரத்தையும் அணிந்துகொண்டு—தன்னை, எவ்வித வேறுபாடும் தெரியாதவண்ணம் ஒப்பனை செய்து கொள்கிறாள்!

பிறகு அவள் கொல்லைப்புறம் சென்று, தோட்டத்திலுள்ள வாழை மரத்திலிருந்து வாழை இலையைத் தன் மெல்லிய விரல்கள் சிவக்கும்படி அழுத்திக் கிள்ளி எடுத்துக் கொண்டு வந்து வைக்கிறாள்; அந்த வாழை இலையின் அடிமட்டை பருத்திருப்பதால், அதனை நறுக்கி எடுத்து விட்டு, வாழை இலையால் தொன்னைகள் செய்துவைத்துக் கொண்டு, விருந்துணவு சமைக்க அடுப்பண்டை செல்கிறாள்!

அடிசில் ஆக்கும்போது மேலே எழும் புகை அவளது கண்களில் படிந்து, கண்களை மறைக்கின்றது. நெற்றியில் சிறு சிறு வியர்வைத்துளிகள் அரும்பி வடிகின்றன; தலைவி தன்னுடைய புடைவையின் நுனியால் கண்களைத் துடைத்துக் கொண்டும், நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டும், இன்னடிசில் ஆக்குவதிலே கவனம் செலுத்துகிறாள்!

தலைவன் மீது கொண்டுள்ள ஊடலால், 'அவன் முன்னால் அடிக்கடி போகக்கூடாது' என்று கருதி, அடுப்பண்டை நின்று அடிசில் ஆக்குவதிலேயே தன் நேரத்தையும் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறாள்!

தலைவி பெரியவருக்கு முன்னால் வரும்போதும்— விருந்திடும்போதும், தலைவன்மீது சினங்கொண்டு, அதன் காரணமாகக் கண்ணைச் சிவப்பாக வைத்துக்கொள்ளாமலும், எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்தினளாயும் காட்சியளிக்கிறாள்!

'இதுதான் ஏற்ற பொழுது' என்று கருதிக்கொண்டு, தலைவன், தலைவியோடு நிரம்பப் பேச்சுக் கொடுத்து—

ஊடலுக்குச் சிறிதும் இடமில்லாதவாறு பார்த்துக் கொள்கிறான்!

விருந்தினராக வந்திருக்கும் பெரியவர் சிறிதுபொழுது தங்கியிருந்துவிட்டு, தலைவன்—தலைவியரது இனிய—இல்லற வாழ்க்கையைப் புகழ்ந்து பாராட்டிச் சொல்லி விட்டுப் போகிறார்!

விருந்தினர் இருக்கும்போதெல்லாம் இனிய முறையில் பழகத் தலைவனுக்கு வாய்ப்பு அளித்துவிட்ட தலைவி, அவர் போனபிறகு வேறுவிதமாக நடந்துகொள்ளவோ—தலைவனோடு ஊடல் கொள்ளவோ இயலாமல், அவனோடு கூடி முயங்குவதிலே விருப்பமுடையவளாக மாறிவிடுகிறாள்!

"ஊடல் தீர்க்கும் மாமருந்தாக விளங்கும் விருந்தினர் அடிக்கடி வந்து போனால் எவ்வளவோ நன்றாக இருக்குமே" என்று எண்ணித் தலைவன் தனக்குள்ளாகவே மகிழ்ந்து கொள்கிறான்!

இது நற்றிணை 120ஆம் செய்யுளின் உட்கருத்தைக் கொண்டு எழுதப்பட்ட காதற் காட்சியாகும்.

இந்தச் செய்யுள், 'விருந்து வாயிலாகப் புகுந்த தலைவன் சொல்லியது' என்னும் பிரிவின்பாற்பட்ட மருதத் திணையைச் சார்ந்ததாகும்.

இந்தச் செய்யுளை இயற்றியவர் மாங்குடி கிழார் என்னும் புலவராவார்; இவரே, 'மாங்குடி மருதனார்' என்றும், 'காஞ்சிப் புலவன்' என்றும் அழைக்கப்பட்டார்!

இவர், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக்களத்துப் புலவராய் இருந்தவர்!

இவர், அவ்வரசனை, 'மதுரைக் காஞ்சி' என்னும் பாட்டின் மூலம் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இவர், எல்லாத் திணையைப் பற்றியும் அழகுறப் பாடி யுள்ளார்.

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சார்ந்த மாங்குடி என்ற ஊரே இவரது ஊர் என்று அறியப்படுகிறது.

இவரது பாடல்கள், பத்துப்பாட்டு—நற்றிணை—குறுந்தொகை அகநானூறு—புறநானூறு ஆகியவற்றில் காணப்படுகின்றன:—

"தடமருப்பு எருமை மடநடைக் குழவி
தூண்தொறும் யாத்த காண்தகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை
சிறுதாழ் செறிந்த மெல்விரல் சேப்ப
வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பு ஆன்று
சிறு முள்எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே!"

(பொழிப்புரை :) வளைந்த கொம்பினையுடைய எருமையின் இள நடையுடைய கன்றுகளைத் தூண்கள்தோறும் கட்டியிருக்கின்ற காட்சி மிகுதியால், யாவரும் காணத்தக்க நல்ல மனையின்கண், வளைந்த குண்டலத்தைக் காதில் அணிந்த செழுமை பொருந்திய பேதைமையுடைய காதலி, சிறிய மோதிரஞ் செறித்த மெல்லிய விரல் சிவக்கும்படியாக வாழையிலையைக் கொய்துவந்து, அடிக்காம்பு பருத்திருத்தலின் அதனைப் பிளந்து பரிகலமமைத்து, அடிசிலாக்குதலாலே புகைபடிந்து அமர்த்த கண்களுடையளாய் அழகுபெறப் பிறை போன்ற நுதலினுண்டாகிய சிறிய—நுணுகிய—பலவாய வியர்வைநீரை அழகிய முன்றானையின் நுனியாலே துடைத்துக் கொண்டு, நம்மீது புலவிமிக்கு அடிசிற்சாலை யிடத்தளாய்

இருக்கிறாள்; இப்பொழுது விருந்ினராய் வருபவர் எம்முடன் விரும்பி வருவாராக; அங்ஙனம் வரின், இந்த அழகிய மாமை நிறத்தையுடைய அரிவை சினங்கொண்டு ஒருபொழுதும் கண் சிவப்பதில்லை: அல்லாமலும், புன்சிரிப்புப் பூத்த முகத்தவளாய் இருப்பாள்; ஆதலின், நமது முயக்கத்துக்கு இன்றியமையாத இவளது சிறிய முள்போன்ற பல் சிறிது தோன்றுமாஞல், நகைகொண்ட முகத்தை யாமும் கண்டு நிற்போம்!

தட மருப்பு - வளைந்த கொம்பு; குழை - குண்டலம்.

ஊடலைப் போக்கத் தலைவன் எவ்விதத் தந்திர முறையைக் கையாளுகிறான் என்பதும், இல்லறத்தின் புகழையும் மேன்மையையும் காப்பாற்றத் தலைவி எந்த அளவுக்கு விட்டுக்கொடுக்கும் பெருந்தகையளாய் ஆகிவிடுகிறாள் என்பதும், விருந்தினர், தலைவன்—தலைவியர்க்கிடையே மூளும் ஊடலைப் போக்கும் அருமருந்தாய் எப்படி விளங்குகிறார்கள் என்பதும், இச்செய்யுளில் மிக்க நயம்படவும் அழகுபடவும் இனிது சொல்லப்பட்டிருக்கின்றன.

வாழை இலையைக் கொய்து வருதல்—அதன் பருத்திருக்கும் அடிக்காம்பைப் பிளந்து, வாழை இலையால் தொன்னைகள் செய்தல் — அடும்போது கண்ணிலே புகைபடிதல்— நெற்றியில் ஏற்படும் சிறுவியர்வைத் துளிகளைப் புடைவையின் முன்றானையால் துடைப்பது போன்ற பழக்கங்களை அழகுபடக் கூறுவது நயப்பாடு நிறைந்ததாக இருக்கிறது!

———

டாக்டர் நாவலர் அவர்களின்

நூல்கள்

சிந்தனை மலர்கள்	13-50
நற்றிணைக் காட்சிகள்	15-00
இதயம் பெறும் இன்பம்	4-00
அண்ணாவோடு வாழ்ந்த அந்தச் சிறைவாசம்	8-00

★

பாரி நிலையம்

184, பிராட்வே :: சென்னை-1

Jacket Printed at Neo Art Press, Madras-14